ஸ்ரீ

கணபதி துணை.

சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள்

ஆறவதாகிய

கலித்தொகை

(மருதக்கலி, முல்லைக்கலி.)

மூலமும்

மதுரையாசிரியர்

பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையும்.

—

இவை

இடையாற்று மங்கலம்

வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்

சென்னை,

பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

அனந்தராமையரால்,

நன்கு பரிசோதித்து

தாம் புதிதாக எழுதிய ஆராய்ச்சிக்குறிப்புடன்

—

சென்னை,

நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

1925

உ

கணபதி துணை.

இரண்டாஞ் சம்புடத்தின்,

முகவுரை.

கிளருந் திருவல்லிக் கேணிக்க ணன்பர்
தளருந் துயர்தீர்ப்பான் சார்ந்து—வளருந்
தொருகோட்டுக் கற்பகத்தா ளுற்றேன் கலிக்கட்
டிருகோட்டும் வெப்பொழியச் செய்து.

இந்நூலையும் இப்பதிப்பையும்பற்றிய செய்திகள்பலவும், கடவுள் வாழ்த்தும் பாலைக்கலியும் குறிஞ்சிக்கலியும் அடங்கிய முதற்சம்புடத்தின் தலைப்பில் எழுதப்பெற்றுள்ளன.

இவ்விரண்டாஞ் சம்புடத்தில் மருதக்கலியும் முல்லைக்கலியும் அடங்கியுள்ளன. இதில் முதற்சம்புடத்திற்போலவே இப்பகுதிகளிலுள்ள செய்யுட்களோ செய்யுட்பகுதிகளோ மேற்கோளாகவந்துள்ள இடங்களும் ஒத்த பகுதிகளும் ஆங்காங்கு எண்கள் முதலியவை இட்டுக் குறித்திருப்பதோடு, சொல்லாராய்ச்சிக்கும் விலங்கு பறவை மரஞ் செடி கொடிகளைப்பற்றிய ஆராய்ச்சிக்கும் உதவியாக உரிய விடங்களில் சில குறிப்புக்களும் குறிக்கப்பெற்றிருக்கின்றன.

முதற்சம்புடத்திலன்றி இச்சம்புடத்தில் பிற்கூறிய குறிப்புக்களைச் சேர்த்ததற்குக்காரணம், முதற்சம்புடத்தைப் பார்த்த தமிழபிமானிகளான அன்பர்களிற் சிலர், உரையிலுள்ள சொற்கள், பண்டை இலக்கியத்துள்ளன; இல்லன; இவை இன்னசொல்லின் சிதைவென்ற செய்திகளையும் இயன்ற அளவு தெரிவித்தல் நன்றென்றும், வேறு சிலர், உயிர்களைப்பற்றிக் கூறுமிடத்து மிருகவிசேஷம் பக்ஷிவிசேஷம் விருக்ஷ விசேஷமென்று சிறிதும் அறிய இயலாதபடி விட்டுவிடாமல் இப்பொருள் இன்னதென்றுஅறியும்படி அவற்றையும் இயன்றஅளவு விளக்கல் பேருபகாரமாமென்றும் விரும்பிக் கூறியனவாகும். ஆதலால் அவற்றையும் பற்றி இயன்ற அளவு குறித்திருக்கின்றேன்.

இம்முகவுரையின்பின், முதற்சம்புடத்திலன்றி இச்சம்புடத்தில் ஓர்ந்துள்ள நூற்பெயர் முதலியவற்றின் அகராதியும் செய்யுள் முதற் குறிப்பகராதியும் இப்பதிப்பைப் பற்றி மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்திய கலாநிதியென்னும் சிறப்புப் பட்டங்களைப்பெற்று விளங்கும் பிரஹ்மஸ்ரீ உ.வே. சாமிநாதையரவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும் எழுதியுள்ள அபிப்பிராயங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இந்நூல் விரைவில் இனிது நிறைவேறத் தமிழ்த்தெய்வத்தின் திருவருளை வேண்டுகின்றேன்.

திருவேட்டீசுவரன்பேட்டை
குரோதன ஹு
ஆனிமீ ௨௯

இங்ஙனம்:
இ. வை. அனந்தராமையன்.

கணபதி துணை.

முதற்சம்புடத்திலன்றி இதில் எடுத்துக்காட்டப்பெற்ற நூற்பெயர் முதலியவற்றின் அகராதி.

நூற்பெயர் முதலியவற்றின் அகராதி.

பரிசரியாக்கியபடலம்
பாயிரம்
மாமனுகவந்துவழக்குரைத்தபடலம்
மாயப்பசுவைவதைத்தபடலம்
வாருணனுக்குச் சிவலோகம் காட்டியபடலம்
வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடலம்

[தீர்த்தகிரிப்புராணம்.]
கந்ததீர்த்தச்சருக்கம்

[நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்.]
இயற்பா
திருச்சந்தவிருத்தம்
பெரியாழ்வார்திருமொழி

நிகண்டு.

[நீலகேசி.]
குண்டலகேசிவாதச்சருக்கம்

[நைடதம்.]
அரசாட்சிப்படலம்
கைக்கிளைப்படலம்
சிறப்புப்பாயிரம்
நகர்நீங்குபடலம்
போதுகொய்படலம்
மாலைப்படலம்
வேற்றுருவமைந்தபடலம்

[பதினொராந்திருமுறை.]
மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை

[பாகவதம்.]
(9) அரிச்சந்திரன் கதையுரைத்தவத்தியாயம்
உருக்குமிணியூடநீர்த்த வத்தியாயம்
சகடமுதைத்தவத்தியாயம்
சுபத்திரைமணமுரைத்த வத்தியாயம்
பிரத்துமனன்மணம்புரியத்தியாய
சையாதிகதையுரைத்த வத்தியாய
(8) வாமனவதாரமுரைத்த வத்தியாயம்
ஸ்ரீநாரதர் கஞ்சனோடுரைத்தவத்தியாயம்

[பிரபுலிங்கலீலை.]
பிரபுதேவர்வந்தகதி
மாயையினுற்பத்திகதி

[பிரமோத்தரகண்டம்.]
பத்திராயுவுக்குஅரசியலளித்தவத்தியாயம்

புள்ளிருக்குவேளூர்க்கலம்பகம்.

[புறப்பொருள்வெண்பாமாலை.]
உழிஞைப்படலம்
பெருந்திணைப்படலம்
வென்றிப்பெருந்திணை

[பெரியபுராணம்.]
கழறிற்றறிவார் நாயனார் புராணம்
கோச்செங்கட் சோழ நாயனார் புராணம்
சிறுத்தொண்டநாயனார்புராணம்
சேக்கிழார்
திருநாட்டுச்சிறப்பு

வாட்போக்கிக்கலம்பகம்.

[விநாயகபுராணம்.]
கெசானனர் திருவவதாரப்படலம்

[வில்லிபாரதம்.]
இராசசூயச்சருக்கம்
எட்டாம்போர்ச்சருக்கம்
காண்டவ தகனச்சருக்கம்
நான்காம்போர்ச்சருக்கம்
மணிமான்வதைச்சருக்கம்

[வேதாரணியபுராணம்]
சோரச்சருக்கம்

இவற்றுள் சில நூல்கள் முதற் சம்புடத்தில் எடுத்துக் காட்டப் பெற்றிருந்தும் உட்பிரிவுகளின் வேறுபாட்டால் இதிலும் எடுத்துக்காட்ட வேண்டியவையாயிருந்தமையால் அந்நூல்கள் இவையென்பதற்கு அறிகுறியாக, அந்நூற்பெயர்களின் இருபக்கத்தும் இருதலைப் பகரம் [] அமைக்கப் பெற்றிருக்கிறது. அதனில் இல்லாது, இச்சம்புடத்தில் எடுத்துக் காட்டப் பெற்ற நூல்கள்.

மற்றும் சிலவாம்.

மருதக்கலி முல்லைக்கலிகளின்
செய்யுள் முதற்குறிப் பகராதி.

உ

கணபதி துணை.

கலித்தொகை விளம்பரம்.

இது மூன்று சம்புடமாகும்.

இருபது பவுண்டு பேதர்வேயிட் பேபர்

டிம்மி எட்டுப்பக்கம் ஸைஸ்.

நல்ல காலிகோ பைண்டு செய்யப்பெற்று இதுவரை வெளிவந்த சம்புடம் உ.

அவற்றுள்,

க-ஆம் சம்புடம் பக்கம் ௩கூ௫ விலை ரூ.	௫	0	0
உ-ஆம் சம்புடம் பக்கம் ௩௬எ - எசா௩ விலை ரூ.	௫	0	0

தபாற்கூலி வேறு.

௩-ஆம் சம்புடம் பதிப்பிக்கப்பெற்று வருகிறது; அது சுமார். ௪00 பக்கமாகும். அதில் நெய்தற்கலியும் ஆசிரியர்களின் சரித்திரமும் அரும்பத முதலியவற்றின் அகராதியும் உளவாம். அதற்கு விலை வெளிவந்தபின் குறிக்கப்பெறும்.

ககூஉ௫ஆ செப்டம்பர் மாதத்துள் முன்பணமனுப்பும் உள்நாட்டாருக்கு, தபாற்கூலி உள்பட மூன்று சம்புடத்தின் விலை ரூ. கஉ அ 0

வேண்டுவோர் அடியிற்குறித்த விலாஸத்துக்கு எழுதிப் பெறலாம்.

இ. வை. அனந்தராமையர்.

பிரஸிடென்ஸி காலேஜ், தமிழ்ப் பண்டிதர்.

கசு நாகப்பையர் தெரு,

திருவல்லிக்கேணிப் போஸ்ட்,

சென்னை.

(செந்தமிழ்.)

கலித்தொகை (பாலைக்கலி, குறிஞ்சிக்கலி) மூலமும் நச்சினார்க்கினிய ருரையும்:—இப்புத்தகம் சென்னைப் பிரஸிடென்ஸி க்லேஜின் தமிழ்ப்பண்டிதர் பிரும்மஸ்ரீ அநந்தராமையரவர்களால், பலபிரதிகளை வைத்து ஒப்புப்பார்த்து நன்குபரிசோதித்து அச்சிடப் பட்டிருக்கிறது. இதற்குமுன்பு இந்நூல் ஸ்ரீமத். சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்களாற் பதிக்கப்பட் டிருப்பினும் இப்பதிப்பில் மூலமும் உரையும் பல திருத்தமடைந்துள்ளன. பாட்டுக்களேனும் அவற்றின் பகுதிகளேனும் பிறநூலுரைகளில் எடுத்தாளப்பட்டவற்றை அவற்றிற் குரிய விவரங்களுடன் ஆங்காங்குக் குறித்தும் இன்னும் தோன்றிய பிற குறிப்புக்கள் வரைந்தும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான நூற்றுக்கணக்கான நூல்களிலிருந்து பிரயோகங்கள் எடுத்துக்காட்டியும் அச்சிடப்பட்டிருக்கிறது. கஅ, கஉ-ம் பக்கங்களில் ௩-வது குறிப்பில் அருந்ததியைப்பற்றிய பல புராணங்களி லுள்ளகதைகளும் பலநூல்களிலும் வழங்கிவந்தபெயர்களும் ஒருங்கு சேர்த்துக் காட்டியிருப்பதும், இன்னும் கொல்லிப்பாவை முதலிய சில பல குறிப்புக்கள் அருமையான ஆராய்ந் தெழுதியிருப்பதும் பாராட்டத்தக்கன.

(ரக்தாக்ஷி௵ மார்கழி௴.)

(சுதேச மித்திரன்.)

கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியருரையும் (முதற் சஞ்சிகை. பாலையும் குறிஞ்சியும்) சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் இ. வை. அனந்தராமையரால் பதிப்பிக்கப்பட்டது.

.........இக்காலத்தவராலும் இது போற்றற்குரியதோவெனின் உரியதே யென்பது பல துறைகளிலுமுழைப்பவர் துணிபு. பண்டைக் காலத்துத் தமிழரின் மதக் கோட்பாடுகள் எப்படிப்பட்டன. அவர் நன்றென்றும் தீதென்றும், அழகியதென்றும், அல்லாததென்றும் கருதியனயாவை. அவர்தம் அரசாட்சி எந்நிலைமையிலிருந்தது. அவருண்ட உணவும், உடுத்த உடையும், காதலித்த முறையும், கைப்பிடித்த ஒழுக்கங்களும் இன்றுபோலல்லாது வேறுபட்டிருந்தனவோ என்றும் பலவும் ஆராய்ச்சி செய்வோர் கலித்தொகையை ஒரு பொற்றுவையேபோல் பாராட்டுவர்.

இஃதொரு புறமிருக்க,..............விரிவஞ்சி மேற்கோட்கள் சேர்க்காது விடுத்தாம்.

இனி, இந்நூலைக் காலஞ்சென்ற சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் ௧௮௮௭-ஆம் வருடத்திற் பதிப்பித்தார்கள் அப்பதிப்பிலடங்கிய பிரதிகள்யாவும் செலவாகி விட்டமையான் அவை பணத்தாலும் சிநேகத்தாலும் மற்றெவ்விதத்தாலும் கொளற்கரியனவாய் முடிந்தன. ஆதலின் வேறுவழிகாணாது எனக்கு இனியனவாத்தோன்றிய சிற்சில பாட்டுக்களை மாத்திரம் கையெழுத்தில் பெயர்த்துக்கொண்டேன். என்னைப்போலவே பலரும் இப்புதிய பதிப்பை எதிர்ப்பார்த்திருப்பராதலின் இதனை இரண்டாம்முறை அச்சிட்டு உதவியவருக்கு யாம் பெரிதும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டவராயிருக்க, இதற்குத்தாம் பல வாண்டுகளாக அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளும் சேர்த்தருளிய பிரும்மஸ்ரீ அனந்தராமையருக்கு நாமெத்துணைக் கடமைப்பட்டுளோமென்பது கூறுமலே விளங்கும்.....................................

(14—2—25.

(நவசக்தி.)

கலித்தொகை என்பது பழைய சங்க நூல்களுள் ஒன்று. அஃது எட்டுத்தொகையுள் ஒன்றாயிருப்பது. கலித்தொகையைக் "கற்றறிந்தார் போற்றுங் கலி" என்று தமிழர்கள் போற்றி வருவது கவனிக்கற்பாற்று.

கலித்தொகை, மக்கள் இன்பவாழ்விற் குரிய அகப்பொருளை அறிவுறுத்தும் நூல். அகப்பொருளை யுணர்த்தும் நூல் பலவற்றுள் கலித்தொகை தலையாயது என்று கூறுவது மிகையாகாது. அகப்பொருளிலக்கணம் பயின்ற ஒருவன் கலித்தொகை வாசித்து வருவானாயின், அவன் உடல் உணவு முதலியவற்றையும் மறந்து இன்பத்தால் விழுங்கப்படுவன் என்பது திண்ணம். அவன் நுகரும் இன்பத்தை எழுத்தால் எழுத முடியாது. அத்தகை இன்பத்தை யூட்டும் நூலன்றோ நூல்? கலித்தொகையில் அத்தகைப் பேரின்பமிருப்பதாலன்றோ கற்று அறிந்தார் போற்றுங்கலி என்று அந்நூல் புகழப்படுகிறது? அவ்வின்பநூல் பயின்று இயற்கை யின்பத்தில் திளைத்திருந்த நம்மவர்கள் இதுகாலை போலிநாவல்கள் பயின்று களித்து, இன்பமிழந்து வருவது குறித்து எவரே வருந்தார்?

முன்னை நாளில் கலித்தொகை பயிலாத ஒருவனைக் கற்றவரென எவரும் போற்றார். திருத்தக்க தேவர் சேக்கிழார் கம்பன் சிவஞான முனிவர் முதலிய புலவர் பெருமக்கள் கலித்தொகை பயின்ற கல்வியாளர்கள் என்பதுகவனிக்கத்தக்கது. பாட்டின்பத்துக்குஊற்றாயுள்ள கலித்தொகை படியாத ஒருவன் எங்ஙனஞ் சிறந்த பாவலனாவன்?

இத்துணைச் சிறப்புவாய்ந்த கலித்தொகை, பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலியென ஐந்து பகுதிகளையுடையது. ஆகவே இந்நூலில் ஐந்திணை காணலாம். இந்நூல், இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர் ஆட்சியையும் பெற்றது.

கலித்தொகை மூலமும், அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் வரைந்த அரிய உரையும் இற்றைக்குச் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்த்தாயின் தவப்புதல்வருள் ஒருவராய அன்பர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டன. இது போழ்து சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான், அனந்தராம ஐயர் அவர்களால் கலித்தொகையின்பாலையும், குறிஞ்சியும், நச்சினார்க்கினியர் உரையோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான் ஐயர் அவர்கள் தமிழ்ப்புலமையும் உழைப்பும் இக்கலித்தொகைப் பதிப்பில் நன்கு புலனாகின்றன. தமிழ்ப்புலமை மிக்க ஐயர் எழுதியுள்ள ஆராய்ச்சிக் குறிப்புக் கலித்தொகை பயில்வோர்க்குப் பெருந்துணை செய்வதாகும். இப்பதிப்பிலுள்ள விசேடம் முகவுரையில் விளக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

க. பல ஏட்டுச் சுவடிகளோடு ஒப்பிட்டதினாலும்................ அகராதியும் எழுதிச் சேர்த்தல் முதலியவையாம்.*

அநபாயன் சடையப்பவள்ளல் போன்றார் இல்லா இந்நாளில், தமிழ்வளம் அருகிவரும் இக்காலத்தில், தமிழ்ப்புலவர்கள் மிடியால் பீடிக்கப்பட்டு வருந்தும் இச்சமயத்தில் ஸ்ரீமான் அனந்தராம ஐயர் சங்க நூல்களில் தலையாயதை ஆராய்ச்சிக்குறிப்புடன் வெளியிடப் புகுந்தது குறித்து எமது நன்றி யறிதலான வணக்கத்தை அத்தமிழ்ப் பெரியார்க்குச் செலுத்துகிறேம். ஏனைய பகுதிகளும் ஸ்ரீமான் ஐயர் விரும்புமாறு விரைவில் வெளிவர எல்லாம்வல்ல இறைவன் அருள் செய்வானாக.

* முதற்சம்புடத்தின் முகவுரை பக்கம் 10-1, முதல் 11-9 வரை பார்க்க.

இப்பதிப்புக்குத் தமிழ்மக்கள் எத்தகை ஆதரவு நல்குதல் வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ? தமிழ்ச்செல்வர்கள் தங்களாலியன்ற உதவி புரிந்து கற்றறிந்தார் போற்றுங் கலியைத் தமிழ்நாட்டிற் பரப்புவாராக. (3—4—25.)

(பாரத மித்திரன்.)

கலித்தொகை: இந்நூல்கடைச்சங்கமேறிய பனுவல்களின்பகுப்பு ளொன்றாகிய எட்டுத்தொகையுள் ஆறாவதாக வுள்ளது.

இதனுள் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்திணைகளினுடைய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் களும், அவற்றின் இயற்கையணிகளும் கற்றோர்களிப்புறுமாறு விளக் கப்பட்டிருக்கின்றன. 'கற்றறிந்தார் போற்றுங் கலி' என்பதனாலும், இவ்வுண்மை அறியலாம்.

இது, படிப்போருக்கு இன்பச்சுவையுடன் அந்தணர், அரசர் அமைச்சர், வணிகர், வேளாளர்களும் பிறருமாகிய ஆடவரும் மகளிரும் இளமையிலும் முதுமையிலும் அறிந்தொழுகவேண்டிய பலப்பலநீதிகளைக்கற்பித்துநன்னெறிகாட்டிப்பயன்றுய்க்கச்செய்வது.

இச்செந்நெறி நூலுக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை யெழுதியிருக்கின்றார். உரையோடு கூடிய இந்நூலை சென்னபட்டினம் அரசாங்கக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ இ.வை. அனந்தராமையர் அவர்கள் பன் னெடுங்காலமாக ஆராய்ச்சிசெய்து அச்சிட்டு வருகின்றார்கள்.

கடவுள்வாழ்த்து, பாலை, குறிஞ்சி ஆகிய மூன்று பகுதியும் தொகுத்த முதற் புத்தகம் வெளிவந்து விட்டது. சஎ௫ நூல்களி லிருந்து மேற்கோள்களும் கதைகளும் எடுத்துக் காட்டி ஐயமகற்றி அச்சிட்டிருக்கின்றார்கள். இதனை ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஐய ரவர்களுடைய பேருழைப்பு விளங்காமற்போகாது......(பெத் வொ ய்ட்டுக்காகிதத்தில் இச்சம்புடத்தின் விலை ரூ. ௫.)......தமிழ் மக்கள் பலரும் இச்சிறுதொகைப் பொருளைப் பொருட்படுத்தாது அனுப்பி ஒவ்வொரு காப்பி வாங்கிக்கொண்டால் ஐயரவர்கள் இதுபோன்ற பல நூல்களை அச்சிட்டு உதவிபுரிவார்களென்பது ஒருதலை. இதனாற் புகழும் புண்ணியமும் இரு பகுதியினர்களுக்கும் உண்டென்பதைத் தமிழறிஞர்கள் செவ்வனே அறியவேண்டும். (6—4—25.)

NEW INDIA, Thursday February 19, 1925.

REVIEW.

Kalithohai, Edited by Pandit E. V. Anantarama Iyer of the Presidency College, Madras; with the commentary of Nachinarkiniar and with notes of his own research, Vol. 1. pp. 395.

Tamil scholars and others who are interested in tamil literature are well aware of this work, "Kalithohai" being the sixth of the famous eight higher literary productions styled "The Ettuthohai" of the ancient Tamil Sangams. All the commentators of the world renowned work, "Tholkappiam" have sung in praise of the literary merit of this unique work, so much so that the famous "Nachinarkiniar" spared no pains to write an exhaustive commentary for this work which excites the admiration of the renowned scholars of Tamil Literature. This work is of the highest importance as it throws much light on the highly dignified civilisation of the Ancient Tamils. This production is admired as the best contribution to the Tamil literature of the Sangam Age.

Pandit E. V. Anantaramier has exhibited his scholarly erudition in his research notes in this edition of the work and has shown himself as fitted for bringing out a good edition of this famous literary production.

The present volume has brought out two of the five "Kalis" as well as the "Kadavul Vazth" of this work and the other three "Kalis" are expected to be out in a short time.

The HINDU, Saturday February 28, 1925.

VERNACULAR PUBLICATIONS.

THE TAMIL SANGAM CLASSICS.

Kalithohai:—Edited by pandit E. V. Anantarama Iyer of the Presidency College, Madras; with the commentary of Nachinarkiniar and with notes of his own research, Vol. 1, pp. 395.

Tamil Scholars and those others that are interested in Tamil literature are well aware of this work "Kalithohai" being the sixth of the famous eight higher literary productions styled "the Ettuthohai" of the ancient Tamil Sangams. All the Commentators of the world-renowned work "Tholkappiam" have sung in praise of

the literary merit of this unique work, so much so that the famous "Nachinarkiniar" spared no pains to write an exhaustive commentary for this work which excites the admiration of the renowned scholars of Tamil Literature. This work is of highest importance as it throws much light on the highly dignified civilization of the Ancient tamils. This production is admired as the best contribution to the Tamil literature of the Sangam age. A through knowledge and mastery over the other literary contributions of that age, such as the "Ahananooru", the "Natrinai," "The Kurunthohai," etc., as well as over "The Tholkappiam" and its commentaries are of the utmost necessity for bringing out a really good edition of this work.

Pandit E. V. Anantharama Iyer has exhibited his talents in his research notes in this edition of the work and has brought out a good edition of this famous literary production. Not only the Tamil Nadu but also scholars all over the world have been placed under a deep debt of gratitude to our Pandit by this work of his. It is a praiseworthy effort in bringing out from obscure corners the light of ancient wisdom.

The present volume has brought out two of the five "Kalis" as well as the "Kadavul Vazth" of this work and the other three "Kalis" are expected to be out in a short time.

இரண்டாஞ் சம்புடத்தின் அபிப்பிராயம்.

மஹாமஹோபாத்தியாயர் தாக்ஷிணாத்தியகலாநிதி,
பிரஹ்மஸ்ரீ உ. வே, சாமிநாதையாவர்கள்.)

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய ப்ரஹ்மஸ்ரீ. இ. வை. அனந்தராமையரவர்கள் பலவருடங்களாக மிக முயன்று நன்காராய்ந்து பதிப்பித்துவரும் 'கலித்தொகை நச்சினார்க்கினியருரை' யின் மூன்றாவது மருதக்கலியும், நான்காவது முல்லைக்கலியும் அடங்கிய உ - ஆம் பகுதிப் புத்தகத்தைப் பார்த்து ஆனந்தம் அடைந்தேன். அவர்களுடைய தமிழ்க்கல்வியின் மேம்பாடு இதற்குமுன் யான் பதித்துள்ள புத்தகங்களில் எழுதி யிருப்பவற்றாலும், இவர்களுடைய பதிப்பின் அருமை, இந்நூலின் முதற் பகுதிக்கு யான் எழுதியுள்ள அபிப்பிராயத்தாலும் யாவருக்கும் நன்கு விளங்குமாயினும், இப்பகுதியைப் பற்றியும் எனக்குத் தோற்றியவற்றை எழுதும்படி இதன் பதிப்பாசிரியர் விரும்பினமையால் எழுதலானேன்.

"தன்னெஞ்சம் ஏடெனக் கற்றான் தழைமுத் தமிழையுமே" என்றபடி, பிறருடைய சகாயத்தைச் சிறிதும் விரும்பாமல் தம்முடைய மனத்தையும், மற்றைக் கரணங்களையுமே துணையாகக் கொண்டு இவ்வளவு பெருங்காரியத்தைச் செய்து முடித்த தொன்றே இப்பதிப்பாசிரியரின் ஆற்றலை நன்கு அறிவிக்கும்.

இப்பதிப்பிற் காணப்படும் அரியவிஷயங்கள் பல.

க. இதுகாறும் நன்கு விளங்காமலிருந்த கடின பதங்களுக்கு உரியபொருளை யறிந்து விளக்கித் தக்க மேற்கோள்களைக் காட்டியிருத்தல்.

உ. உரையிலிருந்த பிழைகளை மூலத்தைக் கொண்டும், மூலத்திலிருந்த பிழைகளை உரையைக் கொண்டும், இவ்விரண்டிலும் இருந்த பிழைகளை வேறுபிரதிகளைக்கொண்டும்நீக்கிச் செப்பஞ்செய்திருத்தல்.

ங. ஒவ்வொரு பொருளினுடைய இயற்கையும் நன்கு புலப்படும்படி பழைய நூல்களிலிருந்தும், பிற்காலத்து நூல்கள் பலவற்றிலிருந்தும் பற்பல மேற்கோள்களைக் காட்டியிருத்தல்.

ச. இந்நூலிலிருந்தும், வேறு நூல்களிலிருந்தும் ஆங்காங்கு ஒப்புமைப் பகுதிகள் பலவற்றைக் காட்டி யிருத்தல்.

ரு. பழைய இலக்கண வுரையாசிரியர்கள், உரியவிடங்களில் மேற்கோள்களாக ஆண்டிருக்கும் இடங்களைக் கண்டு பிடித்து அவற்றை விளக்கி யிருத்தல்.

இவை போல்வன பிறவும் காணப்படுகின்றன.

இயல்பாகவே கலித்தொகை மிக்க மதிப்புடையதாயினும், இப்பதிப்பால் இந்நூல் பின்னும் மிக்க கௌரவத்தையடைந்து விளங்குகின்றதென்றே சொல்லலாம்,

மேற்படி ஐயரவர்களுடைய பெருமையைப்பற்றி இன்னும் பலபடக் கூறுவதற்கு மனமிருந்தும், இதன்மேலெழுதுதற்கு இப்பொழுது நேரமில்லாமையால் இம்மட்டோடே நிறுத்துகின்றேன்.

சிதம்பரம்
ஸ்ரீ மீனாட்சி தமிழ்க்காலெஜ்
18—7—25.

இங்ஙனம்:
வே. சாமிநாதையர்.

உ

தேவர்கோமான் துணை

கலித்தொகை

மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

மூன்றாவது மருதக்கலி.

(௬௬.) வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடிக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர;

அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கவ்வையுட் பூவணிப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை;

கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
னீரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை;

தணந்ததன் றலையுநீ தளரிய லவரொடு
துணங்கையா யெனவந்த கவ்வையிற் கடப்பன்றோ

வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தவிக் கவின்காண விசையந்ததை;
எனவாங்கு;
௨௨ அளிபெற்றே மெம்மைநீ யருளினை விளியாது
வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று கடாஅங் கடுந்திண்டேர்
பூட்டு விடாஅ நிறுத்து.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் *தனது ஆற்றமையே வாயிலாகத் தலைவியுழைச் சென்றறந்த, அவன்முன்பு வதுவையயர்ந்ததூஉம்அப்பொழுது புனலாடியதூஉம் இப்பொழுது துணங்கையாடியதூஉங் கூறிப் புலந்தாள் † தலைவி, அவள் புலந்தவாறுகண்டு சென்றுசார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றுள் கூறியது.

இதன் பொருள்.

(க)வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த (உ)வரிவண்

க. கலியடி பதினுன்கெழுத்தான்வந்ததற்கு, "வீங்குநீ ரவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட" என்பது மேற்கோள். தொல். செய். சூ. ௪௫. 'அளவடி' இளம். ('வீங்கு' என்பதிலுள்ள குற்றியலுகரம் அலகுபெறுது.)

உ. (அ) "சுரும்புணக் களித்த புகர்முக வேழம்" ஐங். உ௩௯. (ஆ) "வரிஞிமி றூர்க்கும் வாய்புகு கடாஅத்துப், பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்" அகம். எஅ: ௩-௪. (இ) "மிஞிறூர்க்கும் கமழ் கடாஅத்து.................மழகளிறு" (ஈ) "வரிஞிமி றூர்க்கும் வாய்புகு கடாஅத், தண்ணல் யானை" புறம். உஉ. ௯-அ, ௬௩: ௧உ - ௩. (உ) "வரிவண் டார்க்கும் வாய்புகு கடாஅத்த, வண்ணல்யானை" தொல். களவி. சூ. ௧௧. நச். 'எண்ணியது' மேற்கோள். (ஊ) "அந்தணுற்றத்து, மதக்களி சுவைக்கு மணிநிறப் பறவை..............குஞ்சரம்" பெருங். (௧) ௫அ: ௧உ - அ. (எ) "கரிமதத் தளியைப் போன்றும்.................. தெரிவின்றி நுகர்ந்ததெல்லாம்" மேரு. அ: ௬௦. (ஏ) "வேழத்தின், வண்டோர் நறுமதமழையும்" (ஐ) "மூசு வண்டின மும்மத யானையி, னைசை கொண்டன போற்றொடர்ந் தாடின, வோசையொண்கடற் குன்றொடவைபுக, வேசை மங்கைய ராமென மீண்டவே" கம்ப. பம்பை. ௧௨. சேதுபந்தன. ௫அ. (ஒ) "மடந்தைய ரளகமு மாந்தர் மாலையு, முடைந்துகு கடகரி மதமு முன்னியே, தடந்தொறு முரலளி தமரி னண்புறத், தொடர்ந்துடன் வரவரச் சோலையெய்தினர்" (ஓ) "தும்பி மேன்மதத் திடைவிழும் தும்பிபோல்" (ஔ) "வண்டின மொய்க்க

(பிரதிபேதம்) * தன்னுற்றமை, † தலைவனை புலந்தவாறு.

டோங்குய ரெழில்யானைக் கனை(௧)கடாங் கமழ்நாற்ற
(௨) மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறு*முல்லை
பாய்ந்(௩)தூதிப் (௪)படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர

எ - து: பெருகுகின்றநீரி லவிழ்ந்த கருங்குவளையைக் கொண்டுவந்து விற்பார் வயலிடத்தே பறித்துக்கொண்டவை சுமத்தலிற் றலையிடத்தனவாகிய மலரைச் சூழ்தலைச்செய்து ஊரிடத்தே புகுந்த பாட்டினையுடைய வண்டுக்கு † உத்தமவிலக்கணங்கள் ஓங்குஞ் சிறந்த அழகினையுடைத்தாகிய யானையினுடைய நாறுகின்ற நாற்றத்தையுடைய செறிந்த மதத்தை அம்மதத்தில் முன் படிந்திருந்த (௫)வண்டுகள் விருந்துசெய்ய‡அப்பூவொடு வந்த வண்டுகள், பகற்பொழுதெல்லாந் தங்கிக் கங்குலிடத்து வீங்கின இறையிற் கிடந்த (௬) தொடியாலே தங் கணவர் மேனி வடுக்கொள்ளும்படியாகத் தாம் விரும்பின

மதம்பொழி கரியும்" (ஃ) "இகலி யளிமுர லிருகவு ளினுமுடனிழியு மதமழை குமிழிக ளெழவெழ..............மூடுகின கரிகளே" வில்லி. சூதுபோர். ௯௧. எட்டாம்போர். ௫. பதினொரும்போர். ௪, ௨௰. (அஅ)"வண்டு, மூசுண்ட தான முகமா" திருவிளை. வரகுணனுக்கு. ௧௰. என்பவைகளும் (ஆஆ) "தன்மதந் திவண்ட வண்டு தங்கிய காட்டுள் வேழம், பின்மதஞ் செறித்திட் டஞ்சிப் பிடிமரந் திரிந்து போகும், வென்மதக் களிற்று வெய்ய வசனிவே கத்தின் மேலான்" சீவக. ௨௩௧௩. என்பதும். (இஇ) "நீலயானை..............வண்டுபடு, பூநாறு கடாஅஞ் செருக்கி" மணி. ௧௧. ௨௰-௨௨. என்பதும் இங்கே அறிதற்பாலன.

௧. யானைமதம் கமழுமென்பதனை, "கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்தல்" (கலி. ௨௧: ௨.) என்பதனாலும் அதன் குறிப்பாலும் உணர்க.

௨. "விருந்து அஃறிணைக்கு வருமென்பதற்கு "ஆங்கவை விருந்தாற்றப் பகலல்கி" என்பது மேற்கோள்; தொல். கிளவி. சூ. ௫எ. நச்.

௩. "ஊதுதல் - நுகருதல்" அகம். ௧௩௨: ௧௧; புறம். ௭௰: ௧௨.

௪. "படரே யுள்ளல்" தொல். உரி. சூ. ௪௨.

௫. "இரிந்ததேன் குவளையி னெற்றி தைவர, மூரிந்துபோ தவிழ்ந்து கொங் குயிர்க்கு முல்லையி, னரும்புசேர்ந் தணிஞிமி றார்ப்ப வாய்பதும், விருந்தெதிர் கொண்மெனத் தழுவி வீழ்ந்தவே" சீவக. ௪௮.

௬. "தொடி யுற்றவடு" (கலி. ௭௮: ௨௨.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * முல்லைப்பாய் † தம உடலிலக்கணங்கள் ‡ பூவோடு,

கணவரைக் கூடின மகளிருடைய தேன் நாறுகின்ற மயிரினுள்ளே கிடந்து அரும்பார்தன்மை முற்றி விரிந்த நறிதாகிய முல்லைகளைப் பாய்ந்து நுகர்ந்து வேறுசில பூக்களை *நுகரவேண்டுமென்னும் நினைவின்றிப் பண்டுதாம் விரும் பின பூக்களையுடைய பொய்கையை மறந்து அதனை ஒரு காலத்தும் நினையாத புனல் அணிந்த நல்ல ஊரனே; எ - று.

கடாம் - மதம்படுதுளை; ஆகுபெயர். வீங்கிறை, பிரிந்து வருந்தாமையின் மெலியாவிறை.

(க)வீங்குநீர் பரத்தையர்சேரியாகவும், அதன்கணவிழ்ந்தநீலம் காமச் செவ்வி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத்தேரேற்றிக் கொண்டுவரும் பாணர்முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண் டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை †நுகர்வித்தலாகவும், கங்குலில் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவுதுயிலுதலாகவும், பண்டு மருவிய பொய் கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து ஆண்டுப் புலப் படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறாத மருதத்திணைப்பொருட்கு உள்ளுறையுவமமாயவாறுகாண்க. இது "கிழவோட்குவம(உ)மீரிடத்துரித்தே" (ங)என்பதனான் மருதத்துக்கண் உவமப்போலி ‡கூறினான்.

இது சீர்வகைக்கலியாகலின் வரிவண் டோங்குயரென நேரீற்றியற் சீரும் வந்தது.

கூ (ச)அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட ||கவ்வையிற் பூவணிப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் ÷வைகறைப் பெற்றதை

க. தொல். அகத். ௪௮ - ஆம் சூத்திரத்தினுரையில் இவ்வுரையாசிரியர் உள்ளுறை யுவமத்திற்கு 'வீங்குநீர்..................நல்லூர' என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, இக்குறிப்பையும் சிறிது வேறுபடக் குறித்துள்ளார். இ - வி. சூ. ௫௮௯. உரையில் இ - வி. உரைகாரரும் அதனையே எழுதினர்.

உ. ஈரிடம் - மருதமும் நெய்தலும்.

ங. தொல். உவம. சூ. ௨௯.

ச. (அ) "அணைமென்றோள்" (கலி. க: கூ, ௩௦:கூ,க௨௪: க௨.) (ஆ) "அணை மென்றோளாய்" (கலி. ௬௧: கூ) (இ) "அணைத்தோளாய்" (கலி.௫௪.௩, ௮௭: க) என்பவைகளும் (ஈ) இந்நூற்பக்கம் ௩௪௩: ௪ - ஆம் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

பிரதிபேதம்! * நுகரவேணு மென்னும், † நுகர்வித்த தாகவும். ‡ கூறியது இது; || கவ்வை யுள், ÷ வைகறை பெற்றதை.

எ-து: ஆரவாரத்தாற்*பொலிவுபெற்ற (க)சிறப்பில்லாமையைக்கொண்ட(உ) பரத்தையரைப் பூப்பேசிக்கொள்கின்ற †கலியாணத்திலுண்டான நின்னுடைய அழகினையுடைய ‡நாறுகின்றமணத்தினை விடியற்காலத்தே யாங்கள்பெற்றது யாம் ||அணைபோலும் மெல்லியதோள் மெலியும்படியாக நின் நெஞ்சிற்கு அமர்ந்த பரத்தையரைக் கூடி மணமனையிடத்தா யென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான வளப்பத்திலும் மாட்சிமையுடையதொன்றன்றோ? எ-று.

÷கௌவையிற் பொலிந்த பொதுக்கொண்ட பூவணி வதுவையென மாறுக.

(ங)மருதத்திற்குச் சிறுபொழுது வைகறையென்பதுதோன்ற × வைகறைப்பெற்றதை என்றாள்.

கங கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
(ச)தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
னீரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை

க. (அ) பொதுவென்பது சிறப்பென்பதற்கு எதிர்மொழியாக வழங்குதலும், (ஆ) "ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது" (புறம். ருஅ: உஎ) என்புழி, பொதுமொழியென்பதற்குச் சிறப்பில்லாதமொழியையென்றும் (இ) "புலமிக் கவரைப் புலமை தெரிதல்,.........பொதுமக்கட் காகாதே" (பழ.ரு) என்புழி, பொதுமக்கட்கென்பதற்குச் சிறப்பில்லாத மக்கட்கென்றும் முன்னோரால் உரை எழுதப்பெற்றிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. "நூறுபத் தடுக்கி யெட்டுக்கடை நிறுத்த, வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை, மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென" சிலப். ங: கக௬ச - கக௬௬.

ங. தொல். அகத். சூ. அ. நச். உரையிலும் மருதத்திற்கு வைகறை வந்ததற்கு, "அணைமென்றோள்.........பெற்றதை" என்னும் பகுதி மேற்.

ச. (அ)"ததைந்தகோதை தாரொடுபொலியப், புணர்ந்துடனாடுமிசையே" (மது. உ௬ரு-உ௬௬.) (ஆ)"தாருங்கோதையும் - மைந்தர்தாரும்மகளிர் கோதையும்" (இ) "மகளிர் கோதை மைந்தர் புனையவு, மைந்தர் தண்டார் மகளிர்பெய்யவும்" (பரி. ௬: ச௬.உரை, உ0: உ0-உக.) (ஈ) "கோதையுந் தாரும் பிணங்கக் கொடுங்குழைக், காதன் மகளிரு மைந்தருங் காணிய" (சீவக. உககங.) எனவும்(உ)"மைந்தர் கண்ணி மகளிர் சூடவு, மகளிர் கோதை மைந்தர்மலையவும்" (பட். க0௬-கக0.) எனவும்

(பிரதிபேதம்) * பொலிபெற்ற: † கல்லியாணத்தி லுண்டான ‡நாறுமணத்தினை ||அணைபோல மெல்லிய ÷ கௌவையுட்பொலிந்த. × வைகறைபெற்றதை.

எ - து: நின் மார்பின் மாலையை வாங்கிக்கொண்டவளுடைய நெற்றிக் கட்டை வைகறையிலேவருதலின் மனந்தடுமாறிப் *பூண்ட இரண்டுஅணியுங் கெடாமல் எம் இல்லிடத்தே வந்துநின்றது எம் மேனி கனலுதற்குக் காரண மான காமநோய்க்கு மேலேயும் நீ(க)பொன்னாற்செய்தமகரக்குழையையுடைய (உ)பரத்தையருடனே புனலிடத்தே விளையாடுகின்றாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் பெரியதொன்றன்றோ? எ - று.

ஆடவர் கோலமும் மகளிர் கோலமுங் கொண்டு வந்துநிற்றலின் இரண்டணியென்றாள்.

கஎ தணந்ததன் றலையுநீ (ங)தளரிய லவரொடு
(ச)துணங்கையா யெல்லாவந்த கவ்வையிற் (ரு)கடப்பன்றோ
வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தவிக் கவின்காண லிலைந்ததை

எ - து: ஒளி பொலிவுபெற்ற நுதலினையுடையாரோடே கூடுதலாலுண் டான(சா)பூணின்வடுக் கிடத்தலின் அவர்க்கும்நினக்கும் ஓரணியாகப் பொலிவு பெற்ற நின் செருக்குப் பிறர்பாற் செல்லாமல் அமைதி பிறப்பித்துத் தடுங் கையினாலே வந்த இவ்வழகை யாங்கள் காணும்படி பொருந்தினது நீ எங் களைப்பிரிந்த இதற்குமேலேயும் நின்னைப் பெறாது தளர்ந்த இயல்பினையுடை யாரோடே துணங்கைக்கூத்தாடினாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் மிகுதியானதொன்றன்றோ? எ - று.

†எனவாங்கு

(ஊ) "தாரு மாலையு மயங்கிக் கையற்று" (சிலப். உ: நடு.) எனவும் வருவன ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

க. கனங்குழை யென்பதற்கு, பொன்னாற்செய்த மகரக்குழை யென்றே பலவிடத்தும் இவர் பொருள் கூறினும் இந்நூல். கக: எ. இல். பொன்னாற்செய்த கனவியகுழை என்று எழுதியிருத்தலால் பொன் மற்றைய உலோகங்களினும் கனமுடையதென்பது பற்றி இவ்வாறு பொருள் கொண்டனர்போலும்; குறள் கOஅக. பரி. உரையும் பார்க்க. கனமென்பது பொன்னின் பரியாயநாம மென்பாருமுளர்.

உ. "கூடியார் புனலாடப் புணையாய மார்பினில்" (கலி. எஉ: கரு) என்பதும் அதன் குறிப்பும்பார்க்க.

ந. (அ) "தளரியால்" கலி. ககந: சு. (ஆ) "தளரியலாய்" கார். எ. (இ) "தளரியல்பொருட்டின்வந்தசீற்றமும்" கம்ப. இராவணவதை. உOச.

ச. "துணங்கை யுள்ளாவம்" கலி. எO: கச என்பதன் குறிப்புப்பார்க்க.

ரு. "கடப் பன்றோ கனங்குழாய்" கலி. ருஎ: கரு.

சா. "பொன்னனும் புக்கொளிப்பப் புல்லுவன்" நள. சுயம். அச.

(பிரதிபேதம்) * பூண்டவிரண்டினையுங் கெடாமல். † எனவாங்கு - ஆங்கசை அளிபெற்றே யெம்மை.

எ-து: என்று யாங்கள் காணும்படியாக; எ - று.

ஆங்கு, அசை.

உ.உ அளிபெற்றே மெம்மைநீ யருளினை விளியாது
(க)வேட்டோர் திறத்து விரும்பிய*நின் பாகனு
நீட்டித்தா யென்று கடாஅங் கடுந்திண்டேர்
பூட்டு விடாஅ நிறுத்து

†எ - து: நீ ஈண்டு வருதலாலே நினது அளியைப்பெற்றேம்; நீயும் எம்மை அருளினை; இதுவே அமையும்; இனி நீ விரும்பியோர்திறத்தே நீ செல்லுதலை விரும்பிய நின்பாகனும் பூட்டுதலைவிடாத கடிய திண்ணியதேரை நீ இவ்விடத்தே தாழ்த்தாயென்று கருதி அது நிற்கும் நிலையிலே செலுத்தும்; அதற்கு முன்னே சென்று அப்பரத்தையர் அன்பு கெடாமல் அவ்வன்றை ‡நிறுத்துவாயாக; எ - று.

விளியாது நிறுத்து எனக் கூட்டுக.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (க)

(சாஎ.) கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்;

ரு நலத்தகை யெழிலுண்க ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி யன்பின்றி வரினெல்லா
புலப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே;

க. "காம நிலையுரைத்தலும்" என்னும் தொல். கற்பியல், ருசு-ஆம் சூத்திரத்தின் இவருரையில் "பாங்கன் கூறுவன நோய்மருங் கறிநருளடக்கிக்கொண்டு எடுத்து மொழியப்படுதலன்றிக் கூற்று அவணின்மை உணர்க;" அது: 'வேட்டோர்..............நிறுத்து' என[வும்] வரும்" என்பது காணப்படுகிறது; அதனை நோக்கப் பாங்கனே இங்குத்தேர்ப்பாகனு யிருந்தனனென்றுகொள்ள வேண்டுமென்று தோற்றுகிறது. இஃது ஆராய்தற்பாலது.

(பிரதிபேதம்) * நின்பாகனீ நீட்டித்தாயென்று † எ - து என்று யாங்கள் காணும்படியாக நீ யீண்டு ‡நிறுத்துவாயென்றான் விளியாது நிறுத்தெனமாறுக இதனால்.

௧௦ கோடேழி லகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்மன் அந்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே;

௧௪ இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுறுஅலி
னணிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பேன்மன் அந்நிலையே யவற்காணிற்
றனித்தே தாழுமித் தனியி னெஞ்சே;

எனவாங்கு;

௧௬ பிறைபுரை யேர்நுதா றுமெண்ணி யவையெல்லாந்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
யறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

இது வாயின்மறுத்த தலைமகள் ஆற்றாமைவாயிலாகப் புக்குக்கூடிய தலைமகனது நீக்கத்துக்கட் புக்க தோழிக்குக் கூறியது.

இதன் பொருள்.

கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட (௧)மலர்வேய்ந்து
சீர்முற்றிப் (௨)புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்

௧. (அ) "மலரு, நாறுபு நிகழும் யாறுவர லாறு" (ஆ) "மாறுமென் மலருந் தாருங் கோதையும்.........மண்டி.........வேறு கின்றிவ் விரிபுனல் வரவென" (இ) "மலையி னிழியருவி மல்கிணர்ச் சார்ச்சார்க், கரைமரஞ் சேர்ந்து கவினிமடவார், நனைசேர் கதுப்பினுட் டண்போது மைந்தர், மலர்மார்பிற் சோர்ந்த மலரிதழ் தாஅய், மீனாரம் பூத்த வியன்கங்கை நந்திய, வானம்பெயர்ந்த மருங்கொத்த லெஞ்ஞான்றுந், தேனிமிர் வையைக் கியல்பு" பரி. ௬: ௪௧ - ௨, ௬: ௪௬ - ௫௦, ௧௬, ௩௨-௩௮. (ஈ) "வையையென்ற பொய்யாக் குலக்கொடி,........புண்ணிய நறுமல ராடை போர்த்து..........புனல்யா றன்றிது பூம்புனல் யாறென" சிலப். ௧௩: ௧௭௦ - ௧௭௪. என்பவையும் (உ) "பூநிரைத்து மென் றுது பொருந்தியும்,........வான வில்லை நிகர்த்தது வாரியே" கம்ப. ஆற்று. ௮. (ஊ) "கொங்கு லாமலர்க் கொன்றைகூ விளைகுரவுழிஞை, பொங்குமாசுணந் தாதகிபாடலம் புன்னை, துங்க மார்திருத் தலைமிசைக் கொண்டுறுந் தொடர்பா, லெங்க ளையகன் றன்னையு மொத்ததவ் விருநீர்" கந்த. ஆற்றுப். ௧௧ என்பவையும் ஒப்புநோக்குக.

(அ) "வையையிருபத்தாறு மாமதுரை நான்கென்ப, செய்யபரி பாடற் றிறம்" (ஆ) "புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை

(௧)நார்முற்றி யதுபோலத் தகைபூத்த(௨)வையைதன்
(௩)னீர்முற்றிமதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்(௪)முற்றொன் றறியாத புரிசைசூழ் *புனலூரன்

யென்ற பொய்யாக் குலக்கொடி" சிலப். ௧௩: ௧௬௯ - ௧௭0. என்பன கண்டறிதற் பாலன.

௧. (அ)"மாநில மடந்தை..................ஆரம் போலச், செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்று" சிறுபாண். ௧ - ௩. (ஆ) "ஆரப் பேரியாற்று .... மண்ணக மடந்தை" சிலப். ௫: ௧ - ௩. (இ) "காவிரி, மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் றாழ்ந்ததோ, ரோதநீர் நித்திலத் தாம மொக்குமால்" பெரிய. திருநாட்டுச். ௨.

௨. (அ) "அமிழ்த வெண்டிரை வையையு மொருபுறத் தகழாம்" (ஆ) (வையை) "கல்லென்றதிர் சும்மைப்புனல் கடிமாமதிற் புறம்போய், ...புல்லும்புரி சையுந்தள்ளியுள் புகுகின்றதை யன்றே" திருவிளை. திருநகரப். ௧௭. பரிநரி. ௫௭ - ௮. என்பனவும் (இ) "புனல் பொரு புதவி னுறந்தை" அகம். ௨௩௭: ௧௪. (ஈ) "புல்லிலை வஞ்சிப் புறமதி லலைக்கும், கல்லென் பொருநை" புறம். ௩௮௭: ௩௩ - ௩௪. என்பனவும் (உ) "நிவந்துகரை யிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச், சீருடை வியன்புலம் வாய்பரந்து மிகீஇய, ருவலை சூடி யுருத்துவரு மலிர்நிறைச், செந்நீர்ப் பூச லல்லது, வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே" பதிற். ௨௮: ௧0 - ௧௪. என்பதும் (ஊ) "ஒருகோம் பானையு மொராயிரத் திரட்டிவெண் கோட்டுச், செருவின் வேழமுந் திரளிமிற் றருமவெள் ளேறும், பொருவி லோகையிற் பொருதி[ய](டப்) படுவ தல்லாது, மருவ லார்களிற் பொருதிடப் படாததவ் வரையே" திருவானைக். புராணவரலாற்றுப். ௯. என்பதும் (எ) "கோற்றொடிப் புரிசை முற்றிக் குளிர்நிழற் படப்பை சாய்த்துத், தோற்றிடு நாட்டி னுள்ள பல பொருள் சூறை யாடி, யேற்றம ருடற்றும் வேந்தர் நாட் டினி விகலி ஞேடும், வேற்றர சிறுத்தா லென்ன மேவும்வை தரணி யாறும்" கூர்ம. நவகண்டத். ௩௫. என்பதும் இங்கே அறிதற்பாலன.

௩. "அதிராச்சிறப்பின்மதுரைமூதூர்" என்பதற்கு, 'பகைவரால் நடுக்க மில்லாத சிறப்பினையுடைய மதுரையாகிய மூதூர்' என்று பொருள் கூறி அதற்கும்; "முதிர்கடன் ஞாலம்" என்புழி 'முதிர்தல்' என்பதற்கு, 'முற்றுதல், சூழ்தலுமாம்' என்று பொருள்கூறி அதற்கும், "நீர்முற்றி மதில்பொரூஉம்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டினர், அடியார்க்கு நல்லார்; சிலப். பதிகம். ௩௯, ௨: ௩0.

௪. "முற்று - வளைத்தல்" பு - வெ. உழிஞை. ௨௫.

(பிரதிபேதம் *புனலூரான்

எ - து: கார்காலம் முதிர்கையினாலே பூங்கொத்துக்கள் அலர்ந்த கமழ்கின்ற இதழ்களையுடையனவாகிய மலர்களைச் சூடித் தலைமைமுதிர்ந்து புலவர் வாயிற் கவிகளைத் தான்பெற்று, ஊரைச் சூழ்ந்து வருதலிற் பெரிய நிலமடந்தைதான் ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல அழகு பொலிவுபெற்ற வையையாற்றினது நீர் சூழ்ந்து மதிலைப்பொரும் பகையன்றிப் பகைவர் போரால் *வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை யுடையவன்; எ - று.

புனலூரனென்றது பாண்டியனையாதலிற் பாட்டுடைத் தலைவனை கிளவித்தலைவனுக்கக்கூறிய அகப்புறமாயிற்று. இதற்கு விதி "காமப் பகுதி கடவுளும் வரையார், ரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்" (க)என்பதனுள் 'ஏனோர்பாங்கினும்' என்பதனாற் கூறினாம்.

௬ நலத்தகை யெழினுண்க (௨)ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி யன்பின்றி வரினெல்லா
(௩)புலப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே

க. தொல். புறத். சூ. ௨௮. (அ) இதனுரையிலும் இவரால், குறிப்பினாற் பாட்டுடைத்தலைவனைக் கிளவித் தலைவனுகக் கூறியதற்கு, "சீர்முற்றி ....புனலூரன்" என்பது மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது; (ஆ) முன்னோர்கூறிய குறிப்பினு மென்பதற்கு, முதலாசிரியர் கூறிய காமக்குறிப்பினு மென்று பொருள்கூறி, அஃது இயற்பெயர் சார்த்தி வருதற்கு "வையைதன் னீர்முற்றி ....புனலூரன்" என்பதை மேற்கோள்காட்டி, இது குறிப்பினாற் பாட்டுடைத் தலைமகனைக் கிளவித் தலைமகனுகக் கூறியதென்பர், இளம்பூரணரும்; தொல். புறத். சூ. ௨௨. 'வழக்கியன்'

௨. (அ)"குறுகலென் றொள்ளிழை கோதைகோ லாக, விறுகிறுக யாத்துப் புடைப்ப" (ஆ) "கமழ்கோதை கோலாப் புடைத்து" பரி. ௬: ௩௬-௪௦, ௧௨: ௫௮. (இ) "கோதை கோலா விறைஞ்சி நின்ற, ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்" கலி. ௧௨௮: ௧௮ - ௯. (ஈ)"மகளிரோச்சு, மட்டவிழ் மாலை போல மகிழ்ந்துபூண் மார்பத் தேற்று" (உ) "சந்தனத் தளிர்நன் மாலை, யோக்கினார் கண்ணி சுண்ண முடற்றினார்" சீவக. ௨௨௯௧. ௨௬௬௧. (ஊ) "நீர்தலைக் கொண்ட நெடும்பெருந் துறைவயிற், போர்தலைக் கொண்டு பொங்குபு மறலிக், கொங்கலர் கோதை கொண்டுபுறத் தோச்சியும்" பெருங். (௧) ௪௨: ௧௮௭ - ௧௮௯. (எ) "கோதைகொண் டோச்சு வாரும்" கம்ப. நீர்விளை. ௫.

௩. "புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சம், கலத்த லுறுவது கண்டு" குறள். ௧௨௫௯.

(பிரதிபேதம்) * வளைதலை.

எ-து: ஏடீ! எழிலையுடையவாகிய மையுண்கண்ணினையுடைய பரத்தையர்தங் கோதைகளாலே அடித்தநலத்தினையுடைய அழகினையும்(க) நகத்தாலும் எயிற்றாலும் அலைத்தபுண்களையும் (உ) பூண்கள்பொறித்த வடுக்களையுங்காட்டி என்னிடத்து அன்பின்றி வருவானாயின் யான் புலப்பேனென்றிருப்பேன், அதனாற் பெற்றதென்? இச்செயலற்ற நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே யான் கூடுவேனென்று கூறாநிற்கும்; எ-று.

கO கோடெழி லகலல்குற் (ந.)கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே

எ-து: ஏடீ! பக்கமுயர்ந்த எழுச்சியையுடைய அகன்ற வல்குலையுடைய கொடியையொக்கும் பரத்தையர் முலைகள் அழுந்திப் பூசின பாடழிந்த சந்தனத்தையுடையனாய்நன்மக்கள்குணமின்றிவருவனாயின் ஊடியிருப்பேனென்று கூறுவேன், அதனாற் *பெற்றதென்? யான் கூறியதனைக் கொள்ளுதலில்லாத இந்நெஞ்சு அவனைக் காணில் அத்தவறுகளோடுகூடிய அந்நிலைதன்னிலே யான்கூடுவேனென்று கூறாநிற்கும்; எ-று.

கச இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுறாஅலி
னனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
றனித்தே தாழுமித் †தனியி னெஞ்சே

எ-து: ஏடீ! இப்பொழுது புதிதாகக் கூடிய அழகினையுடைய பரத்தையருடைய விளங்குகின்ற எயிறுகள் அழுந்துகையினாலே மிகுதியையுடைத்தாய்ச் சிவந்த வடுக்களைக் காட்டி நாணமின்றியே வரின் துனித்திருப்பேன் யான் என்று கூறுவேன், அதனாற் பெற்றதென்? ‡இத்தனிமையான மனத்தைத் தனக்கு ||உரித்தாக்குதலில்லாத நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே என்னை நீக்கித் தான் அவனிடத்தேதாழும்; எ-று.

உறாஅல், விகாரம்.

க. "பேணனென் றுடன்றவ ளுகிர்செய்த வடுவினான், மேணின்றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை" கலி. எஉ: கக-உ. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "தொடி வடுக்காணிய" கலி. எக: கசு. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டறிதற் பாலன.

ந. "அலமர லுண்கண்ணா ராய்கோதை குழைத்தநின், மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வந் துரையாக்கால்" கலி. எந. கஉ-ந. என்பதும் அதன் குறிப்பும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

(பிரதிபேதம்) *பெற்றதென் இந்தயான், †தனிநெஞ்சே, ‡இந்தத்தனிமனத்தை, || உரிதாக்குதலில்லாத.

இத்தாழிசைமூன்றும்(க)மறுத்துரைப்பதுபோல்உவகைபற்றிக்கூறியன. "உடம்பு முயிரும் வாடியக் காலு, மென்னுற்றனகொ லிவையெனி னல்லது, கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை" (உ) என்பதனால் இந்நெஞ்சிற்குத் தன்றன்மை*யென்பதொன்றன்றியது என்னென்றவாறுகாண்க.

†எனவாங்கு

எ - து. என்று ; எ - று.

ஆங்கு, அசை.

கக பிறைபுரை ‡யேர்நுதலா (ந)யெண்ணியவை யெல்லாந்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
(ச)யறைபோகு நெஞ்சுடை யார்க்கு

எ-து: பிறையையொத்த ||அழகினையுடைய நுதலினையுடையாய்! தமக்கு வலியாகாதே அவனிடத்தே கீழ் அற்றுச் செல்லும் நெஞ்சினையுடைய மகளிர்க்குத் தாம் நினைத்தவையெல்லாம் முடிவுபோதல் பொருந்துமோ? பொருந்ாதன்றே! என்றாள் ; எ - று.

இதனால், தலைவிக்கு இளிவுபிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தால் இற்ற ஒத்தாழிசைக்கலி. (உ)

க. மறுத்துரைப் பதுபோல் உவகைபற்றிக் கூறியதற்கு, "கோடெழில் ....கொள்கையி னெஞ்சே" என்பது (தொல். பொருளி. சூ. உ. நச்.) மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது.

உ. "தொல். பொருளியல். சூ. க. இச்சூத்திரத்தின் இவருரையில் "இனிப் புணர்ந்த............நெஞ்சே" என்பது மேற்கோளாக "இதனுள் யான் துனித்தல் வல்லேன் என்னெஞ்சிற்குத் தன்றன்மை யென்பதொன்றில்லை; ஈதென் னென்றலின் அவ்வாறு காண்க" என்னும் குறிப்புக் காணப்படுகின்றது.

ந. (அ) "நின்மார்பு தோயல மென்னு, மிடையு நிறையு மெளிதோ நிற் காணிற், கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ, டுடன்வாழ் பகையுடை யார்க்கு" கலி. எஎ: உக - ச. (ஆ) "நின்றீமை, பொறை யாற்றே மென்றல் பெறுதுமோ யாழ, நிறையாற்றா நெஞ்சுடை யேம்" கலி. கூo: உஎ - கூ.

ச. (அ)"நெஞ்சறை போகிய வறிவி னேற்கே" அகம். உகூ: உகூ. (ஆ) "அறைபோய் நெஞ்ச மவன்பா லணுகினு, மிறைவளை முன்கை யீங் கிவன் பற்றினுந், தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்த, னன்றி யன்றென நடுங்கினண் மயங்கி" மணி. கஅ: கநo-கநந. (இ) "நின்ற

(பிரதிபேதம்) *என்பதொன்றின்றியது. †எனவாங்கு ஆங்கசை, ‡ ஏர்நுதலாய்தாமெண்ணிய வெல்லாம், ஏர்நுதாரமெண்ணியவையெல்லாம்; ||அழகியநுதலினை,

(௬௮.) (௧)பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர;

௬ ஊரன்மன் னுரனல்ல னமக்கென்ன வுடன்வாளா
தோளூர்தொக் கிருந்தநின் பெண்டிரு ணேராகிக்
களையாநின் குறிவந்தெங் கதவஞ்சேர்ந் தசைத்தகை
வளையின்வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ
கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

௧௨ ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின்
மாறீர்க்கு மவன்மார்பென் றெழுந்தசொன் னோவேமோ
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் றாரெள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;

௧௬ சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினையினன்
றேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ

நெஞ்ச, மறைபோன தன்றிங் கவன்வழியே" அம்பிகா. ௫௧௨. (ரு) "மகிழ்நர் தம்மே, லன்போடு நன்னெஞ் சறிவறை போக" தஞ்சை. ௩௭௮. என்பவைகளும் (உ) "மொய்கொண் டெழுந்த வமரகத்து மாற்றார் வாய்ப், பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க்கு" பழ. ௨௪௧. (ஊ) " அறிவறை போகிய பொறியறு நெஞ்சத் திறை" சிலப். ௨௦: ௨௫. (எ) "அறைபோக் கமைச்சின் முறைபோக் கெண்ணினும்" பெருங். (௩) ௧௭: ௫௩. (ஏ) "கீழ்த்தறை போகிய கிளைஞராமென" கந்த. மார்க்கண்டேய. ௮௬. (ஐ) "காசுண்ட பூணனறை போய கருத்தனான்" (ஒ) "நானறைபோய மனத்தோ டிங்குப், பரிவுறலும்" திருவிளை. வரகுணனுக்குச். ௧௦; வன்னியுங். ௨௨ என்பவைகளும் (ஓ) "ஓட்டை நெஞ்சின ராய்" (சீவக. ௬௪௨) என்பதற்கு, 'அறைபோய நெஞ்சினராய்' என்றெழுதியிருக்கும் உரையும் இங்கு ஒப்புநோக்கற் பாலன.

௧. புல்லுதன் மயக்கும் புலவிக்கண் காமக்கிழத்தியர் கூற்று நிகழ்தற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி, இது மூவகை யார்க்கும் பொது வென்பர், இளம்; தொல். கற்பி. ௬. ௮. 'புல்லுதன் மயக்கும்'

வொலிகொண்ட சும்மையான் மணமனை குறித்தெம்மிற்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்;

எனவாங்கு;

உக நனவினுன் வேறுகும் வேளா முயக்க
மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் றுங்குக்
கனவினு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு.

இது பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தி தன்காதன்மிகுதி கூறி ஊடியவாறு கண்டு சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

இதன் பொருள்.

(க)பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதி*மொழி யிடன்மாலை (உ)†வினைவர்போல் (ங)வல்லவர்

க. (அ)"வையங்காவலர்வழிமொழிந்தொழுகப், போகம்வேண்டிப்பொதுச் சொற்பொறாஅ, திடஞ்சிறி தென்னு மூக்கந்துரப்ப, வொடுங்கா வுள்ளத்து................சேரலாதனை" (ஆ) "வழுதி, தண்டமிழ் பொது வெனப் பொறாஅன்" புறம். அ: க-ரு; ருக: ச – ரு. (இ) "பெருநில முழுதாளும் பெருமகன்" சிலப். க: ஙக. (ஈ) "ஞாலம் பொதுவெனப் பொறாவரசர்" துறள். சகூஉ. பரி. (உ) "கோச்செங்கட் செம்பியர் கோன், பூவலயம் பொதுநீக்கி யாண்டருளி" பெரிய. கோச்செங்கட். கஎ. (ஊ)"உலகம்பொது வறநூன்முறை யோராழி செலுத்தி" கூர்ம. இந்திரத்துய்மன். உஉ. (எ)"நிலமுழு தாண்டநேமி, நாவிரிகீர்த்தியாளனளனெனு நாமவேந்தன்" வில்லி. அருச்சுனன்றவ. உச. (ஏ) "முழுதுலகம் பொதுநீக்கி முழுச்செங்கோல் செலுத்துநாள்" உத்தரகோச. அரித்துவசன் சாபந்தீர்த்த. உ. (ஐ) "கொடியு முரசுங் கொற்றவெண் குடையும், பிறர்கொளப் பொறாஅன் றனே கொண்டு, பொதுநீங்கு திகிரி திசை திசை போக்கி" சிதம்பரமும்மணி. உரு.

உ. (அ) "கொலையஞ்சா வினைவரால்" (ஆ) "நட்பாக்கும் வினைவர் போல்" கலி. கO: சு, சகூ: அ. (இ) "வேந்துபிழைத் தகன்ற வினைவ ராயினும்" பெருங். (க) ஙஅ: கூச.

ங. "வல்லவர் செதுமொழி சீத்தசெவி" என்பது மூன்றும்வேற்றுமைத் தொகைக்குமேற்கோள்; தொல். எச்ச. சூ. கஎ: நச்.

(பிரதிபேதம்) *மொழிவிடன்மாலை; †வினையர்

(௧)செதுமொழி சீத்த (௨)செவி(௩)செறு வாக
முதுமொழி *நீராப் (௪)புலனு ழுவர்
(௫)புதுமொழி கூட்டுண்ணும் (௬)புரிசைசூழ் புனலூர

எ-து: பிறர்க்கும் இம் மண்ணுலகம் பொதுவென்னும் மொழி இன்றாக மண்ணுலகமுழுதையுமாளுஞ்†சக்கரவர்த்திகளுக்கு(எ)அறிவாகிய சொல்லைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சரைப்போல, நூல்வல்ல ஆசிரியராலே பொல்லாவாகியசொற்கள் இடையிற் புகுதாமற் போக்கப்பட்ட தஞ்

---

௧. (அ) "செதுகாற் குரம்பை"(ஆ)"செதுகாழ் சாய்ந்த" அகம். ௬௩: ௧௪; ௩௭௩: ௪; (இ) "புதுக்கண் மாக்கள் செதுக்கணா" புறம். ௨௬௧: ௯. (ஈ) "செதுமதித்தக்கன்" தே. திருஞான. அம்பர். 'படியுளார்' ௫. (உ) "செதுமதிச்சமண்" திருவிசைப்பா. ௧௭. (ஊ) "செதுமகப் பெற்று" சீவக. ௧௧௨௪. (எ) செதுவன் மரத்தில்" பெருங். (௩) ௧௫: ௨௦. (ஏ) "செதுநெறி நிலையினுரே" (ஐ) "செதுகைப் பெருந்தானவர்" கம்ப. இலங்கைகாண். ௬; நாகபாசப். ௨௨. (ஒ) "செதுவதட்டு" தணிகை. திருநாட்டு. ௧௧௦. என்பவற்றால் செதுவென்பதன் பொருள் துணிக.

௨. (அ) "வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தா, மூள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து......................பரிசிலர்க்கு" (ஆ) "பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல், வித்திய பனுவல் விளைந் தன்று நன்றென" புறம். ௨௦௬: ௨ - ௫. ௨௩௭: ௪ - ௫. (இ) "மறையோன் மறைநா வுழுது வான்பொரு, ளிறையோன் செவிசெறு வாக வித்தலின்" சிலப். ௨௮: ௧௮௭ - ௧௮௮.

௩. செய்யைச் செறுவென்பது அருவா நாட்டு வழக்கு; தொல். எச்ச. சூ. ௪. நச்.

௪. "புலனுழு துண்மார்" புறம். ௪௬: ௩.

௫. (அ) "புதுமொழிகூட் டுணத்தமிழாற் புனைதல் செய்தான்" நைடதம். சிறப்புப். (ஆ) "ஈண்டுநலந் தருதல் வேண்டிப் பாண்டியர், பாடுதமிழ் வளர்த்த கூடலின்" ஆசிரிய. 'சிறுசெவி யன்னே'

௬. "புரிசைசூழ் புனலூரன்" கலி. ௬௭: ௫.

௭. (அ)"தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச், சொல்லலும் வல்ல தமைச்சு" (ஆ) "அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந், திறனறிந்தான் றேர்ச்சித் துணை" (இ) "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை" (ஈ) "அறிகொன் றறியா னெனினு முறுதி, யுழையிருந்தான் கூறல் கடன்." (உ) "சொலல் வல்லன் சோர்வில னஞ்சா னவனை, யிகல்வெல்லல் யார்க்கு மரிது" குறள். ௬௩௪, ௬௩௫, ௬௩௬, ௬௩௮, ௬௪௭. (ஊ) "செறிந்தவர் தெளிந்த

(பிரதிபேதம்) *நீராற்புலன், †சக்கிரவர்த்திகளுக்கு.

செவிகள்(க)செய்யாக, முன்னுள்ளசான்றோர்கூறிய செய்யுட்கள்தஞ்சொல்லை வளர்க்கும் நீராக, அறிவினையுடைய நாவாகிய ஏராலே உழுதுண்ணும் புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டு உண்ணும் மதில் சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையையுடையவனே ; எ - று.

இதுவும் பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனாகக் கூறியது.

சு ஊரன்மன் னுரனல்ல *னமக்கென்ன வுடன்வாளா
தோரூர்தொக் கிருந்தநின் பெண்டிரு ணோராகிக்
களையாநின் குறிவந்தெங் கதவஞ்சேர்ந் தசைத்தகை
வளையின்(உ)வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ
கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு †நினைவாடு நெஞ்சத்தேம்

எ - து: நமக்கு ஊரன் மிகவும் பற்றுக்கோடல்லனெனச் சொல்லிப் பின்னர் ஒருவர்கூறியது ஒருவர்கூறாதே ஓரூர் குடியேற்றவேண்டுவாராய்த் திரண்டிருந்த நின் சேரிப்பரத்தையருடனே யாங்களும் ஒப்பாகி, நமக்கு ‡அவன் உறவல்லன் அவனை முயங்காதேகொள்ளுங்கோளெனச் ||சொல்லி முயங்கக்கருதின எந்தோள்களுடனே மாறுபட்டுப் பின்னை முயங்கக்கருதின

நூலார் சிறந்தவை தெரிந்து சொன்ன, லறிந்தவை யமர்ந்து செய்யுமமைதியா னரச னுவான், செறிந்தவர் தெளிந்த நூலார் சிறந்தவை தெரிந்து கூறி, யறிந்தவை யியற்றுகிற்கு மமைதியா ரமைச்சராவார்" சூளா. மந்திரசாலை. கூ. (எ) "தம்முயிர்க்குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்; வெம்மையைத் தாங்கி நீதிவிடாதுநின் றுரைக்கு மெய்யர்" கம்ப. அயோத்தி. மந்திரப். கூ. (ஏ) "மன்னவர் செவியழன் மடுத்த தாமென, நன்னெறி தருவதோர் நடுவுநீதியைச், சொன்னவ ரமைச்சர்கள்" கந்த..................(ஐ) "மதிநுட்பநு மாகிச் சோர்வில், சொல்லா லுடையார் மனமுங்களி தூங்கச் சொல்லிப், பல்லார் பிறர்சொற் பயனுய்ந்து கவர வல்லார்" திருவிளை. பன்றிக்குட்டிகளை. கச. (ஒ)"செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி, வெகுளினும் வாய்வெரீஇப் போா..........யமைச்சு" நீதிநெறி. சுரு. (ஓ) "சுருக்கிமெய் விளக்கி யினிமையும் பயனுந் தொகுத்தய லார்மொழிக் கிடையாத், திருக்கிளர் மொழியைச் சோர்வற வவைக்கட் ,செல்லுமா றஞ்சுத லின்றி, யுரைக்கவல் லவரே யமைச்சர்க ளாவர்" விநாயக. அரசியற்கை. கoசு.

க. "பன்றி நாட்டார் செறுவைச் செய்யென்று வழங்குவர்" நன். பெயரி. ரு. கசு. மயிலை.

உ. "வாய்விடேஉந் தூரனென்ப" கலி. சகூ: கரு.

(பிரதிபேதம்) *எமக்கென்னவுடன்வாராது, †நினைவாகு, ‡இவனுறவல்லன், ||சொல்லமுயங்க,

நினைவு கெடுகின்ற நெஞ்சத்தினையுடைய யாங்கள் நின்பெண்டிருள் நோக்கி ஊரன் உரனல்லனென்ற வார்த்தையைக் களைந்து நின்குறியிடத்தே வந்து ஆண்டுக் காணாமையின் எம்மிடத்தே வந்தாயென்று கருதி எங் கதவத்தைச் சேர்ந்து தட்டின கையின் வளையினாலே தம் வரவினைச் * சொல்லுதலை இயல்பாகவுடைய அப்பரத்தையரை நோவேமோ? அதற்கு யாங்கள் உரியே மல்லேமே; எ - று.

இது †"வண்ணம் பசந்து புலம்புறு காலை, யுணர்ந்த போல‡வுறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே"(௧)என்பதனான் உறுப்பினை உணர்வுடையதுபோற் கூறிற்று.

௧௨ ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின்
மாறீர்க்கு மவள்மார்பென் றெழுந்தசொன் னோவேமோ
முகை||வாய்த்த (௨)முலைபாயக் குழைந்தநின் றாரெள்ள
(௩)வகைவரிச் (௪)செப்பினுள் வைகிய கோதையேம்

எ-து: முகையின்றன்மை வாய்த்த முலைகள்முயங்குகையினாலே ÷செவ்வி குலைந்த நினதுமாலை எம்மை இகழ்ந்துகூறக், கூறுபாட்டினை × யுடைத்தாகிய ∴வரியினையுடைய பூச்செப்பிலே பயன்படாது தங்கிய மாலைத்தன்மையை யுடைய யாங்கள் இற்பரத்தையர் ஊடினமகளிர் ஊடலைத்தீர்த்துமுயங்காதே

௧. தொல். பொருளி. சூ. அ. இச்சூத்திரத்தினுரையிலும் இவர், தலைவி 'தன்மேனி பசந்து தனிப்படரு றுங் காலத்துத் தனது உறுப்பினை உணர்ந்ததுபோலக் கூறினதற்கு, "கேளல...........நெஞ்சத்தேம்" என்பதை மேற்கோள் காட்டியிருக்கிறார்.

௨. "ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே" புறம். ௭௩: ௧௪.

௩. "வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற், றகைநலம் வாடி மலர் வனம் புகூஉ, மாதவி பயந்த மணிமே கலையொடு" மணி. ௪; ௬௫-௬௭.

௪. (அ) "பெய்யாது வைகிய கோதை போல, மெய்சா யினையவர் செய் குறி பிழைப்ப" நற்.௧௧:௧-௨.(ஆ) "மடைமாண் செப்பிற் றமிய வைகிய, பெய்யாப் பூவின் மெய்சா யினளே" குறுந். ௯.(இ) "பீர்தங்கிப் பெய்யா மலரிற்பிறி தாயி னாளே" சீவக.௧௧௬௦.என்பவையும்(ஈ) "பாதிரிக் குறு மயிர் மாமலர், நறுமோரோடமொ டுடனெறிந் தடைச்சிய, செப்பிடந் தன்ன நாற்றம்" நற். ௩௩௭:௪-௬.(உ) "செப்புவாயவிழ்ந்த தேம்பொதி நறுவிரை, நறுமலர்" சிலப். ௨௨: ⁸௧௨௧ - ௧௨௨. (ஊ) "பித்திகைக் கோதை செப்புவாய் மலரவும்" பெருங். (௧) ௩௩: ௭௬. (எ) "கற்பக

(பிரதிபேதம்) * சொல்லுதலையுடைய பரத்தையரை † வண்ணந்திரிந்து புலம்புறுகாலை ‡ உறுப்பினைக்கிளவி புணர்ந்த; || வாய்ந்த, ÷ செவ்விகுலைந்த மாலையெம்மை × உடைத்தாகிய வச்செப்பிலே ∴ வரியினையுடையசெப்பிலே

அவர்கள் நலங்கெடும்படி அவரை (௧) இடையன்கொன்ற *மரமாக்கிவைத்து அச்சேரிப்பரத்தையரிடத்து வேட்கையைத்தீர்க்கும், அவனுடையமார்பென்று ஊரிற்பிறந்தசொல்லைநோவேமோ; அதற்கு யாங்கள்உரியேமல்லேமே; எ - று.

ஒடியவெறிந்தென்பது, (௨)†ஒடியெறிந்தெனவிகாரமாயிற்று.

௧௬ சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் ‡வினையினன்
றேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ
||வொலிகொண்ட சும்மையான் மண ÷மனை குறித்தெம்மிற்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டியாம்

எ - து: ஆரவாரத்தை மாறுமற் றன்னிடத்தேகொண்ட ஆரவாரத்தாலே நீ மணஞ்செய்கின்ற மனையாகக் கருதி எம்முடைய ×மனையிலே பொலிக பொலிகவென்று கூறிப் **புகுந்த நின்னுடைய புலைத்தொழிலையுடைய பாணனைக் கண்ட யாங்கள் சேரிதோறுஞ் சென்று நீ ††சேர்ந்த இல்லை வினையினையுத் தேரோடே கூடத் திரிதலைச்செய்யும் பாகனைக் குறைகூறுவேமோ? அதற்கு யாங்கள் ‡‡உரியேமல்லேமே ; எ - று.

சேரியான் என்றது "ஊரானோர் தேவகுலம்" என்றாற்போல் நின்றது. சும்மையை ஒலி விசேடித்து நின்றது. |||புலையன், செறற்சொல்.

× ×எனவாங்கு, அசை.

மாலையுஞ், சேம மணிநகைச் செப்பினு ளேந்துபு" தூணா. மந்திர. ௫௬. என்பவையும் இங்கே அறிதற்பாலன.

௧. (அ) "இடைய னெறிந்த மரம்" பழமொழி. ௩௧௪. (ஆ) "இடைய னெறிந்த மரமேயொத் திராமே"பெரியதிருமொழி. (௧௧) ௮ : ௬. (இ) "இடைமகன் கொன்ற வின்ன மரத்தினேன்" சீவக. ௧௧௧௪. (ஈ) "பொதுவனோர்மகன், கொன்றிடுமுலவைபின்கொள்கையாயினேன்" கந்த. மூவாயிரர்வதை. ௭௧. (உ) "நன்றுநங் கேள்வ னருளொன வெண்ணி நாப்புலர்ந் துள்ளழிந் தாயன், கொன்றநீண் மரம்போ லெழினலம்வாடிக் குற்றுயி ரொடும்பதை பதைத்தாள்" கூர்ம. இராமன் வைகுந்த. ௩௯. (ஊ) "ஆயன் கொன்ற மரம்பொர, நூரண விந்தொரு பற்று மின்றி முடிந்த பாணியின்" தணிகை. இந்திர னருள். ௧௨.

௨. (அ) "ஒடியெறியத் தீரா பகை" பழமொழி. ௩௮௭. (ஆ) "நெறியினை யொடியெறி கிற்பவ ரொத்து" கலிங்க. ௪௧௧. (இ) "ஒடியெறிந்து மூரிவா ரொழுக்கினர்" விநாயக. சிந்தாமணி. ௭௮.

(பிரதிபேதம்) * மரமாக்கினைத்துச் சேரிப்பரத்தை †ஒடியெறிந்தெனவிகாரம் சேரியாற் சென்று ‡வினைவினன் || வலிகொண்ட ÷மனைக்குறித், × மனையிலேபொலிக வென்று **புகுந்த நம்முடைய ††சேர்வில்லை ‡‡ உரியமல்லேமே ||| புலையன் செற்றச்சொல் × × எனவாங்கு ஆங்கசை நனவினன்;

நனவினான் வேறாகும் வேளா முயக்கு
*மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் றாங்குக்
(௧)கனவினா னெய்திய செல்வத் †தனையதே
(௨)ஐய வெமக்குநின் மார்பு

எ - து: எம்மனைக்கண்ணே நீ ஒருகாலத்தே ‡வந்தாயாயின் நின்னைப் பெற்று மகிழ்ந்து நீ நீங்கிய பின் எந் தோள் மெலிகையினாலே அதனை உணர்ந்தவர்கள் இக்காலத்து இவளும் ||இவரும் இத்தன்மையராயினரென்று புறங்கூறுதலின் அக்கூற்றை யாம் ஏற்றுக்கொண்டு பழையநிலையைப் பெறுதற்கு எக்கற்று முயங்குமாறுபோலே வியக்கத்தக்க நின் மார்பினிடத்தே முயங்கினும் உண்மையிடத்து வேறாயிருக்கும் நீ விரும்பாத முயக்கம் எமக்குக் கனவின்கண் வரப்பெற்ற செல்வத்தையொப்ப தொன்றாய் இருக்கும்; எ-று.

இதனாற் பயனின்றென ஊடினாள். ×நனவினான் கனவினானென்பன, இடப்பொருள. நனவு - உண்மை; கனவு - பொய்.

/ ஐயென்னும் உரிச்சொல், ஐயவென ஈறு=திரிந்தது.

இது மெய்யன்றிப்பொய்யாகக்கோடலிற் (௩)பொய்யாக்கோடலென்னு மெய்ப்பாடு.

இஃது ÷ஈரடிமிக்க தாழிசையும் வருதலிற்கொச்சகம். (௩)

(சூ. ௩ழ.)போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய
மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் றுணையாக

---

௧. (அ) "கனவுகண்டது நனவினெய்துத, றேவர் வேண்டினு மிசைதல் செல்லாது, காவ லாள கற்றோர் கேட்பிற், பெருநகை யிதுவெனப் பேர்த்துரை கொடாஅ" பெருங். (௪) எ: ௧௧௦ - ௩. (ஆ) "செம்பொன் கனவினாற் காண்டல் கைப்புகுமோ" இருசமய. (௩) க: க, ௧. (இ) "கண்டகனவின் பொருள்போல யாவும் பொய்" திருவரங்கத். ௬௨.

௨. "ஐவியப்பாகும்" தொல். உரி. சூ. ௮௭.

௩. பொய்யாக்கோடலென்பதற்கு மெய்யைப் பொய்யாக்கோடலென்று பொருள்கூறி அம்மெய்ப்பாட்டிற்கு "கனவினா னெய்திய.......... மார்பு" என்பதை மேற்கோள் காட்டினர், பேராசிரியரும்; தொல். மெய்ப். சூ. ௨௨. இ - வி. உரைகாரரும் இதனையே பின்பற்றினர்; இ - வி. சூ. ௫௮௦.

(பிரதிபேதம்) * மனைவயிற்பெற்று †இனைஇயதே ‡ வந்தாயினிநின்னை || இவனுமித்தன்மை × கனவினா னென்பன இடப்பொருட்டு நனவுகனவுண்மைபொய் = திரிந்தது மெய்யன்றிப்பொய்யாகக்கொண்டலிற்பொய்யாகக்கொண்டலெனும் மெய்ப்பாடு ÷ ஈரடித்தாழிசை

ரு வேதுடை யந்தண னெரிவலஞ் செய்வான்போ
லாய்தூவி யன்னந்தன் னணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉ மிகுபுன னல்லூர ;

அ தெள்ளரிச் சிலம்பார்ப்பத் தெருவின்கட் டாக்கிநின்
னுள்ளங்கொண் டொழித்தாளைக் குறைகூறிக் கொளநின்றாய்
துணிந்தது பிறிதாகத் துணிவில ளிவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் பயனில மொழிவாயோ ;

௧௨ பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்
நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென
வஞ்சத்தான் வந்தீங்கு வலியலைத் தீவாயோ;

௧௬ இணர்ததை தண்காவி னியன்றநின் குறிவந்தாள்
புணர்வினிற் புகன்றாங்கே புனலாடப் பண்ணியாய்
தருக்கிய பிறவாகத் தன்னில ளிவளெனச்
செருக்கினல் வந்தீங்குச் சொல்லுகுத் தீவாயோ;

எனவாங்கு;

௨௧ தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்துமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பறக் கால்.

இதுவும் அது.

இதன் பொருள்.

போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் (க)வதுவைநாட் கலிங்கத்து *ளொடுங்கிய

க. (அ)"சாணிடை நெடிய வாட்கண் டளையவிழ் குவளை பூப்பப், பூணுடை முலையின் பாரம் பொறுக்கலாச் சுளிவின் மேலு, நாணட நடுங்கிக் கையா னகை முகம் புதைத்த தோற்றஞ், சேணிடை யரவு சேர்ந்த திங்களை யொத்ததன்றே" சீவக. ௨௪௬௧. (ஆ)"கைம்மலரின் வீரனவள் கைம்முகிழ் பிடிப்ப, மெய்ம்மயி ரெறிந்துமணி வேர்நுத லரும்பிச் செ..........சீறடிகள் செவ்வனிட மாட்டா, வம்மயிலி னுணதளை

(பிரதிபேதம்) * ஒடுங்கிய.

(க) மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் றுணையாக
(உ)*வோதுடை யந்தண(ங)னெரிவலஞ் செய்வான்போ
(ச)லாய்தூவி யன்னந்தன் னணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉ மிருபுன னல்லூர

எ-து:†உத்தரீயத்துள்ளேகாணுல்ஒடுங்கிநோக்குகின்ற(ரு) காதல்கொண்ட (சு)மான்போலுநோக்கினையுடையமடந்தை தனக்கு (எ)இம்மை மறுமைக்குத்

யாவரறை கிற்பார்" சூளா. கல்யாண. உஎஎ. என்பவைகளும் (இ) "வதுவையயர்தல் வேண்டுவலாங்குப், புதுவை போலுநின்வரவுமிவள், வதுவைநா ளெடுக்கமுங் காண்குவல் யானே" (கலி. ருஉ: உங - ரு.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

க. "மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய்" கலி. ருசு: கஎ.

உ. (அ) "அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே" இனியது. அ. (ஆ) "ஓத்துடை யந்தணர்க்கு" மணி. கங: உரு.

ங. (அ) "சாலி யொருமீன் றகையாளைக் கோவலன், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத், தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை" சிலப். க: ருக - ருங. (ஆ) "இட்ட வுத்தரியமின்னு மெரி மணிப்பருமுத்தார, மட்டவிழ்கோதை வெய்ய வருமுலைதாங்கலாற்ரு, நெட்டிருங் கூந்த லாட னோர்வளை முன்கை பற்றிக், கட்டழல் வலங் கொண்டாப் பொற் கட்டிருனேறினுனே" (இ) "குளிர்மதி கொண்ட நாகங் கோள்விடுக் கின்றதேபோற், றளிர்புரை கோதைமாதர் தாமரை முகத்தைச்சேர்ந்த வொளிர்வளைக் கையைச் செல்வன் விடுத்தவ ளிடக் கைபற்றி, வளரெரி வலங்கொண் டாய்பொற் கட்டிரு னேறி னுனே", சீவக. அஙரு, உசசுஅ. (ஈ) "தங்கழல் வேள்விமுற்றித் தையலக் காளை யோடும், பொங்கழல் வலஞ்செய் போழ்தில்" சூளா. சுயம்வா. உஎஅ. (உ) "இடம்படு தோளவ னேடியை வேள்வி, தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின், மடம்படு சிந்தையண் மாறு பிறப்பி, னுடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள்" கம்ப. கடிமண. கூக. (ஊ) "தன்மங் கலந்த மனத்தோனையத் தைய லோடுந், தொன்மங் கலச் செஞ் சுடர்த்தீவலஞ் சூழுவித்தார்" வில்லி. திரௌபதிமாலை. கூச. (எ) "பொங்கு செந்தழல் சூழ்வந்து" நைடதம். மணம். உ௦.

ச. "ஆய்தூவி யனமென" கலி. ருசு: கரு.

ரு. "மாதர் காதல்" என்பது தொல். உரிச். சூ. ங௦. இச்சொல் ஈறு திரிந்து மாதென்றும் வரும்.

சு. மான் போலும் நோக்கு - மானோக்குப் போலும் நோக்கு.

எ. "இம்மை மாறி மறுமை யாயினு, நீயா கியரெங் கணவனை, யானு கியர்நின் னெஞ்சுநேர் பவளே." குறுந். சக.

(பிரதிபேதம்) *ஓத்துடை யந்தணன், † உத்தரீயத்துள்ளே,

துணையாகக் காதலித்தலைக்கொள்கின்ற *கலியாணநாளிலே ஓத்தினையுடைய †அந்தணன் அங்கியங்கடவுளை வலஞ்செய்வான்போலே (க) மெல்லிதாகியசூட்டு மயிரினையுடைய அன்னம் தன்னுடைய அழகிய நடையினையுடைய பேட்டோடே கூடிப் பூக்கள் அலர்ந்த குளிர்ச்சியினையுடைய பொய்கையிடத்தே நின்ற தாமரையினது புதிதாக முறுக்கு நெகிழ்ந்த தாது சூழ்ந்த தனித்த மலரைப் புறத்தே சேர்ந்து பெருமை தரும்படி திரிதரும் பரந்த புனலையுடைய நல்ல ஊரினையுடையவனே; எ - று.

வலஞ்செய்வான் போலென்ற ஏனையுவமம் பயவுவமமின்றி வினையுவமமாத்திரையை மேல்வருகின்ற கருப்பொருட்குக் கொடுத்து †அதனைச் சிறப்பித்துநின்றது, ‡அன்னத்திற்கு அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திர ||விதியாற் சூழுங் கருத்தின்றித் தாமரையைச் சூழவருகின்ற தொழின்மாத்திரையே கோடலின். அந்தணன் எரிவலஞ்செய்வான் =போல அக்கருத்தில்லாத அன்னம் பெடையோடே தனிமலரைச் சூழத் திரியும் ஊரவென்றதனுன் நீயும் அக் கருத்தின்றிக் குலமகளிரைத் தீவலஞ்செய்துவரைந்துகொண்டு பாதுகாவாது ஒழுகுகின்ற நினக்கு எம்மைப் பாதுகாத்தலுளதாமோவெனக் காமக் கிழத்தியும் உள்ளுறையுவமங் கூறினளாகவுரைக்க. இதனை, "ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே"(உ)என்று உவமப்போலியிற் கூறிய விதியாற் கொள்க.

அ (ங)தெள்ளரிச் சிலம்பார்ப்பத் தெருவின்கட் ÷டாக்கிநின்
னுள்ளங்கொண் ×டொழித்தாளைக் குறைகூறிக் கொளநின்றாய்
துணிந்தது பிறிதாகத் துணிவில ளிவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் (ச)பயனில மொழிவாயோ

எ - து: தெளிந்த உள்ளிடுமணியையுடைய சிலம்பு ஆரவாரிப்ப வந்து தெருவிடத்தே (ரு) தாக்கணங்கு போலத் தாக்கி நின்னெஞ்சை அகப்படுத்திக்

க. "ஓய்த லாய்த னிழத்தல் சாஅ, யாவயினான்கு முள்ளத னுணுக்கம்" தொல். உரி. சூ. ஙஉ.

உ. தொல். உவம. சூ. உஎ.

ங. "தெள்ளரிப் பொற்சிலம்பு" மது. சுசுஅ.

ச. குறள். 'பயனில சொல்லாமை' என்னும் உ௦-ஆம் அதிகாரம் இங்கே அறிதற்பாலது.

ரு. தாக்கணங்கென்பதற்கு, தாக்கி வருத்துவதோரணங்கு (குறள் க௦அஉ. பரி) தீண்ட வருத்தஞ்செய்யுந் தெய்வம்; சீதேவியுமாம் (சிலப். கச: கசு௦. அரும்பத) தீண்ட வருத்துந் தெய்வமகள் (சிலப். கச: கசு௦ அடியார்க்கு) தீண்டி வருத்துந்தெய்வம் (மணி. ங:நஎ. உரை) வருத்துந்

(பிரதிபேதம்) * கல்லியாண நாளிலே, † அதனைப்பிறப்பித்துநின்றது, ‡ அன்னத்திற்றங்கிய, கடவுள், || விதியிற்சூழும் = போசக்கருத்தில்லாத, ÷ தாக்குநின் × ஒளித்தாளை,

கொண்டுபின்னர்க்கைவிட்டவளை நின் (௧)வருத்தத்தைச்சொல்லி அழைத்துக் கொள்ளக் கருதிநின்ற நீ அறுதியிட்டு வந்த காரியம் வேறொன்றாயிருக்க இவள் தனக்கென ஓர் (௨) அறுதியுடையளல்லளென்று கருதி இவ்விடத்தே தாழ்ந்தாயைப்போல ,வந்து பயனில்லாத சொற்களைச் சொல்லக்கடவை யோ? அது நின்னை வருத்தாதோ? எ - று.

௧௨ (௩)பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்
(௪)நெஞ்சத்த பிறவாக *நிறையில ளிவளென
வஞ்சத்தான் †வந்தீங்கு வலியலைத் தீவாயோ

எ-து: ‡நீ செல்லாதே அகப்பட்ட (௫)பரத்தையரது நெஞ்சு வலிதென்று ||அறியாது பாகனைத்தேரொடும்போகவிட்டு அவள் உன்னைவிருந்தாக எதிர் கொள்ள அவள் வரவினைக் கருதிநின்ற நீ அவள் வரக்காணாமையினாலே நின்னெஞ்சத்திடத்தன வேறுசிலவாயிருக்க இவள் (௬) நிறையென்கின்ற

தெய்வம் (அகம். ௭:௪. உரை)என்று பொருளெழுதப்பெற்றிருத்தலால் அவ்வுரைகாரர் பலரும் பெரும்பாலும் ஒரு கொள்கையர்; நச்சினார்க் கினியர் "வேய்நெடுந் தோளியொர், தாக்கணங் கோமக ளோவெனத் தாழ்ந்தான்" (சீவக. ௧௪௭௩) என்புழியும் இச்சொற்குத் திருவென்றே பொருள் கூறியுள்ளார். இவர் கொள்கைக்கு, "தாக்கணங்குறை யுந்தடந்தாமரை" (சீவக. ௮௭௧) என்பதும் சிலப். அரும்பத. இரண் டாவதுரையும் நிகண்டுகளும் ஒத்தனவாம்.

௧. குறை - ஆகவேண்டிய காரியமுமாம்.

௨. அறுதி - வரையறை; நிச்சயம்.

௩. "உள்ளது வர்த்தல்" என்னும் மெய்ப்பாட்டிற்கு, "பட்டுழி .... கொள நின்றாய்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. ௨௪. பே.

௪. தோழிக்குந் தலைவிக்கும் உரித்தாகிய வெளிப்படக் கூறுதலுள், :ஆற்றாமை வாயிலாகத் தலைவன் வந்துழித் தலைவி வெளிப்படக் கூறிய தற்கு, "நெஞ்சத்த பிறவாக..................ஈவாயோ" என்பது மேற் கோள்; தொல். பொருளி. சூ. ௪௭. நச்.

௫. "இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை" (அகம். ௫௬: ௩.) என் பதற்கு, 'இரும்பு போன்ற நெஞ்சினை யுடையராகிய பரத்தையர்' என்று எழுதி யிருக்கும் உள்ளுறை இங்கே அறிதற்பாலது.

௬. நிறையென்பதற்கு 'மறை பிறரறியாமை' என்று நவ்வந்துவனாரும், 'ஐம்பொறிகளையும் அடக்குதல்' என்று பேராசிரியரும், 'காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகு மொழுக்கம்' என்று மணக்குடவரும், 'காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகு மொழுக்கம்' என்றும் 'கற்பு' என்றும் பரிப்பெருமாளும், 'நெஞ்சைக்கற்புநெறியில் நிறுத்துதல்' என்றும் 'மனத்து அடக்கற்பாலனவற்றை அடக்குதல்' என்றும் 'மறை

(பிரதிபேதம்) * நிறைவில ளியளென † வந்தீண்டு வலிதொலைத் தீவாயோ. ‡ நீசொல்லா தெய்தப்பட்ட || அறியாதபாகனை;

குணமுடைய னல்லனென்று கருதிப் பொய்வன்மையாலே இவ்விடத்தே வந்து உன் (௧)ஊராண்மையாலே அலைக்கக்கடவையோ ? அது நின்னை வருத்தாதோ? எ - று.

நெஞ்சத்தவென்ற பன்மை தன்வயத்த னாக்கிக்கொள்ளக் கருதிய தொழில்களை.

௧௬ (௨)இணர்ததை தண்கா வியன்றநின் குறிவந்தாள்
புணர்வினிற் புகன்றாங்கே புனலாடப் பண்ணியாய்
தருக்கிய பிறவாகத் தன்னில னிவளெனச்
செருக்கினல் வந்திங்குச் (௩)சொல்லுகுத் தீவாயோ

எ-து: பூங்கொத்து நெருங்கின குளிர்ந்த பொழிலிலே நீ செய்த குறியிடத்தே வந்தவளைப் புணர்ச்சியிடத்தே கொண்டாடி அப்பொழுதே கூடப் புனலாடும்படி பண்ணின நீ நின்னெஞ்சின் மிக்குநடக்கின்றவை வேறொன்றாயிருக்க இவள் (௪) தனக்கென *ஒரு நெஞ்சுடையளல்லளென்று கருதி மனச்செருக்காலே இவ்விடத்தேவந்து பரத்தையர்க்குக்கூறும் பயன்படுசொற்களைப் பாழே †போக்கக்கடவையோ ? அது நின்னை வருத்தாதோ ? எ - று.

"வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்த, றாவின் றுரிய தத்தங் கூற்றே" (௫)என்பதனால், துணிவிலன் நிறையிலனென ஆற்றாமைவாயிலாகத் தலைவன் வந்துழி வெளிப்படக்கூறினான்.

எனவாங்கு, அசை.

௨௧ (௬)தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது

பிறரறியாமை'என்றும்பரிமேலழகரும், 'மனத்தைநிறுத்துதல்'என்றும் 'மறைபிறரறியாமை' என்றும் நச்சினார்க்கினியரும் பொருள் கூறுவர்.

௧. "ஊராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி. அ௯: ௨) என்பதும் அதன் உரையும் குறிப்பும் பார்க்க.

௨. "இணர் ததையும் பூங்கானல்" சிலப். எ: ௩௧.

௩. (அ) "கானலந் துறைவற்குச் சொல்லுகுப்போயே" ஐங். ௧௩௬. (ஆ) "பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே"

௪. "அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே, நீயெமக் காகாதது" குறள். ௧௨௯௧. என்பதும் கலி. ௬எ: தாழிசைகளின் ஈற்றடிகளும் இந்நூற்பக்கம் ௩0௪: ௩ - ஆம் குறிப்பும் நோக்குக.

௫. தொல். பொருளி. சூ. ௩எ.

௬. "தருக்கேம் பெரும..........விருப்பற்றக்கால்" என்பது ஊடலுக்கு மேற்கோள். தொல். அகத்திணையியல். சூ. ௪௩. ௩௪.

(பிரதிபேதம் * ஓர்நெஞ்சு; † போகக்கடவையோ வாயிற்கிளவி.

சூழ்ந்தவை செய்துமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்

எ-து: பெருமா! நின்னருளால் யாங்கள் *மனஞ்செருக்கேம்;எம்மிடத்தே விருப்பமுற்றுக் (௧) குறைந்தாய்போலேவந்துநின்று நினக்குத் தகுதிப்பாடில்லாதவற்றைச் செய்யாதே நீவிரும்பினாரிடத்து நுகரக்கருதியவற்றைச் செய்துமுடித்து ஆண்டுள்ள விருப்பமற்றஇடத்துப் பின்புஎம்மையும் நினைப்பாயென ஊடல் தீர்கின்றாள் கூறினாள்; எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௬)

(எO.) மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடு மன்னத்தன்
னணிமிகு சேவலை யகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கிமட மடப்பெடை
மதிநிழ னீருட்கண் டதுவென வுவந்தோடித்
துன்னத்தன் னெதிர்வரூஉந் துணைகண்டு மிகநாணிப்
பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சே ரூரகேள்;

எ நலநீப்பத் துறந்தெம்மை நல்காய்நீ விடுதலிற்
பலநாளும் படாதகண் பாயல்கொண் டியைபவாற்
றுணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் ததும்புநின் மணமுழவந் தெடுப்புமே;

கக அகலநீ துறத்தலி னழுதோவா வுண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத லியைபவா
னினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே;

கரு வாராய்நீ துறத்தலின் வருந்திய வெமக்காங்கே
நீரிதழ் புலராக்கண் ணிமைகூம்ப வியைபவா
னேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றேர்பூண்ட நெடுநன்மான் றெண்மணிவந் தெடுப்புமே;

எனவாங்கு;

---

௧. தாழ்தலென்பது குறைதலென்னும் பொருளில் வருமென்பதை, "தாழ்ந்தான்" "தாழ்ந்து" (சீவக. ௧௬௭௨, ௨௬௫௫) என்பவற்றிற்கு இவர் எழுதியிருக்கும் உரையாலும் அறிக.

(பிரதிபேதம்) * மனச்செருக்கேம்.

மெல்லியான் செவிமுதன் மேல்வந்தான் காலைபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் தோழியை வாயில்வேண்ட அவள் வாயினேர்வாள் நெருங்கிக் கூறியது.

இதன் பொருள்.

(க)மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடு (உ)மன்னந்தன்
னணிமிகு சேவலை யக(ங)லடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதி(ச)நிழ னீருட்கண் டதுவென வுவந்தோடித்
துன்னத்தன் னெதிர்வரூஉந் துணைகண்டு மிகநாணிப்
(ரு)பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சே (சு)ரூரகேள்

எ - து: பலமணிகள் போலும் நிறங்களையுடையவாகிய மலர்களையுடைய பொய்கையிலே சேவலோடு மகிழ்ந்து விளையாடும் அன்னப்பெடை தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக் காணுமற் (எ) கதுமெனக்கலங்கி அந்தஅறியாமையையுடையபெடை மதியினுடைய நிழலை நீருக்குள்ளே கண்டு அச்சேவலென்றுஉவந்து ஓடிச்சென்று

க. "மணிநிற மலர்ப்பொய்கை:வளர்ந்தருளு மயிலோனை" தொல். செய். சூ. கஉ. நச். மேற். "மணிநிற நெய்தல்" ஐங். கசு; ஐந் - எழு. சு0.

உ. "அன்னச் சேவ லயர்ந்துவிளை யாடிய, தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப், பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண், டோங்கிருந் தெங்கி னுயர்மடலேற" மணி. ரு: கஉங-கஉசு.

ங. இந்நூற்பக்கம் உசு: க-ஆம் குறிப்புப்பார்க்க.

ச. "வண்சிறைப் பவளச் செவ்வாய்ப் பெடையன்ன மடமை கூரத், தண்கய நீருட் கண்ட தன்னிழல் பிறிதென் றெண்ணிக், கண்டனங் கள்வ மற்றுன் காதலி தன்னை நீர்க்கீழ்ப், பண்டைய மல்லம் வேண்டா படுக்கவென் றூடிற் றன்றே" சீவக. கசுஉங.

ரு. "பன்மலர்ப் பழனத்த" கலி. எஅ: க.

சு. 'ஊரகேள்' கலி. எஎ: எ; எக: சு. அண்மைசுட்டிய விளிநிலைக்கிளவியின் முன் வல்லெழுத்து இயல்பாய் வந்ததற்கு இப்பகுதி மேற்கோள்; தொல். உயிர்மயங். சூ. அ. நச்.

எ. கதுமென - விரைய. (அ) "கதுமெனச், சிறுகுடி துயிலெழூஉம்" (ஆ) "கதுமென வெரீஇ" (இ) "கதுமெனக் கண்டவர்க், குண்ணின்ற நோய்

தனனைச் சேருதற்கு எதிரேவருகின்ற சேவலைக்கண்டு மிகவும் நாணிப் பல் பூக்களின் *செறிவுக்குட் புக்கு ஒளித்திருக்கும்(௧)பழனநிலஞ்சூழ்ந்த ஊரனே! யான் கூறுகின்றதனைக்கேள் ; எ - று.

பரத்தையர்சேரியிலே இருந்து நின்னோடே புணர்ந்து விளையாடுகின்ற பரத்தை வேறொரு பரத்தை களவொழுக்கத்தாலே மறைத்துக் கொண்டு போனாளாக நின்னைக் காணாது கதுமெனக் கலங்கி அந்தப் பரத்தையை வேறோர் தலைவன் வதுவையயர்கின்றதனை நீ வதுவையயர்கின்றாயென்று கருதி உவந்து சென்று தன்னைக் கூடுதற்கு எதிரேவருகின்ற நின்னைக் கண்டு இவன் தானே வருகின்றதனை அறியாது நாம் †தேடிவந்தோமேயென்று அதற்குநாணித் தன் சுற்றத்திடத்தேயிருந்து நின்னை வருத்துகின்றாளென்று உள்ளுறை யுவமங்கூறித் தலைவனைத் தோழிநெருங்கினாள்.

௭ நலநீப்பத் (௨)துறந்தெம்மை நல்காய்நீ விடுதலிற்
பலநாளும் படாதகண் பாயல்கொண் டுயைபவாற்
றுணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் (௩)ததும்புநின் மணமுழவந் தெடுப்புமே

எ - து: நீ எம்மை நலம்போம்படியாக நீங்கிப் பின்னர் ‡ஒருகாலத்தும் அருளாயாய்க் கைவிடுகையினாலே பலநாளுந் துயிலாத கண்கள் வருத்தமிகுதியால் யாங்கள் இருத்தலாற்றாது ஒருநாட் (௪) படுக்கையையும் இடமாகக்

மிகு வுயிரெஞ்சு துயர்செய்தல்" (ஈ) "கதுமென நோக்கி" (உ) "கதுமெனத்தாம்வந்தார்"(ஊ) "கதுமெனவந்து" (எ)"கதுமெனநோக்கன் மின்வந்து" என்று இந்நூலுள் வருவனவும், (ஏ) 'கதுமென' விரைவுணர்த்துமென்று (தொல். இடை. சூ. ௪௮. நச்.) எழுதப்பெற்றிருத்தலும் நோக்குக. (ஐ) "கதுமென் விரைவில்" என்றார் சேக்கிழாரும்.

௧. (அ) பழனம் பொதுநிலமென்பர் ஐங்குறு நூற்றுரைகாரர்; ஐங். ௪. (ஆ) நீர்நிலைச்செறுவென்பர் அடியார்க்குநல்லார் சிலப். ௧௦: ௧௧௩.

௨. "நல்காது துறந்த காதலர்" அகம். ௧௧௩: ௧.

௩. ததும்புதல் - ஒலித்தல்; (அ) "அருவி, முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பி" குறுந். ௭௮. (ஆ) "வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்புந், தண்ணுமை" அகம். ௪௦: ௧௩ - ௪. (இ) "அருவி, தாழ்ந்து வீழ்ந்தவை முழவிற் றதும்பின" சீவக. ௧௫௯௦. (ஈ) "இமிழ்முழாத் ததும்பு, மரங்கம்" (உ) "முழவொடு பல்லிய முன்றிற் றதும்ப" பெருங். (௧) ௩௪: ௧௪௦-௧௪௧; (௫) ௧: ௪. என்பவை இங்கே ஒப்பு நோக்கற்பாலன.

௪. பாயல், உறக்கமென்னும் பொருளிலும் வரும்; இதனை இந்நூற்பக்கம் ௧௫௯: ௩-ஆம் குறிப்பால் உணர்க.

(பிரதிபேதம்) *செறிவுக்குள்ளே புக்கு †தேடிவந்தேமோ ‡ஒருகாலும்

கொள்கையினாலே *இமைபொருந்துதலுங் கூடும், அதனை இணைந்த மலராற் செய்த கோதையினையுடைய (௧) கலைகளெல்லாம் முற்றக்கற்று † முதிர்ந்த பரத்தையர் நன்றென்று கொண்டாடும்படி நாடோறும் மணஞ் செய்யும் ‡மனைகளிடத்தே நின்று முழங்கும் நின் மணத்தை எமக்கு உணர்த்தும் முழவோசை வந்து போக்கும், அதுவே குறை; எ - று.

இமைப, அகரவீற்றுத் தொழிற்பெயர். ஆல், ஐயப்பொருட்டு.

௧௧ (௨)அகலநீ துறத்தலி னழூதோவா வுண்கணெம்
||புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத ÷லிமைபவா

---

௧. கலைகளென்றது. (அ) "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக், கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும், பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலுந், தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங், கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ், சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும், பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங், காயக் கரணமுங் கண்ணிய துணர்தலுங், கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும், வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங், கோலங் கோடலுங்கோவையின் கோப்புங், காலக் கணிதமுங்கலைகளின் றுணிவு, நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த, வோவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்" (மணி. ௨: ௧௮ - ௩௧.) எனக் கூறப் பட்டனவும் பிறவுமாகிய மகளிர்க் குரிய அறுபத்துநான்கு கலைகளை; இவை பரத்தையர்க்கு இன்றியமையாதவை யென்பது (ஆ) "எண்ணெண் கலையு மிசைந்துடன்... ....பசந்த மேனியள்" (இ) "எண்ணெண் கலையோர்" (ஈ) "எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற, பண்ணியன் மடந்தையர்" சிலப். ௮: ௬௪-௬௮, ௧௪: ௧௬, ௨௨: ௧௩௮ - ௧௩௯. (உ) "கலையுணர் மகளிர்" (ஊ) "கலைவலார்" சீவக. ௧௬௨௫, ௨௧௦௭. (எ) "கலையுணர் மகளிர்" பெருங். (௧) ௪௦: ௧௮௪. (ஏ) "கலையுணர் நெஞ்சிற் கூத்தியர்" கூர்ம. நவகண்டத். ௫௦. என்பவற்றாலும் அறியலாகும்; (ஐ) இக்கலைகளை, "யாழ்முதலாக அறுபத்தொருநான்கு" என்பர், கொங்குவேளிர்; பெருங். (௧) ௩௫: ௮௪.

௨. (அ) கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டு மென்பதற்கு, "அகலநீ ....வந்தெடுப்புமே" என்பதனை மேற்கோள்காட்டி, விளையாட்டாற் காமமிக்கு உறங்காமை கண்டு கொள்க வென்பர்; இளம்; தொல். கற்பி. சூ. ௨௦. "கிழவோன்விளை" (ஆ) இப்பகுதியை வாயிலாய் வந்தார்க்கு மறுத்துத் தலைவனது பழிகளைத் தலைவி

(பிரதிபேதம்) *இமைப்பொருந்து தலுங்கூடுமதனை நின்மணத்தை..............முழவோசை வந்து பொருதுமதுவேகுறை இணைந்த. † முதிர்ந்தபரத்தையர், ‡ மனைக ளிடத்தே நின்றுமுழங்கு முழவென்று முழவிற்கடையாக்குக: இமைப அகரவீற் றெச்சவினைத்தொழிற்பெயர் || புகல்வனை, ÷ இமையவதால்.

னினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றமர்பாடுந் (௧)துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே

எ - து: நீ எம்மை நீங்கத் தாம் துயிலைத் துறக்கையினாலே அழுது மாறாத மையுண்கண் * எம்மெய் †புதல்வனைத்தீண்டுகையினாலே பொருந்துதலுங் கூடும்; அதனை நின் இளமைமைப்பருவச்செவ்விக்கொத்த பரத்தையரை அவர்க்கென்று சமைத்த நெடிய மனையிலே கொண்டுவந்து(௨)நின்சுற்றமாகிய பரத்தையர் நின்று பாடுந் துணங்கைக்கூத்தில் எழுந்த ஆரவாரம் வந்து போக்கும்; அதுவே குறை. எ - று.

௧௫ வாராய்நீ துறத்தலின் வருந்திய வெமக்காங்கே
*நீரிதழ் புலராக்கண் ணிமைகூம்ப லியைபவா

வெளிப்படையாகக் கூறியதற்கு, மேற்கோள் காட்டுவர் நச்சினியார்க்கினியர் ; தொல். பொருளி. சூ. ௪௭.

௧. "துணங்கை, இங்கே மகளி ராடுந் துணங்கைக் கூத்து; சிங்கிக் கூத்தென்றும் சொல்லப்படும்; இது மகிழ்ச்சிக்காலத்தில் தமருடன் ஆடப்படுவது; இதற்கு முழவு முதலிய வாச்சியத்தானும் பாட்டானும் ஒலியுண்மையின் 'துணங்கையுளரவம்' என்றார். (அ) "துணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி" மது. ௩௨௯. என்பதும் (ஆ) "இலங்கு வளை மடமங்கையர், துணங்கை யஞ்சீர்" மது. ௧௫௯-௧௬௦. (இ) "மகளிர் தழீஇய துணங்கை யானும்" குறுந். ௩௧. (ஈ) "கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்" (உ) "முழா அவிமிழ் துணங்கைக்குத் தழூஉப்புணை யாகச், சிலைப்புவல்லேற்றிற் றலைக்கைதந்துநீ, நளிந்தனை வருத லுடன்றன ளாகி" பதிற். ௧௩: ௫; ௫௨: ௧௪ - ௧௬. (ஊ) "தளரிய லவரொடு, துணங்கையாய்" (எ) "நிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக், கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்" கலி. ௬௬: ௧௭ - ௧௮; ௭௩: ௧௬ - ௧௭. (ஏ) "முழவிமிழ் துணங்கைதூங்கும் விழவின்" அகம். ௩௩௬: ௧௬. என்பவையும் ஈண்டு அறிதற்பாலன; இதற்கு இலக்கணம் (ஐ) "பழுப்புடையிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பது; வீரர் வென்றாடு துணங்கையும் பேய்கள் ஆடும் துணங்கையும் இதனின் வேறு.

௨. 'நின் றமர்பாடும்' என்ற தொடரை 'நின்று அமர்பு ஆடும்' எனச் சொற்பிரிவுசெய்து, நின்று விரும்பி யாடுகின்ற வெனப் பொருள் கொண்டனர், இளம்பூரணர்; தொல்.

பிரதிபேதம்) * எம்மெய்ப் புதல்வனை. † ஈரிதழ்,

(௧)னேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றேர்பூண்ட நெடுநன்மான் றெண்மணிவந் தெடுப்புமே

எ - து: நீ ஈண்டு வாராயாய் யாந் துயிலைத் துறக்கையினாலே வருந்திய எமக்கு நீர் வீழ்கின்ற இதழ்போல் நீர் மாறாத கண்கள் பாயலிலே இமை பொருந்துதலுங் கூடும்; அதனை ஒத்த இழையினையுடைய பரத்தையரைத் தமக்குச் * சமைத்த நெடிய இல்லிலே கொண்டுவருகையினாலே பிறந்த நின் தேரிலே பூண்ட உயர்ந்த நல்ல குதிரையிற் கட்டின தெளிந்த மணியோசை வந்து போக்கும்; அதுவே குறை. எ - று.

எனவாங்கு, †அசை.

உ0 (௨)மெல்லியான் செவிமுதன் மேல்வந்தான் காலைபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழீஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்

எ - து: நாற்படையாற் குறைந்த (௩)அகத்துழிஞையான் செவியிடத்தே மேலே வந்துவிட்ட புறத்துழிஞையானுடைய பள்ளியெழுச்சி முரசுபோல முற்கூறியவெல்லாம் அரிதிற்பெற்றதுயிலையோபோக்குக. பரத்தையரில்லிலே வாசித்த யாழைத் தழுவிக்கொண்டு வாயிலாய்த்திரிகின்றதொழியப்பாட்டைத் திருந்தக்கல்லாத வாயினையுடைய பாணன் நம் இல்லின்கண் வாராதவிடத்து; அவன்வரவேகாண் எமக்கு வருத்தமெனெ நெருங்கிக்கூறினாள். எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

"வாயிற்கிளவி வெளிப்படக் கிளத்தல், றாவின் றுரிய தத்தங் கூற்றே" (௪) என்பதனால், தோழி தாழிசைகளில் வெளிப்படக் கூறினாள்.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௫)

---

௧. "நேரிழை மகளிர்" பட். உஉ.

௨. கலிப்பாவி னிறுதி வெண்பாவியலினாற் பண்புற வந்ததற்கு, "மெல்லி யான் செவிமுதல்..................புகுதராக்கால்" என்பது மேற்கோள்; தொல். செய். சூ. எஎ. பேர். நச்.

௩. அகத்துழிஞை புறத்துழிஞை யென்னும் வழக்கினை, தொல். புறத். சூ. ௯ - ௧௩. நச். உரைகளானுணர்க. அகத்துழிஞையை நொச்சி யென்பர் பிறநூலார்.

௪. தொல். பொருளி. சூ. ௪எ.

(பிரதிபேதம்) * சமைத்தவில்லிலே, † ஆங்கஅசை மெல்லியான்.

(எக.) விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
ரு வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு
நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர;

கூ ஒருநீ பிறரில்லை யவன்பெண்டி ரெனவுரைத்துத்
தேரொடுந் தேற்றிய பாகன்வந் தீயான்கொ
லோரிற்றான் கொணர்ந்துய்த்தார் புலவியுட் பொறித்தபுண்
பாரித்துப் புணர்ந்தநின் பரத்தைமை காணிய;

கங மடுத்தவன் புகுவழி மறையேனென் றியாழொடு
மெடுத்துச்சூள் பலவுற்ற பாணன்வந் தீயான்கொ
லடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் னெருத்தின்க
ணெடுத்துக்கொள் வதுபோலுந் தொடிவடுக் காணிய;

கஎ தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய;

என்றுநின்;

உஉ. தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்நீ வருநாட்போ லமைகுவம்யாம் புக்கீமோ
மாரிக் கவாவுற்றுப் பீள்வாடு நெல்லிற்காங்
காராத் துவலை யளித்தது போலுநீ
யோர்யாட் டொருகால் வரவு.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனது வரவுகண்டு ஊடிய காமக்கிழத்தி ஊடியவாறுகண்டு சென்று சார்ந்த தலைவனுடன் அவள் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

இதன் பொருள்.

(க)விரிகதிர் மண்டிலம் வியல்விசும் *பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் †வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
ரு வினிதமர் (உ)காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு
நனி(ங)விரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் (ச)பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் (ரு)தண்டுறை நல்லூர

எ - து: மேல் விரியுங் கதிரையுடைய இளஞாயிறு அகற்சியையுடைய விசும்பிலே பரவா நிற்க விடியற்காலத்தே இதழ்கள் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த செவ்விப்பூவிடத்து அழகியதேனை(சு)வரியினையுடைய வண்டுகள் அனைத்துங் கூடி நுகர்ந்து அதனாலும் அமையாது (எ) பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியுஞ் செல்வம் மிக்க‡பொய்கையிடத்தே (அ)துனிமிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணினுடைய நீர் காமத்

க. "உள்ளுறையுவமம்" என்னும் தொல். அகத். சசு-ஆம் சூத்திரவுரையில் "விரிகதிர்.........நல்லூர" என்பதனை மேற்கோள்காட்டி, இதனிற் சிறிது வேறுபடப் பொழிப்புரையும் விசேடவுரையுமெழுதி இது சிறப் பென்னு முள்ளுறையுவமம் என்று கூறி, தொல். பொருளி. சஅ-ஆம் சூத்திரவுரையினும் "விரிகதிர் மண்டிலமென்னும் மருதக் கலியுட் சிறப்புக்கொடுத்து நின்றது காட்டினும்" என வலியுறுத்தினர்; நச். காரிரத்ன கவிராயரும் "இச்சிறப்பென்ற உள்ளுறை, 'விரிகதிர் மண் டிலம்' என்னும் மருதக்கலியுள்ளும் வந்தமை காண்க" என்பர்; . மாற னலங். உஅக. மேற்கோளுரை.

உ. "மறங்கொள் வெங்கதிர் வேலவன் வார்கழல், கறங்க வேகித்தன் காதலி யூடலை, யுறைந்த வொண்மலர்ச் சென்னியி னீக்கினு, னிறைந்த தின்ப நெடுங்கணிக் கென்பவே" சீவக. கoஙச.

ங. "துனிகொ ளெர்தீரக் காதலர் துனைதர" கலி. கஉo: உக.

ச. "பாசடைத் தாமரை" கலி. ருக: க; எங - உ; எஅ: க.

ரு. "தண்டுறை யூரன்" ஐங். கங, உக, அங, அஅ; கலி. எக: சு.

சு. 'வரிவண்டு' கலி. சுசு: உ; எச: க; கஉ: உக. முன்பு இத்தொடர் மொழியில் வரியென்பதற்குப் பாட்டென்று பொருள்கூறியுள்ளார்; கோடுகளுமாம்.

எ. கலி. எச: தரவும், அதன் முதலாவது குறிப்பும் பார்க்க.

அ. துனி - கையிகந்த வூடல்.

(பிரதிபேதம்) * ஊதாதாமபபுரிதலை, † வயங்கெழு,‡பொய்கையிடத்தே பசியவிலைக்குள்ளே.

தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய் ஒழுக அவ்வருத்தத்தைக் கண்டு இனிதாக அமர்ந்த கணவன் தன் அடியைச் சேர்ந்து இறைஞ்சி மிகவிரைந்து அளித்தலாலே சிறிது மகிழ்பவள் முகம்போலப் பசிய இலைக்குள்ளே நின்ற தாமரையின்து தனித்த மலர் தனக்கு வருத்தத்தைச்செய்யும் பனி ஒருகூற்றிலே வடியாநிற்கத் தான் மிகச் செவ்வியின்றி அலருங் குளிர்ந்த துறையினையுடைய நல்ல ஊரனே! எ - று.

இதனால் வைகறைக்காலத்து மனைவயிற் செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்துதிரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப் பெறாது சுற்றத்திடத்தேயிருந்து *கண்ணீர் வாராநிற்க, நீ ஒருகாலத்து அளித்தலிற் சிறிது செவ்வி பெற்றாளாயிருக்கும்படி தலைவியை வைத்தாய்; என்னை வருத்துதல்கூறவேண்டுமோவெனக்காமக்கிழத்தி உள்ளுறையுவமம்†கூறினாள்.

முகம்போலவென்ற ஏனையுவமம் தாமரைமலர் பனிவாரத் தளைவிடுமென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. இஃது உவமப்போலி. "இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு, முவம மருங்கிற் றோன்று மென்ப" (க) என்பதனான் இரண்டுந் தோன்ற‡நின்றது.

கூ ஒருநீ பிறரில்லை யவன்பெண்டி ரெனவுரைத்துத்
||தேரொடுந் தேற்றிய பாகன்வந் தீயான்கொ
லோரிற்றான் கொணர்ந்துய்த்தார் புலவியுட் பொறித்தபுண்
பாரித்துப் புணர்ந்தநின் ÷பரத்தைமை காணிய

எ - து: அவன்பெண்டிர் நின்னையொழியப் பிறர் இல்லை; அதனை ஓர்ந்து பாரெனக் கூறித் தனக்குத் தெய்வமாகிய தேரைத் தொட்டுச் சூளுற்ற பாகன் ஈண்டு வாரானோ? தான் கொண்டுவந்த பரத்தையரெல்லாரும் வருதற்குச் ×சமைத்ததோர் இல்லிலேவிட்ட பரத்தையர்புலவியாலே அழுந்தின வடுக்கள் நாணமின்மையின் இவைகிடக்க**வேண்டுமென்றுபரப்பிஇட்டுவைக்கையினால் அவை மறையாமற் கூடிக்கிடந்த நின் ††பரத்தைமையைக் காண்டற்கு. எ-று.

உம்மை, சிறப்பு. வந்தீயான், ‡‡ வினைத்திரிசொல். ஓர் என்னுஞ்சொல், உகரம் பெற்று வந்தது.

க. தொல். உவம. சூ. உஅ.

(பிரதிபேதம்) * கண்ணீரால் வாராநிற்க, † கூறினாள் துனிமிகுதலாலே............சிறிது மகிழ்பவன் முகம்போலவென்ற வேனையுவமம். ‡ நின்றது ஒரென்னுஞ் சொல்லுகரம் பெற்றமரூஉ ஒருநீ. || தேரொடு தேற்றிய, ÷ பரத்தமை. × சமைத்தவோரில்லிலே, ** வேணுமென்றதுபரப்பி, †† பரத்தமையை, ‡‡ வினைத்திரிசொல் ஓரென்னுஞ் சொல்லுகரம் பெற்று வந்தது மயக்கவன்.

௧௩ (௧)மடுத்தவன் புகுவழி மறையேனென் றியாழொடு
மெடுத்துச்சூள் பலவுற்ற பாணன்வந் தீயான்கொ
லடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் னெருத்தின்க
ணெடுத்துக்கொள் வதுபோலுந்(௨)தொடிவடுக் காணிய

எ - து: அப்பரத்தையர் உடன்பா டின்றித் தானே செல்லுமிடத்து நின்னை மறையேனென்று கூறி யாழாகிய தெய்வத்தோடும் பல தெய்வங்களையுங் கூட்டிப் பலசூளுஞ் சூளுற்ற பாணன் வாரானோ? இவன்செய்தி பொய்யென்று அறிந்துவைத்தும் மருண்டு அப்பொய்யைப் பலகாலும் அனுபவித்தவர்களைக் கூடின நின் கழுத்தின்கண்ணே அள்ளிக்கொள்ளலாவதொன்றுபோலும் மறையாமற் கிடக்கின்ற தொடித்தழும்பைக் காண்டற்கு. எ - று.

௧௭ தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
(௩)கணங்குழை நல்லவர் (௪)கதுப்பற லணைத்துஞ்சி
(௫)யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய

எ - து: நின் தீயகுணங்களை உணர்ந்திருக்கின்ற எமக்கு நீ எங்களை நீங்கினையென்று பிறர்கூறக் கேட்டிருந்து நின் தவறுகளை ஓராதே நினக்கு நற்குணங்கள் உளவாகக் கொண்டாடுந் தோழன் வாரானோ? திரட்சியுடைத்தாகிய குழையினையுடைய மகளிருடைய புணர்ச்சியாற் குலைந்து வீழ்ந்த அறலையுடைய கதுப்பாகிய அணையிலே துஞ்சுகையினாலே தெய்வம்போல மணக்கும் நின் அலர்ந்த மார்பைக் காண்டற்கு. எ - று.

இது நாற்றச்செவ்வி குலையாமல் வந்தமைகூறலின் (௬)மருதத்து விடியற் காலங் கூறிற்றாம்.

---

௧. (அ) "ஈனுத்தாயர் மடுப்பவு முண்ணாள்" அகம். ௧௦௫: ௬. (ஆ) "மடுத்தவா யெல்லாம்" குறள். ௬௨௪.

௨. (அ) "தொடியுற்ற வடுக்காட்டி" (ஆ) "தொடியு முகிரும்படையாக நுந்தை, கடியுடைமார்பிற் சிறுகண்ணுமுடக்காள், வடுவுங்குறித்தாங்கே செய்யும்" (இ) "செறிதொடியுற்ற வடுவும்" கலி. ௭௮: ௨௨, ௮௨: ௨௮ - ௩௦, ௯௧: ௧௧.

௩. "கணங்குழை" என்பதற்கு, 'பலவாய்த் திரண்ட குழை' என்று பொருள் கூறுவர், பிறர்; குறள். ௧௦௮௧. பரி. உரைபார்க்க.

௪. "கூந்தற் றுயில்பெறும்" கலி: ௧௦௪: ௨௦; என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

௫. "மணங்கமழ் தெய்வத் திளநலம்" முருகு. ௨௯௦.

௬. " மருதத்துக் காலைவந்ததற்கு, "தணந்தனை.............மார்பு காணிய" என்பது (தொல். அகத். ௬. அ. நச். உரையிலும்)மேற்கோள்.

என்றுநின்

௨௨ தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்நீ வருநாட்போ லமைகுவம்யாம் புக்கீமோ
(க)மாரிக் கவாவுற்றுப் (௨)பீள்வாடு நெல்லிற்காங்
காராத் *துவலை யளித்தது போலுநீ
யோர்யாட் டொருகால் வரவு

எ - து: இங்ஙனம் நின்னன்புநீங்காதமுயக்கத்தை என்றும் பெறுகின்ற பரத்தையரை வெறுப்பார் யார்? நீ ஓர் யாண்டிடத்து ஒருகால் வருகின்ற வரவு எமக்கு மழைக்கு அவாவுற்றுத் தோன்றின †கதிர் உலரும் நெல்லிற்கு அப்பருவத்தே நிறையப்பெய்யாதே ஆராத சிறுதுவலையைப் பெய்த தன்மை போல மிக்க வருத்தத்தைத் தரும்; ஆதலான் நீ வருநாட்போல யாம் ஆற்றியிருப்பேம்; நீ அவர் வருந்தாமல் அவர்மனைக்கட் செல்வாயாக. எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௬)

(எ௨.) இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட்
டுணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
யூடுமென் சிறுகிளி யுணர்ப்பவண் முகம்போலப்
புதுநீர புதலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி யலர்வீத்த வாம்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர;
௬ கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானே

க. (அ) "சாலிகள் வளரு மெல்லைத் தடம்புனல் வறுமைத் தாக, வாலிது குரல் வாங் காது வருத்தொடு மாய்வதே போன், மேலவ னருளாற் போகம் வெறுத்தலிற் கருமல் கின்றி, ஞாலமன் னுயிர்கண் முற்று நாடொறுங் குறைந்த வன்றே" கந்த. மேருப். ௨அ. என்பதும் (ஆ) "உலகங், கயங்க ணற்ற பைதறு காலைப், பீளொடு திரங்கிய நெல் லிற்கு, நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே" நற். ௨௨: அ-கக. என்பதும் இங்கே அறிதற்பாலன.

௨. (அ) "பீள்விரிந் திறைஞ்சிய பிறங்குகதிர்க் கழனி" அகம். ௨௪௩: ௬. (ஆ) "பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட" நாலடி. ௨௬௬.

(பிரதிபேதம்) *திவலை,† கதிரலரும்.

பேணுனென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேணுணின் றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை;

௧௩ நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்றாளோ
கூடியார் புனலாடப் புணையாய மார்பினி
லூடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை;

௧௭ வெறிதுநின் புகழ்களை வேண்டாரினெடுத்தேத்து
மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றாளோ
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை;

எனவாங்கு;

செறிவுற்றே மெம்மைநீ செறிய வறிவுற்
றழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்பக்
கழிந்தவை யுள்ளாது கண்ட விடத்தே
யழிந்துநிற் பேணிக் கொளலி னிழிந்ததோ
வின்னோ யுழத்த லெமக்கு.

இதுவும் அது.

இதன் பொருள்.

(௧) இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட்
டுணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇச்

---

௧. (அ) "மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத், துணைபுண ரன்னத் தூநிறத் தூவி, யிணையணை மேம்படப் பாயணையிட்டு" (நெடுநல். ௧௩௧ - ௧௩௩) என்பதும் (ஆ) 'என்புருகி மிக்க அன்போடு புணர்தலிற் சூட்டிற்கு மென்மை பிறக்குமென்பது தோன்றத் துணைபுண ரன்னத் தூநிறத் தூவி யென்றார்' என்னும் அதன் விசேடவுரைப் பகுதியும், (இ) "துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த, வினையணை" (சிலப். ௪: ௬௬-எ.) என்பதும் (ஈ) 'தன் சேவலோடு புணர்ந்த அன்னப்பேடை அப்புணர்ச்சியான் உருகியுதிர்த்த வயிற்றின் மயிர் எஃகிப் பெய்தபலவகை அணை' என்னும் அதன் விசேடவுரைப் பகுதியும்,(உ) "ஆதாரம் பெருகு கின்ற அன்பினு லன்ன மொத்தும்" (சீவக. ௧௮௯) என்புழி, "ஆதாரம் பெருகுமன்பாவது: புணர்வதன் முன்னும் பின்னும் ஒருதன்மைத்தாய்ச் செயற்கையால் மிகுமன்பு. அன்னம், புணர்ச்சியால் மெய்யுருகு மென்மைக்கு உவமம். பலரும், 'துணைபுண ரன்னத்தின் றூவி' என்று புணர்ச்சியால் தூவிக்கு மென்மை பிறக்கு

சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
யூடுமென் (க)சிறுகிளி யுணர்ப்பவள் முகம்போலப்
*புதுநீர புதலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி †யலர்வீத்த வாம்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர

எ - து: (உ)ஐந்துவகைப்படப் படுத்தலால் உயர்ந்த நிலைப்பட்டாற்செய்த மெல்லிய படுக்கையிடத்துக்கிடந்த துணையோடேகூடிய அன்னத்தின்(ங) தூவியாற் செய்த மெல்லிய அணையைச் சார்ந்திருந்து பெருமையின்ற வெள்ளி வட்டியிலே வார்த்த பாலைச் சிறிது‡காட்டி அப்பாலையுண்ணாது வெறுத்திருந்த கிளி அதனை உண்டற்கு வேண்டும் மொழிகளைக் கூறி உண்ணப்பண்ணுவித்து அவ்வுணவினுன் மகிழ்ந்து முத்தங்கொள்பவள் || முகம்போல மிகுதியுடைய கயத்திடத்துநின்ற புதிய நீரிடத்தனவாகிய பசிய தூறுகளின்மேலே இடைவிடாது வருகின்ற திரைகள் மோதுகையினுலே அதன் துவலை மிகாநிற்க இடைநின்ற தாமரையினது கமழாநின்ற முகை தனக்குரிய வண்டு நுகர அலராமல் நின்று கரையில் நின்ற மாவினது வடு மதியைநோக்கி அலர்ந்த ஆம்பலினது வெள்ளிதாகிய மலரை முதற் றீண்டிப் பின்னர்த் தன்னைத் தீண்ட அலரும் வயலணிந்த நல்ல ஊரனே! எ - று.

மென்றூர்" என்றுஇதனை மேற்கோள்காட்டி எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப், பாங்குற விருந்த பல் பொறி மஞ்ஞையைச், செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப், பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்றும்" மணி. கக: சுஎ - எ0. (ஆ) "வண்டளிர் மாஅத்துக், கிளிபோல் காய கிளைத்துணர்" அகம். ஙஎ: எ-அ.

உ. (அ) "ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளி" சீவக. அஙஅ. (ஆ) "பதினைந் தமைத்த படையமை சேக்கையுள்" பெருங். (ச) கு: ருக. (இ) "தூயமென் பஞ்சி யன்னத் தூவிபூ நினிய செய்யு, மாய்மயிர் முதல மூவைந் தடுக்கிய வமளி" நைடதம். மணம். உசு.

ங. தூவியென்றது சிறகினை; இச்சொல் அன்னத்தின்சிறகிற்குப் பெரும்பான்மையாயும் கிளி வெள்ளாங்குருகு நாரை காக்கை மயில் முதலியவற்றின் சிறகிற்குச் சிறுபான்மையாயும் வரும்.

(பிரதிபேதம்) *புதுநீர்ப்புதல், †அலர்வித்தவாம்பல், ஆவித்த வாம்பல், ‡காட்டிப் பாலை, || முகம்போல வென்ற வேண்டியுவமம்,

முகம்போலவென்ற வினையுவமம் மேல்வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துநின்றது. "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண,(க)முறு *தூவி தாமிவையோ ரைந்து." (உ)துணையைப் புணர்ந்த காலத்து மெய்யுருகி உதிர்ந்த தூவிதானும் மிக மெல்லிதாயிருக்குமென்பது உணர்தற்குத் துணை புணரன்னமென்றார். பாலைச் சிறிதென்றது (ங)சிலவென்றல்†மரூஉ.

தாமரை வண்டுநுகர்வதற்குப்பயன்கொடாது வடுத்தீண்ட ‡ அலருமென் பதனால் நின் தலைவி நீ நுகர்ந்த செவ்விபெறுமற் || சேக்கை யிடத்தே இருந்து பால் உண்ணாத புதல்வன் பால் உணப் பெற்றதற்கு அவனை முத்தங் கொண்டு மகிழ்ந்திருக்குமாறுபோல(ச)ஆற்றியிருக்குந்தன்மை எமக்கின்றெனக் ÷ காமக் கிழத்தி உள்ளுறையுவமங்கூறினாள்.

சு (ரு)கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானே

க. "உறுதூவி சேக்கையோ ரைந்து" நேடுநல். கஙக. ங – உரை. சீவக. அஙஅ. உரை.

உ. பறவைகள் போகத்தால் அவசமாகி மெய்யுருகுமென்பதை, "அருந் தளிர் நயந்து நல்கி யலகுடை னலகு சேரப், பொருந்துமுன் னவச மாகிப் போகமென் குயிலும் பேடு, மிருந்துமெய் யுருகுங் காவில்" என்பதும் வலியுறுத்தும். வில்லி. சம்பவச்சருக்கம். கசு. இந்நூற் பக்கம் சஙஉ: க – ஆம் குறிப்பும் பார்க்க.

ங. இந்நூற் பக்கம் எங: ச–ஆம் குறிப்புப்பார்க்க.

ச. (அ) "அகலநீ துறத்தலி னழூஉதோவா வுண்கணெம், புதல்வனை மெய் தீண்டப் பொருந்துத லியைபவால்" (கலி. எ0: கக - கஉ) என்பதும், (ஆ) "ஊடி யவரை யுணராமை வாடிய, வள்ளி முதலரிந் தற்று" (குறள். கங0ச) என்பதன் விசேடவுரையில் பரிமேலழகர் "நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக்கண்டு ஆற்றியிருக்கற்பால மாய யாம் நும்மோடு ஊடுதற் குரியமல்லம்; அன்மையின், எம்மை யுணர்த்தல் வேண்டா; உரியராயூடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது; அதனால் ஆண்டுச்சென்மி னென்பதாம்." என்று எழுதி யிருப்பதும் இங்கே அறிதற்பாலன.

ரு. பாணன் முதலியோர் வாயிலாயதற்கு, "கண்ணிநீ........துகளினை" என்னும் பகுதிகள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. கூ. நச்.

(பிரதிபேதம்) * தூவி சையையோ ரைந்து, †மரு மிகுதியையுடைய.................தாமரை வண்டு, ‡அலரும் என்பதின்கருத்து இதனால் நின்தலைவி,|| செங்கையிடத்தே, ÷ காமக்கிழத்தியு முள்ளுறை.

(க)பேணுனென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேணுணின் றேள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை

எ - து: நம்மைப் பேணுகின்றிலனென்று கோபித்தவர் தம்மைப் பேணுதற்காக உகிராற்செய்த வடுக்காரணமாக அவர்க்குப் பின்னுள்ள நாளிலே நின் தோளைச் சேர்ந்த பரத்தையருடைய எயிறு அழுந்தின இதழைத் தங் கூட்டத்திற் பிறந்த இன்பத்தைக் கருதி நீ காவல்கொண்ட பரத்தையரைச் செறியுந்தோறும் யாம் அழும்படி நின்னைப் பண்ணாலேகளிப்பிக்கும் பாணன்எனக்குக் காட்டென்று சொன்னானோ? எ - று.

மேணுளென்றது, பின்னுள். யாம்அழப் பண்ணினாற் களிப்பிக்குமென்றது, இல்லறம் நிகழ்த்துவதற்கு உரியனவற்றைப் பாடிக்காட்டி யாம் வருந்தாதபடி பண்ணாது (உ) பரத்தையரிடத்தே ஒழுகுதற்குவேண்டுவனவற்றைப் பாடிக் காட்டிக் களிப்பிப்பனென்றவாறு.

௧௩ (௩)நாடிநின் றூ(௪)தாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்றாளோ

க. (அ) "தொடியுழுகிரும் படையாக நுந்தை, கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்காள், வடுவுங் குறித்தாங்கே செய்யும்" (ஆ) "புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல், வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவும்" (இ) "கூருகிர் சாடிய மார்பும்" கலி. அ௨: உ௮ - ௩ப. அ௮: க0 - கக. ௬க: க௨. (ஈ) "கள்ளுயிர்க்குமென் குழலியர் முகிழ் விரற் கதிர்வாள், வள்ளுகிர்ப் பெருங் குறிகளும் புயங்களின் வயங்க" (உ)"மடந்தையர்...............தங் கூருகிர்ப் பெருங் குறி தோண்மேற், கவச நீங்கினர்க் கண்டுகண் டாருயிர் கழித்தார்" கம்ப. பிணிவீட்டு. ௩௬; படைத்தலைவர். ௬௬. (ஊ) "அகனமர் கணிகைய ரடிகள் சூடியே, முகனுறு முவகையான் முயங்கி யன்னவர், நகனுறு குறிகொளீஇ நாளுங் காமநூற், றகைமைசெய் காளையர் தொகுதி சான்றதே" (எ) "ஆறறி முனிவர னருங்க நூன்முறை, வீறொடு புணர்தலும் வெய்ய மாயவள், கீறின ணகத்தினால்" கந்த. திருநாட்டுப். ௫௩. அசுரர்தோற்று. க௫.

உ. "நிறைநீ ரூரர் நெஞ்சகம் பிரிக்கும், பிணிமொழிப் பாணன்" கல்.௫௬.

௩. ஆடை கழுவுவாளை வாயிலென்றதற்கு "நாடிநின்........அரக்கினை" என்பது மேற்கோள்; தொல். கற்பியல். ௯. ௬. நச்.

௪. "கண்ணாடி வென்று" (சீவக. உ௨௨எ) என்பதற்கு, 'கண் எல்லாரிடத்திலும் உலாவி வென்று' என்று பொருள் கூறி, "காலாடு போழ்தின்" (நாலடி: கக௩.) 'என்றாற்போல' என இவ்வுரையாசிரியர் பொருள் விளக்கியிருப்பதும், "வாளாடு கூத்தியர் கண்போல்" (நாலடி: கக௯) என்பதும் இங்கே அறிதற்பாலன.

(க)கூடியார் புனலாடப் புணையாய மார்பினி
லூடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை

எ - து: கூடினமகளிர் புனலாடுதற்குத் தெப்பமாகிய மார்பிலே அப் புனலாட்டுப்பெறாது ஊடியமகளிர் சாதிலிங்கம்இருந்த(உ)செப்போடேஅதனை எறிதலைச் செய்கையினாலே விளக்கம் மிக்க சாதிலிங்கத்தை நினக்குக் கூடலாம் பரத்தையரைத் தேடித் தூதாய்த் திரிந்து துறையிற் செல்லாள் ஊரி லுள்ளாருடைய ஆடைகளை இடுவித்துக்கொண்டு ஒலியாமற் றிரியும் நின் னுடைய புலைத்தி எனக்குக் காட்டென்று சொன்னாளோ ? எ - று.

ஒலிக்கும், * இகழ்ச்சிக்குறிப்பு. ஒளிக்குமென்றும் பாடம். (ங) புலைத்தி, † செறற்சொல்.

கஎ வெறிதுநின் ‡புகழ்களை வேண்டாரி லெடுத்தேத்து
(ச)மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானோ

க. "தாழ்நீ ரிமிழ்சுனை நாப்பட் குளித்தவண், மீநீர் நிவந்த விறலிழை கேள்வனை, வேய்நீ ரழுந்துதன் கையின் விடுகெனப், பூநீர்பெய் வட்ட மெறியப் புணைபெறா, தருநிலை நீரி னவடுயர் கண்டு, கொழுநன் மகிழ் தூங்கிக் கொய்பூம் புனல் வீழ்ந்து, தழூவுந் தகைவகைத்துத் தண்பரங் குன்று" பரி. உக: ௩௬-௪௫.

உ. (அ)"வண்ணநீர் கரந்த வட்டுவிட் டெறிவோரும்" (ஆ)"புல்லா தூடிப் புலந்து நின்றவள், பூவெழில் வண்ணநீர் பூரித்த வட்டெறிய" பரி. கக: ௫௫; கஉ: ௬௭ - அ. (இ) "குலிகநீர் நிறைந்த பந்திற் கொம்பனா ரோச்சமைந்தர், மெலிவுகண் டுவந்து மாதோ விருப்பொடு மறலி னாரே" சீவக. ௯௬அ. (ஈ) "காதன் மங்கைய ராகத் தெறியுஞ், சாதிங் குலிகமுஞ் சந்தனத் தேய்வையும்" (உ) "அஞ்செஞ் சாந்த மாகத் தெறிந்தும்" பெருங். (க) ௪க: கஉ௬ - ௩௦; ௪உ: கஅஎ.

௩. (அ) "அறனில்புலைத்தி யெல்லித் தோய்த்த, புகாப்புகா(க்) கொண்ட புன்பூங் கலிங்கமொடு" நற். ௬௦: ௩ - ௪. (ஆ) "நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத், தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட, நீரிற் பிரியாப் பரூஉத்திரி" குறுந். ௩௩௦. (இ) "பசைகொன் மெல் விரற் பெருந்தோட் புலைத்தி" (ஈ) "பசைவிரற் புலைத்தி நெடிது பிசைந் தூட்டிய, பூந்துகில்" அகம். ௩௪: கக. ௩அஎ, ௬ - எ. என்ப வையும் (உ) "களர்ப்படு கூவற் றோண்டி நாளும், புலைத்தி கழீஇய தூவெள்ளறுவை" புறம். ௩கக: க-உ. என்பதும் ஈண்டுஅறிதற்பாலன.

௪. (அ) "தவ்வையைக் காட்டி" என்புழி, தவ்வைக்குக்காட்டி யென்று பொருள்கூறி, "தவ்வையைக் காட்டியென்பது 'அறிவுடை யந்தண

(பிரதிபேதம்) *இகழ்ச்சிக்குறிப்பு, † செற்றச்சொல், ‡ புகழினை வேண்டாரின்.

(க)*களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை

எ - து: கூட்டத்தாற் களித்தல் பிறந்தவருடைய கமழ்கின்ற மாலை முயக்கத்தான் மென்மைபடுதற்குக் காரணமான வடிவின்மேலே அதற்குப் பின்பு நின்னாற் குறியிடம்பெற்றாருடைய பற்றத்தினையுடைத்தாகிய மயிரினுடைய முடியை †நீ வகிர்ந்து கைசெய்து முடிக்கையினாலே வீழ்ந்துகிடந்த பூந்துகளைநின்புகழ்களைக்கேட்கவேண்டாதஎங்கள்இல்லிலே(உ)ஒருபயனின்றிமிகுத்துக்கொண்டாடும்அறிவில்லாத அந்தணன் அவளைக்காணப்பண்ணென்று சொன்னானோ? எ - று.

(ந)கயம் - மென்மை; ஈண்டுத் துவட்சியை உணர்த்திற்று. அறிவுடையந்தணன், இகழ்ச்சி. அவட்கு என உருபு ‡மயக்கமாம்.

|| எனவாங்கு, அசை.

உஉ ÷செறிவுற்றே மெம்மைநீ செறிய வறிவுற்
றழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்பக்
கழிந்தவை யுள்ளாது கண்ட விடத்தே

னவளைக் காட்டென்றானோ' என்பதுபோல உருபுமயக்கம்" என்று இலக்கணமுங் கூறி, (ஆ) "களித்தானைக் காரணங்காட்டுதல்" என்புழி, "களித்தானையென்னும் இரண்டாவது, 'அறிவுடை........... என்றானோ' என்புழிப்போல நின்றது" என்றும் எழுதினர், பரி, குறள். கஙஎ; கூஉக. (இ) உருபுமயக்கத்திற்கு இவ்வடியை மேற்கோள் காட்டி, ஐயைக்குவ்வாகக்கொள்கவென்றனர் மயிலை; நன். பெயரி. சூ. கூ௦. (ஈ)சம்பிரதானம் வடநூலார்கூறாத இரண்டனோடும் வந்ததென்று இவ்வடியை யெடுத்துக் காட்டுவர் சுப்பிரமணிய தீக்ஷிதர்; பிரயோக. கரு. (உ) "யாரே யாயினு மிவன்மக ளொருத்தியைச், சீர்கெழு வீணை சிறப்பொடு காட்டி" என்பது, பெருங். (க) நக: அ௦ - அக.

க. "வெறிது" பெருங். (ந) உ: உஅ. கம்ப. மாயாசீதை. எ.

உ. "களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேல்" என்பது; கூழைமோனைக்கு மேற்கோள்; தொல். செய். சூ. கஉ. நச்.

ந. கயமென்பது உரிச்சொல்லாதலின், அது விகாரவகையாற் கயமென நின்றது; "வயவென்னுமுரிச்சொல் விகாரவகையால் வயமென நின்றது; சிறுபான்மை மெல்லெழுத்துப் பெற்றதெனினும் அமையும்" (கோவையார். ந௦. கொளு. உரை) என்று பேராசிரியர் எழுதியிருத்தல் இங்கு அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * கழிபட்டார், † வகிர்ந்து வகைசெய்து, ‡ மயக்கமுமாம், || எனவாங்கு அக்கசை, ÷ செறிவுற்றேயெம்மை,

யழிந்துநிற் பேணிக் கொளலி னிழிந்ததோ
விந்நோ யுழத்த லெமக்கு

எ - து: முன்பு எம்மை நீ செறிகையினாலே யாமும் நின்னோடு செறிதலை யுற்றேம்; இக்காலத்து நீ செய்யுங் குறைகளை அறியலுற்று அதனானே அழிந்துகெடுகின்ற நெஞ்சத்தினையுடையேம்; அதன்மேலே வருத்தத்திலே தங்கும்படியாக நீ செய்து கழிந்த இக்குறைகளைக் குறையென்று நினையாதே நின்னைக் கண்டவிடத்தே நெஞ்சு அழிந்து நின்னைப்பேணிக்கொள்ளுதலின், இக்காமநோயிலே தங்குதல் எமக்குத் தாழ்ந்ததொரு * தொழிலோ? இஃது இழிந்ததன்றுகாண். எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௭)

(௭௩.) அகன்றுறை யணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற்
றண்கமழ் நறுந்தேற லுண்பவன் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர ;

௬ நோதக்கா யெனநின்னை நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி யிளையவ ரிடைமுலைத் தாதுசோர்ந்
திதழ்வனப் பிழந்தநின் கண்ணியந் துரையாக்கால்;

௧௦ கனற்றிநீ செய்வது கடிந்தீவா ரில்வழி
மனத்திற்றீ திலனென மயக்கிய வருதிமன்
னலமரு முண்கண்ணா ராய்கோதை குழைத்தநின்
மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வந் துரையாக்கால்;

௧௪ என்னைநீ செய்யினு முரைத்தீவா ரில்வழி
முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்
னிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்;

எனவாங்கு;

௧௮ மண்டுநீ ராரா மலிகடல் போலுநின்
றண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்

(பிரதிபேதம்) * தொழிலோவிது இழிந்ததன்று காணெண வூடறீர்ந்தாள் இதனால்.

புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமெனிற்
றோலாமோ நின்பொய் மருண்டு.

து "தங்கிய வொழுக்கத்துக் கிழவனை வணங்கி, யெங்கையர்க்
யன விரத்தற்கண்" (க)தலைவி கூறியது.

இதன் பொருள்.

அகன்றுறை யணிபெறப் புதலொடு தாழ்ந்த
(உ)பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற்
(ந)றண்கமழ் நறுந்தேற லுண்பவண் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர

எ-து: அகன்ற நீருண்ணுந் துறை அழகுபெறும்படி சிறுதூறோடே வந்து தாழ்ந்து கிடந்த பகன்றையினது பூவைச்சேரும்படி வளர்ந்த பசிய இலையினையுடைய தாமரைமுகை கண்வெறிகொள்ளும்படி ஒளிவிட்ட (ச)*வெள்ளி வள்ளத்தாலே குளிர்ந்த நறிய கள்ளை உண்பவள் முகம்போல வளவிய முறுக்குநெகிழும் வயலணிந்த நல்ல ஊரனே! எ - று.

க. தொல். கற்பி. சூ. சு. இச்சூத்திரவுரையில் "அகன்றுறை யென்னு மருதக்கலியுள் 'நோதக்காய்...................உரையாக்கால்' எனவும் 'மண்டுநீ ராரா.............மருண்டு' எனவும் கூறுதலால், தலைவி தான் தாழ்ந்தவாறும் பின்னர் எங்கையர்க்கு உரையெனக் கூறிய வாறும் காண்க" என்றனர் இளம்பூரணர்; நச்சினார்க்கினியரும் இதனையே தழுவினர்.

உ. (அ) "பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத்தாமரை" என்பது, பகன்றை கிலுகிலுப்பையன்று; சிவதையென்பதற்கு மேற்; குறிஞ்சி. அஅ. உரை. (ஆ) "பாண்டிலொப்பிற்பகன்றைமலருங், கடும்பனியற்சிரம்" நற். அசு. (இ) "வெள்ளிதழ்ப், பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்" ஐங்குறு. சருசு. (ஈ) "பாசிலை பொதுளிய புதலெருறும் பகன்றை, நீலுண்...... ....தோலெறி பாண்டிலின் வாலியமலர" (உ) "பகன்றை வான் மலர் பனிநிறைந்ததுபோற், பால்பெய்வள்ளஞ் சால்கைபற்றி" அகம். உகஎ: சு - அ. உகக: ச - ரு.

ந. (அ) "தண்கமழ் தேறல்" புறம். உச. நஉ. (ஆ) "தண்ணற வுண் களி நீ" கோவையார். கஉஉ. (இ) "மணங்கமழ் தேறல்" மது. எஅ௦. (ஈ) "தேங்கமழ் தேறல்" பெருங். (உ) கச: சுக.

ச. "வள்ளத் துழுபநறவு வாக்குந, ரவுசெறி யுவவுமதியென வங்கையிற் றுங்கி, யெறிமகர வலய மணிதிகழ் நுதலியர், மதியுணர மகளென வாம்பல்வாய் மடுப்ப" பரி. க௦: எரு - எஅ.

(பிரதிபேதம்) * வெள்ளிய வள்ளத்தாலே.

வெள்ளியவள்ளமென்பது அம்முச்சாரியையின் மகரங் கெட்டு அகரம் யகரவுடம்படு மெய்பெற்று நின்றது; "மென்மையு மிடைமையும் வரூஉங் காலை, யின்மை வேண்டு மென்மனார் புலவர்" (க) என்பதனால்.

அகன்றதுறை பரத்தையர்சேரியாகவும், அழகுபெறும்படி புதலொடு வந்து தாழ்ந்த(உ)மணமில்லாத பகன்றைப்பூப்பாணர்முதலியவாயில்களோடே வந்து தங்கின அன்பில்லாத பரத்தையராகவும், அதனை உற நீண்ட தாமரை அப்பரத்தையரிடத்தே சேர்ந்த தலைவனாகவும், அத்தாமரை கள்ளைத் தீதென்று உணர்ந்துவைத்தும் அதனை உண்டு களிக்கின்றவள் முகம்போலத் தளைவிடுதல் அன்பில்லாத மகளிரிடத்துப் பெறுகின்ற இன்பநுகர்ச்சி தீதென்று உணர்ந்துவைத்தும் அதனை நுகர்ந்து மகிழ்கின்ற தலைவனாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. முகம்போல வென்னும் ஏனை யுவமம் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

ரு (ங)நோதக்கா யெனநின்னை நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி யிளையவ (ச)ரிடைமுலைத் தாதுசோர்ந்
திதழ்வனப் பிழந்தநின் (ரு)கண்ணிவந் துரையாக்கால்

எ-து: நீ நீங்குதலான் நெகிழ்ந்த தொடியினையுடைய பரத்தையருடைய முலையிடையிலே தாதுகள் உதிர்ந்து இதழ்கள் அழகிழந்த நின் கண்ணி நினக்கு உட்பகையாய்வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாத பொழுது நீ யாங்கள் வெறுக்கத்தக்க பரத்தைமையை*யென்றுமொருகாலத்தும் நின்னை வெறுப்பார் இல்லாத இடத்தே யான் தீதிலேனென்று தேற்றுதற்கு வருவாய்; அதனாற் பெற்றதென் ? எ-று.

கo கனற்றிநீ செய்வது கடிந்தீவா ரில்வழி
†மனத்திற்றீ திலனென மயக்கிய வருதிம

க. தொல். புணரியல். கூ. உஅ.

உ. "பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ, வின்கடுங் கள்ளின் மணவில் கமழும், புன்கண் மாலையும்" என்று (குறுந். ஙஙo.) காணப்படுவது ஆராயத்தக்கது; பகன்றை, பெருங்கையா லென்னும் கொடியென்பர் அடியார்க்குநல்லார். சிலப். கங: கஙஎ. உரை.

ங. "நின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக, ளென்னுழை வந்து நொந் துரையாமற் பெறுகற்பின்" கலி. எஎ: கச - ரு.

ச. "இடைமுலை" கலி, கஉ: கங.

ரு. "கரிகூறுங் கண்ணியை யீங்கெம்மில் வருவதை" கலி. எஅ: கச.

(பிரதிபேதம்) * என்று மொருகாலத்து நின்னை, † மனத்தினிற் றீதில னென்மயக்கி வருதிமன்.

(க)னலமர வுண்கண்ணா ராய்கோதை குழைத்தநின் ௩௩
மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வந் துரையாக்கால்

எ-து: தம்வயத்தராதற்கு உரியாரைத் தேடிச்(உ)சுழல்கின்றமையுண்கண்ணினையுடைய பரத்தையருடைய அழகிய மாலைகள் முயக்கத்தாற் குழைவித்த நின் மலர்ந்த மார்பிற் பூசின பாடழிந்த சந்தனம் நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது நெஞ்சைக்கனலப்பண்ணி உருகுகின்ற பரத்தைமையை வெறுப்பாரில்லாதஇடத்தே யான்தீதுடையேனலேனென்று எங்கள் மனத்திடத்தே ஊடலுணர்த்துதற்கு வருவாய்; பெற்றதென்? எ - று.

என்னைநீ செய்யினு *முரைத்தீவா ரில்வழி
(ந)முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிம
னிரைதொடி நல்லவர் (ச)துணங்கையுட் டலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்

எ - து: நிரைத்த தொடியினையுடைய பரத்தையர் ஆடுந் துணங்கைக் கூத்திடத்தே நீ சென்று (ரு) தலைக்கைகொடுத்தற்றொழிலை நின்னிடத்தே கொள்கையினாலே அவர் †சிலம்பு தொடக்கிக் கரையிடத்தே கிழிந்த நின்னுடைய நீல ஆடை நினக்கு உட்பகையாய் வந்து நின்பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது எப்படிப் பெரிய குறைகளை நீசெய்யினும் இக்குறைகளைச்

க. (அ) கலி. கஎ: க௦-கக; (ஆ) கலி. கஉ: கங. (இ)பு-வே. பெருந். கஉ.

உ. (அ) "அலமர லமருண்க ணங்நல்லார்" கலி. ககந: உ. (ஆ) "மண்ணிற் பாய்வன மாதிரஞ் சூழ்வன, விண்ணிற் றாவுவ வீதியிற் செல்வன, வெண்ணிற் பல்பொரு ளிச்சைகொள் வேசியர், கண்ணிற்கொப்பன கந்துக ராசியே" கந்த. அக்கினி முகாசுரன்வதை. உச. (இ) "கூற்ற மோகொலெம் பகழியோ வெனக்குளிர் முகத்துத், தோற்று வாள்விழி கொட்புறு தொழிலினை நோக்கி, யாற்றல் சான்றதன்னெஞ்சமு மலமர முனிவன், மாற்றி னானெழு விழைவினை மாற்றிடு முன்னர்" விநாயக. அங்காரக. ந.

ந. (அ) "முன்னடி யொல்கி யுணர்த்தினவும்"(ஆ) "தலையுற முன்னடிப் பணிவான் போலவும்" (இ) "மணங்கம ழைம்பாலா ருடலை யாங்கே, வணங்கி யுணர்ப்பான் றுறை" கலி. கூஉ: ருசு; கஉஅ: கஎ; கநக: நகூ - ச௦.

ச. இந்நூற்பக்கம் சஉரு: க-ஆம் குறிப்புப் பார்க்க.

ரு. "மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்த, ரெல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து" புறம். உச: அ - கூ.

(பிரதிபேதம்) * உணர்ந்தீவார், † சிலம்புதுடக்கி.

யாநின்றாயென்று கூறுவாரில்லாத இடத்தே அடிமுன்னே பணிந்து எம்மை ஊடலுணர்த்துதற்கு வருவாய்; அதனாற்பெற்றதென் ? எ - று.

"பயங்கெழு*துணையணை புல்லிய புல்லா, துயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகிப், புல்லென முன்னிய நிறையழி பொழுதின், மெல்லென் சீறடி புல்லிய விரவினும்" (க)என்பதனான் முன்னடிப்பணிந்தென்றார்.

†எனவாங்கு, அசை.

மண்டுநீ ராரா மலிகடல் போலுநின்
றண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி‡மற் றியாமெனிற்
றோலாமோ நின்பொய் மருண்டு.

எ - து: யாற்றினின்று மிக்குச்சென்றுவீழ்கின்ற நீரால் நிறையாத மிகு கடல்போலும் நின் அமையாத ||பரத்தைமை மேலிடுகையினாலே நாடோறும் நின்னொடு புலக்குந் தகுதியையுடைய பெண்டிரைத் தெளிவிப்பாய்; பின்னை யாமாயின் நின்பொய்யை மெய்யாக நினைந்து நினக்குத் தோலாதிருப்பேமோ ? தோற்பேமன்றே ? என்று எங்கையர்க்கு உரையென்றாள். எ - று.

இதனால், தலைவிக்கு முனிவு பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (அ)

(எசு.)பொய்கைப்பூப் புதிதுண்ட வரிவண்டு கழிப்பூத்த
நெய்தற்று தமர்ந்தாடிப் பாசடைச் சேப்பினுட்
செய்தியற்றி யதுபோல வயற்பூத்த தாமரை
மைதபு கிளர்கொட்டை மாண்பதிப் படர்தரூஉங்
கொய்குழை யகைகாஞ்சித் துறையணி நல்லூர ;

அன்பில னறனில னெனப்படா னெனவேத்தி
நின்புகழ் பலபாடும் பாணனு மேமுற்றான் ;

நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரு மேமுற்றார்;

முன்பகற் றலைக்கூடி நன்பக லவணீத்துப்
பின்பகற் பிறர்த்தேரு நெஞ்சமு மேமுற்றாய்;

க. தோல், கற்பி. சூ. ரு. இச்சூத்திரத்தின் இவருரையில் மெல்லென் சீறடி புல்லிய இரவினைத் தலைவிகூறியதற்கு 'என்னை நீ செய்யினும் ....வந்துரையாக்கால்' என்னும் இப்பகுதி மேற்கோள்.

(பிரதிபேதம்) * துணையணைப் புல்லிப் புல்லா, துயங்குவள்.........குறுகி, யலகன முன்னிய நிறை, † ஆங்கசை மண்டு, ‡ மற்றியாமேற், || பரத்தமை,

எனவாங்கு;

௧௩ கிண்கிணி மணித்தாரோ டொலித்தார்ப்ப வொண்டொடிப்
பேரமர்க் கண்ணார்க்கும் படுவலை யிதுவென
வூரவ ருடனகத் திரிதருந்
தேரே முற்றன்று நின்னினும் பெரிதே.

இது பரத்தையிற்பிரிந்து வந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தியை அவன் இவ்வகையன கூற நீ ஏழற்றயோவென்றற்கு அவள் கூறியது.

இதன் பொருள்.

(௧)பொய்கைப்பூப் புதிதுண்ட(௨)வரிவண்டு கழிப்பூத்த
நெய்தற்றா தமர்ந்தாடிப் பாசடைச் *சேப்பினுட்
செய்தியற்றி யது†போல வயற்பூத்த தாமரை
‡மைதபு கிளர்கொட்டை மாண்பதிப் படர்தரூஉங்
(௩)கொய்குழை யகைகாஞ்சித் துறையணி நல்லூர

எ - து: பொய்கையிடத்துப் பூவினுடைய தேனையுண்ட வரியினையுடைய வண்டு கழியிடத்துப் பூத்த நெய்தற்பூவிற்றாதை மனம்பொருந்தி நுகர்ந்து

௧. (அ) "வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக், குறைபடுதேன் வேட்டுக் குறுகும்-நிறைமதுச்சேர்ந், துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர், வண்டா மரைபிரிந்த வண்டு" தொல். அகத். சூ. ௫௧ இள. மேற். (ஆ) "முழுநீர்ப் பொய்கையுட் பொழுதொடு விரிந்த, செழுமலர்த் தாமரைச் செவ்விப் பைந்தாது, வைக லூதா வந்தக் கடைத்து, மெய்வந் தீராது நெய்தற் கவாவும், வண்டே யனையர் மாந்த ரென்பது, பண்டே யுரைத்த பழமொழி மெய்யாக், கண்டே னொழிகினிக் காமக்கலப்பென" பெருங். (௨) ௧௬: ௩௨ - ௩௮ (இ) "செங்கதிர் விரித்தசெந் திருமலர்த் தாமரைப், பெருந்தே னருந்தி யெப் பேரிசை யனைத்தினு, முதலிசைச் செவ்வழிவிதிபெறப் பாடியத், தாதுடறுதைந்த மென் றழைசசிறை வண்டினம், பசுந்தாட்புல்லிதழ்க் கருந்தா ளாம்பற், சிறிதுவா மதுவமுங் குறைபெற வருந்தியப், பாசடைக் குலகவர் பயிலாத்தாரிபை, மருளொடு குறிக்கும் புனலணி யூர" கல். ௯௨: ௧௬ - ௨௩. (ஈ) "கன்னி நறுந்தேறன் மாந்திக் கம லத்தின், மன்னித் துயின்ற வரிவண்டு, பின்னையும் போய், நெய்தற் கவாவு நெடுநாட" நள. கலிநீங்கு. ௪௧.

௨. இந்நூற்பக்கம் ௪௨௮: ௬ - ஆம் குறிப்புப்பார்க்க.

௩. குழை யென்னு முறைப்பு மரத்திற்கு வருதற்கு "கொய்குழை......... நல்லூர" என்பது மேற்கோள்; தொல். மரபி. சூ. ௮௭. பேர். நச்.

(பிரதிபேதம்) *செப்பினுள், † போலும் வயற், ‡ மைதயழ்புகிளர்.

வயலிடத்துப் பசிய இலையினையுடைய தான்றோன்றும் கிழங்கிடத்தைக்கை செய்து பண்ணினதுபோலப் *பூத்த, கரிய இதழ்பொதிந்த, நீங்குகின்ற தாமரைப்பூவினது விளங்குகின்ற கொட்டையாகிய மாட்சிமையையுடைய பதியிடத்தே மீண்டுவரும் (க)மகளிர்கொய்யுத் தழை தளிர்க்கின்றகாஞ்சிமரத் தினையுடைய துறையணிந்த நல்ல ஊரனே ! எ - று.

மைதபுதாமரையெனக் †கூட்டுக. தேரேற்றிக்கொண்டுவந்த பரத்தையரை முற்படநுகர்ந்து பின்னர்ச் சேரிப்பரத்தையரை நுகர்ந்து விடியற்‡காலத்துத் தலைவிமனைவயிற் செல்கின்ற ஊரனென்று காமக்கிழத்தி புலந்துகூறினாள்.

சு (உ)அன்பில னறனில னெனப்படா னெனவேத்தி
நின்புகழ் பலபாடும் பாணனு மேமுற்றான்

எ-து: அவன் அன்புடையனல்லனென்றும் அறனுடையனல்லனென்றும் நீ சொல்லப்படானென்று நின்னைப் புகழ்ந்து நின் புகழ் பலவற்றையும் பாடிக்காட்டும் பாணனும் பித்தேறினான். எ - று.

அ (ங)நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரு மேமுற்றார்

எ - து: நஞ்சு தன்னை நுகர்ந்தாருயிரைப் போக்குதலையும் அறிந்து வைத்து உண்டாற்போல நின் மனக்கருத்து அருளின்றி வருத்துதலைக்கண்டு ||வைத்தும் பின்னும் நின்பொய்மொழியை மெய்யாகத்தெளியும்பரத்தையரும் பித்தேறினார். எ - று.

÷செகுத்தலுமென்ற உம்மை, சிறப்பு.

க. தழைதந்த காஞ்சி யென்பதற்கு "விளையாட்டுமகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கோடலாற் சிதைவுபட்டுக்கிடக்கின்ற காஞ்சி" என்று எழுதியிருக்கும் விளக்கம் இங்கே அறியத்தக்கது; பதிற். உங: கக-உரை.

உ. (அ) "அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து, பொருள்வயிற் பிரிவோ ருரவோராயி, னுரவோ ருரவோ ராக, மடவ மாக மடந்தை நாமே." குறுந். உ0. (ஆ) "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனு மது" குறள். சுரு.

ங. (அ) "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி, னஞ்சு முண்பர் நனி நாகரிகர்" நற். ஙருரு: சு - எ. (ஆ) "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்" குறள். ருஅ0.

(பிரதிபேதம்) * பூத்த தாமரைப்பூவினது, † கூட்டிக கரியவிதழ் பொதிந்த நீங்குகின்ற தாமரையென்க. தேறேற்றி. ‡ காலத்துத் தலைத்தலைவி, || வைத்தும்பின்னும் ÷ செகுத்தலுமென வும்மை சிறப்பு.

௧௦ (க)முன்பகற் றலைக்கூடி (உ)நன்பக லவணீத்துப்
பின்பகற் பிறர்த்தேரு நெஞ்சமு மேமுற்றாய்

எ - து: நாட்காலமெல்லாம் ஒருத்தியிடத்தே கூடியிருந்து உச்சிக்கால மெல்லாம் அவளைக்கைவிட்டுப் பலரிடத்தே சென்று அந்திக்காலத்திற் கூடு தற்கு வேறுசிலரை ஆராயும் நின்னெஞ்சமும் பித்தேறினாய். எ - று.

அவளையென்னும் இரண்டாவது *"ஒழியாதுவருதலும்" (ங) என்றதனாற் சிறுபான்மை ஒழிந்துநின்றது. நெஞ்சமுமேமுற்றாயெனச் சினைவினை முத லொடு முடிந்தது. உம்மைகள், எண்ணும்மை.

†எனவாங்கு, அசை.

௧௧ கிண்கிணி மணித்தாரோ டொலித்தார்ப்ப வொண்டொடிப்
பேரமர்க் ‡கண்ணார்க்கும் படுவலை யிதுவென
வூரவ ருடனகத் திரிதருந்
(ச)தேரே முற்றன்று நின்னினும் பெரிதே

எ - து: ||சதங்கை தண்டை சிறுமணிகள் கோத்த தாருடனே ஒலி யெழுந்து ஆரவாரிப்ப ஒள்ளிதாகிய தொடியினையுடைய பெருத்து (ரு)அமர்த்த

க. "முற்பகல் பிற்பக லென்பன, பின் முன்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை" என்பர், பரி; குறள். ௩௧௯.

உ. உச்சிப்பொழுது என்னும் பொருளில் நண்பகலென்பதே யன்றி நன் பகலென்பதும் வருமென்பதை, "நன்பகலந்தி" (பொருந. ௬௬.) "நன்பகலுங் கூகை நகும்" (பு - வெ. வஞ்சி. ௬.) என்புழி நன்பக லென்பதற்கு எழுதப்பெற்றிருக்கும் உரையும் "பைங்கருங் காலிச் செங்களி யளைஇ, நன்பகற் கமைந்த வந்துவர்க் காயு, மிருங்கண் மாலைக்குப் பெரும்பழுக் காயும், வைகறைக் கமையக் கையுனைந் தியற்றிய, வின்றே னளைஇப விளம்பசுங்காயும்" (பெருங். (௩) ௧௬: ௮௧ - ௮௫) என்று வரும் பகுதியும் வலியுறுத்தும்.

௩. தொல். தொகை. சூ. ௧௫.

௪. (அ)ஏமுறுதல் என்பதற்கு மயக்கமுறுதலென்று பொருள்கூறி, "தேரே முற்றன்று நின்னினும் பெரிதே" என்பதனை மேற்கோள் காட்டினர் நச்; தொல். களவி. சூ. ௧௮. சீவக. உ௮௬௧. (ஆ) பித்துறுதலென்று பொருள்கூறுவர், பரி; குறள் ௮௭௩.

௫. அமர்க்கணென்பதற்கு, (கலி. ௭௫: ௭) போரைச்செய்யுங் கண் ணென்று எழுதியிருக்கும் உரை இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * ஒழியா தென்றதனாற் சிறுபான், † எனவாங்கு ஆங்கசை, ‡ கண்ணார்க்குப் படுவலை, || சதங்கைத்தண்டை.

கண்ணிணையுடைய *பரத்தையர்க்கும் ,அவர்கள் அகப்படுத்தற்குக் காரண மான வலை இதுவென்று சொல்லி ஊரிலுள்ளார் சேரச் சிரிக்கும்படி திரிதருந் தேர் நின்னினும் பெரிதாகப் பித்தேறிற்று ; யான் † பித்தேறிலேனென்று ஊடினாள். எ - று.

தேரென்றது, ‡ஆகுபெயராய்ப் பாகனையுணர்த்திற்று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது சிறுமைக்கெல்லைகூறிய ஈரடித்தாழிசையான்வந்தஒத்தாழிசைக்கலி

(௭௫.) (௧)நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப னிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப வோடு
மோரை மகளி ரோதை வெரீஇயெழுந்
௫ தார லார்கை யஞ்சிறைத் தொழுதி
யுயர்ந்த பொங்க ருயர்மர மேறி
யமர்க்கண் மகளி ரலப்பிய வந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று
முயர்ந்த போரி னொலிநல் லூரன்
௧௦ புதுவோர்ப் புணர்தல் வெய்ய னாயின்
வதுவை நாளால் வைகலு மஃதியா
னேவேன் றோழி நோவாய் நீயென
வெற்பார்த் துறுவோய் கேளினித் தெற்றென ;
௧௪ எல்லினை வருதி யெவன்குறித் தனையெனச்
சொல்லா திருப்பே னாயி னொல்லென
விரியுளைக் கலிமான் றேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும்
௧௮ வாடிய பூவொடு வாரலெம் மனையென
வூடி யிருப்பே னாயி னீடா
தச்சா றாக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல் ;

---

௧. இச்செய்யுள் கற்பின்கண் தலைவிகூற்றுப் பெட்பின்கண் வந்ததற்கு மேற்கோள்; தொல். கற்பி. சூ. சு. இளம். நச்.

(பிரதிபேதம்) * பரத்தையர்க்கவர்களகப், † பித்தேறிற்றிலே னென்று, ‡ ஆகுபெயராற் பாகனை, இதனால்.

௨௨ பகலாண் டல்கினை பரத்த வென்றியா
னிகலி யிருப்பே னுயிற் றுன்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும் ;

ஆங்க;

௨௩ விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
மாங்கவிந் தொழியுமென் புலவி தாங்கா
தவ்வவ் விடத்தா னவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கு
மகிழ்நன் பரத்தைமை
யவன் றொழி கடனமக் கெனவே.

க. த
லைவன் நாடோறும் வதுவையயர்ந்து வந்தால் யான் அதற்குப்
பெ நீ ஊடலின்றி அவன் வந்தபொழுதே எதிர் கோள்ளுதியென்ற
தே தலைமகள் அதற்குக் காரணங் கூறியது.

ஆ இதன் பொருள்.

(க)*நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப லிரையிதழ் †கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப வோடு
மோரை மகளி ரோதை ‡வெரீஇபெழுந்
தார லார்கை யஞ்சிறைத் தொழுதி
யுயர்ந்த பொங்க ||ருயர்மர மேறி
யமர்க்கண் மகளி ÷ரலப்பிய வந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று
முயர்ந்த =போரி னொலிநல் லூரன்

க. (அ)தரவு தனக்குப் பேரெல்லையாகிய பன்னிரண்டடியை யிகந்து பதின்மூன்றடியான் வந்ததற்கு, "நீரார்..........தெற்றன" என்னும் இப்பகுதி மேற்கோள்; தோல். செய். சூ. கஙரு. நச். பன்னிரண்டடியின் இகந்தன துள்ளலோசையான் வாராமையின் இலேசினாற் கொண்டானென்பர் பேர்.

(ஆ)"நீர்ச்செறுவி னீணெய்தல்" பட். கக. இந்நூற்பக்கம் சகக: ங-ஆம் குறிப்பும் சஉரு: க-ஆம் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) *நீரோர் செறுவின், †கொய்ம்மார், ‡வெரீஇயால். || ஊர்மரம், ÷ அலைப்பிய, = போர்வினொலி,

க0 புதுவோர்ப் புணர்தல் வெய்ய னாயின்
வதுவை நாளால் வைகலு மஃதியா
ஞேவேன் றேழி நோவாய் நீயென
வெற்பார்த் துறுவோய் கேளினித் தெற்றென

எ – து: நீர் நிறைந்த செய்யில் வளர்ந்த ஒத்த இதழையுடைய நெய்தற் பூவோடேஆம்பலினது*நிரைத்தஇதழையுடையபூக்களைப்பறித்துக்கோடற்குத் தலைமை நிறைந்த சிவந்த சிலம்புமுதலியன ஒலிப்ப ஓடுகின்ற விளையாட்டினையுடைய மகளிருடைய ஆரவாரத்திற்கு வெருவியெழுந்து ஆரல்மீனையுண்டலையுடைய அழகிய சிறகினையுடைய பறவைத்திரள் உயர்ந்த மரத்தில் உயர்ந்த கொம்பிலே ஏறியிருந்து போரைச்செய்யுங் கண்ணினையுடைய மகளிர் தம்மை † அலைத்த அந்நோயை அம்மகளிருடைய சுற்றத்தார்க்குக் கூறுவன போலப் பலகுரலாலே பலகாலுஞ் சொல்லும் உயர்ந்த பே[illegible]ார்களா[illegible] உண்டாகிய ஆரவாரத்தினையுடைய நல்ல ஊரினையுடையவன் புதிய[illegible] யரை மணஞ்செய்தலை!எக்காலமும்விரும்புவனாயின்,அதற்கேற்ப(க) [illegible] வதுவைக்கு உரிய நாளாயிருக்குமாயின், அவ்வொழுக்கத்திற்குத்தே[illegible] வருந்துவேன்; நீ அதற்கு ஒருகாலமும் வருந்தாயெனச் சொல்லி[illegible] பார்த்து வருத்தமுறுகின்றவளே! இனி அவன் செய்தியை நீ [illegible] தெளியும்படியாகக் கேள். எ – று.

உயர்ந்தாரோடு இழிந்தாரையும் தத்தம் மனைகளினின்று [illegible]ண்டு போந்து வருந்த விடுதற்கு விறலி முதலிய வாயிலோர் செல்கின்ற ஆரவாரத்தைக் கேட்டு வெருவி அவனை அரிதிற்பெற்றுழி நுகர்ந்து வருந்தியிருக்கின்ற சேரிப்பரத்தையர் பின்பு அவன் செலுத்துகின்ற வாயில்கட்கு எய்தாத இடங்களிலே புலந்திருந்து அவன் வாயில்கள் தம்மை வருத்தின நோவை அவர் சுற்றத்தார்க்குப் பலகாலும் முறைப்பட்டுக்கூறும் ஊரனென உள்ளுறையுவமங் கொள்க.

கச (உ) ‡எல்லினை வருதி யெவன்குறித் தனையெனச்
சொல்லா திருப்பே னாயி ||னெல்லென

க. நல்ல நாளில் வதுவை செய்தல் மரபென்பதை, கலி கூ: கஉ – ச – ஆம் அடிகளின் குறிப்பாலுணர்க.

உ. "இடை நிலைப்பாட்டே தரவகப்பட்ட மரபினது" என்புழி அகப்படுதல் என்பதற்கு அகம்புறமென்றிரு கூறு செய்தவழி முற்கூற்றினுட் படுதல்; முன், காலமுன்னும்; எனவே ஆறடிமுதல் இரண்டடிகாறும் வரப்பெறுமென்று கொள்க......................பன்னீரடி யிகந்த "நீரார் செறுவின்" என்ற தாவிற்கும் "எல்லிவருதி...............மறைப்ப

(பிரதிபேதம்) * நிரைந்தவிதழை. † அலைக்க, ‡ வெள்கினையருகி, ல்லிவருதி, || எல்லெண.

(௧)*விரியுளைக் கலிமான் றேரொடு வந்த
(௨)விருந்தெதிர் †கோடலின் மறப்ப லென்றும்

எ - து: வதுவை அயர்ந்த‡பின்பு விளக்கத்தினையுடையையாய் வாராநின்றாய், எம்மை எத்தன்மையாகக் கருதினையெனப் புலந்துகூறிப் பின்னர் ஒரு மொழியைக் கூறாதிருப்பேனாயின் அது||நீங்கப் பரந்த கழுத்தின்மயிரினையும் மனச்செருக்கினையுமுடைய குதிரை பூண்ட தேரிலே ஆரவாரிப்பக் கொண்டு வந்த விருந்தினரை எதிர்கொள்ளுகையினாலே எந்நாளும் புலவியை(௩) + மறப்பேன். எ - று.

௧௮ வாடிய பூவொடு வாரலெம் மனையென
ஊடி யிருப்பெ னாயி னீடா

லென்றும்" எனத் தரவகப்பட்ட தாழிசை வருதல் கொள்கவென்பர், நச்; தொல். செய். சூ. ௧௩௪.

௧. தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைமகள் மனத்துட்படுதலாகிய "புரையறந் தெளிதல்" என்பதற்கு,"விரியுளை..........மறப்ப லென்றும்" என்னும் பகுதியை மேற்கோள் காட்டி, இது அவனொடு சொல்லாடாது ஊடியிருப்பேனாயின் விருந்து கொண்டு புகுதரும்; அதனால் ஊடலை மறப்பே னென்றமையிற் புரையறந்தெளிதலாயிற் றென்பர், பேர்; தொல். மெய்ப். சூ. ௨௪; இ - வி. நூலாரும் இதனையே எழுதுவர்; இ - வி. சூ. ௫௮௦.

௨. "உருவிலாள னொருபெருஞ் சேனை, யிகமல ராட்டி யெதிர்நின்று விலக்கியவ, ரெழுதுவரி கோல முழுமெயு முறீஇ, விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொ, டூடனுறைவு மரீஇ யொழுக்கொடுபுணர்ந்த, வடமீன் கற்பின் மனையுறை மகளிர், மாதர்வாண் முகத்து மணித்தோட்டுக்குவளைப், போது புறங்கொடுத்துப் போகிய செங்கடை, விருந்திற் றீர்ந்தில தாயின் யாவது, மருந்துந் தருங்கொலிம் மாநில வரைப்பெனக், கையற்று நடுங்கு நல்வினை நடுநாள்" சிலப். ௫: ௨௨௪ - ௨௩௪.

௩. "மறைப்ப லென்றும்" என்று தொல். செய். சூ. ௧௩௪. நச். உரை மேற்கோளிற்காணப்படு மூலமும் மறைப்பேனென்று ஒரு பிரதியிற் காணப்படும் உரையு மாகிய பிரதிபேதம், 'விருந்து கண்டொளித்த ஊடல் பள்ளியிடத்து வெளிப்படல்' என்னும் கோவைக்கிளவியை நோக்கப் பொருத்தமுடையதாய்த் தோற்றுகிறது; கலித்தொகை ஏடு எல்லாவற்றின் மூலமும்.பலவற்றினுரையும் அவ்வாறு இல்லை.

(பிரதிபேதம்) *விரியுளைக்கலிமான் றேரொடும் வந்த, † கொண்டலின் மறைப்பல். ‡ பின் விளக்கத்தினை, || நீங்கத்தேரிலே கொண்டுவந்த, + மறைப்பேன் பரந்தகழுத்தின் மயி......கொண்டு வந்தவிருந்து. வாடிய பூவொடு.

(க)தச்சா ருக *வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்

எ - து: முயக்கத்தால் வாடிய பூவோடே எம்மனையிடத்து வாராதே கொள்ளென்று கூறி யான் ஊடியிருப்பேனாயின் † நீடியாமல், (உ)தன்பொய்ச் சூளுக்கு நாம் அஞ்சும் அச்சமே தான் ‡ ஊடலுணர்த்தும் வழியாக ஊடலுணர்த்துதற்கு வருபவனுடைய பொய்யாகிய சூளுக்கு அஞ்சிப் புலவேனாயிருப்பேன். எ - று.

"அஞ்சியச்சுறுத்தலும்" (ங)என்றாற்போல (ச)அச்சம் அச்சு என விகாரமாய் நின்றது.

உஉ. பகலாண் டல்கினை பரத்த வென்றியா
னிகலி யிருப்பே னாயிற் றான்றன்
(ரு)முதல்வன் பெரும்பெயர் ‖முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி றஞ்சும்

க. "தெய்வ மஞ்சல்" என்னும் மெய்ப்பாட்டிற்கு, "அச்சாருக........... ஆகுவல்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. உச. பே. இ - வி. சூ. ருஅ௦.

உ. "என்னை யருளி யருண்முருகு சூள்சூளி, னின்னை யருளி லணங்கான் மெய் வேறின்னும், விறல்வெய்யோ னார்மயில் வேனிழ் னேக்கி, யறவ ரடிதொடினு மாங்கவை சூளேல், குறவன் மகளாணை கூறேலா கூறே, லைய சூளி னடிதொடு குன்றொடு, வையைக்குத் தக்க மணற்சீர் சூள் கூறல்." பரி. அ: சுரு - எக.

ங. தொல். களி. சூ. உங. இதனுரையில் இவர் 'அஞ்சுதல் அச்சென்றாயிற்று' என்று எழுதியிருக்கிறார்.

ச. (அ) "அச்சற் றேம மாகி" (பதிற். கூ௦: உ.) என்புழி, அச்சமென்பது கடைக்குறைந்த தென்று எழுதியிருத்தலும். (ஆ) "நகையச் சாக நல்லமிர்து கலந்த" பரி. ங: நங. (இ) "அச்சிடை யிட்டுத் திரியின்" பழ. உகக. என்பவையும் ஈண்டறிதற்பாலன.

ரு. "புதல்வன் பொன்மகுடம் பொறுத்தலான், முதல்வன் பேருவகைக்கு முந்துவா, னுதவும் பூமகள் சேர வொண்மலர்க், கதவஞ்செய்ய கரத்தினீக்கினான்" கம்ப. அரசியற். உக. என்பதனால் முதல்வனென்பது தகப்பனார் பெயராய் வருதலையும் "அறைதரு மாந்தா தாமுனமுயி[...]த்தோ ரம்பரீ டன்புரு குச்ச, னெறிபுறு புகழ்சார் தருமுச[...] குந்த னிகழ்த்துமிம் மூவரின் முன்னோன், குறைவறு குணஞ்சா[...]லொருமகவென்னக்குலவி......பிதாமகனுக்கு, முறைமையின் யுவனச் சுவ[...]னு நாம மூதுல கிற்பெறீஇச் சிறந்தான்" பாக. பிரதிப. தம்) * புனரிய, † [...]டியாமல், ‡ ஊடலுண ராததும் வழி. ‖ முறையுளிபெற்ற.

எ - து: *பரத்தைமையையுடையவனே! பகற்பொழுதெல்லாம் பரத்தையர் மனையிலே தங்கினையென்று கூறி யான் அவனுடனே மாறுபட்டிருப்பேனாயின், தான் தன்னுடையதந்தையுடையபெரியபெயரைப்பெற(க)முறையாற் பெற்றபுதல்வனைத் தழுவிப்(உ)பொய்யாகியதுயிலைக்கொண்டுவருந்தும். எ-று

துஞ்சுதல் - இறந்துபடுதல். 'பகலாண்டல்கினை' எனவே உண்டிக் காலத்தும் வந்திலையென்றாள்.

†ஆங்க, அசை.

உஎ (ங)விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
‡மாங்கவிந் தொழியுமென் புலவி தாங்கா
||தவ்வவ் விடத்தா னவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கு
(ச)மாய ÷மகிழ்நன் பரத்தைமை
நோவென் றோழி (ரு)கடனமக் கெனவே

(க) அரிச்சந்திரன்கதையுரைத்த. க. என்பதனாலும் "எந்தை பெயரனை யாங் கொள்வேம்" கலி. அக: ௩௫. எனப் பின்பு இந்நூலுள்ளே வருதலாலும் ஒருவன் தன்தகப்பனார்பெயரைத் தன்பிள்ளைக்கு இடுதல் மரபென் பதையும் அறிக.

க. உளியென்பது மூன்றும்வேற்றுமைப்பொருள்படுவதோ ரிடைச்சொல்.

உ. (அ) "சிந்தையெய்த் திரு வினைகப், பூவிய லமளி மேலாப் பொய்யுறக் குறங்குவானை" கம்ப. ஊர்தேடு. உகங. (ஆ) "பொலங்கொடி நாணினேடும் பொய்த்துயில் கூர்ந்தா ளன்றே" நைடத. மணம். சஉ.

ங. கற்பென்னுங் கைகோளில் உணர்தலுக்கு "விருந்தெதிர்.........புலவி" என்னும் இப்பகுதி மேற்கோள். தொல். செய். சூ. கஅா. பேர். நச்.

ச. (அ) "அன்புடைக் கணவ ரழிதகச் செயினும், பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை" பெருங். (ச) கச: கஅ·க. (ஆ) "சிறுமையும் பெருமையுந் தெரிந்தி லாவெனப், பொறுமையொன் றின்றியே பொங்குங் கங்கையை, யறமல குலமினோர்க் கன்பர் பாற்செயுந் திறமல சினமென வருணன் றேற்றுவான்" திருக்கழுக்குன்றத் தீர்த்தச்சருக்கம். உங.

ரு. புரையறந் தெளிதலாவது: தனக்கேற்ற அறம் இன்னதெ[illegible] தல்; "கடனமக்கெனவே யென்றவழி, 'பரத்தைமை[illegible]
*அதனைப்பொறுத்தல்[*]இதனைப் பொத்துவது [illegible]

(பிரதிபேதம்) * பரத்தைமையையுடையவனே, † எனவாங்கு ஆங்[illegible]வி[illegible]
கலக் தொழியும் || அவ்வவிடத்தான், ÷ மகி[illegible]

எ - து: தோழீ! பூப்போலுங் கண்ணையுடைய மகளிருடைய கைசெய்த நலத்தைக் கெடுக்கும் பொய்யைவல்ல மகிழ்நன து*பரத்தைமையாலேவருவதுவை யயர்ந்து வந்த மனைதோறும் அவர் புலவியாற் செய்த வடுக்களைக் கண்டிருக்க நமக்கு முறைமையாயிற்றென்று கருதி யான் நொந்திருப்பேன்; ஆயின் யான் இங்ஙனமாகவும் விருந்தினரை எதிர்கொள்ளுதலைச் செய்கையினாலும் அவன் பொய்யாகிய சூளால் நமக்கு வருத்தம் வருமென்று அஞ்சுகையினாலும் பெறுதற்கரிய புதல்வனை முயங்கிக்கொண்டு வருந்தக்காண்கையினாலும் என்னெஞ்சு புலவியை முழுக்கத் தாங்காது; † தாங்காதபடியாலே அவ்விடத்துப் புலவி கெட்டுப்போகாநிற்கும்; இதுகாண் யான் உறுகின்ற துன்பமென்றாள். எ - று.

இதனால், பிறர் இகழ்ந்தமைபற்றித் தலைவிக்கு எள்ளல் பிறந்தது.

இது "தரவே தானு நாலடி யிழிபா,யாறிரண்‡டுயர வேறவும் பெறுமே" (க)என்றதனில் ஏறவுமென்ற உம்மையாற் சிறுபான்மை பதின்மூன்றடியும் வருமென்றலிற் பதின்மூன்றடியான் வந்த தரவும் || தாழம்பட்ட ஓசையின்றித்தரவகப்பட்ட இடைநிலைப்பாட்டும்ஆங்கவென்னுங் X தனிச்சொல்லும் எழடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (௧௦)

(எசு.) புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரினையளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி;

௬ செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்ற யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ
கௌவைநேர யுற்றவர் காணாது கடுத்தசொல்
லௌவாவென் றுணராய்நீ யொருநிலையே யுரைத்ததை;

௧௦ ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தனைத்தற்கோ
விடுத்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை;

இல்லுறைமகளிர்க்கு இயல்பென்னும் அறத்தினுனே' எனக்கூறிய வாறு கண்டுகொள்க" என்பர், இளம்; தொல். மெய்ப். சூ. உ௪.
உ. ...ல்: செய். சூ. ௧௩௩. இந்நூற்பக்கம். ௩௩௭: க-ஆம் குறிப்புப் படு...

வரப்பி...மையாலே, † நீங்காத படியாலே, ‡ உயர்பேற்பவும் படுமே, உயர் செறுவின்...றுமே, உயர்வென்றறையவும் படுமே, || தாழப்பட்ட, X தனி

(பிரதிபேதம்) * நிரைந்த...

கச வரிதேற்றாய் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய்தனைத்தற்கோ
புரிபுநம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொல்
லுரிதென வுணராய்நீ யுலமந்தாய் போன்றறதை;

எனவாங்கு;

கரு அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றாநம் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்த திவ்வூ ராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி.

இஃது "அச்ச நீடினும்" (க) என்றதனுற் கூட்டமுண்மை உணர்ந்த தோழிக்கு உண்மைகூறுதற்கு அஞ்சிய அச்சம் நீட்டித்துத் தலைவி கூறியது. இது "திணை*மயக் குறுதலுங்கடிநிலையிலவே"என்னும்(உ)சூத்திரவிதியான் மருதத்துக் குறிஞ்சி வந்தது.

இதன் பொருள்.

புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரினையளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
(ங)வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி

எ - து: கைசெய்த பூண்களைக் கிடக்கும் முறைமையிலே கிடக்கத் திருத்தியும், நாம் நீரிலே விளையாட நமக்கு ஓரேதம் வாராமற் புறத்தே சூழ்ந்து திரிந்தும் அழகிய தொய்யிலெழுதியும் நம்முடைய சிற்றிலிலே வந்து எவற்றொழிலைச் செய்தும் கூட்டத்தை †நினைந்து வருந்துகின்ற, இந்தப் பெரிய தகுதிப்பாட்டையுடையவனிடத்தே கூட்த்தையுடையளென்று இவ் வூரிலுள்ளார் பலகாலுங் கூறுதற்கு நீ அங்ஙனம் ஒருகூட்டத்தையுடையை யோவென்று கேட்கின்றாயாயின், விளங்குகின்ற இழையினையுடையாய்! இப்பொழுது யான் கூறுகின்றதனைக்கேள். எ - று.

க. தொல். கள. சூ. உ௦. இச்சூத்திர வுரையிலும் இச்செய்திக்கே இக் குறிப்போடு இச்செய்யுளை இவர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

உ. தொல். அகத். சூ. கஉ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் மருதத்துக் குறிஞ்சி மயங்கியதற்கு இச்செய்யுள் மேற்கோள்.

ங. "வினவுதி யாயிற் கேண்மதி" ஆசிரிய. 'ஒளிவிடு' (பிரதிபேதம்) * மயங்குறுதலும், † நினைந்தும் நின்ற.

ஊடுந் துணையைப்புணர்ந்த கரிய தும்பி பலரும் நீர் உண்ணுந் துறையில் அலர்ந்த பூவைப் பெருகிவந்த நீர்சாயப்பண்ணுகையினாலே அப்பூவிலிருத்தலை வெறுத்து *,அப்புனலுடனே ஊடி நற்குணங்களையுடைய நல்ல நாட்டிற்கு உரிய பகை தம்மிடத்தே வந்ததாக அந்நாட்டை † இருப்பல்லவென்று கை விட்டு நீங்கிப் போய்த் தன்னாட்டைக் காக்கின்றவனுடைய குடைநிழலி னூர்களை இருப்பாக நினைத்துத் தங்குதல் கொள்ளுங் குடிமக்களைப்போல வேறுமொரு பொய்கையைத் தனக்கு இருப்பாக ஆராய்ந்திருந்து பழைய பொய்கையை நினைத்துச் சுழல்கின்ற காலத்தே ‡அவ்விறைவன் வந்தபகை யின் வலிகெடும்படியாக அப்பகையைப்போக்க அக்குடிமக்கள் பதியிடத்தே மீண்டு சென்றாற்போல அந்நிலத்துள்ளார் போக்க அப்பெரும்புனல் நீங்கு கையினாலே || மீண்டுவந்து அத்தும்பி அந்தத் தாமரைப்பூவின்மேல் பறத்தலைத் தவிர்ந்து இளைப்பாறும் பரந்த புனலையுடைய நல்ல ÷ ஊரனே ! எ - று.

பகைதலைவந்தென இறைகொள்ளுங் குடிபோலத் தும்பி ஊடித்தேர்ந்து அலமரும்பொழுதிலே அவ்விறை பகைதணிப்ப அக்குடி பதிப் × பெயர்ந் தாற்போலே புனனீங்க மீண்டுவந்து அத்தும்பி அம்மலரிலே அசைவிடும் ஊர என்றதனாற் பல பரத்தையரையுடைய பரத்தையர் சேரியிலே சிலநாள் ஒரு பரத்தையை ஆரவாரத்துடனே நீ வதுவையயர அவளை நின் காதற்பரத்தை வந்து கோபித்துத் தீங்கு கூறுகையினாலே வதுவையயர்ந்தவளிடத்துக் கூட்டத்தையும் வெறுத்துக் காதற்பரத்தையொடும் ஊடி வேறோர் பரத்தையர் சேரியிலே சென்றிருந்து நீ வதுவையயர்ந்தவளை நினைத்து + வருந்துகின்ற காலத்தே அவள் சுற்றத்தார் காதற்பரத்தை கோபத்தை நீக்க மீண்டு சென்று அவளிடத்தே தங்குகின்றாயெனக் காமங்கிழத்தி புலந்து கூறினாள். இது வினையுவமப்போலி. எனையுவமமும் வினையுவமம்.

கக (க)நீங்குங்கா ளிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவ ளலமென்னுந் தகைமையர்தா
னெரியிதழ் சோர்ந்துக (உ)வேதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறுங் கண்ணியை யீங்கெம்மில் வருவதை

'ஞெமர்தலும்' தெய். (ஆ) வினையியலுள் ஓதாமையாற் பெயரெச்ச உம்மை இடைச்சொலென்று கொள்ளப்படும். பாயும் புனலென்பது பாய்புனலெனத் தொக்குழி வேற்றுமைப்பொருட்கண் உருபு பெயர் நிற்பத்தொக்க வாறுபோல வினை நிற்ப உருபு தொகுதலானும் செய்யு மென்பது வினையு முருபுமாகிய இரு நிலைமைத்தென்று கொள்க. என்பர் தெய்; தொல். இடை. ரு. எ. 'எச்சஞ்'

க. கலி. ௩அ. இன்தாழிசைகள் ஈண்டு அறிதற்பாலன.

உ. கலி. எகூ: கஎ - கஅ. அடிகள் ஒப்புநோக்குக.

(பிரதிபேதம்) * அப்புனலுடனே நற்குணங்களை. † விருப்பல்ல, ‡அவ்விறையவந்த ||மீண்டு வந்தவத்தும்பி. ÷ ஊரவென்க பகை × பெயர்ந்தாய்போலே + வருகின்றகாலத்தே.

எ - து: எரிபோலும் நிறத்தையுடைய இதழ்கள் வாடி உதிரப் பரத்தை யரைப் புணர்ந்தபடியைச் சான்றாய் எமக்குக் கூறுங் கண்ணியையுடையை யாய் எம்முடைய இல்லில் யாமிருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை இவளுடைய *நலம் யாம் பிரியுங்காலத்து நிறங்கெட்டுப் புணருங்காலத்துப் பிறர் புகழ்தல் பொலிவுபெற்று நாம் மனத்திற் கொண்ட கருத்தாயிருக்கு மென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோதான். எ - று.

கரு (க)சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற்கூம்பு மலர்போலென்
றொடர்நீப்பிற் றொகுமிவ ணலமென்னுந் தகையோதா
னலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர்(உ)கூந்தன்
மலர்நாறு மார்பினை யீங்கெம்மில் வருவதை

எ - து: பிறர் கூறும் அலருக்கு நாணி மறைத்த காமநோய் ஒழுக்கத் தெல்லையைக் கடவாநிற்கப் பிறர் கூந்தலின் மணம் நாறுகின்ற மார்பினை யுடையையாய் எம்முடைய இல்லிலே †யாமிருக்கின்ற இடத்தே வருகின்ற ‡நிலைமை இவள் நலம் ஆதித்தனைக் கண்டு அலர்ந்ததாமரைப்பூ அந்தஆதித்தன் அடங்குமளவிற் குவிந்தாற்போல ||எனது தொடர்ச்சி நீங்கின் வறிதுபட் டிருக்குமென்னுந் தகைமைப்பாடோதான். எ - று.

கசு (ந)பெயினந்தி வறப்பிற்சாம் புலத்திற்குப் பெயல்போல்யான்
செலினந்திச் செறிற்சாம்பு மிவளென்னுந் தகையோதான்

க. (அ)"கொழுநனைக் காணு,.........அவன் வடிவெலா நோக்கித், தெள்ளு தெண் டிரைசூழ் பொலங்கிரி முகட்டிற் சேட்டிளம்பரிதிகண்டாங்கே, முள்ளரை முளரி முறுக்கவிழ்ந் தென்ன முகமலர்ந் தகமலர்ந் தனளே" **பிரமோத்தர.** உமாமகேசுவரபூசாபல. ருஉ. (ஆ) "தணந்த வென் கணவன் வல்லே சார்தர வருளு கென்னுப், பணந்தழை யரவ மாலைப் பகவனைக் கரங்கள் கூப்பு, மணந்தவழ் கமல மென்றாழ் வருதலுந் தழுவி மார்பம், புணர்ந்திடக் கூப்புங் கைகள் .பொருக் கென விடுத்து நின்ற" **பேரூர்ப்.** குழகன் குளப்புச் சுவடுற்ற. ருரு.

உ. (அ)"சாந்த நாறு நறியோள், கூந்த னாறுநின் மார்பே தெய்யோ" **ஐங்.** உசo. (ஆ) "வேந்த, னெரிமணி யார மார்பி னின்றுயில் பொருந்தி னாளே" **நைடதம்.** மண. சசு.

ந. (அ) "வறனுழக்கும்பைங்கூழ்க்கு வான்சோர்வினிதே" **இனியது.** கசு. (ஆ) "துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த, னளியின்மை வாழுமுயிர்க்கு" **குறள்.** ருருஎ. என்பவையும்.(இ)"வையெயிற் றெய்யா மகளிர் திறமினிப், பெய்ய வுழக்கு மழைக்காமற் றைய" **பரி.** க: நங-நச. என்பதும்அதனுள் 'மழைக்கா'என்பதனை விளக்குமிடத்து,

(பிரதிபேதம்) * நலம்பிரியுங் † யானிருக்கின்றவிடத்தே, ‡ நிலைமை ஆதித்தனைக். ||நினது.

(க)முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
(உ)தொடியுற்ற வடுக்காட்டி யீங்கெம்மில் வருவதை

எ - து: முடியிலே பொருந்தும் மாலைபோல யாம் வாட நின் பரத்தையர து தொடியினுலுற்ற வடுவினைக் காட்டி இவ்விடத்து எம் இல்லிலே *யாமிருக்கின்ற இடத்தே வருகின்றநிலைமை இவள் மழைபெய்யிற் செருக்கி அது பெய்யாதொழியிற் புலர்கின்ற நிலத்திற்கு (ங) † அப்பெயல் பெய்து விளைவித்தும் பெய்யாது கெடுத்தும் போமாறுபோல யான் சென்றேனுயிற் செருக்கிச் செல்லாமல் வருத்திற் கெடுமென்று நீ குறித்திருக்குந் தகைமைப் பாடோதான். எ - று.

‡ஆங்க, அசை.

உச ஐய வமைந்தன் றனைத்தாகப் புக்கீமோ
(ச)வெய்யாரும் ||வீழ்வாரும் வேறுக்க் கையின்
முகை × மலர்ந் தன்ன =முயக்கிற் றகையின்றே
தண்பனி வைக லெமக்கு

"காவையொத்தலாவது: கா, தனக்கு இன்றி யமையாத மழையை வருவித்துக்கொள்ள மாட்டாது அது தானேவந்துழிப் பொலிந்து வாராதவழியும் ஆமளவும் ஆற்றி ஆகாதஎல்லைக்கண் இறந்துபடுதல்" என்றெழுதி யிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

க. (அ)"சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப், பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள்" (ஆ) "அரக்கர்,....................புறத்திறேடின ரோடிய குருதியேபோல" (இ) "கரைவித்தா னுயிரைக் கண்போல்" கம்ப. மிதிலைக். எகூ: கும்பகருணப். உஉகூ. நாகபாச. உகO. (ஈ) "நின் னிடை யெனத்தா, மெய்வண்ணம்வாடி" தஞ்சை. கஉO. (உ) "மாலை யென வேதுவளுறும்" விநாயக.

உ. "தொடிவடு" கலி. எக: ககூ. இன் குறிப்புப் பார்க்க.

ங. "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை" குறள். கரு. என்பதும் அதன் பரிஉரையும் இங்கே அறிதற்பாலன.

ச. உள்ள துவர்த்த லென்பதற்கு உள்ளதனை உவர்த்துக்கூறுதலென்று பொருள் கூறி 'வெய்யாரும்...........லெமக்கு' என்பதை மேற்கோள் காட்டி இது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்த லென்பர் இளம்; தொல். மெய்ப்பாட். சூ. உச.

(பிரதிபேதம்) *யானிருக்கின்றவிடத்தே, † அப்பெயல்கள்பெய்து, ‡ ஆங்கசை. || வீள்வாரும். × அலர்ந்தன்ன, =முயங்கிற்.

எ - து: நும் பரத்தைமையாற் பலரும் வியக்கத்தக்கனஎல்லாம்நுமக்குப் பொருந்திற்று; (க) நும்மைவிரும்புவாரும் நீர்தாம்விரும்புவாருமாகியபரத்தையரும் உமக்கு வேறுபடும்படியாக ஈண்டு நில்லாதே அவர் மனைக்கண்ணே செல்வீராக; தன் செவ்வியான் அலராது கையினாலே வலிய அலர்த்துதலின் முகையலர்ந்தாற்போல இனிதல்லாத முயக்கத்தில் எமக்குக் குளிர்ந்த பனிக்காலம் அப்படிக் கொடிதாயிருக்க நும்மையின்றித் தங்குதல் தகைமையில்லையோ அது தகைமையுண்டோவென ஊடல்தீர்கின்றாள் *கூறினாள். எ - று.

தண்பனி அனைத்தாகவென்க.

இது கைம்மிகலும் †இழிவுமென்னும் மெய்ப்பாடுகள் உணர்த்திற்று.

இது தரவும் தாழிசையும் ‡அசைநிலையாகிய அடைநிலைக்கிளவியும், வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கரு)

(எகூ.) (உ) புள்ளிமி ழகல்வய லொலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழுறநீடி வயங்கிய வொருகதி
ரவைபுக ழரங்கின்மே லாடுவா ளணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம் போறலுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்;
எ அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதாற்
றோய்ந்தாரை யறிகுவேன் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ;
கக புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானான்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ;
கரு கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானா

க. "நின்வெய்ய னாயி னவன்வெய்யை நீயாயின்" கலி. கஎ: உக.

உ. ஏனையவாயில்களை மறுத்தவழி இன்னகைப் புதல்வனைத்தழீஇ இழையணிந்து அவன் வாயிலாக வந்ததற்கு, இச்செய்யுள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. கO. இளம்.

(பிரதிபேதம்) * கூறியது தண்பனி †இழவுமென்னும், ‡இசைநிலையாகிய இடைநிலைக்.

ணண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ;

எனவாங்கு;

பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றீ யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து.

இது செல்லாக் காலைச்*செல்கெனக்கூறிவிடுத்தது.(௧)அது தலைவன் இனிச் செல்லானேன்பது இடமுங் காலமும்பற்றி அறிந்த காலத்து ஊட லுள்ளத்தாற் கூடப் பெறதாள் செல்கெனக் கூறி விடுத்தாற்றுதலாம்.

இதன் பொருள்.

புள்ளிமி ழகல்(௨)வய லொலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழுறநீடி வயங்கிய வொருகதி
ரவைபுக ழரங்கின்மே லாடுவா ளணிநுதல்
வகைபெறச் செரீஇய †வயந்தகம் போற்றோன்றுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்

எ - து: பறவைகள் ஒலிக்கின்ற அகன்ற வயலிடத்து(௩)ஒலிக்கின்றசெந் நெலிடையிலே பூத்த முள்ளை அரையிலேயுடைய தாமரையை ஒன்றுகிய செந்நெல் முதல் ‡சாய்க்கையினாலே அதனுடைய வள்ளிய இதழையுறும்படி வளர்ந்து அப்பூவிலே கிடந்து விளங்கின ஒரு கதிர் அவையினுள்ளார் புகழப் பட்ட அரங்கின்மேலே ஆடுகின்றவளுடைய தலைக்கோலத்தினின்று நுதலிலே

---

௧. தொல். கற்பி. ௫. ௬. இதனுரையில் இளம் பூரணரும் நச்சினார்க் கினியரும் செல்லாக்காலைசெல்கென விடுத்தற்கு, "பூங்கட் புதல்வனை ....தந்து" என்பதனை மேற்கோள் காட்டி யுள்ளார்.

௨. (அ) "செந்தா மரைப்பூ வுறங்கிமிர்ந்த செந்நெலின், பைந்தார்ப் புனல் வாய்ப்பாய்ந் தாடுவா-ளந்தார், வயந்தகம்போற் றோன்றும் வயலூரன்" திணைமாலை. ௧௨௮. (ஆ) "கரும்பணி வளவயற் காமர் தாமரை, வரம் பணைந் ததனுதற் கிடந்த வார் செநெ, லரங்கணி நாடக மகளி ராய் நுதற், சுரும்புசூ ழிலம்பகத் தோற்ற மொத்ததே." சீவக. ௧௪௪௨.

௩. ஒலித்தல் - தழைத்தல்.

பிரதிபேதம்) *செல்கென விடுத்தது. † வயந்தகமேபோற்றோன்றும் ‡ சாய்க்கையினாலே யிதனுடைய.

தாழும்படி ஒரு வடமாகச் செருகி வைத்த வயந்தகமென்னும் அணிபோலத் தோன்றும் அழகு பெறுகின்ற கழனியையுடைத்தாகிய அழகினையுடைய குளிர்ந்த துறையினையுடைய ஊரனே! கேள். எ - று.

சாய்த்துவயங்கியவென முடிக்க. அணி - தலைக்கோலம். பரத்தையர் சேரியிற் பரத்தையரிடத்தே பொலிவுபெற்ற நின்னை அவர்கள் தம்வசமாகக் கொள்கையினாலே அவர்களில் ஒருத்தி நின்னிடத்தே விடாமற் றங்கி நினக்கு அணியாய்த் தோன்றாநின்றாளென உள்ளுறையுவமங் கொள்க.

எ அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
(க)மணிபுரை செவ்வாய்நின் (உ)மார்பகல *நனைப்பதாற்
(ங)றேய்ந்தாரை †யறிகுவேன் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ

எ - து: பரத்தையரிடத்து அணிந்த அணியுடனே இவ்விடத்தே வந்து எம்புதல்வனைஎடாதேகொள்; அவனுடையமணியை ஒக்கின்ற சிவந்த(ச)வாயினீர் நின் மார்பினுடைய பரப்பையெல்லாம் நனைக்கப்படுவதொன்றாய் இராநின்றது; அஃது அங்ஙனம் நனைத்தால் யான் நின் மார்பின் முயங்கினாரை அறிவேனெனச் சொல்லிக் கமழ்கின்ற நின்னுடைய சந்தனத்தாலே பிறர் முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற்கொண்டவள் வருந்துவ ளல்லளோ? எ - று.

கக புல்லலெம் புதல்வனைப் ‡புகலக (ரு)னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானன்

க. (அ) மணிபுரை செவ்வாய்" அகம். கூகூ: கச. (ஆ)"மணிமருளவ் வாய்" (கலி. அக - க.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ)"மலைமாதமரும்திருமார்பகலத், தீசன்" தேவாரம். (ஆ) "உற்றவா யம்புதம் பரிசையுங் கருவியும், முருவிமார் பகலமு முருவிவீழ் செருநர்" கலிங்க. சஅஉ.

ங. நற். ருரு: ங-கஉ.

ச. (அ) "மணித்தகைச் செவ்வாய் மழலையங் கிளவி, புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறு நனைப்பக், காண யாகலோ கொடிதே." தொல். கற்பி. சூ. கூ. நச். மேற்கோள். (ஆ) "மைவார் குழன்மட மங்கையர் தங்கள் வதுவை யுன்னிக், கைவார ணங்கட வும்பெரு மானைக் கலுழ்ந்தழைத்துன், செவ்வா யமுத மளைந்து செஞ் சாந்தஞ் சிதையப்புல்லி, யிவ்வாறு செய்ததெல் லாமவர் மேனியி லேறவதே" அம்பிகா. ருOங.

ரு. "நுந்தை வியன்மார்பிற்,........கோதை பரிபாட" கலி. அO: உச-கூ.

(பிரதிபேதம்) *நனைப்பவால். †அறிகுவல், ‡புகலலா் நின்.

மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
(க்)பூணினுற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ

எ - து: எம் புதல்வனை நீ தழுவாதேகொள்; பரத்தையர் கொண்டாடு தலையுடைத்தாகிய நின்னுடைய அகன்ற மார்பிற் கிடக்கின்ற பல வடங்களை யுடைத்தாகிய முத்து அணிந்த ஆரத்தைப் பிடித்து அறுப்பானொருவனாய் இராநின்ருன்; அவன் அறுத்தால் மாட்சிமைப்பட்ட இழையினையும் மடப்பத் தினையுமுடைய மகளிர் முயங்கின முயக்கத்தை நின் மார்பிற் கிடக்கின்ற பூணாலே கருதுதலை மனத்தாற்கொண்டவள் புலப்பளல்லளோ? எ - று.

கரு கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானு
(உ)னண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ

எ - து: எம் புதல்வனைத் தேடி எடுத்துக்கொள்ளாமல் அவன்தானேவரக் கண்டு எடாதேகொள்; நின்னுடையத்தலையில்வண்டுகள்ஒலிக்கின்ற கூறுபாட்டை யுடைய பூங்கொத்திற் பூக்களை வாங்கி அம்மாலையை அறுப்பானொருவனாய் இராநின்ருன்; அவன் அறுத்தால் நின்னை முயங்கினவர்களை அறிவிப்பது இக்கண்ணியென்று கூறி மணக்கின்ற நின்கண்ணியாலே பிறர்முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற்கொண்டவள் கோபிப்பளல்லளோ? எ - று.

*எனவாங்கு, அசை.

உ0 (ந)பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் †சென்றீ யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து

எ - து: பூப்போலுங் கண்ணினையுடைய புதல்வனைப் பல பொய்களைச் சொல்லிப்பாராட்டிப்புதல்வனைவிட்டுப்போகாயாய்ப்பரத்தையர்குறிக்கொண்ட நிலைமையைக் கடவாயாய்ப் பெரிய வாயிலில் நில்லாதேகொள்; நின்ருல்

க. "ஒளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின், களிதட்ப" (கலி. கக: கக - உ0.) என்பதும் அதனுரையும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. கலி. எஅ: கந - கச.

ந. (அ) வாயிலின் வரூஉம் வகைகளுட் புதல்வனைவாயிலாக்கொண்டு சென்றதற்கு, "பூங்கட்......பாராட்டி" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. க. நச். (ஆ) "பூங்கட் புதல்வனை நோக்கி" அகம். கசு: கஉ. (இ) "பூங்கட் புதல்வன்" ஐந் - யெழு. ௪எ.

(பிரதிபேதம்) * ஆங்கசை பூங்கட், † சென்றீ.

அவன் அணியைச் சிதைப்பானொருவனுயிருப்பான்; ஆதலால் எம்புதல்வனை (க)இங்கேதந்து அப்பரத்தையர்சேரியிலே அங்ஙனங்குறிக்கொண்டபரத்தைய ரிடத்தே செல்வாயாக. எ - று.

'ஈங்கெம் புதல்வனைத் தந்து' என்றது (உ) தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்தது.

(இதனால்) தலைவற்குக்கைம்மிகலுந் தலைவிக்கு இளிவரலும் பிறந்தது.

*இது தரவும் தாழிசையும் அசைநிலைத் தனிச்சொல்லும் கட்டளையாகிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கச)

(அ0.) (ங)நயந்தலை மாறுவார் மாறுக மாறாக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப்
பயந்தவெங் கண்ணார யாங்காண நல்கித்
திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
ரு பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பையப வாங்கி
யரிபுனை புட்டிலி னாங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன்;

க0 கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சாஅய்ச் செல்லுந்
தளர்நடை காண்ட லினிதுமற் றின்னாதே
யுளமென்னா நுந்தைமாட் டெவ்வ முழப்பார்
வளைநெகிழ் பியாங்கா ணுங் கால்;

கச ஐய, காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னாதே

க. இவ்வுரைகாரர் "ஒழிககாம மீங்கென" சீவக. எஉ என்பதன் விசேடவுரையில் "ஈங்கு: தன்மையை உணர்த்துதல், 'செலவினும் வரவினும்' என்னும் (தொல். கிளவி. உஅ) சூத்திரத்துக் கூறினும்" என்று எழுதியிருத்தலும், அச்சூத்திரத்தின் உரையில், "ஈங்கு முதலியன தன்மைக்கண்ணும் ஆங்குமுதலியன படர்க்கைக்கண்ணும் அடக்கப் பட்டன" என்று எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன.

உ. தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்ததற்கு "அணியொடு வந்தீங்கெம்..............புதல்வனைத் தந்து" என்பது மேற்கோள்; தொல். கற்பியல். சூ. சு.

ங. பல்வேறு புதல்வர்க்கண்டு நனியுவந்து கூறினதற்கு இச்செய்யுள் மேற்கோள்; தொல். கற்பி. சூ. க0.

(பிரதிபேதம்) * இது அசைநிலைத்.

யுய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச்சாஅய்மா
ரெவ்வநோ யாங்காணுங் கால்;

கஅ ஐய, திங்கட் குழவி வருகென யானின்னை
யம்புலி காட்ட லினிதுமற் றின்னாதே
நல்காது நுந்தை புறமாறப் பட்டவ
ரல்குல்வரி யாங்காணுங் கால்;

௨௨ ஐயஎங்; காதிற் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
போதில் வறுங்கூந்தற் கொள்வதை நின்னையா
னேதிலார் கண்சாய நுந்தை வியன்மார்பிற்
றுதுதேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கும்.

இது பரத்தையிற்பிரிந்து வந்த தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவி மகனுக்கு உரைத்தது.

இதன் பொருள்.

நயந்தலை மாறுவார்: மாறுக மாறுக்
(க)கயந்தலை மின்னுங் கதிர்விடு *முக்காழ்ப்
பயந்தவெங் கண்ணார யாங்காண நல்கித்
†திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
ரு (௨)பவழம் ‡புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் (௩)கைபுனை வேழம்
புரிபுனை ||பூங்கயிற்றிற் பைபய வாங்கி

க. (அ) "கைபுனை முக்காழ் கயந்தலை தாழ" கலி. அசு: ௨. (ஆ) "மயிர்ப் புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ், பொலம்பிறைச் சென்னி நலம் பெறத் தாழ" மணி. ௩: க௩ரு - க௩சு.

௨. (அ) "கவழக் களியியன்மால் யானைசிற் றுளி, தவழத்தா னில்லாதது போற் - பவழக், கடிகை யிடைமுத்தம் காண்டொறு நில்லா" திணை மாலை. ச௨. (ஆ) "பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி, யகழுமிங் குலிகமஞ் சனவரைச் சொரிவன, கவழயா னையினுதற் றவழுங்கச் சொத்தவே" சீவக. கஅகூஅ. (இ) "பவழவரை யன்னதிர டோட்பரவை மார்பன், றவழுமணி யாரமொடு தார்மணி தயங்கக், கவழமனை மேவு களி யானையென வந்தாங்கு" சூளா. துறவுச். கககூ. என்பவற்றால், பவழம் கவழமென்னும் வழக்குண்மை அறியலாகும்.

௩. "கை புனைவேழம்................வந்தீக" கலி. அசு: எ - க௦.

(பிரதிபேதம்) *முக்காழ்பயந்த, †திகளொளி; ‡புனைந்து, ||பூங்கையிற்புடையுடையவாங்கி,

யரிபுனை புட்டிலி *ஞாங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன்

எ - து: நின்னிடத்து அன்பு ஒழிவார் ஒழிந்தேபோக; நின்னைப் பெற்ற எம்முடைய கண்ணிறைய அன்பு மாருத † யான் நின் வரவைக் காணும்படி அருளி மென்மையையுடைய தலையிடத்தே கிடந்து மின்னும் ஒளிவிடுகின்ற மூன்று வடத்தையுடைய பாகனாகிய மகன்! விளிம்பிடத்தே விளங்குகின்ற ஒளியையுடைய முத்தை அரும்பாக அழுத்திப் பவழத்தாற்செய்த வட்டப் பலகை சுமந்துநிற்ப நின்ற கவழத்தைக் கொள்ளுதலறியாத கையாற் புனைந்த வேழத்தை ‡நின்னுடையகாலிற் கட்டினஉள்ளிமெணியாற் புனைந்தகெச்சை யாலே (யாரவாரிப்ப) நீ வளைத்து முப்புரியாக முறுக்கினகயிற்ருலே ||பையப் பைய ஈர்த்து இங்கே வருவாயாக. எ - று.

கயந்தலை, வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடுதோன்றியது. (க)மக னென்றது, இயல்புவிளி.

க௦ கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சாஅய்ச் செல்லுந்
(உ)தளர்நடை ÷காண்ட லினிதுமற் றின்னுதே
யுளமென்னு நுந்தைமாட் டெவ்வ முழப்பார்
வளை +நெகிழ் பியாங்காணுங் கால்

எ - து: விளங்கின மணிகள் ஆரவாரிப்ப ஆரவாரிப்ப அசைந்தசைந்து நடக்குந் தளர்ந்த நடையைக் கண்டு மகிழ்ந்திருத்தல் எமக்கு இனிது; அஃது தொழிந்து நுந்தையிடத்து எங்கள்உள்ளமென்றுகூறி வளைநெகிழாநின்றுவருத் தத்திலே தங்கும் மகளிரை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னுது. எ - று.

மற்று, வினைமாற்று. இது(௩)நின் தந்தையாலுற்றவருத்தம் நீங்குதற்கு நின்னைக்கொண்டு பொழுதுபோக்குவேமென்பது போதர நின்றது. மேல் வருவனவும் அன்ன.

க. தொல். தொகை. சூ. கரு. கயந்தலை, பண்புத்தொகையென்பது சிலர் கருத்து.

உ. (அ) "தேரோடு, தளர்நடைப் புதல்வனை யுள்ளி" (ஆ) "சிறுதேருருட் டுந் தளர்நடை" ஐங். சுசு, ௪௦௩. (இ) "குழவி தளர்நடையைக் காண்ட லினிதே" இனியது. கரு. (ஈ) "தளர்நடை தாங்காக் கிளர் பூட் புதல்வரை" மணி. ௩: ௧௪௪.

௩. இந்நூற்பக்கம் ௪௩௪: ௪-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * ஆங்கணிந்திங்கே, † யாணிணி ‡ நின்காலிற், || பெயரவிழுத்து இங்கே ÷ கண்டலினிது, + நெகிழ்ப்பியாம்.

கச ஐய, காமரு நோக்கினை (க)யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னாதே
*யுய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச்சாஅய்மா
ரெவ்வநோ யாங்காணுங் கால்

எ - து: †ஐயனே! விருப்பமருவுகின்ற அழகினையுடையையாய் அத்தா அத்தாவென்று கூறும் (உ)நினது இனிய மொழியைக்கேட்டு மகிழ்ந்திருத்தல் இனிது; அஃதொழிந்து நுந்தை மகளிர் நலஞ் சாய்தற்கு அவர் நலத்தை உண்கையினாலே உய்வின்றிச் சாய்ந்துற்ற எவ்வத்தைத் தரும் நோயை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது. எ - று.

(ந)‡காமர் கடைக்குறைந்து நின்றது. மருவும் ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங்கெட்டு மவ்வீறு சந்தியாற் கெட்டது. அத்தா கடைக்குறைந்து நின்றது. சாய்மார், ||மாரீற்றுமுற்று எதிர்காலமுணர்த்திற்று. அது நலனுண வென்னும் வினையோடு முடிந்தது.

க. "ஓவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்" கலி. அக: கக.

உ. (அ)" யாழொடுங்கொள்ளா பொழுதொடும்புணரா, பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க், கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை" புறம். கஉ: க - ந. (ஆ) "அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே" இனியது. கரு. (இ) "குழலினி தியாழினி தென்பதம் மக்கண், மழலைச்சொற் கேளா தவர்" குறள். சுசு. (ஈ) "எழுத்தி னுறழாது வழுத்து பொருளின்றிக், குறிப்பொடு படாது வெறித்த புன்சொல்லே, யாயினும் பயந்ததஞ் சேயவர் சொலுமொழி, குழலினும் யாழினு மழகிதாம்" திருக்கழுமலமும். உஅ: உ - ரு. (உ) "குழலும் யாழு மினியவெனக் கூறு வண்ண மென்கனிவாய், மழலை மொழிந்து" பிரபு. மாயையின் ருஉ. (ஊ) "குழலினும் யாழினுங் குழைந்த செவ்வியாய், மழலையஞ் சிறுவர்சொன் மருந்தி லின்பமாம்" தீர்த்தகிரி. கந்ததீர்த்த. உஎ.

ந. காம ரென்பதற்கு, விருப்பமென்ற பொருளே (புறம். ககஅ: அ. மது. உஅஉ.) உரைகளிற் காணப்படுகின்றது; (ஆ)"காமர் கண்டிகை" சிலப். சு: அக. என்புழி, 'காமம், காமரென விகாரமாயிற்று' என்று அடியார்க்கு நல்லாரும் எழுதியிருக்கிறார். இவ்வுரையாசிரியரோ பல விடத்து (முருகு. எரு. சிறுபாண். எஎ. மது. சஉஉ.) அதற்கு விருப்ப மருவின என்றும் எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லார் (ஆ) "காமரு குவளை" (சிலப். ச: ச0.) என்புழி, 'காமம்வருமென்பது விகாரத்தாற் காமருவென நின்று கண்டார்க்கு விருப்பம் வருமென்பதாயிற்று' என்று எழுதியிருக்கிறார். இவை ஆராய்தற்பாலன.

(பிரதிபேதம்) * எய்வின்றி, † ஐயெனவிருப்பம், ‡ காம்கடைக்குறைந்து. || மாரீற்று எதிர் காலமுற்றுணர்த்திற்று.

இஃது (க)ஒப்புவழியுவத்தல்; காமருநோக்கு இனிதென்றலின்.

கஅ ஐய, திங்கட் குழவி வருகென யானின்னை
(உ)யம்புலி காட்ட லினிதுமற் றின்னாதே
(ங)நல்காது நுந்தை புறமாறப் பட்டவ
*ரல்குல்வரி யாங்காணுங் கால்

எ - து: ஐயனே! திங்களாகிய குழவீ! நீ இவனுடனே விளையாடும்படி வருவாயாகவென்று கூறி அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ்தல் எமக்கினிது. அஃதொழிந்து நுந்தை அருளாதே தனக்குப் புறஞ்சொல் உண்டாக அருளைக்கைவிடப்பட்ட மகளிருடைய அல்குலிற் பசப்பொழுங்கை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது. எ - று.

(ச)உயர்திணைமருங்கின் ஒழிந்துஞ்சிறுபான்மைவருமென்றலின் † எவ்வ முழப்பார் நலனுணப்பட்டாரென இரண்டாவது விரியாதுநின்றது.

உஉ. ஐயஎங்!, காதிற் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
(ரு)போதில் வறுங்கூந்தற் கொள்வதை நின்னையா
மேதிலார் கண்சாய(சு)நுந்தை வியன்மார்பிற்

க. (அ) "காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின், றேமொழி கேட்ட லினிதுமற் றின்னாதே, என்பது ஒப்புவழி யுவந்தது; என்னை? காமரு நோக்கினை யென்றமையின்" என்ற குறிப்பு தொல். மெய்ப். சூ. உஎ. பேராசிரிய ருரையிற் காணப்படுகின்றது. (ஆ) இ - வி. நூலாரும் இதனையே பின்பற்றுவர். இ-வி. சூ. ருஅ௦. (இ) "தந்தைய ரொப்பர் மக்கள்" (தொல். கற். சூ. சு.) (ஈ) "நின்னோ ரன்ன நின் புதல்வர்" புறம். கசஅ: கச. என்பவையும், (உ) "புதல்வனை...... ......செத்தனள்பேணி" (அகம். கசு: ரு-அ.) என்புழி, 'செத்து, ஒப்புமாம்; ஒப்பு - தலைவனை யொப்பு' என்று எழுதியிருக்கும் உரையும் இங்கே அறிதற்பாலன.

உ. (அ)நாலாயிரதிவ்யப்ரபந்தம் பெரியாழ்வார் திருமொழி. முதற்பத்தில் ரு-ஆம் 'தன்முகத்து' என்னும் தொடக்கத்த பாசுர முதலானவை இங்கே அறிதற்பாலன. (ஆ) "அங்கண் விசும்பி னகனிலாக் காண் பினிதே" இனியது. க௦. (இ) "பிள்ளை களைமருட்டுந் தாயர்போ லம் புலிமே, லொள்ளிய காட்டு" பழ. கஉங.

ங. "நல்காள்கண் மாறி விடின்" கலி. சுக: உச.

ச. தொல். தொகை. மரபு. சூ. கரு. இள. நச். உரைபார்க்க.

ரு. இந்நூற்பக்கம் சசு௦: ச-ஆம் குறிப்புப் பார்க்க. "பூவில் வறுந்தலை" குறுந். கக.

சு. "புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற், பல்காழ்முத் தணி யாரம் பற்றினன் பரிவானுல்" கலி. அக: கக - கஉ.

(பிரதிபேதம்) *அல்குலாயாங், † எவ்வமுழப்பாரை நலனுணப்பட்டாரையென,

ருதுதேர் வண்டின் *கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் †காண்கும்

எ – து: ஐயனே! எம்முடைய காதிற் பொன்னாற்செய்த மகரக்குழையை வாங்கிக்கொண்டுபோய் எம்மிடத்தே மீண்டுவருந்தோறும் எம்முடைய பூ இல்லாத வறுவிய கூந்தலிலே நின்னை யாங்கள் வைத்துக்கொள்வது நுந்தை அகற்சியையுடைய மார்பிற் கோதையை அறுத்து நீ விளையாடுதற்கு; நீ அங்ஙனம் விளையாடினால் ‡ யாமும் எமக்குப் பகையாயவரிடத்து அவன் வைத்த அன்பு தேயக் || காண்போம், எ – று.

இனி, ஏதிலார் இடஞ்சாயக் ÷காண்போமென்றுமாம்.

தாதைத் தேடும் வண்டின் சுற்றம் விழும்படி கட்டின +கோதை.

(இதனால்) தலைவிக்கு இழிவும் தலைவற்குக் கைம்மிகலும் பிறந்தது.

இது தரவு வெண்பாவாய் ஏனைவெண்பாக்கள் ஐயவென்பதனோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவருதலிற் கலிவெண்பாட்டு. "தரவும்போக்கும்" எனப் போக்கினைத் தரவோடு கூறியவதனால், தரவிறுதி போல இது ×காண்கும் எனத்(க)தேமாவாவிற்றது. (கரு)

(அக.) மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறு மழலையின் விளங்குபூ ணனைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை யுருள்கல
னலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
ரு வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி கிண்கிணி யார்ப்போவா வடிதட்பப்
பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வறோ் கையி னியக்கி நடைபயிற்று
வாலமர் செல்வ னணிசால் பெருவிறல்
போல வருமென் னுயிர்;

க. வெள்ளைச்சுரிதகம் ஒரோவழிச் சீரானிறுமென்றுகூறி அதற்கு "ஐய, எம்..........காண்கும்" என்பதை நச்சினார்க்கினியரும் "தாதுதேர் வண்டின்........காண்கும்" என்பதைப் பேராசிரியரும் மேற்கோள் காட்டிச் சிறிதுவேறுபட இக்குறிப்பையுமெழுதியுள்ளார். தொல். செய். சூ. கருச.

(பிரதிபேதம்) * கிளைபட. † காண்கு, ‡ யானும், || காண்பேனெனக் கூறினள் இனி, ÷ காண்பே னென்றுமாம். தாதைத்தேடும், + கோதை தலைவிக்கு இளிவும் × காண்குவெனத்தேமாவால்.

௧௧ பெரும, விருந்தொடு கைதூவா வெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றாப்
பெருந்தகாய் கூறு சில ;

௧௬ எல்லிழாய், சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன்சிதைந்தாங்கே
வாயோடி யேனுதிப் பாடிய மென்றற்றா
நோய்நாந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிற் போகா னரோ ;

௨௨ உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
கள்ளர் படர்தந் ததுபோலத் தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரே யீங்கு ;

௨௫ ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
னாணை கடக்கிற்பார் யார்;

௨௯ அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல் ;

௩௩ இனியெல்லாயாம், தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோற் படர்தக நாம்.

இது தலைவன் பரத்தையிற்பிரிந்து வந்துழித் தலைவி தன் மகனைத் தழீஇ விளையாடுகின்ற விளையாட்டின்கண், தன்வரவு அறியாமைச் சென்று நின்ற தலைவன் அவள் ஊடலுணர்வனவும் உறழ்ந்து சொல்லி மகன்வாயி லாக ஊடறீர்ந்தது.

இதன் பொருள்.

(க)மையற விளங்கிய (உ)மணிமரு (ந)ளவ்வாய்தன்
(ச)மெய்பெறு(ரு)மழலையின் விளங்குபூ ணணைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை *யுருள்கல
னலம்பெறு கமழ்†(சு)சென்னி நகையொடு துயல்வர
ரு வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி (எ)கிண்கிணி யார்ப்போவா வடிதட்பப்

க. மெய்ப்பாடென்னும் செய்யுளுறுப்பிற்கு, "மையற...............என்னுயிர்" என்பது (தொல். செய். சூ. உ0ச. நச். உரையிலும்) "மையற...........பூணணைத்தர" என்பது (தொல். செய். சூ. உ0ச. பே. இ – வி. சூ. ருஎஅ. உரையிலும்) மேற்கோள்.

உ. (அ) "மணிமருளவ்வாய்......புதல்வனை" அகம் கசு: ந-ரு. (ஆ) "மணிமருளவ்வாய்க் கிண்கிணிப்புதல்வர்" புறம். ககஅ: ச – ரு. (இ) "மணிபுரை செவ்வாய்" கலி. எக: அ; அகம். சுசு: கச.

ந. (அ) "மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடைமுக்காழ், பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச், செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை, சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப, வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகி, லொடுத்தமணிக் கோவை யுடுப்பொடு துயல்வரத், தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரைப், பொலந்தேர்மீமிசைப் புகர்முக வேழத், திலங்கு தொடி நல்லார் சிலர்நின் றேற்றி, யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள், காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்" மணி. ந: கநரு – கசரு. (ஆ) "அழகிய வாயி லமுத வூற றெளிவுறு, மழலை முற்றாத விளஞ்சொல்லால்" நாலா: பெரியாழ்வார். (க) ரு: ரு.

ச. "மெய்பெறு வெழுத்துயிர்க்கு மழலை" சீவக. கஅக.

ரு. மழலை – இளஞ்சொல்; (அ) "விளையா மழலையின்" சிலப். அ: சுஎ. (ஆ) "விளையா மழலை விளைந்து" மணி. ச: கக.

சு. "மத்தக நித்திலம்" பரி. கசு: ரு.

எ. (அ) "செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த, தவளைவாய பொலஞ்செய் கிண்கிணி" நற்றிந். கசஅ. (ஆ) "காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு, பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி" (இ) "கிண்கிணி யார்ப்ப வியலுமென், போர்யானை" கலி: அரு: க-உ. அசு: கூ-க0; (ஈ) "கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டு" (உ) "கிண்கிணிப் புதல்வர்" புறம். எஎ: க. ககஅ: ரு) (ஊ) "தாளரிச் சதங்கை யார்ப்பத் தவழ்கின்ற பருவந் தன்னில்" கம்ப. இராவணன்

(பிரதிபேதம்) * உருள்கலநலம், † கண்ணிநகையொடு.

(க)பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
(உ)கால்வரேர் கையி னியக்கி நடை பயிற்று
(ங)வாலமர் செல்வ னணிசால்(ச)பெருவிறல்
போல வருமென் னுயிர்

எ - து: மாசற விளங்கிய (ரு)மணியை ஒக்கின்ற அழகினையுடைய வாய் தன்னுடைய எழுத்துவடிவு பெறாத(சு)மழலைச்சொல்லைக் கூறுதலாற் பிறந்த சீராலே விளங்குகின்ற பூணை நனைத்தலைச்செய்யாநிற்க, நன்மை பெறுகின்ற கமழுந்தலையிற் கிடந்த பொன்னாற்செய்த பிறையுட் சேர்த்த முத்துவடத் தோடே நெற்றியிலே ஞான்ற *புனைந்த வினையினையுடைய உருண்ட சுட்டி விளக்கத்தோடே அசைய, நிறத்தை ஒழியாமல் தன் நடுவே தோற்றுவிக்கும்

சோக. சக. (எ) "கிண்கிணிக்கான் மைந்தர்" கூர்ம. தக்கனைச்சபித்த. அ. (ஏ) கிண்கிணிக்காற் புதல்வன்" காசி. அழுதேசன். எ.

க. "காலத்திற் றோன்றிய கொண்மூப்போ லெம்முலை, பாலொடு வீங்க" கலி. அஉ: உ - ங.

உ. "வைக, லெண்டேர் செய்யுந் தச்சன், றிங்கள் வலித்த காலன் னோனே" (புறம். அஎ: உ - ச) என்பதும் 'தேர்க்காலோடு உவமை விரைவுந்திண்மையுமாகக்கொள்க' என்னும் அதன்பகுதியின் விசேட வுரையும் இங்கே அறிதற்பாலன.

ங. (அ) சிறப்புச்சொல், உயிர்போற் சிறந்தானை உயிரென்றல் என்பர். சேனாவரையர்; தொல். கிளவி. சூ. ருசு. (ஆ) நச்சினார்க்கினியர் இவ் வாறுகூறி, "ஆலமர்.........உயிர்" என்பதை மேற்கோளும் காட்டுவர். (இ) உயர்திணை அஃறிணையாய்ச் சிறப்பின்கண் திணைமயங்கி வந்த தற்கு இதனை மேற்கோள்காட்டுவர். இ-வி. நூலார்; இ-வி. சூ. உகக. (ஈ) "ஆலமர் செல்வன் மகன்" கலி. அங: கஉ என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ச. 'பெருவிறல்' விறற்சொல்லென்பர் சேனாவரையரும், நச்சினார்க்கினிய ரும். தொல். கிளவி. சூ. ருசு. ருஎ.

ரு. மணி - பவளம்; மாணிக்கமுமாம்.

சு. (அ) "பொன்னொடு குயின்ற பன்மணித் தாலித், தன்மார்பு நனைப் பதன் றலையு மிஃதோ, மணித்தகைச் செவ்வாய் மழலையங் கிளவி, புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறு நனைப்ப" தொல். கற். சூ. சு. நச். மேற்கோள்; (ஆ) "செந்துகிர்வா, யூறு நீர்நனை மார்பினோ டிளமகா ருந்தி, யேறு மின்பமுள் ளதனையே யுடம்பென விசைப்பார்" சீகாளத்தி. கண்ணப்பர். கo.

பிரதிபேதம்) * புனைந்த விழையினை.

உடுத்துதல் கழன்ற அழகினையுடைய(க) துகில்(உ)உள்ளிடுமணியாற்பொலிந்த சதங்கையொலிக்கும் ஒலிமாறாத அடியைத் தடுக்க, பாலாலே விம்மின முலையைமறந்து முற்றத்தே உருளையோடுதல்(ந)வல்ல(ச)தேரைக் கையாலே செலுத்தி நடத்தலைக் கற்று ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகனைப்போல வரும் என்னுயிரே! எ - று.

கால்வறேர் வினைத்தொகையாதலின் "மருவின்பாத்திய' வாய் நின்றது. *நனைத்தரத் துயல்வரத் தட்ப மறந்து †இயக்கிப் பயிற்றுப் பெருவிறல்போல வரும் என்னுயிரே! பெருமா! பெருந்தகாய்! யாங் கேட்பச் சில கூறென மேலுறுப்போடுமுடிக்க.

கக (ரு)பெரும, விருந்தொடு கைதூவா வெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி (சா)ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்‡யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றாப்
பெருந்தகாய் கூறு சில

||எ - து: பெருமா! பெருந்தகாய்! நினது (எ)மழலைச்சொல்லைக்கேட்டு அவ்வினிமை மாறாத மனத்திற்கு, அமுதத்தை உண்டாற்போல இன்னும் இனிதாக, விருந்தினர் வருதலாற் கையொழியாத எம்மையும் நினையாயாய்த்

க. துகில், சிறந்த உடைவகையுள்ஒன்று; "பட்டுந் துகிலுமுடுத்து" நாலடி. உசுச. "அரையது துகிலே மார்பினதாரம்" ஆசிரிய. "வண்ணத்துகி லுடுப்பின் வாய் விட்டழுவதுபோல் வருந்துமல்குல்" சீவக. உசுஉரு. இது பலவகைப்படுமென்பர் அடியார்க்கு நல்லார்; சிலப். கச: கoஅ. விசேடவுரை. கலி. சுரு: ச. அரு: ரு.

உ. அரியென்பதற்கு, தவளையென்று பொருள்கொள்ளலுமாம்; "தேரை வாய்க் கிண்கிணி" கலி. அசு: க. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ந. 'கால்வறேர், வினைத்தொகை' என்பதை நோக்க வல்லினவென்றாவது வல்லுமென்றாவது இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

ச. ஆண்பாற் பிள்ளைத்தமிழ்களில் சிறுதேர்ப்பருவமெனப்படும்.

ரு. தலைவியும் காமக்கிழத்தியைப் போலத் தன்மகனைக்கொண்டு விளையாடியவழி, தலைவிமாட்டுக் கூற்றுநிகழ்ந்ததற்கு, "பெரும, விருந் தொடு கைதூவா..............எள்ளுமார் வந்தாரே யீங்கு" என்னும் பகுதிகள் மேற்கோள். தொல். கற்பி. சூ. சு. இளம்.

சு. ஞாயர் - நின்றாயர்; என்றது, ஐவகைத்தாயருள் ஞெவிலித்தாய் நொடி பயிற்றுவாளை.

எ. "அவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே" இனியது. கரு.

(பிரதிபேதம்) * நனைக்கத், †இயக்கிம் இயற்றிப்பெருவிறல், ‡ யான் கேட்பவருந்தோவா நெஞ்சிற் கமிழ்தயின்றற்றாற், || எ - து: நினதுமழலை.

தாய்மார் பெரிய தெருவிலே நின்னைக் *கொண்டாடிக் கற்பிக்கக் கற்பிக்க நீ அவர்பால் திருந்திக்கற்றசொற்களை யாங் கேட்கும்படி அதிலே சிலவற்றைக் †கூறு. எ - று.

இது புதல்வனை நோக்கிக் கூறியது. மேல் தோழியை நோக்கிச் செய்தி கூறுகின்ருள்.

கசு எல்லிழாய்

எ - து: ஒளியுடைத்தாகிய பூணினையுடையாய்! ‡எ - று.

சேய்நின்று || நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே
வாயோடி யேனுதிப் ÷ பாடிய மென்றற்று
நோய்நாந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா ┼ தடுத்தடுத்(க)தத் தத்தாவென் பான்மாண
×வேய்மென்ருேள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிற் போகா னரோ

எ - து: நாம் பழக்கங்கொண்டு போந்த பாணன், நீ இப்பொழுது எவ்விடத்தாயென்று வினவ, பரத்தையர் கூற்றிலே மனந் தங்கி நமக்குச் சேயனாய்நின்று =வாயிற்கூறும் மொழிசிதைந்து ஏனுதிப்பாடியிடத்தேமென்ற தன்மைத்தாக, நாம் நம்முடையநோயைத்தணித்தற்குக்காரணமாகிய மருந்தென்று கருதிப், ∴பாராட்டாநிற்க, மாருமல் அடுத்தடுத்து அத்தா அத்தாவென்று கூறுகின்றவனை அவன் தவறு பாராது நம்முடைய !வேய்போலும் மெல்லிய தோள்களிலே மாட்சிமைப்பட எறட்டுக்கொள்ளுங் கூற்றிலே எறட்டுக்கொண்ட அளவிலும், பின்னையும் இவனுடைய வாயிடத்தினின்றும் போகானுயிராநின்ருன்; இதற்குக் காரணமென்னென்ருள். எ - று.

வாய்சிதைந்தென்க. ஏனுதிப்பாடி-(உ)ஏனுதிப்பட்டங் கட்டினுெருவன் எற்றிய பரத்தையர்சேரி. தான் இல்லறமே பூண்டு புதல்வனைக்கொண்டு

க. "அத்தத்தாவென்னு நின், றேமொழி" கலி. அ0: கச - கரு.

உ. ராஜ பதத்திற்கு அடுத்தபதம் சேனுபதிபதமென்றும் அது மந்திரி பதத்தினும் சிறந்ததென்றும் தெரிகிறது. ஏனுதி யென்னுஞ் சொல், 'பாண்டியன் ஏனுதி நெடுங்கண்ணனுர்' அகம். ௩எ௩. 'ஏனுதி திருக்கிள்ளி', 'மலையமான் சோழியவேனுதி திருக்கண்ணன்', 'சோழிய ஏனுதி திருக்குட்டுவன்' புறம். கசுஎ, கஎச, ௩கூச. என உரை நடையிலும், "சோழிக வேனுதி தன் முக நோக்கி" மணி. உஉ: உ0ரு.எனச் செய்யுணடையிலும் பயின்றுவருகிறது. இதனை ஈறுகுறைந்த சொல்

(பிரதிபேதம்) * கொண்டாடிக்கற்பிக்கநீ, † கூறெனப் புதல்வனை நோக்கிக்கூறினுள் எல்லிழாய். ‡ எனத்தோழியைநோக்கிப் பின்னுஞ்செய்திகூறினுள் சேய். || தாங்கொணர்ந்த, ÷ பாடியோ மென்ருக, ┼ எடுத்தெடுத்து, × வேயமென்ருேளதிறஞ். = வாயாற்கூறுங்கூற்று மொழிந்து, ∴பாராட்டிநிற்க.

விளையாடுதலே * இனிதென்று இருந்தமை தோன்ற நோய்தணித்தற்குப் பிள்ளையை மருந்தென்றாள். "சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி, யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப், புறஞ்செய்து †பெயர்த்தல் வேண்டிடத் தானும்" (க)என்பதனால், தலைவன் இவள் புதல்வனோடு விளையாடுகின்றமனை

லென்றும் நன். பத. சூ. கஉ. சிறப்புப் பெயரென்றும் நன். பொது. சூ. சஉ. கூறுவர் மயிலைநாதர். இவனைத் தளவீரருக்கு மேலதிகாரி என்பர் நீலகேசி யுரையாசிரியர். நீலகேசீ. ங. குண்டல. சஅ. இவனுக்கு அரசன் தன் பேரவையில் தன்கையினாலே நெற்றிக்கு ஏனாதிப்பட்டமும், விரலுக்கு ஏனாதிமோதிரமும் அணிவது மரபு. இதனை, "போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக், கார்க் கடல் பெற்ற கரையன்றோ - போர்க்கெல்லாந், தானாதி யாகிய தார் வேந்தன் மோதிரஞ்சேர், ஏனாதிப் பட்டத் திவன்" என்னும் (தொல். புறத். சூ. அ. மேற்கோள்), செய்யுளும் 'உவகையின் மகிழ்ந்தாண் டுறையுங் காலை, யுயர்பெருந் தொல்சீ ருருமண் ணுவாவிற், கெழுநா ளோறு முழுநகர் புகழப், படிவ முத்தீக் கடிகைக் கணனு,' மைம் பெருங் குழுவு மத்தி கோசமு, மன்பெருஞ் சிறப்பின் மனைப்பெருஞ் சனமுந், தேனேர் தீஞ்சொற் றேவி மார்களுந், தானையுஞ் சூழத் தானே யணிந்துதன், னாம மோதிர நன்னுட்கொண்டு, சேனா பதியிவ னாகெனச் செறித்துப், பன்னூ றாயிரம் பழுதின்று வருவன, மன்னார் வேண்டுவ மற்றவற் கீத்துக், குதிரையுந் தேருங் கொலைமருப் பியானையு, மெதிரிய சிறப்போ டெனைப்பலநல்கி" பெருங். (ச) கூ: க-கச. என்னுஞ் செய்யுட்பகுதியும், "ஆழிதொட்டான்" என்பதற்கு ஏனாதிமோதிரஞ்செறித்த சேனாபதி என்றும்"ஆழ்கடல் வையத்தில்லா வருநிதி யரசு நல்ல, சூழ்மணி யாழி செம்பொற் சூட்டொடு கண்ணி காதற், றோழற்கட் கருளி" என்பதற்கு, 'மன்னவன், காதற்றோழர் கட்கு உலகில் வேறுசிலர்க்கில்லாத பழைய அரசையும் ஏனாதி மோதிரத்தையும் செம்பொனாற் செய்த பட்டத்தையும் கண்ணியை யும் நிதியையும் அருளி' என்றும் எழுதியிருக்கும் உரைகளும். சீவக. உகசுஎ. உருசுகூ. "மன்பட்ட வர்த்தனரு மணிமகுட வர்த்தனரு முறையால்வணங்க வொளிகா, னன்பட்டமுந்தனது கையா லணிந்து படை நாலுக்கு நாயகமெனா, மின்பட்ட வோடைநுத லிபராசன் வன்பிடரின் மிசைவைத் துகந்தன னரோ, வென்பட்ட தப்பொழுது குருசேனை மெய்ப்புளக மெழவொண்கண் முத்த மெழவே." வில்லி. பதினெட்டாம்போர். சு. என்னுஞ் செய்யுளும் வலியுறுத்தும். கந்த. திருவிளையாட்டுப். கஉ0-கஉக - ஆம் செய்யுட்களும் இங்கே அறிதற் பாலன.

க. தொல். கற்பி. சூ. ௫. இப்பகுதியினுரையில் இச்செய்திக்கு இச் செய்யுளை மேற்கோள் காட்டினர் நச்சினார்க்கினியர்.

(பிரதிபேதம்) * மருந்தென்று; பெரிதென்று, † பொய்த்தல்.

யறத்தினைக் காணவேண்டி மறைந்து இவள்பின்னேநிற்ப, எதிராக நின்ற தலைவனைக் கண்டு பிள்ளை அத்தா அத்தாவெனவும், எதிர்நின்ற தோழி முதலியோர் தன்னைக் கண்டு (க) ஆசாரஞ்செய்தாற் றலைவி அறிவளென்று அவர்களை ஆசாரஞ்செய்யாமற் கைகவித்தலிற் றோழி ஆசாரஞ்செய்யா திருத்தலின், தலைவன் அவள் பின்னின்றதை உணராமல் தோழியை வினவினன்.

உஉ உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
*கள்ளர் படர்தந் ததுபோலத் தாமெம்மை
(உ)யெள்ளுமார் வந்தாரே யீங்கு

எ-து: அங்ஙனம் வினவின தலைவி தோழிகுறிப்பானும் புதல்வன் அத்தா அத்தாவென்றதனானும் தலைவன் வந்தவாறு (ங) கண்டு பகைவரைநினைத்து அவரிடத்தே படைக்கலங்களைச் சேர விடுதற்குக் கள்வர் வருதலைச் செய்தல்போல இவ்விடத்தே தாம் எம்மை இகழ்தற்கே வந்தார்; நம்மேல் அன்பாக வந்தாரல்லரெனத் தலைவன் கேட்பத் தோழியைநோக்கிக் கூறினள். எ - று.

தலைவி துனி போக்குதற்கு, தலைவன் இங்ஙனம் வந்தான்.

உரு ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவ(ச)னின்
றுணை கடக்கிற்பார் யார்

எ - து: அதுகேட்ட தலைவன் மதிலையுடைய ஊரிற் காவலாளர் கள்வரைக் கண்ணுற் காணாதிருக்கவும் அவரால் வருங் குற்றத்தைக்கருதி இங்கே கள்வரைக் கண்டேமென்று கூறுவாரைப்போலே முன் நில்லாது ஒருசிறைப்

க. எழுந்து வணங்குதல் முதலிய ஒழுக்க முறை.

உ. மாரீற்று வினைமுற்றுச்சொல் பல்லோர்படக்கையாய்ப் பெயர்கொள்ளாது வினைகொண்டு முடிதற்கு, "எள்ளுமார் வந்தார்" என்பது மேற்கோள்; தொல். வினை. சூ. கo. சேனா. நச்சினார்க்கினியரும் இ - வி. உரையாசிரியரும் இதற்கு இவ்வடியை மேற்கோள் காட்டி, மார் உகரத்தை அடுத்துநின்றது என்பர். தொல். வினை. சூ. கo. இ-வி. சூ. உஙஉ. "சாய்மார்" (கலி. அo: கசு.) என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் இலக்கணக்குறிப்பும் இங்கே அறிதற்பாலது.

ங. காணல் - விளங்க அறிதல்.

ச. தலைவன் தன்றவறு பெரிதாகிய இடத்துத் தலைவிமுன் பணிந்து கூறுங் கூற்றிற்கு, "நின், றுணை கடக்கிற்பார் யார்" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. கக. நச்.

(பிரதிபேதம்) * கள்வர் படைதந்தது.

போய் நின்று யான் செய்யாத குறைகளைக்கூறிச் சினவாதேகொள்; நின் ஆணைவழி ஒழுகுதலன்றி ஈண்டு நின் ஆணையைத் தப்புவார் யாரென்றான். எ - று.

'சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்' என்றது(க)புலவிபொருளாக அச்சம்பிறந்தது. அது "நின்றுநனி பிரிவி னஞ்சிய பையுளும்" என்னும்(உ) விதியான் உணர்க.

உக அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத (ங)வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்*வளி நின்றாய்நீ செல்

எ - து: அதுகேட்ட தலைவி நடுக்கமில்லாத வஞ்சனையாலே வருத்தி என் மகன்மேல் வேட்கைமிகழ†நினையாயாய் வந்து, பூணினையுடைய முதிர்ந்த முலைகளால் நின் மார்பொடு பொருத பரத்தைமுடியினின்றும் உதிர்ந்த துகள் சிந்திக்கிடந்த நின்னுடையது துகளை விளக்கக் காற்றின் எதிரே நின்றாய்; இங்ஙனம் நில்லாதே போவென்றாள். எ - று.

படிறெருக்கி - வஞ்சனையைப்போக்கியென்றுமாம். ஆடையெதிர்ப்பவும் பாடம்.

ஙங இனியெல்லாயாம், (ச)தீதிலே மென்று தெளிப்பவுங் கைந்நீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்

க. புலவிபொருளாக அச்சம் பிறந்ததற்கு, "சேய் நின்று......யார்" என்பதை மேற்கோள் காட்டினர், பேராசிரியரும்; தொல். மெய்ப். சூ. அ.

உ. தொல். கற்பி. சூ. கு. இச்சூத்திரப் பகுதியின் உரையில், "எதப்பா டெண்ணி............கடக்கிற்பார்யார்" என்பதனை மேற்கோள்காட்டி, சேய் நின்று என்றதனால் துனித்து நின்றவாறும் சினவலென்றதனாற் பிரிவுநீட்டித்தவாறும் நின்னாணை கடக்கிற்பார்யா ரென்(றதனால்) அஞ்சியவாறு கூறியவாறுங் காண்க. என்றனர், இவ்வுரைகாரர்.

ங. "ஒரூஉக், கொடியிய னல்லார் குரலுற்றத் துற்ற, முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத், தொடிய வெமக்குநீ யாரை" கலி. அஅ: க-ங.

ச. கற்பிடத்துத் தலைவி ஊடியவழித் தலைவன்தேற்றத் தேறுமெல்லை இகந்த பொழுது தலைவன் ஊடுதற்கு, "தீதிலே மென்று.............. மறுத்தர வில்லாயின்" என்பது மேற்கோள்; தொல். கற்பி. சூ. கஙு. நச்.

(பிரதிபேதம்) * வளியேநின்றாய், † நினையாய்வந்து.

மேதக்க (௧)வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா (௨)விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
*மாபோற் படர்தக நாம்

எ - து: அது கேட்ட தலைவன், எடி! யாம் தீங்குடையேமல்லேமென்று சூளுறவும், அச்சூளுறவைக் கைகடந்து எம்மிடத்துச் சிறிதும் துணித்தநிலைமை மீட்சியில்லையாயின், தன்கன்றைக்கட்டின இடத்தே கெடாதவிருப்பத்தோடே செல்லும் பசுப்போலத் †தாம் இனி நம்பாற் படர்தல் தகும்படி, மேம்பாடுதக்க எந்தை பெயரனை யாம் எடுத்துக்கொள்ளுவேம். ‡எ - று.

(௩)நாமென்றது இடவழு||வமைதி. தாமென்றும் பாடம். "முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ, னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே" (௪) என்பதனால் எல்லா ÷ வென்றாள். புதல்வனை வாங்கவே துனிதீர்ந்தா

---

௧. "அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்" ஐங்குறு. ௪௦௩. என்பதும், கலி. ௭௫: ௨௪-இன் குறிப்பிலுள்ள பாகவதச்செய்யுளும் ஈண்டு அறிதற்பாலன.

௨. (அ) "கன்றமர் கறவை மான,..............வருமே." (ஆ) "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (இ) "கன்றுகாண் கறவையிற் சென்றவட் பொருந்தி" (ஈ) "தனிக்கன் றுள்ளிய புனிற்றாப் போல, விரைவிற் செல்லும் விருப்பின னாகி" (உ) "கன்றுபிரி கற்றாப்போற் கதறுவித்தி" (ஊ) "கன்றுகாண் கறவை யன்னான்" (எ) "கன்று பிரிந்துழிக், கறவையொப்பக் கரைந்து கலங்கினாள்" (ஏ) "தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னானான்" (ஐ) "கனைத்ததன் கன்றை நோக்கிக் கரைந்துசெல் புனிற்றாப் போல,.........எதிரே போந்தான்" என்பவைகளும் (ஒ) "கறவைதம் பதிவயிற், கன்றமர் விருப்பொடு மன்று நிறை புகுதர" (கலி. ௧௧௯: ௯ - ௧௦.) (ஓ) "கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற்குச் சூழுங், கடுஞ்சூலா" கலி. ௧௧௦: ௧௩-௧௪. (ஔ) "கன்றுசேர்ந் தார்கட் கதவிற் றாய் சென்றாங்கு, வன்கண்ண ளாய்" (கலி. ௧௧௬.) என்பவைகளும் அவற்றின் குறிப்புக்களும் இங்கே அறிதற்பாலன.

௩. தலைவன், நாமென்றது தலைவியை ஆகலின் இடவழுவமைதியென்றார். "நங்கையிவ ரெனநெருந லடைந்தவரோ நாமென்ன" (கம்ப. சூர்ப்ப. ௧௧௮) என்பது இங்கே அறிதற்பாலது.

௪. தொல். பொருளி. சூ. ௨௬. இதனுரையில் இவ்வுரைகாரர், "அதிர் வில்..........நீ செல்; இனியெல்லா" என்ற பகுதிகளை மேற்கோள் காட்டி, தலைவன் தலைவியை எல்லாவெனவிளித்துக்கூறலின் வழுவா யமைந்ததென்பர்.

பிரதிபேதம்) * ஆபோல் படர், † நாம் இனி, தான் இனி. ‡ என்று புதல்வனை வாங்கவே, || அமைதி முறைப்பெயர். ÷ என்றாள் சென்றுகை,

ளாயிற்று. மறுத்தர வில்லாயி னெனவே இறந்துபடுவெனென்று * துனி தீர்ந்தாள். "கரணத்தி னமைந்து" என்னும் (௧) சூத்திரத்தில், "சென்றுகை யிகந்து பெயர்த் துள்ளிய † வழியும்" என்பதனுன் உணர்க.

இதனுல், தலைவிக்கு எள்ளலும் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இது "வெளிப்பட" (௨)என்றதனுல், இயற்சீர்நிரையொன்றிப் பாவேறு பட்ட தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிவந்த யாட்டும் வந்த கலிவெண்பா. (௧௬)

(௮௨.) ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு
காலத்திற் றோன்றிய கொண்மூப்போ லெம்முலை
பாலொடு வீங்கத் தவநெடி தாயினை
புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவனொடு
புக்க வழியெல்லாங் கூறு;
கூறுவேன், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்;
காயேம்;
மடக்குறு மாக்களோ டோரை யயரு
மடக்கமில் போழ்தின்கட் டந்தைகா முற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவனு
மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமா னகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்
வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவனு
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினண் முத்தின ளோக்கி நினைந்தே

---

௧. தொல். கற்பியல். சூ. ரு. இச்சூத்திரப் பகுதிக்கு, தலைவன் ஆற்ருனுய்த் துனியைத்தீர்த்தற்கு அவளை அணுகச்சென்று, அவன் மெய்க் கட்கிடந்த தவறுகண்டு தலைவி ஆற்ருளாய் நீக்கிநிறுத்தலானே அவன் ஒருவாற்ருன் அவளாற்ருமையைச் சிறிது மீட்கையினுலே அவள் கூடக்கருதிய விடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்று பொருள் கூறி, "அதிர்வில்..................நாம்" என்ற பகுதிகளை மேற்கோள் காட்டினர்; இவ்வுரைகாரர்.

௨. தொல். செய். சூ. ௧௫௫.

(பிரதிபேதம்) * துனிதீர்ந்தாள் நாமென்றது. † வகையாலுணர்க.

நினக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
வாங்கே, யரிமத ருண்கண் பசப்பநோய் செய்யும்
பெருமான் பரத்தைமை யொவ்வாதி யென்று
ளவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கா னலைக்கொரு
கோறு நினக்கவள் யாராகு மெல்லா
வருந்தியா நோய்கூர நுந்தையை யென்றும்
பருந்தெறிந் தற்றாகக் கொள்ளுங்கொண் டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்காள்
வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவள்வயிற்
றுன்னுதலோம்பித் திறவதின் முன்னினீ
யையமில் லாதவ ரில்லொழிய வெம்போலக்
கையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
லமைந்த தினிநின் றொழில்.

இது புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்விந்துக்கொண்டு வருதற்குச் சேடியருடன் மகற் போக்கிய தலைமகன் அவன் நீட்டித்து வந்தவழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தை யுள்ளிய வழி" (க)யால், தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

இதன் பொருள்.

(௨)ஞாலம் வறந்தீரப் பெய்யக் (௩)குணக்கேர்பு
காலத்திற் றோன்றிய கொண்மூப்போ(௪)லெம்முலை

க. தொல். கற், ௬. ௬.

௨. "நாடுவெறங் கூறினுமிவ் வோடுவெறங் கூறாது" மணி. க௪: க௩.

௩. (அ)"குணகடல் கொண்டு......வான்ஞெமிர்ந்து, சிதறற் பெரும்பெயல் சிறத்தலின்" மது. ௨௩அ – ௨௪௪. (ஆ) "குணகடன் முகந்த கொள்ளை வானம்..............பெருமலை மீமிசை முற்றின வாயின" அகம். ௨எஅ: க – ௬.

௪. "சென்று, யுளைவிலை, யூட்டலென் றீம்பால் பெருகு மளவெல்லா, நீட்டித்த காரணமென்" கலி. அ௩: ௪ – ௬.

(க)பாலொடு வீங்கத் தவநெடி தாயினை
(உ)புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவனொடு
புக்க வழியெல்லாங் கூறு

எ - து: உலகம் வற்கடம் நீங்கும்படி பெய்தற்குக் கிழக்கே எழுந்து கூதிர்க் காலத்தே தோன்றிய மேகம்போல எம்முடைய முலை பாலாலே விம்மும்படி நீபோனகாலம் மிகவும்நீட்டித்ததெனக் கூறும்நிலையிலே யாயினை; ஆதலால், தேவர்கோயில் வலம்வந்து பின்னர் இவனோடே நீ சென்ற இடங் களையெல்லாம் எமக்குச்சொல்லென்றாள். எ - று.

சு கூறுவேன், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்

எ - து: அது கேட்ட தோழி, யான்கூறுவேன்; கூறுகின்றதனை மேவி னாயேபோலக் கேட்டு அதன்பின்னாகக் கோபியாதிருத்தலை யான் நின் னிடத்தே பெற வேண்டுவே னென்றாள். எ - று.

காயேம்

எ - து: அதுகேட்ட தலைவி, யான் நின்னைக் கோபியேன் நீ கூறுகின்ற வற்றையெல்லாங் கூறென்றாள். எ - று.

கூ மடக்(ங)குறு மாக்களோ (ச)டோரை யயரு
(ரு)மடக்கமில் போழ்தின்கட் டந்தைகா முற்ற

க. "பாலோ டலர்ந்த முலை மறந்து" கலி. அக: எ.

உ. (அ) "காந்தியா னரக்கவுங், கைநில்லா வீங்கிச், சுரந்தவென் மென் முலைப் பால்பழு தாகநீ, நல்வாயிற் போத்தந்த பொழுதினா னெல்லா, கடவுட் கடிநகர்தோ று மிவனை, வலங் கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை, யீர மிலாத விவன்றந்தை பெண்டிருள், யாரிற் றவிர்ந்தனை கூறு" கலி. அச: ந - கூ. (ஆ) "குன்றே யனைய கடவுட் குலம்வலங் கொண்டு வ[ந்த, தெ](ரு, கெ)ன்றே விடுதத்திருவினை யேயினி யெங் கையர்பாற், சென்றே வருக மறக்கவின் றேசெம்ம லூரன்செல்வக், கன்றே யுனக்குங் கசந்தன வோவிக் கனதனமே" அம்பிகா. ரு0ரு.

ங. (அ) "ஒண்குறுமாக்கள்" மது. சகூக. (ஆ) "சிறுகுறுமாக்கள்" நற். உஉ0: ச. (இ) "ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின்" (ஈ) "ஊர்க்குறு மாக்க ளாட" (உ) "பல்குறு மாக்கள்" புறம். கூச: க, க0ச: உ, கருகூ: எ. (ஊ) "அடர்க்குறு மாக்களொடு" (எ) "ஊர்க்குறு மாக்களும்" மணி. கங: ச0; கரு: ருகூ.

ச. "கற்றறிந்தார் கண்ட தடக்கம்"

ரு. "பல்வேறு புதல்வர்க் கண்டு நனி யுவப்பினும்" என்னுஞ் சூத்திரப் பகுதியுரையில், "ஞாலம் வறந்தீர வென்னும் மருதக் கலியுள்,

தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளு
மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமா னகைமுகங் காட்டென்பாள் (௧)கண்ணீர்
சொரி(௨)முத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்
வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளு
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து

'அடக்கமில்..........போன்றன' என்பது முதிர்ந்தாள் உண்ணயர்ந்து கூறியது. 'மற்றும், வழிமுறை..........அணிந்தனள்' இதனுள் நோய் தாங்கின ளென இளமைப்பருவத்து மகிழ்ச்சியும் முதிர்ந்த பருவத்து மறவியுந்தோன்றக் கூறாமை'யினானும் வழிமுறைத்தாய் என்றமை யானும் இஃது இடை நிலைப்பருவத்தாள் கூற்று. 'அவட்கினிதாகி ....புக்கான்' என்றவழி, புத்தேளென்றதுவும் தலைநின்றொழுகு மிளையோளைக் கூறியது'' என்று (தொல். கற்பி. சூ. ௧௦.) நச்சினார்க் கினியரும், ''முதலொடு புணர்ந்த'' என்பதனுரையில், "ஞாலம்வறந்தீர வென்னு மருதக்கலியுள், 'அடக்கமில்............புக்கான்' எனவும் 'வழிமுறைத் தாயுழைப் புக்கான்' எனவும் 'புத்தவளில் புக்கான்' எனவும் வருவனவற்றுள், தொடக்கத்துத்தாய், வழிமுறைத்தாய், புத்தவள் இவ்வாறு வகுத்துக் கூறக் கேட்கின்ற காமக்கிழத்தி யென மனைவியர் நால்வருளரன்றே! அவரெல்லாரையும் கூறாது மனைக்கிழத்தியர் இருவரென்றதனாற் பயனின்றேயெனின், அவ ரெல்லாரும் இற்கிழத்தி காமக்கிழத்தியென்ற இரண்டுபகுப்பினுள் அடங்குப என்க'' என்றும். (தொல். களவி. சூ. ௪௬.) ''புல்லுதன் மயக்கும்'' என்பதனுரையில், 'பிறவும்' என்றதனால், தலைமகட்குரித் தாகச் சொல்லப்பட்டவற்றுள் ஒப்பன கொள்ளப்படும் என்று கூறி, ''ஞாலம் வறந்தீரவென்னு மருதக்கலியுள், 'அடக்கமில்............ புக்கான்' எனவும். 'வழிமுறைத் தாயுழைப் புக்கான்' எனவுங் 'தலைக் கொண்டு............புக்கான்' எனவும் கூறுதலிற் புதல்வனை ஈன் றாள் மூன்றுங் காமக்கிழத்தி யாயினவாறும் இவன் மாட்டுத் தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப்பரத்தை யுள்ளிக் கூற்று நிகழ்ந்த வாறும் கண்டுகொள்க'' என்றும் (தொல். கற்பி. சூ. ௧௦.) இளம்பூரணரும் எழுதியிருப்பவை இங்கே ஆராய்தற்பாலன.

௧. ''கலங்காவுள்ளங் கலங்கக் கடைசிவந்து, விலங்கி நிமிர் நெடுங்கண் புலம்புமுத் துறைப்ப'' சிலப். ௪: ௭௦ - ௭௧.

௨. ''முத்து நேர்பு புணர்காழ்'' பரி. ௧௬: ௫.

முயங்கினன் *முகத்தினை னோக்கி நினைந்தே
†நினக்கியாம் யாரே மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
ளாங்கே, யரிமத ருண்(க)கண் பசப்பநோய் செய்யும்
பெருமான் ‡பரத்தைமை யொவ்வாதி யென்று
(உ)ளவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோ
புலத்தகைப் ||புத்தேளில் புக்கா(௩)னலைக்கொரு
கோறு நினக்கவள் யாராகு மெல்லா
வருந்தியா நோய்கூர நுந்தைஎ்ய யென்றும்
(௪)பருந்தெறிந் தற்றாகக் கொள்ளுங்கொண் டாங்கே
(௫)தொடியு முகிரும் படையாக நுந்தை
÷கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்காள்
வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவள்வயிற்
றுன்னுத லோம்பித் ×திறவதின் முன்னிநீ
யையமில் லாதவ ரில்லொழிய வெம்போலக்
கையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
(௬)லமைந்த தினிநின் றொழில்.

க. இந்நூற் பக்கம் உஎ௬: ௪, ௫. ஆம் குறிப்புக்கள் பார்க்க,

உ. தலைவனிலும் தான் புதல்வற்குச் சிறந்தாளாகி அவன் காதலித்த பரத்தையர் மாட்டுச்செல்லாமல் புதல்வனைத் தன்பாற் சிறைசெய்த தற்கு "அவட்கினிதாகி............நின்றொழில்" என்பது மேற்கோள்; தொல். கற்பியல். ௬. ௬. நச்.

௩. "மகனொடு, தானே புகுதந் தோனே யானது, படுத்தனென் னாகுத ளுணி யிடித்திவற், கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென், றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்டு" அகம். ௬௬: கஎ-உக.

௪. "பாறுங்கெனப் புகப்பாய்ந்தவ னெடுவில்லினைப் பறித்தான்" கம்ப. அதிகாயன். க௬அ.

௫. இந்நூற்பக்கம் ௪௩௦: உ-ஆம் குறிப்பும் ௪௩௫: க-ஆம் குறிப்பும் பார்க்க.

௬. "அமைதல்" என்பது தவிர்தலென்னும் பொருளில் வருதற்கு இவ் வடி மேற்கோள். சீவக. ௬௯உ.

(பிரதிபேதம்) * முகத்தினினோக்கி. † நினக்கிவாரேம், ‡பரத்தமை, || புத்தவளிற் புக்கான்.
÷கடியுண்ட ×துறவுதன்முன்னினி.

எ - து: அதுகேட்டசேடி, மடப்பத்தையுடைய சிறிய(க)அறிவில்லாத மகளிரோடே (உ)ஓரைப்பாவையைக் கொண்டு விளையாடும், வேண்டியவாறு ஒழுகும் பொழுதிலே இவன் தந்தை விரும்பின * பரத்தைமை தொடங்குகின்ற காலத்துள்ளாகிய தாயிடத்தேசென்றவனுக்கு அவளும்(ங)இடப இலச்சினையைக் (ச)கைக்காணியாக இட்டு, பெரியோனே! நினதுசிரிப்பினையுடைய முகத்தை யான் முத்தங்கோடற்குக் காட்டென்று கூறுகின்றவளுடைய சொரிகின்ற கண்ணீர்கள் முத்துவடங்கள் முத்தங் கழன்று விழுவனபோலே இருந்தன; பின்னை அவட்குப் பின்னர்வந்த தாயிடத்தே சென்றவனுக்கு அவளும் மனம் மயங்குதற்குக் காரணமான காமநோயைப் பொறுத்துத் தன் மகனெதிர்வந்து தழுவிக்கொண்டு பின்னர் முத்தங்கொண்டு இவனைப்பார்த்து, தலைவன் தன்னைக் கைவிட்ட தன்மையை நினைந்து நினக்கு யாங்கள் தாயாகின்ற முறைமை எம்மிடத்தின் நீங்கினமையின் இனி எம்முறையே மாவேமென்று கூறி இவனுக்கு அழகு மிகும்படி இவன் வடிவு தாங்கும்படியான(ரு)பிள்ளைப்பணிகளை ஆராய்ந்து அணிந்தபொழுதே, மகளிருடைய செவ்

க. (அ) "மாவு மாக்களு மையறி வினவே" "மக்க டாமே யாறறி வுயிரே" தொல். மரபு. சூ. ௩௨, ௩௩. (ஆ) "அவமதிப்பு மான்ற மதிப்புமிரண்டு, மிகைமக்களான்மதிக்கற் பால-நயமுணராக்,கையறியா மாக்களிழிப்பு மெடுத்தேத்தும், வையார் வடித்தநூ லார்" நாலடி. கசுங. என்பவையும்(இ) "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ, ததன்பயமெய்திய வளவை மான" பொருந. ௯க - ௯உ என்புழி, 'மக்களென்னுது மாக்களென்றார்; வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறித்தலின்' என்றும் (ஈ) மூவறு பாடைமாக்களால்" சீவக. ௯௩, என்புழி, 'மிலேச்ச ராதலின், ஐயறிவிற்குரிய மாக்களென்னும் பெயராற் கூறினர்' என்றும், (உ) "கோயின் மாக்கள் மடைதிறந்திட்ட தொத்தார்" சீவக. கஉஎஅ. என்புழி, 'மக்கட்குரிய மனனின்றி அறிவுகெட்டமையின், ஐயறிவுடையாரென்று மாக்களென்றார்' என்றும் இவ்வுரையாளர் எழுதியிருக்கும் விசேடவுரைகளும் (ஊ) 'கையறியா மாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினையுடைய மக்கட்கு' என்னும் நன். வி. சூ. கசுஎ. விசேடவுரையும் இங்கே அறிதற்பாலன.

உ. ஓரை - மகளிர் விளையாட்டு.

ங. "பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ், செறியக் கட்டியீரிடைத் தாழ்ந்த, பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின், மையற விளங்கிய வானேற் றவிர்பூண்." கலி. அு: அ - கக.

ச. தெய்வத்துக்கு நேர்ந்த பொருளென்ற பொருளிற் காணிக்கை யென இக்காலத்து வழங்குமொழி, கைக்காணியின் நிலை மாறுதல் போலும்.

ரு. "என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தார்" திருவிளை. மாமனாக. உரு.

(பிரதிபேதம்) * பரத்தமை தொடங்கு.

வரியினையும் செருக்கினையுமுடைய மையுண்கண்கள் பசக்கும்படி அவர்க்கு நோவைக் கொடுக்கும் நின் தந்தையுடைய *பரத்தைமைக்குணமொன்றையும் ஒவ்வாதே கொள்ளென்றாள்: அங்ஙனங் கூறினவளுக்கு இனிதாயிருக்கும்படி சில மறுமொழிகளைக் கூறிப் போய்ப் பின்னை நம்மோடு ஒப்பாளாகத் தலைமைப்பாடுகொண்டு நம்மைக் காய்ந்திருக்கும் இந்தப் புலக்குந் தகைமையினையுடைய புதியவள் இல்லிலேசென்றானென்றாள்; அதுகேட்ட தலைவி, ஏடா! யான் வருந்தி நோய்மிக உன் தந்தையை எந்நாளுந் தான் குறித்த தொன்றை நினைவறப் பருந்தெடுத்துக் கொண்ட தன்மைத்தாக நினைவறக் கைக்கொண்டுபோம்; கைக்கொண்ட அப்பொழுதே தொடியும் உகிரும் அவைபோல் வனபிறவும் தனக்குப் படைக்கலமாகக் கொண்டு உகிராலே நுந்தையுடைய புதுமையையுடைய †மார்பின் கண்ணும் அணையவற்றாலே ஒழிந்த சிறிய இடங்களிலும் தான் குறித்தபடியிலே வடுக்களையும் அஞ்சாளாய் நிகழ்த்தும்; ஆதலால் நினக்கு அவள் என்ன உறவுடையாள்? இவனை அடித்தற்கு ஒரு கோல் ‡தருவாயாகவென்றாள்; அதற்கு அஞ்சி அவன் அழுதமைகண்டு இனி அழுகையை விடுவாயாகவென்று கூறி, நின் தந்தையுடைய காதற்பரத்தையிடத்து நீ சேர்தலைப் பாதுகாத்து நீ செல்லுதற்குத் ||திறவதாகிய இல்லினும் மனத்தாற் கருதி அவன் நீங்குவனோ நீங்கானோவென்று ஐயப்படாமல் ஒருதலையாக நீங்கானென்று துணிந்த பரத்தையர் இல்லினும் நின் செலவொழிந்தது கிடக்க எம்மைப்போலே கையாற்றையுடையவர் இல்லிற் சேறலன்றி வேறோர் இல்லில் நீ செல்லாதேகொள்; இனி நின்னுடைய புறத்துப் போர்த் தொழில்தான் முடிந்ததெனக் கூறினாள். எ - று.

(க) ÷தொடக்கத்துத்தாயென்றமையான் அவள் முதிர்ந்தமையும்வழிமுறைத் தாயென்றமையான் அவள் இடைநிலைப்பருவத்தாளானமையும் புத்தேளென்றமையான் அவள் இளமைப்பருவத்தாளானமையுங் கூறினாள். நகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்வீழ்ந்தது இப்புதல்வனாலுள்ள பயனை நுகர்ந்து இனிமையுறாது பயனில்லாப் புறத்தொழுக்கம் நிகழ்த்துகின்றமைகருதி.

இது பரத்தையரில்லிற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.

இதனால், தலைவிக்கு இளிவும் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கித் தனிச்சொற்பெற்று வந்த கலிவெண்பா. (௧௭)

(அ௩௮.) பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனைப்
பொருந்துநோன் கதவொற்றிப் புலம்பியா முலமர
விளையவர் தழூஉவாடு மெக்கர்வாய் வியன்றெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்கெனச் சென்றாள்

க. இந்நூற்பக்கம் ௬௮௮: ௫-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * பரத்தமை யொன்றையும். † மார்பின்கண்ணே யணைய, ‡ கோண்டுவாவென்றால். || துறவாகிய ÷ தொடக்கத்துத்.

யுளைவிலை, யூட்டலென் றீம்பால் பெருகு மளவெல்லா
நீட்டித்த காரண மென்;

கேட்டை;

பெருமடற் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைங்குரும்பைக்
குடைவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்
பெருமணித் திண்டேர்க் குறுமக்க ளூப்ப
ணகனகர் மீடருவா னாகப் புரிஞெகிழ்பு
நீல நிரைப்போ துறுகாற் குலைவனபோற்
சாலகத் தொல்கிய கண்ணா னுயர்சீர்த்தி
யாலமர் செல்வ னணிசான் மகன்விழாக்
கால்கோளென் றாக்கிக் கதுமென நோக்கித்
திருந்தடிதூ புரமார்ப்ப வியலி விருப்பினாற்
கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்
கொண்மை யெதிரிய வங்கையுந் தண்ணெனச்
செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
வெம்மொடு சேர்ந்துசென் றீவாயாற் செம்மா
னலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவே மன்னென் றிரங்குபு
வேற்றானாத் தாய ரெதிர்கொள்ள மாற்றாத
கள்வனாற் றங்கிய தல்லாற் கதியாதி
யொள்ளிழா யான்றீ திலேன்;
எள்ளலான், அம்மென் பணைத்தோ ளுமர்வேய்ந்தகண்ணியோ
டெம்மில் வருதியோ வெல்லாநீ தன்மெய்க்க
ணந்தீஞ்சொ னல்லா ரணிந்த கலங்காட்டி
முந்தை யிருந்து மகன்செய்த நோய்த்தலை
வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவொடு
தந்தையும் வந்து நிலை.

இது விளையாட்டிக்கொண்டு வாற்தச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்துவந்தவழி, "தாயர் கண்ணிய * நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தை †யுள்ளிய வகை"(க)சிறைப்புறமாகக் கேட்டு வந்த தலைவனைக் கண்டு அவள் தன்னுள்ளே புலந்தது.

க. தொல். கற்பியல். ௫. ௬.

(பிரதிபேதம்) * நல்விசை. † உள்ளியவழி; உள்ளியுவனே.

இதன் பொருள்.

பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனைப்
பொருந்துநோன் கதவொற்றிப் புலம்பியா முலமர
விளையவர் தழூஉவாடு மெக்கர்வாய் வியன்றெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்கெனச் (க)சென்றா
யுளைவிலை, யூட்டலெ ன் றீம்பால் பெருகு ..ளவெல்லா
நீட்டித்த காரண மென்

எ - து: பெரிய செல்வம் நிலைபெற்ற, மிகுகின்ற சோற்றையுடைய அகன்ற மனையிடத்து இரட்டையாய் வந்து சேரும் பலகைகள் தம்மிற் பொருந்தின கதவைத் தீண்டிநின்று பிள்ளையைக் கைவிட்டுத் தனித்து யாம்வருந்தப் பிள்ளைகள் தம்மிற்கூடி விளையாடும் * இடுமணலை இடத்தேயுடைய அகற்சியையுடைய தெருவிலே பிள்ளையை †விளையாடுவித்துக்கொண்டு வருதற் கென்று போன நீ, இனிய பாலை யான் பிள்ளைக்கு ஊட்டாமல் அப்பால் பெருகச்சுரக்கும் அளவெல்லாம் பிள்ளை பாலுண்ணுதிருத்தற்கு நின்மனத்தில் வருத்தமிலையாய்த் தாழ்த்த காரணம்யாது? அதனைக்கூறு. ‡எ - று.

கேட்டை,

அ பெருமடற் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைந்தரும்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்
பெருமணித் திண்டேர்க் குறுமக்க ளுப்ப
ணகனகர் மீடருவா னகப் புரிஞெகிழ்பு
நீல ||நிரைப்போ தறுகாற் குலைவன போற்
சாலகத் தொல்கிய கண்ண ருயர்சீர்த்தி
(உ)யாலமர் செல்வ னணிசால் மகன்விழாக்

க. "எம்முலை, பாலொடு வீங்கத் தவநெடி தாயினை, புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவணொடு, புக்கவழியெல்லாங் கூறு" கலி. அஉ: உ - கு.

உ. (அ) "ஆலமர் செல்வ னணிசால் பெருவிறல், போல வருமென் னுயிர்" கலி. அக: கூ-கo. (ஆ) "புதல்வரைப், பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத், திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி, யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள், காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்" மணி. ௩: ௧௪௪ - ௧௪௬. எனவும் (இ) "ஆல்கெழு கடவுட் புதல்வ" முருகு. உ௫௬. (ஈ) "ஆலமர் செல்வன் புதல்வன்" சிலப். உ௪. "வேலனார்" எனவும் (உ) "ஆலமர் செல்வற்கு" சிறுபாண். ௯எ. (ஊ) "ஆலமர்கடவுள்" புறம். ௧௯௮: ௯. எனவும் வருதல் காண்க.

(பிரதிபேதம்) * என்மேமணலை. † விளையாட்டு வித்து. ‡ என்றான். || நிலைப்போது.

கால்கோளென் றாக்கிக் கதுமென நோக்கித்
(க)திருந்தடி நூபுரமார்ப்ப வியலி விருப்பினாற
கண்ணா னுதலுங் கவுளுங் கவவியார்க்
கொண்மை யெதிரிய வங்கையுந் தண்ணெனச்
(உ)*செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
வெம்மொடு சேர்ந்துசென் றீவாயாற் செம்மா
(௩)னலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவே மன்னென் றிரங்குபு
வேற்றானாத் தாய ரெதிர்கொள்ள மாற்றாத
கள்வனாற் றங்கிய தல்லாற் கதியாதி
யொள்ளிழா யான்றீ திலேன்

எ – து: அதனைக்கேட்பாய்; பெரிய மடலையுடைத்தாகிய பனையினுடைய குடம்போலத் திரண்ட இடத்தையுடைத்தாகிய சர்ச்சரையையுடைய முகிழையுடைய பசியகுரும்பையைக் கொடியாற் கட்டிப் பின்னின பின்னலை இழுத்து அதனால் இளைக்குஞ் சிறிய பிள்ளைகளுக்குநடுவே பெரிய மணி யழுத்தின திண்ணிய தேரிலேயிருந்து அகன்ற மனையை நோக்கி மீளுதலைச் செய்வானாகாநிற்க, நீலத்தினுடைய முறுக்குநெகிழ்ந்து நிரைத்த பூக்கள் மிக்க காற்றுக்கு அசைவனபோலே சாளரங்களிலே ஒதுங்கிப் பார்த்த கண்ணினையுடையார் பரந்த மிக்க புகழையுடைய ஆலின்கீழ் இருந்த இறைவனுடைய மகனாகிய(ச)பிள்ளையார் திருநாளுக்கு அடிக்கொள்ளுகின்ற நாளென்று கருதி, †வரவிலே முயன்று கடுகிவந்து பார்த்து, இவனாதலாற் றிருந்தின அடியிற் சிலம்பொலிப்ப அணுகி, நின் கண்ணாலும்‡நுதலாலும் கதுப்பாலும் நின்னைத் தழுவிய தாயர்க்கு விளக்கத்தைக்கொடுத்தலை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அழகிய கையினாலும் நின் தந்தைக்குத் ||தண்ணென நீ செய்யுஞ் சிறப்புக்கள் போலே எமக்குஞ் சிறப்புக்கள் செய்து இவ்விராக்காலத்து எம்மோடே தங்கிப்போதலைச் செய்யவேண்டும்; [சிறப்பாலே] தலைவா! எங்கள் நலத்தின்

க. இதனை ஐஞ்சீரடியாக்கலுமாம் உரையின் பிரதிபேதத்தால் 'கவுளும்' என்பதை நீக்கி விருப்பினாலென்பதை அடுத்த அடி ஆக்கலுமாம்.

உ. தலைவன்றமரைக் கண்டவழி உவத்தலாகிற "அவன்றம ருவத்தல்" என்னும் மெய்ப்பாட்டிற்கு 'செய்வன சிறப்பிற்.................தீர்க்குவேமன்' என்பது மேற்கோள்; தொல்; மெய்ப்பாடு. சூ. | உஉ. இளம்.

௩. "மாண மறந்துள்ளா நாணிலிக்கு" கலி. அக: கஉ.

ச. பிள்ளையாரென்றது, முருகவேளை; 'பிள்ளையார் அயனைச்சபித்தலின்' 'சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்' 'பிள்ளையார் வேலைத்

பிரதிபேதம்) * செல்வன. † வாயிலே. ‡ நுதலானு நின்னை, || கண்ணெனநீ.

புதுமையை நுகர்ந்து பின்னர் எம்மை நினையாத நாணில்லாதவன் தந்த தனிமையெல்லாம் மிகவும் போக்குவேமென்று கூறி, இவனிடத்து விருப்பத்தாலே அமையாத வேற்றுத்தாயர் எதிர்கொள்ள, அதனை*மாற்றாத இக்கன்வுஞலே ஆண்டுத் தாழ்க்க நின்றதன்றி, யான் வேறோர் தீதுடையேனல்லேன்; ஒள்ளிழாய்! என்னைக் கோபியாதேகொள்ளென்றாள் சேடி. எ - று.

உ௬ எள்ளலான், அம்மென் பணைத்தோ ளுமர்வேய்ந்த கண்ணியொ
டெம்மில் வருதியோ வெல்லாநீ தன்மெய்க்க
ணந்தீஞ்சொ(க)னல்லா ரணிந்த கலங்காட்டி
முந்தை யிருந்து மகன்செய்த நோய்த்தலை
(உ)வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவொடு
தந்தையும் வந்து நிலை

எ - து: அதுகேட்டுப் †புதல்வனை நோக்கி, எடா! அழகையுடைய மெத்தென்ற ‡மூங்கில்போலுந் தோளினையுடைய நும்முடைய தாய்மார் சூடின கண்ணியோடே எம்முடைய இல்லிலே நீ வருவையோவாராயோவென வெறுத்துக்கூறி, தலைவன்வந்தமைகண்டு, முன்னேயிருந்து மகன் எமக்குச் செய்த நோய்க்குமேலே எம்மைமனத்தால் இகழ்ந்திருத்தலாலே தம் மெய்யிடத்துக் கிடந்த அழகிய இனியசொல்லையுடைய நல்ல மகளிர் அணிந்த கலங்களில் வடுவைக்காட்டி எனை வடுக்களோடே தந்தையும் வந்து நிற்றல், வெந்ததொரு புண்ணிலே வேலால் எறிந்த தன்மைத்தாயிருந்ததென அவனோடு புலந்து கூறினாள். எ - று.

தனக்கு அடையாளமாகக் கொண்டு திரிதலின் வேலனென்றார் 'நகர் - பிள்ளையார் கோயிலென்றுமாம்' பூருது. ௧௬௨, ௧எ௬, ௨௨௨, ௨௩அ; 'பிள்ளையாரால் வந்ததென முற்கூறி' மது. ௬௧௧. என்பவற்றாலும் இவ்வழக்கு அறியலாகும்.

௧. "ஒளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்த" கலி. ௬௬: ௧௧ - ௨௦

௨. (அ) "வெந்தபுண் வேலெறிந்தற்றால்" (ஆ) "வெந்ததோர் புண்ணின் கண் வேல்கொண்டு நுழைப்பான் போல்" கலி. அச:௨௬. ௧௨௦: ௧எ. (இ) "வெந்துயர்க் கண்ணின் வேலிட்டதுபோல்" (ஈ) "தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தென" பெருங். (௧) ௩௩: ௬௫; (௪) ௧௩: ௧௩௦. (உ) "புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும்" பெரிய. சிறுத்தொண்ட. ௫௦. (ஊ) "தீநுழை புண்ணில் வேல் செறித்ததென்ன" கந்த. குமார. ௬௬. (எ) "வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மையான்" கம்ப. இராவணன்சோக. ௪௦. (ஏ) "வெவ்வேலெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப்பியதோர், செவ்வேனுழைப்பவர் சிலரின்றே" தஞ்சை. ௧௧௩. (ஐ) "புண்ணி னூடெரி, யயினுழைந் தாலென வலமந் தேங்கினாள்" நைடதம். நகர்நீங்கு. அ.

(பிரதிபேதம்) * மாறாத, † அப்புதல்வனை, ‡ இணைபோலும் தோளினையுடைய தாய்மார்.

இதனால், தலைவிக்கு இளிவும் தலைவற்குக் கைமிகலும் பிறந்தது.

இது தளைவிரவி ஐஞ்சீரடியும் வந்த வெள்ளைத்தரவும் தனிச்சொல்லும் தளைவிரவின வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கலி வெண்பா. (கஅ)

(அச.) உறுவளி தூக்கு முயர்சினை மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தியா னரக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்தவென் மென்முலைப் பால்பழு தாகநீ
ரு நல்வாயிற் போத்தந்த பொழுதினு னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மிவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
யீர மிலாத விவன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு ;
க0 நீருள், அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானேவ வுள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில்வரையிறந்து போத்தந்து தாயர்
கரு தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானு மிஃதொத்தன் சீத்தை
செறுதக்கான் மன்ற பெரிது;
உ0 சிறுபட்டி, ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு ;
உஉ அவற்றுள், நறுவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுறுவே றெழுதிய மோதிரந் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
யறீஇய செய்த வினை;

*அன்னையோ இஃதொன்று,
௨௬ முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்றா லிஃதொன்று
தந்தை யிறைத்தொடி மற்றிவன் றன்கைக்கட்
டந்தாரியா ரெல்லா அ விது;

௩௰ இஃதொன்று, என்னொத்துக் காண்க பிறரு மிவற்கென்னுந்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
யிதுதொடு கென்றவர் யார்;

௩௩ அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை யிதுதந்த
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்று மெள்ளி யிதுவிவன் கைத்தந்தா
டான்யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்.

இது கடவுட் கடிநகர்தோறும் வலங்கொளீஇ வாற்தச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்து வந்துழி, "தாயர் கண்ணிய †நல்லணிப் புதல்வனை-மாயப் பரத்தை யுள்ளிய‡வழி"(௧)யின்கண், தந்தை தொடி மகன்கைக்கண்டு புலந்தாள் தன்னுள்ளே அழிந்து கூறியது.

இதன் பொருள்.

---

௧. தொல். கற். சூ. ௬. இச்சூத்திரப் பகுதிக்கு, 'தாயரைக்கிட்டிய நல்ல அணியையுடைய புதல்வனை மாயப்பரத்தை குறித்த வழியும் கூற்று நிகழும்; புதல்வனைப பரத்தைமை குறித்தலாவது தலைவன் புறப் பெண்டிர் மாட்டுப்போகிய வழி வெகுளுமாறுபோலப் புதல்வனையும் அவரிடைச் சென்றவழி வெகுளல்; கண்ணிய நல்லணி யெனவே அவர்கொடுத்த நல்லணியென்பது பெறுதும்; பரத்தைமை உள்ளாத வழி இவண்மாட்டுக் குறிப்புநிகழாதாம்; மாய மென்பது பரத்தை மைக்குப் பண்பாகி இனஞ் சுட்டாது வந்தது' என்று கூறி, அதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டினர் இளம்பூரணர்; நச்சினார்க்கினிய ரும் இச்சூத்திரப்பகுதியில், "அவருள் (தாயருள்) துனியாலே வருந்திய பரத்தையர் தம் வருத்தத்தினை உணர்த்தியும், தலைநின்றொழுகும் பரத்தையர் தம் சிறப்புணர்த்தியும் அணிவ ரென்றற்கு, 'கண்ணிய' என்றார்" என விசேடவுரை எழுதி, இச்செய்யுளை இதற்கே மேற் கோள் காட்டியுள்ளார்.

* 'அன்னையோ முந்தையன' என, தொல். கற். சூ. ௬. இள. உரையிலுள்ளது. (பிரதிபேதம்) † நல்லிசைப், ‡ வகையின்கண்.

(க)உறுவளி தூக்கு முயர்சினை (உ)மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தி*யா(ந)னரக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்த (ச) வென் மென் † முலைப் பால்பழு தாகநீ
(ரு) நல்வாயிற் போத்தந்த‡பொழுதினா னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மிவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
யீர மிலாத விவன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு

எ - து: எடீ! நீ நல்||வாயிலினின்றும் போதலைச்செய்த காலத்தின் கண்ணே தெய்வங்களையுடையதாகிய மிகுதிகளையுடைய கோயில்கடோறும் இவனை வலஞ்செய்வித்து வாவென்று யான் கூறச் சென்ற நீ யான் கூறிய கூற்றினைத் தப்பினாய்; இனி மாவினுடைய உயர்ந்த கொம்புகளினின்றமிக்க காற்றால் அசைக்கும் நறிய(ரு)வடுக்கள் காம்பு முறிந்தனபோலே பால் மிகக் குதிக்கையினாலே அதனைமறைத்து ÷யான்அங்கையால் அமுக்கித் தேய்க்கவும் அந்தக் கையினெல்லையில் நில்லாவாய் விம்மிச் சுரந்த என்னுடைய மெல்லிய முலையிற் பால் பிள்ளை உண்ணாமற் பாழேபோம்படி அருளில்லாத இவன் தந்தையுடைய பரத்தையர்களுள் யாருடைய இல்லிலே தங்கினாய்; சொல் லென்றாள். எ - று.

க. உறு என்னு முரிச்சொல் மிகுதியென்னும் பண்புணர்த்தி வருதற்கு இவ்வடி மேற்கோள். நன். உரி. கூ. கரு. மயிலை; விருத்தி. இரா.

உ. "நறுவடிமாவின்" (கலி. சக: கச) என்பதும் அதன் குறிப்பும்பார்க்க.

ந. "அரக்க நில்லா கண்ண நீர்கள்" நாலாயிர. நாச்சியார். ந: ச.

ச. (அ) "எம்முலை, பாலொடுவீங்கத்தவநெடிதாயினை,புத்தேளிர்கோட்டம் வலஞ்செய் திவனொடு, புக்க வழியெல்லாங் கூறு" (ஆ) "சென்றாய், யுளைவிலை, யூட்டலென் றீம்பால் பெருகு ்மளவெல்லா, நீட்டித்த காரணமென்" கலி. அஉ: க - ரு. அங: ச - சு.

ரு. "முனித்தலைக் கண்ணி நெற்றிச் சிறார்முலை முழாவிற் பில்கிப், புனிற்றுப்பால் பிலிற்றித் தேமா வடுவிறுத் தாங்குப் பாய, நுனித்துக் கண் ணரக்கி நோக்கா தொசிந்துநின் றார்க ளன்றே, கனிப் பொறை மலிந்து நின்ற கற்பகப் பூங்கொம் பொத்தார்" சீவக. உருசக.

(பிரதிபேதம்.) *யான்காக்கவும். †முலைபால் பழுதாக. ‡போழ்தினான், ||வாசலிலே நின்றுபோ.
÷ யாங்கையால்.

நீருள், (க)அடைமறை *யாயிதழ்ப்(உ)போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ
இவன்மன்ற யானோவ வுள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரைஇறந்து போத்தந்து தாயர்
தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை †யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை ‡கொள்வானா (ங)இஃதொத்தன் (ச)சீத்தை
||செறுதக்கான் மன்ற பெரிது

எ - து: நீரிடத்தே (ரு) இலையின்கீழே மறைந்துநின்ற அழகிய இதழை யுடைய தாமரைப்பூப்போலே எடுத்த பச்சைக்குடையின் நிழலிலே தோன்று கின்ற நின்பிள்ளையைக்கண்டு தாய்மார் யான் நோம்படி மனத்தைக்கைக் கொண்டு பின்னர் என்னை நினையாத நன்கு மதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் அறுதியாக இவனென்று கருதி அகன்ற மனையினுடைய ÷வாயிலி னெல்லையைக் கைவிட்டுப்புறப்பட்டுத் தெருவிலேவந்து தடுப்ப அவரிடத்தே

க. இந்நூற்பக்கம் உசு: க-ஆம் குறிப்புப் பார்க்க.

உ. (அ)"திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை, யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித், தாதணிதாமரைப் போதுபிடித் தாங்குத், தாமு மவரு மோராங்கு விளங்க" மதுரை. ௬௬௧ - ௬௬௪. (ஆ) "போதவிழ் தாமரை யன்னநின், காதலம்புதல்வன்" ஐங். ௬௨௪. (இ) "வழுவில் பொய்கையுண் மலரென வளர்ந்துமை யாடி" சீவக.உஎ௫௬. (ஈ) "இவர்பெரி தளவி லாற்றலைப், பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்" கம்ப. தாடகை. கஎ. எனவும்(உ) "பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே" ஐங். ௬எ. (ஊ) "பதுமப் போதனாள்" கம்ப. மீட்சி. எ௬. எனவும் (எ)"புள்ளிதழ்த் தாமரைப் போதுறழு மூரனை" ஐந்-எழு. ௫௦. எனவும் வருதல்காண்க.

ங. "இஃதொத்தன்" இந்நூற்பக்கம் ௩அ௬: ங-ஆம் குறிப்புப்பார்க்க.

ச. சீத்தை. கலி. ௬௪: உஉ குறிப்புப்பார்க்க.

(அ) "தாமரை, தேமரு குடையிலை கவிப்பத் தேவியர், பூமரு மடந்தையர் போன்று தோன்றினர்" சூளா. சுயம்வர. க௩௬. (ஆ) "பாசடை கவிகை யாக...............பொய்கை சேய்க்கு வளம்பட

* 'அணிவாழுகிற் றன்றே" கந்த. திருவவதார. ககo.

(பிரதிபேதம்) * ஆயிதட்போது. † ஆய்பாய்ந்து,‡ கொள்வானிஃதொத்தன், || செறுத்தக் கான், ÷வாசலின்,

தங்கினன்; அதனாலே பின்னை அவர்கள் தம்முடைய தம்முடைய அணிகளில் இவன்வடிவிற்கு ஒத்தவையிற்றை * ஆராய்ந்து (க) கைக்காணியென்று அணிந்தாரென்றாள்சேடி; அதுகேட்டதலைவி தனக்குஅயலாயிருக்கின்ற தந்தையுடையபரத்தையர்கொடுத்தவையிற்றை இவனொருவன் †வாங்குவா (உ)னும், இனி இவன் கைவிடப்படுமவன் அறுதியாக மிகவும் நம்மாற்கோபித்தல் தக்கானென நெஞ்சொடுகூறினாள். எ – று.

'அடைமறை..............செம்மல்' என்றது: இலையும்பூவும், குடைக்கும் புதல்வற்கும் உவமையாய் (ந)விரவிநின்றது. இதுசினைக்கு முதல்வந்தது.

உ௬ (ச)சிறுபட்டி

எ-து: காவலின்றி வேண்டியவாறொழுகுவாய். எ - று.

ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு

எ - து: நீ எம்மை இகழ்ந்து இட்ட பரத்தையர் கையின் மோதிரங்கள் யாவை? யாம் அவற்றைக்காண்பேன். எ – று.

யாங் காண்கு, பன்மையொருமை மயக்கம். யானும் ‡பாடம்.

உஉ அவற்றுள், (ரு)நறாவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
(சு)||சுறாவே றெழுதிய (எ)மோதிரந் தொட்டாள்

க. இந்நூற்பக்கம் சகக: ௬-ஆம் குறிப்புப்பார்க்க.

உ. "ஒருவனை மானுட னேதை மாநகர், வருவனும் விறன்மணி மானொ டுஞ்சமர், பொருவனை மவனுயிர் பொன்ற வென்றிடர், தருவனும்" வில்லி. மணிமான். ௮௦: என்பது முதலியவற்றில் ஆமென்பது இவ்வாறே செறற்குறிப்பில் வந்திருத்தல் காண்க.

ந. "அடைமறை.........காணூஉ" என்பது உவமை பலபொருள் விரவி வந்ததற்கும் தொல். உவம. சூ. உ. இளம். முதற்குச் சினையுவமமாய் வந்ததற்கும் மேற்கோள்; தொல். உவம: சூ. சு. இளம்: பேர்; இ – வி. சூ. ௬௪க.

ச. "சிறுபட்டி" கலி. ருக: ச என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ரு. "நறு அவவிழ்ந் தன்னவென் மெல்விரற் போது" கலி. ருச: க.

சு. "அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம்"

எ. (அ) "மணிநாம மோதிரந் தொட்டு" சீவக. க௦௬௦. (ஆ) மாதிரத்தமரேனையோரையும் வல்லை வென்றுதன் முத்திரை, மோதிரச்சுவடேற்றிறைஞ்ச முடித்து" விநாயக. சிந்தாமணிவிநாயகர். ௭௧.

(பிரதிபேதம்) * ஆய்ந்தாய்ந்து, † வாங்குவானுயினிவன், கைவிடப்படும்இவன் அறுதியாக, ‡ யாடம் நறவிதழ், || சுறவேறெழுதிய.

குறியறிந்தேன் காமன் (க)கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
* யறீஇய செய்த வினை

எ - து: அம்மோதிரங்களுள் †நரும்பூவைக் கண்டாற்போன்ற சிவந்த விரலுக்குப் பொருந்தச் சுறவிலேற்றைக் குழித்த மோதிரத்தை இட்டவளுடையகருத்தை அறிந்தேன்; காமன்கொடியாகியமகரத்தை மோதிரத்தே ‡குழித்தாற்போல வேறொன்றிலே அழுத்தி அதனை எந்நாளும் அடங்காத பரத்தைமைக்குணத்தையுடைய இவன் றந்தைமார்பிலே பொறியாக ஒற்றி அடிமைக்கொண்டு ஆண்டுபோதுவேனென்று சொல்கின்ற வார்த்தை தன்னை எனக்கு அறிவித்தற்குச் செய்ததொரு தொழிலெனப் புலந்து அவனொடு கூறினாள். எ - று.

"கடல்வாழ் சுறவு மேறெனப்படுமே"என்றதனாற்(உ)||சுறவேறென்றார். பரத்தைமை பரத்தை யென ÷நின்றது; "தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையும்" (ந)என்றார் ஆசிரியராகலின்.

அன்னையோ

எ - து: நீயும் அத்தன்மையையோ! எ - று.

புதல்வனாகிய நீயும் எம்மை இகழுந்தன்மையையோ × என்றதாம். இது புதல்வனை நோக்கிக்கூறியது.

இஃதொன்று,

எ - து: இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ்சொடு கூறினாள். எ - று.

உகூ +முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்னர்
(ச)வெந்தபுண் வேலெறிந் தற்றா லிஃதொன்று

க. (அ) "வில்லா னிடுகொடி யகலம்" (ஆ) "ஆடுகொடி யணிந்தவுயரலங்கல்வரை மார்பன்" சீவக. உசஎஎ, உசஅங.

உ. தொல். மரபி. சூ. சo. பேர். நஅ. நச். இதனுரையில் சுறவின் ஆண் ஏறெனப்படுதல் மரபென்பதற்கு, "சுறவே றெழுதிய மோதிரந்தொட்டாள்" என்பது மேற்கோள்.

ந. தொல். கள. சூ. உo.

ச. "வெந்தபுண் வேலெறிந் தற்றால்" (கலி. அங: நo) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) *அறிய, †நாம்பூவை. ‡குறித்தாற்போல. ||சுறவேறென்றார், ÷நிற்கும், × என்றதாம் புதல்வனைநோக்கி இஃதொன்று. +முந்தை யனகண் டெழு.

(க)தந்தை யிறைத்*தொடி மற்றிவன் றன்கைக்கட்
டந்தாரியா ரெல்லா அ விது

எ.- து: பின்னை என்முறற்பட்டனவற்றைக்†கண்டும்தலையெடுக்கமாட்டாத என்முன்னே வெந்ததோர் புண்ணிலே வேலாலே எறிந்த ‡தன்மைத்தாக இஃதொன்று இவன்றந்தையுடைய முன்கையிற் றொடியை இவன் கை யிடத்தே || இட்டவர் யார்தான் ? கூறென்றாள். எ - று.

௩௩ இஃதொன்று, என்னைத்துக் காண்க பிறரு மிவற்கென்னுந்
தன்னலம் பாடுவி × தந்தாளா நின்னை
யிதுதொடு ┼கென்றவர் யார்

எ - து: அவன் = கூறுமையின், எடா! இத்தொடி என்னைஒழிந்தவர்களும் இத்தலைவற்கு என்னையொழித்த வனப்பை வழிபடும்படியைக் காண்பார்க ளாக(?)வென்று கூறுந் தன் நலத்தை மிகுத்துப் புகழ்கின்றவளாயிருக்குந் தந்தவள். இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ்சொடு கூறினாள்; கூறி, புதல்வனை நோக்கி நின்னை இத்தொடியை இடுகவென்று சொன்னவர் யார்தானென்று கூறினாள். எ - று.

௩௬ அஞ்சாதி, (உ)நீயுந் தவறிலை நின்கை யிதுதந்த
பூவெழி லுண்க ணவளுந் தவறிலள்
(௩)வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்று மெள்ளி யிதுவிவன் கைத்தந்தா

க. "தந்தை யிறைத்தொடி..............எல்லாவிது" என்பது, 'பல்வேறு புதல்வர்க் கண்டு நனியுவப்பினும்' என்புழி, தாயர்கொடுப்பப்புதல்வன் கொண்டமைக்கு மேற்கோள்; தொல். கற்பி. சூ. க0. நச்.

உ. "நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப், போதர விட்ட நுமருந் தவறிலர், நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்கவென்ற, விறையே தவறுடையான்" (கலி. ௫௬: ௩0-௩௪.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்து வனவும் நோக்குக.

௩. வாளாதே யுவமஞ்செய்து உற்றது உணர்த்தாத வழியும் [illegible] மாறு உண்டென்பதற்கு, "வேனிற் புனலன்ன நுந்தையை நோவார் யார்" என்பது மேற்கோள்; தொல். உவம. சூ. உ0.

(பிரதிபேதம்) * தொடிஇமற்றிஃதிவன், † கண்டுதலை, ‡ தன்மைத்தாக விவன், || இட்டவன் யார் தானெனக் கூறென்றாள், × தந்தாளோநின்னை, ┼ என்றவள்யார். = கூறுமையின் இத்தொடி.

டான்யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்.

எ - து: அவன் அதற்கு அஞ்சினமை கண்டு அஞ்சாதேகொள்; இதனைத் தொட்டுவந்த நீயுந் தவறுடையையல்லை; நின் கையிலே இத்தொடியையிட்ட பூவினது அழகையுடைய மையுண்கண்ணையுடைய பரத்தையுந் தவறுடையளல்லள்;(க)வேனிற்காலத்துப் புதுப்புனல்போல எல்லார்க்கும்பயன்படுகின்ற நுந்தையை ஈண்டு நோவாரில்லை; நமக்கு மேலாய்நின்றுந் தன்னலம்பாடிப் பின்னரும் நம்மை இகழ்ந்து இத்தொடியை இவன் கையில் விட்டவள் யாரோ வென்றுகேட்ட இந்நோயின் கூற்றேனாகிய யானேயன்றோ தவறுடையேனெனத் தன்னுள்ளே அழிந்து கூறினாள். எ - று.

இது, பரத்தை தன் (உ) சிறப்பு உணர்த்தி அணிந்தமைகூறிற்று. 'மேனின்று மெள்ளி' என்றதற்கு, முற்காலந் *தொடங்கி இகழ்ந்தென்றுமாம்.

இதனால், தலைவிக்கு எள்ளல் தோன்றிற்று.

இது தளைவிரவி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (௧௧)

(௮௬.) காலவை, சுடுபொன் வளைஇய ஈரமை சுற்றொடு
பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி;
௫ உடுத்தவை கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேன்
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்
றைஇய பூந்துகி லைதுகழ லொருதிரை;
௬ கையதை, அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி ;
௮ பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்;
௧௨ சூடின, இருங்கடன் முத்தமும் பன்மணி பிறவு மாங்
கொருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்நூ லாக

க. ஆன வேனிலின் மாந்தர்போ லலர்த்தடம் பொழிலுந், தானு மாடுதல் கருதியோ........ ...புனல்பரந் தொழுகியதால்'' திருவானைக். ஆரஞ் சாத்து. ௨௦.

இந்நூற்பக்கம் ௪௧௮: க-ஆம் குறிப்புப்பார்க்க.

ம்) * தடங்கி.

வரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச்
சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை;
கஎ ஆங்க, அவ்வும் பிறவு மணிக்கணி யாகநின்
செல்வுறு திண்டேர்க் கொடிஞ்சினை கைப்பற்றிப்
பைபயத் தூங்குநின் மெல்விரற் சீறடி
நோதலு முண்டீங் கென்கை வந்தீ
செம்மானின் பாலுண் ணிய;
உஉ பொய்போர்த்துப், பாண்டலை யிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த தொழிலாத் திரிதரு
நுந்தைபா லுண்டி சில;
உசு நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாமர்பா லுண்டி சில;
உகூ அன்னையோ, யாமெம் மகனைப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரொடு தம்மை
வருகென்றார் யார்கொலோ வீங்கு;
நஉ என்பாலல், பாராட் டுவந்தோய் குடியுண் டீத்தையென்
பாராட்டைப் பாலோ சில;
நச செருக்குறித் தாரை யுவகைக்கூத் தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகீத்தை
தண்டுவென் ஞாயர்மாட்டைப் பால்.

இது தலைவி தன் மகனைப் பாராட்டிப் பால் கூறிட்டு * ஊட்டுகின்ற வழிச் சிறைப்புறமாகக் கேட்டுப் புக்க தலைவனைக்கண்டு தன்னுள்ளே புலந்து புலவியோடு பின்னும் பாராட்டியது.

இதன் பொருள்.

(க)காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு
பொடியழற் புறந்தந்த (உ)†செய்வுறு கிண்கிணி ணிகு

rமர் காலை"

க. இச்செய்யுளின் க, ௩, சு, அ, கஉ. இவ்வடிகளின்முதலிலும் ரு. எனவும் க, ௩, அ, க0, கஉ. இவ்வடிகளின்முதலிலும் கூன்வந்திரு; நோக்கற் பாலது.

வாடு வாளணி

உ. "செய்வு" இந்நூற்பக்கம் சஎ: க-ஆம் குறிப்புப்பார்க்க. அசு: ௩ - ச.

(பிரதிபேதம்) * ஊட்டுவழி, † செய்யுறு,

எ - து: செம்மால்! நின்(க)காலிற் கிடக்கின்றவை, *சுடும்பொன்னாலே வளைத்த இரண்டாய் அமைந்த †காற்சரியோடே பண்ணுதலைத் தான் உறுகின்ற, (உ)பொடி மூடுதழலாலே நிறம் உண்டாகப்பட்ட ‡ சதங்கை. எ - று.

(௩)சுடுபொன், எக்காலமும் பொன்னென (௪) மூக்காலத்திற்கும் உரிய பொன்னின் இயல்பு கூறிற்று ; சுடுபொன்னென வினைத்தொகையாகாமை உணர்க.

௩ உடுத்தவை,(௫)கைவினைப் பொலிந்த காசமைபொலங்காழ்மேன்
மையில் (௬)செந்துகிர்க் கோவை யவற்றின் மேற்
றைஇய பூந்துகி லைதுகழ ||லொருதிரை

எ - து: (எ)அல்குலிற்கு உடுத்தவை,கைத்தொழிலாலே பொலிவுபெற்ற மணிகள் இடையிடை அமைந்த பொன்மணிகளையுடைய வடம்; அதின் ÷மேலே அழுக்கில்லாத சிவந்த பவளவடம்; அவற்றின்மேலே ×உடுத்தின ஐதாய்க் கழல்கின்ற ஒன்றாகிய திரைத்த பூந்துகில். எ - று.

வடங்கள் தோன்றத் +திரைத்தாரென்றார்.

---

௧. இந்நூற்பக்கம் ௪௭௮: எ - ஆம் குறிப்புப் பார்க்க.

௨. (அ)"நிறம்பெறப், பொடியழற்புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதை" கலி. ௫௪: ௧ - ௨. (ஆ) "ஒள்ளழற்புரிந்த தாமரை" (இ) "அழல்புரிந்த வடர்தாமரை" புறம். ௧௧: ௧௬, ௨௧: ௧.

௩. "சுடுபொன்" ஐங். ௪௩௨; பரி. ௨௧: ௧௮.

௪. தோல்.

௫. பவழக் காசொடு பன்மணி விரைஇத், திகழக் கோத்த செம்பொற் பாண்டில், கைவினைக் கொளுவிற் செய்துநலங் குயின்ற, வெண்ணூற் காழ்கிரை" பெருங். (௨) ௧௧: ௧௪௨ - ௧௪௫.

௬. (அ) "நுண்டுகி னுழைந்த வல்குற் பவளமொத்து" சீவக. ௧௧௮௪. (ஆ) "செந்துகிர்க் கோவை சென்றேந் தல்கு, லந்துகின் மேகலை யசைந் தன வருந்த" (இ) "அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு" சிலப். ௪: ௨௬ - ௩0, ௧௪: ௬௩. (ஈ) "அனபவள மேகலையோ டப்பாலைக் குப்பாலா னென்கின் றளால்" தேவாரம்........(உ)"பவழஞ் சேர்ந்த பல்காழல் குலர்" பெருங். (௧) ௪௩: ௧௪௬.

௧. ஆன்'கொள்வீ ரல்குலோர் கோவணம்'' தே...........(ஆ) "துளிக்கு கருந் கருங்குழற் றோகைமாருயிர், விளிக்குமென் றல்குலை மறைத்த சாத்த, பளிக்குவெள் ளுடையின்மேற் பசும்பொனம்பரங், களிக்கும்

௨. இந்நூன்னவன் கவினச் சுற்றினான்" காஞ்சி. நகரேற்று. ௨00.

(பிரதிபேதம்) * நிபொன் எக்காலமும்...........உணர்க சுடுபொன்னாலே. † காற்கற்றை—, ‡சதங்கைஉடுத்தவை ||ஒருசிறை, ÷ மேலேவழுக்கில்லாத, × உடுத்ஐதாய், + திரைத்தார் கையெழுதை.

௬ கையதை, அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி

ஏ - து: கைபிடத்தது, ஞெண்டின்கண் தன்மைபெற நெருங்கப் பல அருப்புத்தொழில் சூழப்பட்ட சில கோற்றொழில் அவிர்கின்ற இரண்டாய்ச் சேருந் தொடி. எ - று.

(க)கண்ணுள் - தொழில்.

அ பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல (உ)மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய (௩)வானேற் றவிர்பூண்

எ - து: பூணப்பட்டவை, வெட்டாத வாளும் வெட்டாத மழுவும் நெருங்கக் கட்டி இரண்டு புறத்தினுந் தங்கின மழைபெய்த *புலத்து ஈயன்

க. (அ) "கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய, நுண்வினைக் கொல்லர்" சிலப். கசு: க0ரு - க0சு. (ஆ) "கண்ணு ளாளர் கைபுனை இடுகும்" பெருங்.(ரு)க: ௩௦. எனவருதல்காண்க. (இ)கண்ணுளென்பது சித்திர மெழுதுதலும் கூத்தாடுதலுமாகிய கண்ணுள் நிறுத்தும் தொழிற்றிறத் திற்கும் பெயராம்.

உ. (அ) "தண்பெய லெழிலி, யணிமிகு கானத் தகன்புறம் பரந்த, கடுஞ் செம், மூதாய்" நற். ௩௬உ: ௩ - ரு. (ஆ) "தண்பெயல் பொழிந்த பைதுறு காலைக், குருதியுருவி னொண்செம் மூதாய், பெருவழி மருங் கிற் சிறுபல வரிப்ப" அகம். எச: ௩ - ரு. எனவும் (இ) "அரக்கு நிற வுருவி னீயன் மூதாய்" அகம். க௩க: க௩.(ஈ)"ஈயலின் மூதாய் பரப்ப வினமரீஇக், கோவல ரூதுங் குழலிரங்கக்-கோவந், தவழக்கார் செய் தன்று" நாற்கவி. சு. கஎ௦. மேற்கோள். எனவும் (உ) "அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக், காயாஞ் செம்ம ஃறுஅய்ப் பலவுட, னீயன் மூதாய் வரிப்பப் பவளமொடு, மணிமிடைந் தன்ன குன்றம்" (ஊ) "மணிமிடை பவளம் போல வணிமிகக், காயாஞ் செம்ம ஃறுஅய்ப் பலவுட, னீயன் மூதா யீர்ம்புறம் வரிப்பப், புலனணி கொண்ட காரெதிர் காலை" (எ) "பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறைச், செறிமண னிவர்த களர்தோன் றியவிற், குறுமோட்டு மூதாய் குறுகு ரேடி, மணிமண்டு பவழம் போலக் காயா, வணிமிகு செம்ம லொளிப்பன மறையக், கார்கவின் கொண்ட காமர் காலை" அகம். கச: க - சு, ௩௦௪: க௩ - கசு, ௩எச: க௦ - கரு. எனவும் வருவன காண்க.

௩. (அ) "மருப்புப்பூண்" (ஆ) "பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட, நலங்கிள ரொண்பூண்" கலி. ௱உ: கஉ; அகு: ௩ - ௪.

(பிரதிபேதம்) * புலத்தின் மூதாயினது.

மூதாயினது புகரையுடைத்தாகிய நிறத்தையுடைய பவளத்தாற் செய்த அழுக்கறவிளங்கிய இடபத்தையுடைய விளங்குகின்ற பூண். எ - று.

௧௨ சூடின, இருங்கடன் *முத்தமும் பன்மணி †பிறவு மாங்
கொருங்குடன் கோத்த வுருளமை (௧)முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்நூ லாக
வரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச்
(௨)சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை

எ - து: சூடப்பட்டன, கரிய கடலின் முத்தும் அதனுடனே பல மணிகள் பிறவுஞ் சேரக்கோத்த உருட்சி அமைந்த மூன்றுவடம்; அதின்மேலே கிடக்கும் நூலாற் சூழ்ந்த சுரும்புகள் ஆரும் கண்ணிக்குப்‡பொருந்தும்படியாக நடுவே கிடக்க அரும்புகள் அலர்ந்த சில நீலத்தினது ஆய்ந்த இதழ் நாணும்படியாக நீலமணியாற் பண்ணின சுரும்புகளைப் போக்கின கண்டார் மருளும் மாலை. எ - று.

௧௭ ஆங்க, உரையசை.

அவ்வும் பிறவு மணிக்கணி யாகநின்
||செல்வுறு திண்(௩)டேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பையயத் தூங்குநின் மெல்விரற் சீறடி
நோதலு÷முண்டீங் கென்கை வந்தீ
செம்மானின் பாலுண் ணிய

எ - து: யான் கூறியவையும் பிறவும் நின்னழகிற்குமேலே ஓர் அழகாகச் செறியும் நின்னுடைய மெல்லிய விரல்களையுடைய சிறிய அடிகள் இங்ஙனந் திரிந்ததற்கு நோதலுமுண்டு; அதனைத் தவிர்ந்து நின்னுடைய உருட்டுதலுறுகின்ற திண்ணிய தேரில் வளர்ந்த(௪)தாமரைமுகையினைக் கையாலே பிடித்து மெத்தென மெத்தென அசையாநின்று இவ்விடத்து என் கையிடத்தே வருவாய்; நினக்கென்று வைத்த பாலையுண்டற்கு. எ - று.

---

௧. (அ) "முக்காழ் கயந்தலைத்தாழ" கலி. ௮௬: ௨. (ஆ) "மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்" மணி. ௩: ௧௩௫.

௨. (அ) "கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்" நற்றிணை. ௨௪௧. (ஆ) "கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு" மணி. ௫: ௧௩௧.

௩. (அ) "நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி, நின்றோன்" அகம். ௧௧௦: ௨௪-௫. (ஆ) "மணித்தேர்க் கொடிஞ்சி கையாற் பற்றி" மணி. ௪: ௪௮.

௪. (அ) "பண்டரித னுந்தியயன் வந்தபழ முந்தைப், புண்டரிக மொட்டனைய மொட்டினது" கம்ப. தேரேறு. ௪௭. (ஆ) "கோகனக முகையனைய கொழுங்கனகக் கொடிஞ்சியன" இராமா. சந்திர. ௮.

(பிரதிபேதம்) * முத்தும், †பிறவு, மொருங்கு, ‡பொருத்தம்படி. ||செய்வுறு, ÷உண்டிங்கு.

அணியாகத் தூங்கும் நின்னென்க. தேர்க்குத் தாமரை (க)சினையாதலின் அதனைச் சினையென்றார்.

உஉ பொய்போர்த்துப், பாண்டலை யிட்டபலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த ரொழிலாத் திரிதரு
(உ)நுந்தைபா *லுண்டி சில

எ - து: தலைமேல் எறட்டுக்கொண்ட பாண்மையாலே வஞ்சனையை மறைத்து வசீகரித்தற்றொழில் பலவும் வல்ல பாணனைத் தூண்டிலாகப் போகட்டுப் பரத்தையரை அகப்படுத்தித் †தான் விரும்பின பரத்தையருடைய நெஞ்சம்தன்வசமாக்குதல்தனக்குத்தொழிலாகக்கொண்டு திரியும் நுந்தைக்குப் பட்ட சிலகூற்றை உண்பாய். எ - று.

உசு நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பா ‡லுண்டி சில

எ - து: நுந்தை வாயிற் பொய்ச்சூளை மெய்யாகத் தெளிந்து பூவினது அழகையுடைய உண்கண் நீர் பரக்கும்படியாக மயங்குகின்ற நோய் கைகடத்தலாலே அக்கண்கள் துயிலாத நின் தாய்மார்க்குப்பட்ட சில கூற்றை உண் பாய். எ - று.

உகூ அன்னேயோ,

அன்னையோவென்றது, அம்மையோவென ஒரு வியப்பு.

க. 'கொடுஞ்சினைக் கைப்பற்றி' என்று ககரவொற்று மிக்கபாடம் காணப் படின், "கொடுஞ்சினைத்தேரும்" பெருங்.(க)சுக. ருஎ. என்புழிப்போல, 'கொடுஞ்சு' என்பதையே தாமரைமொட்டின் பெயராக்கலுமாம். இப்பொருளில் 'கொடிஞ்சி' என்ற சொல்லே பெருவழக்கிற் றாயினும், அச்சொல் 'கொடுஞ்சி' என்று (புறம். எஎ:ரு, ௩சுஅ: சு, சிலப். கசு: கசுஅ; உகு:க௩உ, உக௩; உஎ: ௩எ; மணி. சு: சுஅ) இவற்றிற் காணப் படுதலால் இடையிகரம் உகரமாய்த்திரிந்துவழங்குதலும், 'கொடிஞ்சு' என்று (சூளா. அரசியல். க0, உஎ௩; கம்ப. குக. ருக, கரன்வதை. கசுக, தேரேறு. சு௩) இவற்றில் வந்திருத்தலால் ஈற்றிகரம் குற்றிய லுகரமாய்த் திரிந்துவழங்குதலும் உண்டென்பதுவிளங்கும். இத்திரிபுக ளோடு பரிதிமுதலியவற்றில் இடையிகரம் உகரமாயும் பஞ்சிமுதலிய வற்றில் ஈற்றிகரம் குற்றியலுகரமாயும் திரிந்து வழங்குதலை ஒப்பு நோக்குக. இச்சொல் தேர்த்தட்டுக்கும் பெயராய் வரும்.

உ. இந்நூற் பக்கம். ௩சுக: உ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * உண்டுசில. † தாம்விரும்பின. ‡உண்டுசில.

(க)யாமெம் மகனைப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரொடு தம்மை
வருகென்றார் யார்கொலோ வீங்கு

எ - து: வாராத தலைவன் வந்ததை கருதி, யாம் எம்முடைய மகனைப் பாராட்டாநிற்கத் தம் பகுதியிலுள்ள பாணன்முதலியோருடனே தாம் கடுக வந்தார்; தம்மை இவ்விடத்து வருகவென்று கூறினார் யார்தானெனத் தன் னெஞ்சொடு கூறினாள்.

மேல், பிள்ளையைநோக்கிக் கூறுகின்றாள்.

௩௨ என்பாலல், பாராட் டுவந்தோய் குடியுண் டீத்தை(உ)யென்!
பாராட்டைப் பாலோ சில

எ - து: என்னுடைய குடியின்பகுதியிடத்தன அல்லவாகிய பாராட்டுக் கேட்டு மகிழ்ந்தவனே! எனக்குப்பட்ட கூற்றை யுண்பாய்; அப்பால்தான் சிறிது காணென்றாள். எ - று.

(௩)செருக்குறித் தாரை யுவகைக்கூத் தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொ டெல்லாம் பருகீத்தை
தண்டுவென் *(௪)ஞாயர்மாட்டைப் பால்

†எ-து: அவன் அதனை உண்ணுமற்போகலிற் கோபிக்கக்கருதின அன்னை, தன் பிள்ளையாட்டால் மனமகிழ்ச்சி செய்தவனை நோக்கிக் கோபிக்கக் கருதினவர்களை உவகையாகிய கூத்தாட்டுவிக்கும் உன்னுடைய தாகத்தாலே

க. ஆறும் வேற்றுமைக்கு உரித்தென்றோதிய முறைப் பொருட்கண், உயர்திணைப் பொருள் இரண்டு சேர்ந்த விடத்து நிலைமொழி யீற்றில் உருபு விரிப்புழி, குகரம் வரும்; அதுவன்றி ஆறும் வேற்றுமையை விரிப்புழி, அதுவென் னுருபுகெட அதன் உடைமைப் பொருள் விரியும்; என்று கூறி, "யாமெம்மகனைப் பாராட்ட" என்பதை மேற் கோள் காட்டி, இது உருபு நிலைக்களத்துப் பொருண் மயங்கிற் றென்றும், இதற்கு நான்க னுருபு விரிப்பின் எமக்கு மகனாகியவனை யென ஆக்கங்கொடுத்துக் கூறல் வேண்டுமென்றும் கூறுவர், நச்சினார்க்கினியர்; தொல். வேற்றுமைமயங்கு. சூ. கக.

உ. "அழுதகண் ணீர்கண் மைந்த ஞவிபோழ்ந் திட்ட வன்றே" என் பதன் விசேடவுரையில் நீர்களென்றதனை, "என் பாராட்டைப்பாலோ சில" என்றாற்போலக் கொள்க வென்பர், நச்; சீவக. உ0அஎ.

௩. முன்பதிப்பில் அடிப்பிரிப்பு வேறாகவுள்ளது.

௪. "ஞாயர்" கலி. அக: கஉ; "ஞாயைய மஞ்சுதி" கலி. க0எ என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

(பிரதிபேதம்) * ஞாயர்பாட்டைப், † எ - து: அதிற்கு அவனை உண்ணுமற்,

இனி யான் பாராட்டும் பெரிய பாட்டுக்களோடு நின் தாய்மாருக்குப்பட்ட கூற்றையுடைய பாலைப்பருகு; இத்தையெல்லாம் நின்னை *ஊட்டல் அமைவே னென்று (க) கூறிட்டு ஊட்டினாள். எ - று.

தண்டுதல் அமைதலென்னும் பொருடருதல், (உ) தண்டாமையென்னும் அதன் மறையால் உணர்க; "தண்டாக்காற் றளரியல்" (ந)"தண்டாவிருப்பி னள்" (ச) எனவரும். †ஞாயரென்றது தன்னைப் பிறர்போற் கூறிற்று.

(இதனால்) தலைவிக்குத்தலைவனைக்கண்டுபுதுமைபற்றிவியப்புத்தோன்றிற்று. தலைவற்கு ‡ நினைத்தல் பிறந்தது. புதல்வனால் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது;(ரு)புதல்வனுஞ் செல்வமாதலின்.

இது "தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்தும்" என (சா) || இடை நிலைப்பாட்டினை ஈற்றின் வைத்தமையால், (எ) தரவும் போக்குமின்றி இடை நிலைப்பாட்டுக்களே ஐஞ்சீரடுக்கிவந்து கலிவெண்பாவிற் கூறிய உறுப்பொத்து யாப்புவேறுபட்டு வந்த கொச்சகம். (உ0)

(அஅ.) மைபடு சென்னி மழகளிற் றோடைபோற்
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்பூ ணனைத்தரு மவ்வாய்
கலந்துகண் ணோக்காரக் காண்பின் றாகிர்மேற்
பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த

க. "பால்பெய் வள்ளஞ் சால்கை பற்றி, யென்பா டுண்டனை யாயி னொருகால், னுந்தை பாடு முண்ணென் றூட்ட" அகம். உகக: ரு - எ.

உ. இவர் இவ்வாறாகப் பொருள், கொள்ளு முறைமையை, "எய்யாமையே யறியாமையே" (தொல். உரி.சூ. சச) என்பதற்கு இவர்கூறியிருக்கும் விசேடவுரையாலும் அறிக.

ந. ச.

ரு. (அ) "தம்பொரு ளென்பதம் மக்கள்" குறள். சுந. எனவும் (ஆ) "பொன்போற் புதல்வனொடு" ஐங். உசுரு. (இ) "பொன்போற் புதல் வர்ப் பெறாஅ தீரும்" புறம். க: ச. எனவும் வருதல் காண்க.

சா. தொல். செய். சூ. கருச.

எ. தரவும் போக்குமின்றிக் கொச்சகம் பலதொடர்ந்து இற்றதற்கு, இச் செய்யுளை மேற்கோள்காட்டி உறழ் பொருட்டுஅன்மையிற் கொச்சகக் கலியாயிற் றென்பர். பேராசிரியர் நச்சினார்க்கினியர், இருவரும்; தொல். செய். சூ. கருரு.

(பிரதிபேதம்) *ஊட்டாமல்விடுவேனென்று, † தாயென்றது தன்னைப்பிறள்போற்கூறினாள்; இது தலைவிக்கு ‡நினைதல் பிறந்தது, || இடைநிலைப்பாடனவை யீற்றின்.

தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப வியலுமென்
போர்யானை வந்தீக வீங்கு ;

கக செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட்டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றேறு ணெகிழ விடல் ;

கஎ பால்கொள லின்றிப் பகல்போன் முறைகோடாக்
கோல்செம்மை யொத்தி பெருமமற் றெவ்வாதி
கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாய விடல் ;

உக வீத லறியா விழுப்பொரு ணச்சியார்க்
கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
மாதர்மென் னோக்கின் மகளிரை நுந்தைபோ
னோய்கூர நோக்காய் விடல் ;

ஆங்க;

உரு திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன் ;

உஅ மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர் ;
ஆயிழாய், தாவாத வெற்குத் தவறுண்டோ காவாதீங்
கீத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைநீவிக்
குன்ற விறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வண்பிலி பெற்ற மகன்.

இது "தந்தைய ரொப்பர் மக்களென் பதனு, லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்" (க) என்பதனுன் மகனைத் தலைவனை ஒக்க

க. தொல். கற்பி. சூ. சு. இச்சூத்திர வுரையில் "வனப்பெலா.......... நெகிழவிடல்"என மகனைக்கொண்டு விளையாடியவழி, அவன் தலைவன் மேல் வீழ்தலில், "தந்தை வியன்மார்பிற்................மகன்" எனத் தன்றிறத்து அன்பிலனெனநெருங்கிக்கூறியவாறுகாண்கவென்பர், நச்.

லாங் துணனும் ஒக்கலாகாக் துணனும் தலைவி கூறுகின்றுழி மறைந்துபுக்க தலைவன் அவள் ஊடலுணர்வன சொல்ல, மகன்வாயிலாக ஊடறீர்வான் தன்னுள்ளே கூறியது.

இதன் பொருள்.

(க)மைபடு சென்னி மழகளிற் றோடைபோற்
கைபுனை (உ)முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்(ங)பூ ணனைத்தரு மவ்வாய்
ரு கலந்துகண் ணொக்காரக் *காண்பின் றுகிர்மேற்
பொலம்புனை (ச)செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
(ரு)கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த

க. (அ) "அஞ்சன மெழுதின..............குஞ்சரம்" (ஆ) "மையணி மத யானை" சீவக. உஉஙO, உசஙச. (இ) "மையணி யிரும்பிடி" (ஈ) "மையணி யானை" (உ) "மையணி வேழமும்" (ஊ) "மையணி யுயர் நுத, விருங்களிற்றியானை" பெருங். (க) சஅ: கஅச, ருரு: கஙச; ருசு: கஙங;(உ) கஉ: ஙஎ; (ங) உஉ: கககக - உOO.(எ)"இழையஞ் சனமால் களிறு" கம்ப. அதிகாயன். உக.

உ. "முக்காழ்" (கலி. அரு: கங) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. "அவ்வாய் தன்,மெய்பெரு மழலையின் விளங்குபூ ணனைத்தர" கலி, அக: க-உ. என்பதும் இந்நூற்பக்கம். சஎக: சு-ஆம் குறிப்பும் பார்க்க.

ச. "செம்பாகம்" குறள். கOகஉ.

ரு. (அ) "நீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து, வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானை" (ஐங். சசச) (ஆ) "எழூஉப்புறந் தரீஇப் பொன்பிணிப் பலகைக், குழூஉநிலைப் புதவிற் கதவுமெய் காணிற், றேம்பாய் கடாத்தொடு காழ்கை நீவி, வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுத, லேந்துகை சுருட்டித் தோட்டி நீவி, மேம்படு வெல்கொடி நுடங்கத், தாங்க லாகா வாங்குநின் களிறே" பதிற். ருங: கரு - உக. என மெய்யாகிய யானையையும் (இ) "கவழ மறியாநின் கைபுனைவேழம்" (கலி. அO: சு) எனப் பொய்ம்மையானையையும். கூறியிருத்தலும் (ஈ) "கொய்யுஞ் சுவற்பரி யுங்குலப் பாகுமுட் கோலு மில்லா, வையங் கடவு மதகளி றேவருந் தாமலெங்கை, செய்யும் பெருந்தவ மேகலந் தாருழைத் தீமையையும், பொய்யுங் கலாதொழி வாய்புன லூரனைப் போலவின்றே" அம்பிகாபதி. ருOச. என்பதும் ஈண்டு அறிதற் பாலன.

(பிரதிபேதம்) * காண்மின் றுகின்மேற்.

தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப வியலுமென்
போர்(க)யானை (உ)வந்தீக வீங்கு

க. (அ) "காதற் சொல் யானையென ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவது; காதல் பற்றிச் சிறுவனை யானையென்றலும் ஆகுபெயராமன் றோவெனின்;—யாதானுமோ ரியைபுபற்றி ஒன்றன்பெய ரொன்றற் காயது ஆகுபெயராம்; இயைபு கருதாது காதன் முதலாயினவற்றான் யானை யென்றவழி ஆகுபெயருளடங்கா வென்பது. ஒன்றன்பெயர் ஒன்றற்காத லொப்புமையான் ஆகுபெய ரென்பாரு முளர்" என்பர் சேனாவரையர் ; (ஆ) நச்சினார்க்கினியர், காதற் சொல் யானை வந்தது என ஒப்பின்றிக் காதல் பற்றி நிற்கும் என்று கூறி, "போர்யானை வந்தீக வீங்கு" என்பதை மேற்கோளும் காட்டுவர்; தொல். கிளவி. கு. ருஎ. (இ) உயர்திணை அஃறிணையாகி ஒப் புமை கருதாது உவப்பின்கண் திணைமயங்கி வந்ததற்கு, "என்போர் யானை வந்தீக வீங்கு" என்பதை மேற்கோள் காட்டுவர், இ - வி. நூலார்; இ-வி. சூ. உகூக. (ஈ) ஒருவனை என் யானை வந்தது என்பது உவப்பினால், திணை மயங்கிற்றென்பர், மயிலைநாதர்; நன். பொது. சூ. உஅ. இவைகளும் (உ) "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" தொல். உவம. சூ. ங. என்னுஞ் சூத்திர வுரையில் "உள்ளுங்காலை என்றதனான் முன்னத்தி னுணருங் கிளவியான் உவமங்கோடலும், இழிந்தபொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செய்ல்வேண்டு மெனவுங்கொள்க. அவை 'என்யானை' 'என்பாவை' என்றவழி அவை போலும் என்னுங் குறிப்புடையான், பொருள் கூறிற்றிலனாயினும், அவன்குறிப்பினான் அவை வினையுவமையெனவும் மெய்யுவமையென வும்படும்; இவற்றுக்கு நிலைக்களம்,காதலும் நலனும் வலியு மென்பது சொல்லுதும்; அவைபற்றாது சொல்லுதல் குற்றமாகலின்" என்று காணப்படும் குறிப்பும் இங்கே அறிதற் பாலன. (ஊ) "மாதர், வருக வென் களிறென்றேத்தி வாங்குப் தழுவிக் கொண்டாள்" சீவக.கஃகக. (எ) "இன்றுணை மகளிரோ டொன்றியான் விடுதருஞ், சொல்லொடு படுத்துச் செல்கவென் களிறென" பெருங். (க) ருஙசு: ஙசசு - எ. (ஏ) "அன்னை, பொருகளிறு வருகவளர் போரேறு வருகவெழிற் பூவை வண்ண, வருகவெனத் துகிரில்விளை மணிமுத்தங் கொண்டன ளுண் மகிழ்வு பூத்தாள்"பாக. கo: சகடமுதைத்த. உக, எனவருதலும் காண்க.

(அ)வந்தீக வென்பதனோடு "வினைகலந்து வென்றீக" குறள். கஉசுஅ. (ஆ) "யார்மேற்றாக் கொள்ளினுங் கொண்டீக" (இ) "என்செய்தே யாயினு முய்ந்தீக" பழ. உஙக; ஙஅசு. என்பவை ஒப்புநோக்கற் பாலன.

எ - து: பட்டத்தையுடைய இளையகளிற்றினது கருமை*யுண்டாகின்ற தலையில் நாலுகின்ற மூன்று வடம்போலே கையாற் புனைந்த மூன்று வடம் மென்மையையுடைய தலையிடத்தே தாழ, (க)பொன்னாற் செய்த மழுவோடே வாளம் அணிதலைக்கொண்ட நன்றே விளங்குகின்ற ஒள்ளிய பூணை நனைத் தலைச் செய்யும் அழகிய வாயைக் கண் கலந்த நினை வேட்கைநுகரக் †காட்சி யினிய பவளப் பலகைமேலே(உ)செம்பாதி வடிவு வேறோர் யானையை இறக் குத்துகின்ற போர்த்தொழிலைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும்படியாகப் பொன்னாற் செய்த, காவலையுடைய அரணங்களைக் குத்தாத கையாற் புனைந்த நின் வேழத்தோடே, நின்னடியில் நிறைந்த (ந) தேரையின் வாய்போலும் வாயையுடைய சதங்கை ஆரவாரிப்ப,(ச)தொடியினையுடைய மகளிர் இழைத்த வண்டலின் கண்ணே உழக்கி நடக்கும் என்னுடைய போர்த்தொழிலையுடைய யானை! இவ்விடத்தே வருக. எ - று.

‡ பொலம்புனைவேழமென்க. உழக்கியியலுமென்க.

கக செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி

க. இங்கே கூறிய பிள்ளைப்பணி, திருமாலின் ஐம்படைகளின் வடிவ மான தாலியேயன்றி இறைவன் படை வடிவமான தாலிபோலும். "பூண்டவை, எறியாவாளு மெற்று மழுவுஞ், செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த, பெய்புல மூதாய்ப் புகர் நிறத் துகிரின், மையற விளங்கிய வானேற் றவிர்பூண்" கலி. அடி:' அ - கக. என முன் வந்திருத்தலும் காண்க.

உ. "சம்பாதி யருச்சிப்பத் தம்பிசடா யுவும்பரவச், செம்பாதி யவள் வணங்கத் திருப்பாத மளித்தனையே" புள்ளிருக்குவேளூர்க்கலம். க.

ந. இது மெய்யுவமம்; வாயென்றது வாயிலொலியைக் குறிப்பதாகக் கொள்ளின் வினையுவமமாம். (அ) "தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடி" (ஆ) "தவளைக் கிண்கிணித் தாமம்" சீவக. உசந, நகஉசு. (இ)"அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி"........(ஈ) "அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப" (உ) "தவளைக் கிண்கிணி ததும்புசீ றடியர்" (ஊ)"தவளையங் கிண்கிணிச் சேவடி" பெருங். (க)சஂ: கஅ,சசு: உசசு. (ந) கூ: கசுஎ - அ. (எ) "தவளையங் கிண்கிணித் தாளும்" கூர்ம. கல் யாண. உஅ. (ஏ) "தவளைவாய்ச் சதங்கை" காசி. பஞ்சநதத். ந. (ஐ) "தவளைவாய்ச் செம்பொற் கிண்கிணி" சீகாளத்தி. நான்முக. உசு. என்பவைகளும் இந்நூற்பக்கம் சஎஅ: எ - ஆம் குறிப்பும் இங்கே அறிதற் பாலன.

ச. இந்நூற்பக்கம் கருஅ: உ - ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) *உண்டாகின்ற ஒள்ளியபூணை, †காணும் இனியபவளப் ‡புலம்புனை,

கன்றிய தெவ்வர்க் கடந்து (க)களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெருமமற் றொவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழ விடல்

எ - து: தலைவா! பெருமா! *நுந்தையை அழகெல்லாம் ஒத்திருப்பினும் நுந்தை நிற்கின்ற நிலைகளின் கூற்றில் உனக்கொத்த குறிக்கப்படுங் குணங்களை யான் கூறக்கேட்டு ஒப்பாய்; அவற்றுள் மாறுபாட்டிற்பட்ட பகைவரை வென்று களத்தைக்கொள்ளும் வெற்றிக்குணத்திடத்து அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிலே யாம் இவனோடு ஒருமனமாயினேமென்று உணர்ந்திருந்த மகளிரை நுந்தை மென்றோள் மெலிய விடுமாறுபோல நீயும் அவர் மெல்லியதோள் மெலியும்படி விடுதலாகிய†பரத்தைமையை ஒவ்வாதேகொள். எ - று.

௧௭ (உ)பால்கொள லின்றிப் பகல்போன் ‡முறைக்கொல்காக்
கோல்செம்மை யொத்தி பெருமமற் றொவ்வாதி

---

௧. (அ) "களங்கொள் யானைக் கடுமான் பொறைய" (ஆ) 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர், தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே, யுரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே, பன்னூ றடுக்கிய வேறு படு பைஞ்ஞில, மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக், களங் கொளற் 'குரியோ ரின்றித் தெறுவர, வுடன்வீழ்ந் தன்றா லமரே" புறம். ௫௩: ௫; ௬௨: ௭ - ௧௩. (இ)'அமர்க்கள மரசன தாகத் துறந்து, தவப் பெருங் கோலங் கொண்டோர்' சிலப். ௨௮: ௧௦௪ - ௫. (ஈ) "வென்று களங் கொள்ளுமேல் வேந்து" பெரும்பொருள். (தொல். புறத். சூ. ௫. நச். மேற். (உ) "இருங்களி யானை யினமிரிந் தோடக், கருங்கழலான் கொண்டான் களம்" (ஊ) "வென்று களங் கொண்ட வேல்வேந்தே" பு - வெ. வாகை. ௨௬. பாடாண். ௩௭. (எ) "களங் கோடற் குரியசெருக் கண்ணி யக்கால்" கம்ப. சூர்ப்பணகை. ௧௩௩. (ஏ) "வென்று வெங்களங்கொண்டு" (ஐ) "இக னெடுங்களம் வென்று கொள்குவம்" (ஒ) "பொரு களங் கொண்டு வாகை புனைந்து" வில்லி. காண்டவதகன. ௫௩. பதின்மூன்றாம். ௨௧. பதினைந்தாம். ௧௨. என்பவைகளும் (ஓ)"தேன்மிடைந்த தாரினான் செங்களஞ் சிறந்ததே" (சீவக. ௨௭௧) என்புழி, 'இத்துணையும் இவன் வெற்றியாதலின், இவன் களமென்றார்' என்னும் விசேடவுரையும் ஈண்டு அறிதற்பாலன.

௨. "பால்கொள..........ஒவ்வாதி" என்னும் இரண்டடிகளை 'ஒப்பு வழி யுவத்தற்கு உதாரணமாகச் சொல்லுப' என்பர் பேராசிரியர்; தொல். மெய்ப். சூ. ௨௨.

(பிரதிபேதம்) * நுந்தை அழகெல்லாம், † பரத்தலும். ‡முறைகோடாக்,

கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாய விடல்

எ-து: பெருமா!(க)நுகத்துப் பகலாணிபோல் ஒருபக்கத்தைக் கொள்ளுத லின்றி (உ)முறைமைசெய்தற்குச் சாயாத கோல் செவ்விதாக நிகழ்த்துதலில் அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களில், தன்னுடைய அமைதிக்குணத்தாலே இவன் நம்மைத் தப்பானென்று ஆராய்ந்த மகளிரைக் காற்றுப் பொருகின்ற பூப்போலே அழகுகெடும்படி நுந்தை சாயவிடுமாறுபோலச் சாயவிடுதலாகிய *பரத்தைமையை ஒவ்வாதேகொள். எ - று.

உக (ங)வீத லறியா விழுப்பொரு (ச)ணச்சியார்க்
(ரு)கீதன்மாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
(சு)மாதர்மென் னோக்கின் மகளிரை நுந்தைபோ
னோய்கூர நோக்காய் விடல்

எ-து: பெருமா! தன்னையுடையார் கெடுதலன்றித் (எ) தானே கெடுத லறியாத சீரிய பொருளை நச்சினவர்களுக்குக் கொடுத்தலிடத்து அவனை

க. (அ) "நெடுநுகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர்" பட். உ௦சு - உ௦எ; (ஆ) "நுகத்துப் பகலாணி போன்று" பழ. கரு. (இ) "நுகத்திற் பகலனையாய்" தஞ்சை. சஅ.

உ. "ஓர்வுற் றொருதிற மொல்காத நேர்கோ, லறம்புரி நெஞ்சத் தவன்" கலி. சஉ: கச - ரு.

ங. "வீதலறியா............விடல்" என்பது தந்தையரொப்பர் மக்களென்ப தனால் மகப்பழித்து நெருங்கும் தலைவிகூற்றுக்குமேற்கோள்; தொல். கற்பி. சூ. சு. இளம்.

ச. "நச்சியார்க் கீதலும்" கார். எ.

ரு. "ஈதன்மாட் டொத்தி,பெரும" என்பது இகரவீறு தகரத்தை யூர்ந்து எதிர்காலம்பற்றிவருமென்பதற்கும் (தொல். வினையியல். சூ. உசு. நச்; இ - வி. சூ. உஙஅ) தகரம் சிறுபான்மை எதிர்காலம் காட்டி வருமென்பதற்கும். (இ - வி. சூ. சக) மேற்கோள். ககர தகரங்களை யூர்ந்துவரும் இகரம் ஏவல்கண்ணியே நிற்குமென்பர்; நச்.

சு. (அ) "மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய்" (ஆ) "மாதர்கொண் மானோக்கின் மடந்தை" கலி. ருசு: கஎ; சுக: கூ.

எ. (அ) "வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தூயங், கள்ளரென் றிவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும்" செல்வப்பொருளை, வீதலறியா விழுப்பொரு ளென்றதற்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரை பாராட்டத் தக்கது. (ஆ) "கேடில் விழுப்பொரு டருமார்" குறுந். உகசு.

(பிரதிபேதம்) * பரத்தமை.

ஒப்பாய்; மற்றைக் குணங்களில், காதலையுடைய மெல்லிய நோக்கினையுடைய மகளிரை நுந்தை நோய் கூரா நிற்க நோக்காது விடுமாறுபோல நீயும் அவர்களை நோய்மிகாநிற்கப் பாராது விடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதே கொள். எ - று.

(க) *ஆங்க, அசை.

என்பது ஒப்புநோக்கற்பாலது. (இ) இலக்கணக் கொத்து நூலாரால் அந்நூலின் அ-ஆம் சூத்திரத்து 'அரும்பொருள்' என்பதன் விசேடவுரையில், "பொருளென்னும் பெயர் பொதுவாயினும், கல்விப் பொருளினை மாத்திரம் அங்ஙனங் கூறுது, நற்பொருள், பெரும் பொருள், அரும்பொருள், குறையாப்பொருள், துணைப்பொருள், நீங்காப்பொருள், கேடில்பொருள், விளக்கும்பொருள், விழுமிய பொருண் முதலாக யாதானு மோரடை கொடுத்தே கூறுவர்; 'கேடில் விழுச் செல்வங் கல்வி' எனச் சிறுபான்மை பலவடையும் கொடுத்துக்கூறுவர். அக்கருத்துப் பண்டை நூல்களெல்லா வற்றினுள்ளுங்காண்க. அந்நியமம் மறந்துந்தப் பார்களென்பது தோன்ற அரும்பொருள் பெறுகவென்றும். கலித்தொகையின் ஓர் காரண நோக்கி நிதிப் பொருளைக் கேடில் விழுச் செல்வமென்றார். இவ்வடை கல்விக் குரித்தன்றிப் பிறவற்றிற்கு முரித்தோ வென்பாரை நோக்கி, வழுவமைத்தார் நச்சினார்க்கினியர்" என்று எழுதப்பெற்றிருப்பது இங்கே ஆராய்தற்பாலது.

க. "ஆங்கத் திறனல்ல..........பெற்ற மகன்" என்பதை ஆங்கென்பது அசைநிலையாய் வருதற்கு (நன். இடை. சூ.௧அ) மேற்கோள்காட்டினர், மயிலைநாதர்; ஆங்கு என்னு மசைநிலை 'ஆங்க' என இறுதி விகாரமாய் நின்றதென்று பொருத்தினர் விருத்தியுரைகாரர். "அந்திலாஅங் கசைநிலைக் கிளவியென், றாயிரண் டாகு மியற்கைத் தென்ப' என அந்தில் என்பது ஆங்கு என்னும் இடப்பொருளும் அசை நிலையுமாமென்றதை இவர் அந்திலும் ஆங்கும் இடப்பொருளும் அசை நிலையுமாமெனச் சூத்திரஞ்செய்தார். அது ஆசிரியர் கருத்தன்றென்பதை அவர் சூத்திரத்தாலும் ஆங்கு என்பது இடச்சுட்டுப் பெயர்ச் சொல்லாதலாலும் (அறிக) ஆங்கு அசைநிலை யெனக் கூறி ஆங்க என உதாரணங் காட்டிய[தினுலு](தும்) பொருந்தா தென்க. இனி ஆங்க என்னும்அகரவீற்றிடைச்சொல் அசைநிலையெனக்கொளின் அமையும். என்னெனின் 'ஆங்கவுரையசை' எனக் கூறியதினுலும் 'ஆங்கக்குயிலு மயிலுங்காட்டி' எனவும். 'ஆங்கத் திறனல்ல யாங் கழற' எனவும், பயின்று வருதலாலு மென்க" என்று மறுத்துரைப்பர் இராமாநுச கவிராயர்; இலக்கண விளக்க நூலாரும் இக்கருத்துடையரென்பது இ - வி. உஎ௩ - ஆம் சூத்திரத்தால் விளங்கும்.

(பிரதிபேதம்) * ஆங்கசை.

உஎ (க)திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
(உ) மகனல்லான் பெற்ற மகன்

எ - து: பின்வந்துநின்ற தலைவனைக்கண்டு நக்க புதல்வனைநோக்கி, இந்த நன்குமதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் நற்குணங்களல்லாதவற்றை *நீ ஒவ்வாதே கொள்ளென்று யாம் கோபிக்க யாரைநோக்கி நகும். எ - று.

† என்று கருதிப் பார்த்துப் பின்னின்ற தலைவனைக் கண்டாள்.

உஅ மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர்

எ - து: கண்டு, வாராத தாம் பின்னே மறையநின்று பின்னர் நாம் தெளியும்படி முன்னே வந்தா ‡ரென்றாள். எ - று.

உகூ ||ஆயிழாய், தாவாத வெற்குத் தவறுண்டோ காவாதீங்
கீத்தை யிவனையாங் கோடற்குச் (ங)சீத்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைநீவிக்
குன்ற (ச)விறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா ÷னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்.

எ - து: அதுகேட்ட தலைவன், இங்ஙனங் கொடுமைகூறுகின்றாயாயின் அழகிய இழையினையுடையாய்! நின்னிடத்துச் செய்வதோர் வருத்தம் இல்லாத எனக்கும் ஒரு தப்புண்டோ? இவனை யாம் எடுத்துக்கொள்ளுதற்கு நின்னிடத்தே காத்துக்கொள்ளாதே என்னிடத்தே தருவாயென்றான்; அதுகேட்ட புதல்வன் அவன்மேலே வீழ்ந்தவனைத் தலைவி நோக்கிக் கைவிடப்பட்டவனாகிய அன்பிலி பெற்ற பிள்ளை யாம் அவன்மேலே வீழ்தலை மனங்கன்றி விலக்கவும் ×நம்மைக் கைகடந்து மலையிடத்து உறுகின்ற அடி

க. "திறனல்ல..............மகனல்லான் பெற்ற மகன்" என்பது தன் இளமை பொருளாகப்பிறந்த நகைக்கும், (தொல்.மெய்ப்.சூ. ச.பேர்.) பிரிவின்பாற் படுவதாகிய ஊடலிற் பிறந்த துனிக்கும் (தொல். செய். சூ. கஅஎ.பேர்; நச்) மேற்கோள்.

உ. "மகனல்லான் பெற்ற மகன்" கலி. அச: கங.

ங. "சீத்தை" கலி. கூச: உஉ.

ச. "இறுவரை யிவர்வதோ ரிலங்கெயிற் றரியென" சீவக. கஅநங. இறுவரை - பெரியமலை. சீவக. கசகூங, கஅநங, உருஉஉ; பக்கமலை. கலி. சங: கங.

(பிரதிபேதம் * நீ கொள்ளாதேகொள்ளென்று, † எனக்கருதிப் பின்னின்றதனை, ‡ என்றாள் ஆயிழாய். || ஆயிழையிழாய், ÷ அறனிலா, × நம்மைக்கடந்து.

வரையிலே சிங்கம் பாய்ந்தாற்போல அறனில்லாத தந்தையுடைய அகன்ற மார்பிலே * பாய்ந்தானென்றாள். எ - று.

இது மகப்பழித்துநெருங்கியது. அன்பிலி பெற்ற மகனென (க)அவன் வயிற் † பிரித்தவாறுங் காண்க. அறனில்லாவென்றது, ஆங்கு நெஞ்சழிதல்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஆங்கவெனத் தனிச்சொற்பெற்று ஐஞ்சீரடுக்கி வந்த கலிவெண்பா. (உக)

அஎ.) ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை;

௩ தெரியிழாய், செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர் மாட்டு;

௫ ஏடா, நினக்குத் தவறுண்டோ நீவீடு பெற்ற
யிமைப்பி னிதழ்மறை பாங்கே கெடுதி
நிலைப்பா லறியினு நின்னொந்து நின்னைப்
புலப்பா ருடையர் தவறு;

௯ அணைத்தோளாய், தீயாரைப்போலத் திறனின் றுடற்றுதி
காயுந் தவறிலேன் யான்;

௧௧ மானோக்கி நீயழ நீத்தவ னாது
நாணில னாயி னலிதந் தவன்வயி
னூடுத லென்னோ வினி;

௧௪ இனியாது மீக்கூற்றம் யாமில மென்னுந்
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பணியானைப்
பாடில்கண் பாயல் கொள.

இது பரத்தையர்சேரிச் சென்றமை அறிந்திலளெனத் தலைவிமாட்டுச் சென்றவனோடு அவள் ஊடி உறழ்ந்துகூறித் தோழி வாயிலாக ஊடறீர்வான் தன் னெஞ்சோடு கூறியது.

இதன் பொருள்.

க. தலைவி தன்னொடு மைந்தனிடை உறவுநீக்கி, அவனைத் தலைவனொடு சார்த்திக் கூறுதலாகிற அவன்வயிற் பிரிப்பு என்பதற்கு "மறைநின்று ....மகன்" என்னும் பகுதியை மேற்கோள்காட்டி, "அறனில்லா வன்பிலி பெற்ற மகனெனப் பிரித்தவாறு காண்க" என்பர் நச்சினார்க்கினியர்; தொல். கற்பி. ரு. ரு.

(பிரதிபேதம்) * பாய்ந்தானெனமகப்பழித்துநெருங்கியவாறும் அன்பிலி. † பிரிந்தவாறுங்.

(௧) ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்*யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை

எ - து: † யாம் நின்னைக் காணுமிடத்து வெருவுவேம்; ஆதலால் எங் கூந்தலைத் தீண்டாதேகொள்; நீ நீங்கென்றாள் தலைவி. எ - று.

இது வெருவவேண்டாப் பொருட்கட் கடிதிற் பிறந்ததோர் வெறியாதலின், (௨)வெருவுதலென்னும் மெய்ப்பாடு.

௩. தெரியிழாய், செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர் மாட்டு

எ - து: அதுகேட்ட தலைவன், தெரிந்த இழையினையுடையாய்! அத்தன்மையாகிய பரத்தையர்மாட்டு உண்மையாகப் பிரிந்து யான் செய்த தவறில்லாத இடத்து நீ எங்ஙனஞ் சினப்பாயென்றான். எ - று.

அன்னவரென்றது, நீ புலக்குந் தன்மையுடையவரென்றது.

---

௧. (அ) தலைவன் முன் தலைவி தன்னைப் புகழ்தல், தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலும் தெளித்தலுமாகிய ஈரிடத்து மட்டுமுண்டென்று கூறி, 'ஒரூஉநீ..............காணுங் கடை' என்பதை முதலாவதற்கு மேற்கோள் காட்டி, 'இதில் தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்; நின்னை வெருவாதார் பிறருளரென்னு முள்ளக்கருத்தினால்' என்றும், தொல். கற்பியல். சூ. ௩௫. 'தற்புகழ் கிளவி' (ஆ) "பரத்தைவாயி னால்வர்க்கு முரித்தே" (தொல். பொருளி. சூ. ௨௧.) என்பதன் விசேடவுரையில், 'நால்வர்க்கு மென்றமையால், நான்கு வருணத்துப் பெண் பாலாரும் அவரோடு ஊடப்பெறுப' என்றுகூறி, இப்பகுதியை (பார்ப்பனியும் அரசியுமொழிந்த) 'ஏனைய வருணத்தார் கூற்று' என்றும் கூறுவர் இளம்பூரணர். (இ) "யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோ, ரூராண்மைக் கொத்த படிறுடைத்து" கலி. அ௯: ௧ - ௨. (ஈ) "தோடேந்து பூங்கோதை வேண்டேங் கூந்த றொடேல்" சீவக. ௧௨௨௧.) என்பவையும் (உ) "கலிமயிற் கலாவத் தன்னவிவ, ளொலிமென் கூந்த லுரியவா நினக்கே" குறுந். ௨௨[illegible] என்பதும் (ஊ) "நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம். ௧௧௩: ௯) என்னு மூலமும் 'மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற் குரியவரை நினைந்து' என்னும் அதனுரையும் ஒப்புநோக்க[illegible]

௨. 'வெரூஉதலென்பது அச்சம்போல நீடுநில்லாது கதுமென [illegible]றழ்கலிக்கு மாய்வதொரு குறிப்பு; அதனைத் துணுக்கென்றலுமாம்[illegible]ரும்; தொல். அதற்கு, "ஒரூஉநீ...........கடை" என்னும் பகுதி[illegible] காட்டி, 'இதில் அஞ்சத்தகுவது கண்டஞ்சுதலின்மை[illegible]கையது. || கூடியுடன் உள்ள வேறுபாடு அதன் பின்னிகழாமையுங் காண[illegible]ப்படுமென்றார்.

(பிரதிபேதம்) * யானின்னை, † யானின்னை.

இஃது (க) ஊடல்பற்றிய வெகுளியென்னும் மெய்ப்பாடு.

இனி (உ) ஒருயிராயிருக்க உடம்பிரண்டாயிருப்பாயென்றால், தன்னைப் பிறன்போற் கூறிற்றாகாது; பன்மையாய் நிற்றலின்.

ரு ஏடா, நினக்குத் தவறுண்டோ நீவீடு பெற்று
யிமைப்பி னிதழ்மறை பாங்கே கெடுதி
நிலைப்பா லறியினு நின்னொந்து நின்னைப்
புலப்பா ருடையர் தவறு

எ - து: ஏடா! நின் கண்ணை மறைத்த இமைக்குள்ளே மறைந்த பொழுதே தோன்றாமற் போதி; ஆதலால், நீ கைவிடுதலைப் பெற்றாய்; அந் நிலைமைப் பகுதியை அறிந்திருப்பினும் அறியாதாரைப்போலே நின்னை நொந்து நின்னைப் புலக்கின்றவர் தவறுடையர்; நினக்கு ஒரு தவறு உண்டோ வென்றாள். எ - று.

கூ அணைத்தோளாய், தீயாரைப் போல * திறனின் றுடற்றுதி
காயுந் தவறிலேன் யான்

எ - து: அதுகேட்ட தலைவன், (ங)அணைபோலுந் தோளினையுடையாய்! தீய மக்களை உடற்றுமாறுபோல ஒரு தீய திறனின்றாகவும் உடற்றாநின்றாய்; யான் நீ காய்கைக்குக் காரணமாவதோர் தவறுடையேனல்லே னென்றான். எ - று.

இளம்பூரணரும்; தொல். மெய்ப். சூ. கஉ. 'ஆங்கவை, ஒரு பால்' (ஆ) இதனை அச்சத்திற்கு மேற்கோள் காட்டி, தலைவனைக் கள்வன்பாற் சார்த்தி உரைத்தமையின் கள்வர் பொருளாக அச்சம் பிறந்த தென்பர் பேராசிரியரும், இ-வி. நூலாரும்; தொல். மெய்ப். சூ. கூ. இ-வி. சூ. ருஎஅ.

க. ஊடற்கண் தலைமகள்வெகுட்சி கூறியதற்கு, "செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. கo. பேர்.

உ. (அ) "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ, ராகத்து ளோருயிர் கண்டனம்யாம்" (ஆ) "ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண், டானந்த வெள்ளத் திடைத்திளைத்தாலொக்கும்" கோவையார். எக, ஙoஎ. (இ) "பாவைநீ புலவியி னீடல் பாவியேற், காவியொன் றிரண்டெடம் பல்லது" சீவக. கoகஎ. (ஈ) "காவிபோற் [illegible]ண்ணிக்கும் கண்ணியந்தோட் காளைக்கு, மாவிபோ லாடையு த[illegible]ான் றனதே" நள. கலிதொடர். அச. (உ) "மருங்கிலா நங்கையும் சார்த[illegible]யி லையனு, மொருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்" கம்ப. ....த். ஙஅ. என்பவை ஈண்டு அறிதற்பாலன.

வன்பி[illegible]க்கம் ஙஉஉ: ச; ஙசங: ச; சoo: ச-ஆம் குறிப்புப் பார்க்க.

ஞர்க்கினிய[illegible]ன்றுடற்றுதி.

[illegible]தம்) * பாய்ந்தி[illegible]

கக மாஞேக்கி நீயழ நீத்தவ ஞனது
நாணில னாயி னலிதந் தவன்வயி
*னூடுத லென்னோ வினி

எ - து: அதுகேட்ட தோழி, மான்போலும் நோக்கினையுடையாய்! நீ அழும்படி நின்னைக் கைவிட்டவன் †பரத்தைமையில் அமையாமல் நாணமற்றிருப்பனாயின், மேல் அவனிடத்தே நவிதலைக்கொடுத்து ஊடுகின்றதன்மை என்னபயன் தருமோவென்றாள். எ - று.

இஃது "உறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிய, கிழவோள் பானின்று கெடுத்தற்கண்" (க) தோழி கூறியது.

கச இனியாது மீக்கூற்றம் ‡யாமில மென்னுந்
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனியானாப்
பாடில்கண் பாயல் கொள

எ - து: அதுகேட்ட தலைவி, நெஞ்சே! நீர்விழுதல் அமையாத, துயிலுதலில்லாத கண் துயில்கொள்ளும்படியாக நாம் இனிச் சிறிதும் மேலாகக் கூறுங் கூற்றையுடையேமல்லே மென்று இவள்கூறுந் தகைமையினையுடைய கூற்றினைக் காரியமென்று நினைத்துப் பார்ப்பாயென நெஞ்சொடு ||கூறி ஊடறீர்ந்தாள். எ - று.

இதனால், ÷ தலைவற்கும் தலைவிக்கும் உணர்வென்னும் உவகை பிறந்தது.
இது (உ)தரவும்போக்குமின்றி ஐஞ்சீரடுக்கி வந்த உறழ்கலி. (உ௨)

(அஅ.) ஒரூஉக், கொடியிய னல்லார் குரனாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்றா தவர்;

க. தொல். கற். சூ. கூ. இச்சூத்திரப்பகுதிக்கு, இவர், 'தலைவன் சென்று சேரும் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தாளாய்நின்று அவள் புலவியைத் தீர்த்தற்கண் (தோழிகூற்றுநிகழும்)'என்று பொருள்கூறி அங்கும், "மாஞேக்கி ....இனி" என்பதை மேற்கோள் காட்டியிருக்கிறார். இஃது இளம்பூரணர் கருத்தைத் தழுவியதே.

உ. இச்செய்யுளை, தரவும் போக்குமின்றி ஐஞ்சீரடுக்கி வந்த உறழ்கலிக்கு மேற்கோள் காட்டினர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்; தொல். செய். சூ. கடுக.

(பிரதிபேதம்) * ஊடுவதென்னோ. † பரத்தமையில், ‡ நாமிலமென்றகையது. || கூடியூட, ÷ தலைவனும் தலைவியும் உணர்வென்னும் உவகையைப்பெற்றார்.

ரு கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று;

சு வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்
மாய மருள்வா ரகத்து;

அ ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவனோ தவறு;

கo இஃதொத்தன், புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் சாலாவோ கூறு;

கரு அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதின்மை
தேற்றக்கண் டியாய் தெளிக்கு;

கஎ இனித் தேற்றேம்யாம்;

கஅ தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.

இஃது அவ்வாற்றற் புக்க தலைவனுடன் ஊடியும் உறழ்ந்துஞ்சொல்லிப் பொய்ச்சூளஞ்சி ஊடறீர்ந்தது.

இதன் பொருள்.

(க)ஒரூஉக், (உ)கொடியிய னல்லார் குரனூற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்

க. கற்புக் காலத்துத் தலைமகள் புலவிக்கண் அவளுயர்வும் தலைமகன் றாழ்வு முரியவென்பதற்கு, 'ஒரூஉக் கொடியிய னல்லார்........தவறு' என்றபகுதிகளை மேற்கோள் காட்டி, 'இதனுள் தலைமகன் பணிவும் தலைவியுயர்வுங் காண்க; இஃதீண்டுக் கூறியதென்னை? காமக் கடப்பினுட்பணிந்த கிளவி யென மேற் கூறப்பட்ட தாலெனின், ஆண்டுக் கூறியது ஊடல் புலவி துனிஎன்னு மூன்றிற்கும்பொதுப்படநிற்றலின் இது புலவிக்கே யுரித்தென்னுஞ் சிறப்பு நோக்கிக் கூறியவாறு' என்பர். இளம்பூரணர்; தொல். பொருளி. சூ. ௩௯. 'மனைவி யுயர்வும்'

உ. "எதிலாண் முச்சி, யுதிர்துக ளுக்கநின் னுடை யொலிப்ப, வெதிர்வளி நின்றாய்நீ செல்" கலி. அக: ௩௦ - ௩௨.

*தொடிய வெமக்கு(க)நீ யாரை (உ)†பெரியார்க்
கடியரோ வாற்று தவர்

‡எ - து: கொடியினதியல்பையுடைய பரத்தையருடைய புழுகுமுதலிய வற்றிலே அளைந்த மயிர்முடியினின்றும் உதிர்ந்த பூந்தாதுகள் நின் தோட் கட்டிலே கிடவாநிற்க, எம்மை நீ தீண்டுதற்கு எமக்கு நீ யாராந் தன்மையை யுடையை? எம்மைவிட்டு நீ நீங்குவாயாக; பிரிவாற்றுதவர் பிரியவல்ல பெரியோர்க்கு அடியரோ? அன்றே ||யென்றாள். எ - று.

குரல் - மயிர். நாற்றம், ஆகுபெயர்.

இது "சினனே பேதைமை நிம்பிரி நல்குர, வனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே" (ங) என்பதனால், 'தொடிய வெமக்குநீயாரை' எனச்சினம் பற்றி வரினும் அது தன் காதலைச்சிறப்பித்தலின் அமைந்தது.

க. (அ) "நம்பிநீ யாரை யென்றான்" (ஆ) "ஐயநீ யாரை யென்றாற்கு" சீவக. கருசு, கஎகஅ. (இ) "அய்யநீ யாரை" கம்ப. நாகபாச. உகூஎ. என்பவையும் "யாரைநீ யெம்மில்புகுதர்வாய்" கலி. கூஅ: க; என்ப தும் அதன் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. "பரத்தை வாயி னால்வர்க்குமுரித்தே" என்பதற்கு, பரத்தையர் மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார் (ஆடவர்) க்கும் உரித்தென்று முதலிற் பொருள் கூறிப் பின் நான்கு வருணத்துப் பெண்பாலாரும் அவரோடு ஊடப்பெறுபவென்றுமாம் என்றுகூறி, "பெரியார்க் கடி யரோ வாற்றுதவர்" என்பதைப் * பார்ப்பனி கூற்றுக்கு (* அரசிகூற் றென்றும் பிரதிபேதம்) மேற்கோள் காட்டுவர், இளம்; தொல். பொருளி. சூ. உஅ.

ங. தொல். பொருளியல். சூ. ருக. (அ) இச்சூத்திரத்தின் இவருரை யிலும் இப்பகுதி இக்குறிப்போடு இச்செய்திக்கு மேற்கோள். (ஆ) இளம்பூரணர் இச்சூத்திரத்திற்கு, "மெய்ப்பாட்டியலுள் (சிலகுணங்கள்) நடுவணைந்திணைக்குரிய தலைமக்கட் காகாவென எடுத்தோதுகின்று ராகலின் அவற்றுள் ஒரு சாரன ஒரோவிடத்து வருமென்பதுணர்த் திற்று; இச்சூத்திரம் எதிரதுநோக்கிற்று; சினமுதலியநான்கும்யாதானு மொருபொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும்" என்று உரை வகுத்து, "கொடி யிய னல்லார்.........ஆற்று தவர்" என்ற பகுதியை முதலாவதற்கு மேற்கோள்காட்டி, இதனுள் தொடிய வெமக்கு நீயாரை யென்பது சினம்பற்றிவரினும் காமக்குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்ததென்றனர்; தொல். பொருளி. சூ. ருக.

(பிரதிபேதம்) * தொடீஇய. † பெரியோர்க்கு, ‡ எ - து: குரல் - மயிர்............பெயர் கொடியினியல்பை, ||என்றாள் கடியதமக்கினியார் சொலத்தக்காமற்று.

ரு (க)கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று

எ - து: அதுகேட்டுக் கடியராயிருப்பார்தமக்கு மாற்றஞ்சொல்லத் தக்கவர் யாவரென்றான். எ - று.

சு *வினைக்கெட்டு, (௨)வாயல்லா வெண்மை யுரையாது †கூறுநின் மாய மருள்வா ரகத்து

எ - து: அதுகேட்டு நீ போகின்றதொழிலைத் ‡தவிர்த்துநின்று உண்மையல்லாத வெண்மைகளைச் சொல்லாதே நின் பொய்ம்மைகளை மெய்யென்று மயங்குவாரிடத்தே ||சொல்லென்றாள். எ - று.

'வினைக்கேட்டு' பாடமாயின் வினைக்கேடாகிய வாயல்லாவென்க. உரையாதியும் பாடம். வெண்மை, பண்புப்பெயர்.

அ ஆயிழாய், நின்(ந)கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா வென்க ணெவனோ தவறு

எ - து: அதுகேட்ட தலைவன், ஆராய்ந்த இழையினையுடையாய்! நின்னுடைய ÷ கண்ணினில் (ச) அருணோக்கினைப் பெறிலன்றி இனிய உயிர் வாழமாட்டாத என்னிடத்துத் தப்பு யாதுதானென்றான். எ - று.

"காமக் கடப்பினுட் பணிந்த கிளவி, காணுங், காலைக் ✝கிழவோற் குரித்தே"(ரு)என்பதனால், தலைவன் பணிந்து கூறினான்.

க. "கடியர் தமக்கு..............மாற்று" என்பது உரைவகைநடை நான்கனுள், பாட்டிடை வைத்த குறிப்பிற்கு மேற்கோள்; தொல். செய். சூ. கசுரு. 'பாட்டிடை' இளம்.

௨. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளுள் தலைவன்கூற்றைத் தலைவி பொய்யாக் கோடற்கு, "வாயல்லா வெண்மை.................ரகத்து" என்பது மேற்கோள்; தொல். மெய்ப். சூ. ௨௨. 'இன்பத்தை' இளம்.

ந. கண்ணென்பது அருளென்னும் பொருளில் வருதலை, "கண்மாறி விடின்" கலி. சுக: ௨ச; என்பதனாலும் அதன்குறிப்பாலும் அறிக.

ச. "நின், னருணோக்க மழியினு மவலங்கொண் டழிபவள்" கலி. கo: கஅ - கக.

ரு. தொல். கற்பி. சூ. கக. (அ)இச்சூத்திரத்தின் இவருரையிலும் தலைவன் தலைவி மாட்டுக் காமங் கையிகந்துழித் தாழ்ந்து கூறியதற்கு, "கடியர் தமக், கியார்சொல்லத் தக்கார்மாற்று" என்பதும் "ஆயிழாய், நின்கண் ....தவறு" என்பதும் மேற்கோள். (ஆ) இளம்பூரணரும், "பெரியார்க், கடியரோ'வாற்றாதவரெனத் தலைவி கூறியவழி, 'கடியர்

(பிரதிபேதம்) * வினைகெட்டு, † சென்றீநின், ‡ தவிர்ந்துநின்று, ||செல்லென்றாள், ÷ கண்ணில் வருநோக்கினைப், ✝கிழவோர்க்கு.

சo (க)இஃதொத்தன்,(உ)புள்ளிக்(ங)களவன் புனல்சேர்பொதுக்கம்
(ச)வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றூற்றனவு [போல்
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு (ரு)நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறுதல் *சாலாவோ கூறு

எ - து: அதுகேட்ட தலைவி இவனொருத்தனென நெஞ்சொடு வியந்து கூறி, பின்னர், புள்ளியையுடைய (சு) நண்டுகளின் நடையாலுண்டான வடு நீரருகைச் சேர்ந்து கிடந்தாற்போலப் பெரிய உகிராற் பிளந்த வடுக்களும் ஒளியையுடைய எயிறு அழுந்தின வடுக்களும் ஒள்ளிய இதழ்கள் வாடின நின் கண்ணியும் பரத்தையர் நின்னோடு வேறுபட்டுக் கோபித்து அடிக்கச் சிவந்த நின்னுடைய மார்பும் தப்பாதலுக்கு அமையாவோ? அமையாவாயிற் கூறு என்றாள். எ - று.

சேர்பென்னும் எச்சத்திற்கு வினை வருவித்து முடிக்க. ஒதுக்கமென்னுந் தொழிற்பெயர் ஆகுபெயர். "சிரறுசே லாடிய நீர் வாய்ப்பதத்த"(எ)என்றாற்

தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று' எனத் தலைவன்பணிந்து கூறியது காண்க" என்பர்; தொல். கற்பி. சூ. கஎ. 'காமக்கடப்பின்'.

க. இந்நூற்பக்கம் ஙஅசு: ங - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. (அ)பொறியலவன் (சிலப்.எ: ஙக. முதற்பதிப்பு) என்பதற்கு, 'புள்ளிக் கள்வன்' என்பது மேற்கோள்; (ஆ) "புள்ளிக்கள்வன்" ஐங். உக, உஉ, உச.

ங. (அ) "களவன் மண்ணளைச் செறிய வகல்வயற், கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ" அகம். உஙரு: கக - கஉ. (ஆ) "அலவ னள்ளி குளிர்ஞெண் டார்மதி, களவ னென்றிவை கற்கடகப் பெயரே" சேந்தன் றிவாகரம். (இ) "களவன் குளிர்ஞெண்டு கற்கடம்" உரிச் சொனிகண்டு. கூo. என்பவற்றால் நண்டிற்குக் களவனென்னும் பெயரும் பயின்று வருதலறிக.

ச. கலி. சுஎ: கச - கரு; அடியும், எஉ: கக - கஉ; அடியும், குறிப்பும் பார்க்க.

ரு. "ஊடிக், கொதித்து மேற்றிசை யணங்கலத் தகப்பதங் கொடுமே, லுதைத்த தாமெனச் சிவந்தது வெய்யவ னுடலம்"நைடத. மாலை. உக.

சு. "செய்ச்சேத கத்திற் குளிர்நடந் தாங்குச் செறிந்த வடு, மெய்ச்சே யிழைக்கொடி யன்னார் கடைத்தலை மேயினதால்." திருவெங்கைக் கோவை. ஙஅக.

எ. "சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தல்" என்பது பதிற். உஉ: கங

(பிரதிபேதம்) * சாலாதோ.

போல, சிறறுதல் சிதறுதன்மேல் நின்றது. "வேட்கை மறுத்துக் கிளந்தாங் *குரைத்தன், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" (க)என்பதனுள், "ஒன் றெனமுடித்தலென்பதனன் மரீஇயவாறு ஏனையவற்றிற்குங் கொள்க" என்ற லின், இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவனவும் அமைத்தாம். அதனன் வள்ளுகிர் போழ்ந்தன முதலியன கொள்க.

கடு அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதின்மை
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு

எ - து: நீ கூறுகின்ற மெய்வேறுபாட்டையோ என்னிடத்துண்டாக ஓராதேகொள்; அங்ஙனம் ஓராதிருத்தல் நினக்குத்தக்கது; அதற்குக் காரண மென்னெனில் அத்தீது என்கண் இல்லாமையை யான் நினக்குத் தெளிவிக்க நீ காணய்; யான் இனித்தெளிவிப்பேனென்முன். எ - று.

கஎ இனித் தேற்றேம்யாம்

எ - து: இக்கற்புக்காலத்து நீ சூளுறுகின்றதனைக்கொண்டு யாம் எந்நெஞ்சைத் தெளிவியேம்; அதற்குக்காரணங்கேள். எ - று.

கஅ தேர்மயங்கி வந்த தெரிகோதை (உ)யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
(ங)†நீயுறும் (ச)‡பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு

க. தொல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இச்செய் திக்கு இக்குறிப்புக்களோடு "புள்ளிக் களவன்............கூறு" என்பது மேற்கோளாகக் காணப்படுகின்றது.

உ. "தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின், னீரணி" (கலி. கசு: கடு - கக.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

ங. (அ) தலைவி தலைவன் முன் தன்னைப் புகழ்தல் தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்தவழித் தெளித்தற்கண் வருமென்பதற்கு, "நீயுறும் பொய்ச் ....கூறு" என்பதை மேற்கோள் காட்டி, 'இதில் பெண்டிர் பல ருளராயினும் அவரெல்லார்மாட்டும் செல்லாது தன்மேல் வரு மெனக் குறித்தாளாதலிற் றன்னைப்புகழ்ந்தாளாம்' என்பர். இளம். தொல். கற்பி. சூ. ஙக. 'தற்புகழ்' (ஆ) இப்பகுதியையே இவர் அழிவில்கூட்டத்திற்குரிய பொருள்களுள் தெய்வமஞ்சலென்பதற்கும் மேற்கோள்காட்டுவர்; தொல். மெய்ப். சூ. உச. 'தெய்வ' (இ) ஓசை வேற்றுமையால் நகரவுகரம்வியங்கோள்முற்றாயும் நிற்குமென்பதற்கும் இப்பகுதியே மேற்கோள்; தொல். வினை. சூ. சு. நச்:

(அ)"என்னை யருளி யருண் முருகு சூள்சூளி, னின்னை யருளி லணங் (பிரதிபேதம்) ...வேறின்னும், விறல் வெய்யோ னூர்மயில் வேனிழ ஞேக்கி, ...ணில் வரு... ரீஇய. † நீ கூறும், ‡ பொய்ச்சூ ழணங்காகும்.

எ-து: (க) தேரேறிவருகின்ற சிறப்பிலேமயங்கி நின்தீங்கைக் கருதாது வந்த தெரிந்த கோதையையுடைய அழகிய பரத்தையருடைய (உ)தாரை நின் தாராக நினைத்து அணிந்துவந்த் தப்பிற்கு அஞ்சி யாம் ஊடிப் பொருத போரிலே கலங்கி இக்கற்புக்காலத்து நீ சூளுறும் மிகப்பொய்யாகிய *சூளுறவு வருத்தத்தைச் செய்யுமாயின், பின்னை அதுதான் எங்கண்மே லன்றி யார் மேல் வரும் ? அங்ஙனம் வாராமற் களவுகாலத்துச் சூளுறவுபோற் கெடுமோ? நீதானே. கூறுவாயாகவென ஊடறீர்ந்து கூறினள். எ - று.

யார்மேல் வருமென ஒருசொல் வருவிக்க. இனி நீயுறுமென்க.

இஃது "இன்னாத்தொல்சூளெடுத்தற்கண்ணும்" (ங)என்பதனாற்கூறிற்று. என்றது, இன்னாங்குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறுமிடத்துமென்றவாறு. தலைவன், "வந்த குற்றம் வழிகெட வொழுகி"(ச) களவிற் சூளுறவான் வந்த ஏதம் நீக்கி, இக்கற்புக்காலத்துக் கடவுளரையும் குரவரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் இன்னாதசூளென்றாள்; இது

யறவ ரடிதொடினு மாங்கவை சூளேல்,' குறவன் மகளானை கூறேலா கூறே, லைய சூளி னடிதொடு குன்றொடு, வையைக்குத் தக்க மணற் சீர்சூள் கூறல்" பரி: அ: சுடு - எக. (ஆ) "பொய்ச் சூளா னென்ப தறியேன்யா னென்றிரந்து, மெய்ச்சூ ளுறுவானை மெல்லியல் பொய்ச் சூளென், றுல்லுவ சொல்லா துரைவழுவச் சொல்ல" பரி. கஉ: சுங - சுரு.

க. "நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின், றேர்பூண்ட நெடு நன் மான் றெண்மணிவந் தெடுப்புமே" கலி. எO: கஅ - கக.

உ. தாரென்பது ஆடவர்மார்பின் மாலைக்குவருதலே பெருவழக்கு; மகளிர் மாலைக்கும் அருகி வழங்கும்.

ங. தொல். கற்பி. சூ. சு. (அ) இச்சூத்திரப்பகுதியினுரையில் "வேற்றுமை ....கூறு" என்ற பகுதிகளை மேற்கோள்காட்டி, தலைவி எம்மே இப்பொய்ச்சூளால் வருங்கேடுவருமெனமறுத்தவாறுகாண்கவெ நச். (ஆ) இச்சூத்திரத்து, "தன்வயிற் சிறப்பினு மவன்வயிற் பினு, மின்னாத்தொல்சூ ளெடுத்தற் கண்ணும்" எனப்பாடங்கெ தன் மாட்டு நின்ற மிகுதியானும் அவன் மாட்டு நின்ற டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவி யெடுத்தவழி நிகழும்; தலைமகண் மாட்டு மிகுதியாதோ வெனின், 'மனை ....உரிய' என்று ராகலின், அக்காலத்து மிகுதி என்று கூறி, "தேர்மயங்கி..............கூறு" என்பதை காட்டுவர் இளம்பூரணர்.

ச. தொல். கற். சூ. ரு.

(பிரதிபேதம்) *சூளுறவாயின வருத்தத்தைச்செய்யும் பின்னை.

களவுபோலச் சூளுறுதலின், தொல்கு ளாயிற்று; இதனுள் (க) இரத்தலும் தெளித்தலும் வந்தவாறுணர்க.

இதனால், தலைவிக்கு அணங்கால் அச்சம் பிறந்தது; தலைவற்குப் புணர் வாகிய உவகை பிறந்தது.

இஃது (உ) ஒரூஉவென ஒழியசையாகிய சொற்சீரடிவந்து ஐஞ்சீரடிக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா. "தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்" (௩) எனப் பாப் போக்கின்பின் *வைத்ததனாற் 'கடியர்தமக் கியார் சொல்லத் தக்கார் மாற்று' எனப் போக்குப்போல் நாற்சீரான் இறும் பாட்டும் வந்தது. (௨௩)

(அகூ.) யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு;

௪ என்னிவை, ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறினென்
னாருயிர் நிற்குமா றியாது;

௭ ஏஎ, தெளிந்தேம்யாங் காயாதி யெல்லாம்வல் லெல்லா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்கொடுத் தாங்கு
வருந்தனின் வஞ்ச முரைத்து;

௧0 மருந்தின்று, மன்னவன் சீறிற் றவறுண்டோ நீநயந்த
வின்னகை தீதோ விலேன்;

௧௨ மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு.

இரத்தலுந் தெளித்தலும் வந்தமைக்கு, இச்செய்யுள் மேற்கோள்; தொல். அகத். சூ. ௪௪. 'ஒன்றாத் தமரினும்' இளம். சூ. ௪௧. நச்.

தொல். செய். க௨௩-ஆம் சூத்திர வுரையில் (அ) "ஒரூஉ.........தவர்" அ...ன்பதை மேற்கோள்காட்டி, 'ஒரூஉ வென நின்ற இயலசைதானே மே...ழியசையாய் நின்றது' என்று பேராசிரியரும் (ஆ) "ஒரூஉக் கொடி வே...னல்லார் குரலூற்றத் துற்ற" என்பதை மேற்கோள்காட்டி, 'ஒரூஉ இப்...ா நிரையசைதானே ஒழியசையாயிற்று', என்று நச்சினார்க்கினிய ...றியுள்ளார்.

(அ) "எ... செய் சூ. க௫௪.

...ில் ...வைத்ததனாற் சொலத்தக்கார்.

இது தலைவன் "காமத்தின்வலியும்" (க) *என்றதனால் ஆற்றமைவாயி லாக வலிந்துபுக்கு நெருங்கிக் கூடுமிடத்து †அவனுடன் தலைவி ஊடிச் சில ‡சொல்லி, அவன் ஆற்றமை கூறுவது கேட்டு ஊடறீர்ந்தது.

இதன் பொருள்.

(உ)யாரிவ னெங்கூந்தல் கொள்வா (ங)னிதுவுமோ
(ச)ஞராண்மைக் கொத்த படிறுடைத் (ரு)தெம்மனை
வாரனீ (சு)‖வந்தாங்கே ÷ மாறு

க. தொல். கற். சூ. ரு.

உ. (அ)"பரத்தை வாயி லுல்வர்க்கு முரித்தே" என்பதற்கு, பரத்தையர் மாட்டு வாயில்விடுதல் நான்கு வருணத்தார்க்கு முரித்தென்று முன் னுரைகூறி, பின்பு நான்குவருணத்துப்பெண்பாலாரும் அவரோடேப் பெறுபவென்ற வாறுமா மென்று கூறி, "யாரிவனெங்...........படி றுடைத்து" என்பதை * அரசி கூற்றுக்கு (பார்ப்பனி கூற்றுக்கு என் றும் 'பிரதிபேதம்) மேற்கோள் காட்டினர்; இளம்பூரணர்; தொல். பொருளி. சூ. உஅ. (ஆ) இப்பகுதி, கூறுகின்றாள் தலைவி யென்ப தூஉம் கூறப்பட்டான் தலைவ னென்பதூஉம் முன்னத் தானுணரப்படு தற்கு மேற்கோள்; தொல். செய்.சூ. உ0எ. பேர். நச். இ-வி. சூ. ருஎஎ. (இ)தலைவி, தலைவன் குறிப்பறிதல்|வேண்டி வேற்றுமைக்கிளவி கூறிய தற்கு, "யாரிவ னெங்கூந்தல்கொள்வான்"என்பதுமேற்கோள்; தொல். கற்பியல். சூ. கசு. 'அவன்குறிப்பு' இளம்.

(ஈ)"ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை, வெரூஉதுங் காணுங் கடை" (கலி. அஎ: க - உ) என்பதும் அதன் குறிப்பும்பார்க்க.

ங. தலைவி தலைவ னாண்மையிற் பழிபடக் கூறுதலாகிய மாறிலாண்மையிற் சொல்லிய மொழிக்கு, "இதுவுமோர்.........றுடைத்து"என்பது மேற் கோள்; தொல். பொருளி. சூ. ரு0. நச். இதனை, உள்ளுறைப்பாற் படுவ தாகிய அவையன் மொழிக்கு மேற்கோள்காட்டி, இது தீயொழுக்க மொழுகினையென இடக்கரடக்கி அவையன்மொழியால் ஒழுக்கக்குறை பாடு கூறியவா றென்பர், இளம்; தொல். பொருளி. சூ. சஅ. 'மங்கல'

ச. (அ)"தண்டுறையூர தகுவதோ-வொண்டொடியைப்,பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை, யூராண்மை யாக்கிக் கொளல்" ஐந்-எழு. ருச. எனவும் (ஆ) "ஊராண்மை யென்னுஞ் செருக்கு" திரிகடுகம். கூ.(இ) "ஊராண்மை மற்றதனெஃகு" குறள். எஎங.எனவும் வருவனகாண்க. (ஈ) ஆண்மை, ஆளுந்தன்மையென்னும் பொருளில் வருதற்கு, "ஊரா ....றுடைத்து" என்பது மேற்கோள்; தொல்.கிளவி. சூ. ருஎ.நச்.

ரு. "யாரைநீ யெம்மில் புகுதர்வாய்" கலி. கூஅ: க.

சு. "ஆறு மயங்கினை போறிநீ வந்தாங்கே, மாறினி". கலி. கரு: ங - சு.

(பிரதிபேதம்) * என்றதனால் வாயிலாகப்புக்கு, † அவனுடைய தலைவி ‡ சொல்லி றாற்றமை. ‖ வந்ததேனின்று. ÷ மாற்றெனினி

எ - து: இவன் யார்? *எங் கூந்தலைத் தொடுதற்கு இவன் என்ன தொடர்புடையனென நெஞ்சொடு கூறி, பின்னர் இங்ஙனங் கூந்தலைப் பிடிக்கின்றஇதுவும் நீபாதுகாத்தலின்றிப்பாதுகாப்பாரைப்போலே†பண்ணிக் கொண்டு ஊரையாளுந் தன்மைக்குப் பொருந்தினதொரு கொடுமையை யுடைத்து; இதனை ஓர்ந்துபார்; இனி நீ எம் மனையிடத்தே வாராதேகொள்; வந்தாற்போலே மீண்டுபோவென்றாள். எ - று.

இது (க)வலிந்துபுக்கது கூறிற்று. ஆன், வினையெச்சம்.

௬ ‡என்னிவை, (உ)ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் ||புலவனீ கூறினென்
னாருயிர் நிற்குமா றியாது

க. தலைவன் வலிந்து சென்றதனைத் தலைவி துனியால் மறுத்துக் கூறியதற்கு, "யாரிவன்...........மாறு" என்பது மேற்கோள்; தொல். கற். சூ. ரு. நச்.

உ. (அ) "யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பி, னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (ஆ)"ஒரு குடற் படுதர வோரிரை துற்று, மிருதலைப் புள்ளி னோருயிர் போல" (இ) "உள்ளத் துவகை யொருதலைப் பட்ட விருதலைப்பைம், புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்த வின்ப,வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர்" (ஈ) "ஒருயிர்த்தா, யிருதலைப் புள்ளி னியைந்தநுங் கேண்மையை யெண்ணி" (உ) "இருதலைப்புளி னுற்றவோருயி ரென்ன நும்முட னாகியே, மருவு துன்பமு மின்பமும்வழு வாதுதுய்த்திடு மாட்சியேன்" (ஊ) "இரு தலைசே ரொருபுள்ளி னேகவுயி ராய்நீவிர், மருவியிட றறியாமே வாழு நாள்" என்பவைகளும்,(எ)"அந்தா மரையன்ன மேனியனை யானகன் றுற்றுவனோ" என்புழி, யானென்பதற்கு, 'இருதலைப் புள்ளி னோருயி ரேனாகிய யான்' என்று (கோவையார். கஉ.) பேராசிரியரும், (ஏ)"யார் பிரிய யார்வர யார்வினவ யார்செப்பு" என்புழி, 'இருதலைப் புள்ளி னோருயிரே மாதலாற் பிரிவும் வரவும் வினவும் செப்பும் நம்மிடை உளவாகா' என்றும். பரி. அ: எஉ. (ஐ) "ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங், கூடியார் பெற்றபயன்" என்னுங்குறளில், '(இம் மூன்று பயனும்) இருதலைப்புள்ளி னோருயிராய உழுவலன் புடைய எமக்குவேண்டா' என்றும் (குறள். ககOக) பரிமேலழகரும். (ஒ) "காதலாளுட னுள்ளுயிர் கைவிடி, னேதமென்னுயி ரெய்தி யிறக்கும்" என்புழி, 'யாம் இருதலைப் புள்ளி னோருயிரேமாதலிற் காதலா ளுயிர் நீங்கின் என்னுயிரும் ஏதமெய்தி நீங்கும்' என்று (சீவக. கஅ௬க.)

[illegible] கூந்தலைத்தொடுதற்கு என்ன, † பணிக்கொண்டு, ‡ என்னவை,
[illegible] || புலவுநீ கூறியென்.

எ - து: அதுகேட்ட தலைவன், உடலும் உயிரும் ஒன்ருய்த் தலை இரண்டாகிய புள்ளினுடைய அவ்விரண்டு தலையில் ஒருதலை மற்றத்தலையோடே *போர்செய்தலை மேற்கொண்ட தன்மைத்தாக, நீ இக்கொடுமைகளைக் கூறிப் புலந்தூற் பயனென்? அதனைக் கைவிட்டு இனி என்னுடைய அரிய உயிர் நிற்கும்வழி யாது? அதனைக் கூறுவாயென்ருன். எ - று.

இஃது (க) ஆற்ருமைகூறிற்று. புலவல், புலத்தலெனப் படுத்தலோசையாற் பெயராய்நின்றது. இவை கூறிப் †புலவலென்னென்க. கூறு என வருவிக்க.

எ (உ) ஏஎ, இகழ்ச்சிக்குறிப்பு.

நீங்கின காலமெல்லாம் மறந்து ஈண்டு வந்தால் இறந்து ‡படுவேனெனக் கூறலின், அதனை ஏஎயென இழித்து நெஞ்சொடுகூறினுள்.

தெளிந்தேம்யாங் காயாதி ‖ யெல்லாம்வல் ÷லெல்லா
(௩) பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் ×நொடித் தாங்கு
வருந்தனின் வஞ்ச முரைத்து

எ - து: ஏடா! எல்லாம் உணர்ந்திருக்கும் பெரிய காட்டிடத்திற் கொற்றவைக்கு அவள் அறியாதன சில உண்டாகப் பேய் நொடிசொன்னுற்போல, நின்பொய்களை எனக்குச் சொல்லி வருந்தாதேகொள்; யாம் முன்பே நின் வஞ்சனைகளைத் தெளிந்துவிட்டேமென்ருள். எ - று.

நச்சினர்க்கினியரும் எழுதியவுரைகளும் ஈண்டு அறிதற்பாலன. (ஓ) "எட்டுக் காலொடு மிரண்டுவன் றலையொடு மெரிகால், வட்டக் கண்ணெடும் வளைபிறை யெயிற்ருெடுந் தழங்கிக், கிட்டிக் கொண்டவச் சிம்புளின் கிளர்ச்சியை யஞ்சி, விட்டுக் கண்ணுதற் குரைத்திட வோடினள் விமலை" (ஔ) "பிரிவரும் புள்ளி னெருமையி னெட்டி" என்பவற்றிற்குறித்த புள்ளும் இஃதென்பாருமுளர்.

க. தலைவன் வலிந்து சென்றதனைத் தலைவி கூறிய வழி, "என்னிவை............யாது" என்பது தலைவன் ஆற்ருமை மிகுதியாற் சென்றமை கூறியதற்கு மேற்கோள்; தொல். கற்பியல், சூ. ௫. நச்.

உ. "ஏஎ தெளிந்தேம்யாம்" என்பதை ஏ அசைநிலையாய் வருதற்கு மேற்கோள்காட்டினர், தெய்வச்; தொல். இடை. சூ. உ௩. 'ஏயுங் குரையும்'

௩. (அ) "துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்கு" பெரும்பாண். ௪௫௯. (ஆ) "அரற்றென்பது அழுகை யன்றிப் பலவுஞ்சொல்லித் தன் குறைகூறுதல்; அது காடுகெழுசெல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளோர் கூறுவன"; தொல். மெய்ப். சூ. கஉ. பேர்.

(பிரதிபேதம்) * போர்தலைமேற்கொண்ட, † புலவலெனெனக கூறியென, புலவலெனக கூறியென், ‡ படுவலெனக்கூறலின், ‖ அல்லாய தெல்லா, எல்லாயெல்லா. ÷ ஏடா. × நொடிந்தாங்கு.

கo மருந்தின்று, (க)மன்னவன் சீறிற் றவறுண்டோ நீநயந்த
இன்னகை தீதோ இலேன்

எ - து: அதுகேட்ட தலைவன், என்னைப் பேயென்று காயாதே *கொள்;
எனக்குத் தவறுகளேற்றுதற்கு அலமாராதேகொள்; எனக் கூறி, † பின்னும்
இனிய நகையினையுடையாய் ! நீ என்மேல் ஏற்றிச்சொல்ல விரும்பிய தீதோ
யான் உடையேனல்லேன்; அரசன் கோபிக்கப்படுகின்றவன்மேல் ஒருதவறு
உண்டோ? தவறில்லாயினுங் கோபிப்பனன்றோ? அங்ஙனம்கோபிக்குமிடத்து
அதற்கொரு (உ)பரிகாரமில்லை யென்றான். எ - று.

கஉ (ங)‡மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து || காண்டைப்பாய் நெஞ்சே ÷ புறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் (ச)றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு

க. 'உற்றொரு தனியே தானே தன்கணே யுலக மெல்லாம், பெற்றவன்
முனியப் புக்கா னடுவினிப் பிழைப்ப தெங்கே, குற்றமொன் றிலா
தோர் மேலுங் கோள்வரக் குறுகு மென்னு, மற்றைய பூத மெல்லாம்
வருணனை வைத மாதோ" கம்ப. வருணனை வழிவேண்டு. சுங.

உ. மருந்து - பரிகாரம். புறம். ங: கஉ, சஉ: உஉ.

ங. (அ)"கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்
தோர் சொல்லொடு தொகைஇப், பகுதியி னீங்கிய தகுதிக் கண்ணும்"
என்பதற்கு,"கொடியோரதுகொடுமைசுடாநின்றதெனப் புணர்ச்சியை
யொடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே யொருப்பட்டு
வேறு படுதலி னீங்கிய தகுதிக் கண்ணும் என்றவாறு; அஃதாவது:
அக்காலத்துத் தக்கதறிதல்; புகழை விரும்பினோர் சொல்லுஞ் சொல்
லாவது காமம் விரும்பும் பரத்தையரைப் போலாது அறத்தை விரும்
புதல்" என்று உரைவகுத்து, "மாண..............உண்டு" என்பதை
மேற்கோள் காட்டுவர் இளம்; தொல். கற்பி. சூ. சு. (ஆ) இப்பகுதி,
கற்பென்னுங் கைகோளுள் சிதைவு பிறர்க்கின்மை யென்னு
மெய்ப்பாட்டிற்கும் மேற்கோள்; தொல். மெய்ப். சூ. கக. (இ)
மாணுமை யென்பது மிகாமை யென்னும் பொருளிலும் வருமென்
பதற்கு, "மாண மறந்துள்ளா நாணிலி" என்பது மேற்கோள்; தொல்.
மெய்ப். சூ. உச. தெய்வம்' இளம்.

புலவியுள் தலைவியுயர்வும் கிழவோன் பணிவும் உண்டென்பது தலைவி
மனத்து நிகழ்தலுண் டென்பதற்கு, "தப்பினே, னென்றடி சேர்தலு
முண்டு" என்பது மேற்கோள்; தொல். பொருளி. சூ. ஙங. நச்.

(பிரதிபேதம்) * கொள்ளொன் றெனக்கு, † பின்னு மின்னகாய் நீ, ‡ மானமறந்துள்ளாத. ||
கண்டைப்பாய்நெஞ்சே, கண்டைப்பாய் நெஞ்சே ÷ புரந்தவனே.

எ - து: அதுகேட்ட தலைவி, *நெஞ்சே! இவனைப்(க)பொய்சொல்லவிடே மென்று மாறுபட்டுக் கோபிக்கின், தப்பினேனென்று வணக்கஞ்செய்தலும் இவனுக்குப் பரிகாரமுண்டு; ஆதலான் நம்மை மறந்து ஒருகாலமும் நாம் மாட்சிமைப்பட்டிருக்க நினையாத நாணமில்லாதவனுக்கு இவ்வூடற்போரைத் தோற்று அதனாலுள்ள பயனைக் காண்பாயென்று ஊடறீர்ந்தாள்.

இதனால், தலைவிக்குச் † சூழ்ச்சியும் தலைவற்குப் புணர்வாகிய உவகையும் ‡பிறந்தன.

"ஒருசிறை நெஞ்சமொ டுசாவுங் || காலை, யுரிய தாகலு முண்டென மொழிப" (உ)என்பதனால், இவன் ÷ஆற்றானென நெஞ்சுடன் உசாவினாள்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த (ங)கலிவெண்பா. (உச)

(சூ0.) கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா
மண்டாத சொல்லித் தொடாஅ றொடீஇயநின்
பெண்டிருளர் மன்னோ வீங்கு;
ச ஒண்டொடிநீ, கண்ட தெவனு தவறு;

க. "இற்றதென் னாவி யென்னா வெரிமணி யிமைக்கும் பஞ்சிச், சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்பச்சேர்ந்து, பொற்றதா மரையிற் போந்து கருமுத்தம் பொழிப வேபோ, லுற்றுமை கலந்து கண்கள் வெம்பனி யுகுத்தவன்றே" என்னும் (சீவக.உரு0அ) செய்யுளுரையில், 'உற்று' என்பதற்கு, ஊடறீர்தலுற வென்று திரித்துப் பொருள் கொண்டு, "பொய்ப்ப விடேஎ மென.........முண்டு" என்றாராகலின், என இவ்வுரைக்கு மூலமான பகுதியை மேற்கோள் காட்டி, அடியில் வணங்கியபின்னும் ஊடறீரா தழுதாளென்றல் கற்பிற்குப் பொருந்தா தென்பர் நச்சினார்க்கினியர்.

உ. தொல். பொருளி. சூ. க0. இச்சூத்திரத்தின் இவருரையிலும் நெஞ்சுடன் உசாவுதற்கு, "மாண........முண்டு" என்னும் பகுதி மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

ங. இளம்பூரணர் இச்செய்யுளை உறழ்கலிக்கு மேற்கோள்காட்டி, "'யாரிவ னெங்கூந்தல்.........மாறு' இது தலைமகள் கூற்று; 'என்னிவை...... ....யாது' இது தலைமகன் கூற்று; 'ஏஎ, தெளிந்தேம்........... உரைத்து' இது தலைவி கூற்று; 'மருந்தின்று..............விலேன்' இது தலைமகன் கூற்று; 'மாண மறந்துள்ளா.................முண்டு' இது தலைவி கூற்று; "இப்பாட்டிச் சுரிதக மின்றி வந்தவாறு கண்டு கொள்க. எற்றுக்கு? இறுதியின்கண்வந்ததுசுரிதகமாகாதோவெனின், ஆகாது; சுரிதகமாவது ஆதிப் பாட்டினும் இடை நிலைப்பாட்டினு முள்ள பொருளைத்தொகுத்துமுடிப்பது; இஃது அன்னதன்றெனக" என்பர்; தொல். செய். சூ. கசஅ. 'கூற்று மாற்றமும்' இதனாலும்

(பிரதிபேதம்) * விடேனென்று, † சூட்சி, ‡ பிறந்தது, || காலையுமுரியது, ÷ ஆற்றானெனெ.

ரு கண்டது, நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்
பாடு பெயனின்ற பானு ளிரவிற்
றொடிபொலி தோளு முலையுங் கதுப்பும்
வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ டடிதளரா
க0 வாராக் கவவி னொருத்திவந் தல்கற்றன்
சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை யார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ
கரு மாருள் சினைஇ யவளாங்கேநின் மார்பி
னறிணர்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த தமையுமோ
கூறினிக் காயேமோ யாம்;
உ0 தேறிற், பிறவுந் தவறிலேன் யான்
அல்கற், கனவுக்கொ ணீகண் டது;
உஉ. கனைபெயற், றண்டுளி வீசும் பொழிதிற் குறிவந்தாட்
கண்ட கனவெனக் காணுது மாறுற்றுப்
பண்டைய வல்லநின் பொய்ச்சூ ணினக்கெல்லா
நின்றாய்நின் புக்கில் பல;
உசு மென்றோளாய், நல்குநின் னல்லெழி லுண்கு;
உஎ ஏடா, குறையுற்று நீயெம் முரையனின் றீமை
பொறையாற்றே மென்றல் பெறுதுமோ யாழ
நிறையாற்றா நெஞ்சுடை யேம்.

• இது "புல்லுதன்மயக்கும் புலவிக்கண்ணும்" (க)என்பதனால்தலைவன் புலப்படப்பரத்தையரிடத்து ஒழகாது மறைந்தொழுகிவந்து*நின்றவனுடன்

உறழ்தற்பொருளாலும் இச்செய்யுளைக் கலிவெண்பா என்று கொள்ளாது உறழ்கலியென்று கொள்ளுதலே பொருத்த முடையது.

க. தொல். கற்பியல். சூ. க0. இச்சூத்திரப்பகுதிக்கு இவ்வுரைகாரர் அங்கு, "இரட்டுறமொழிதலென்பதனால், பரத்தையரிடத்துப் புலப்பட

(பிரதிபேதம்) * நின்றியவனுடன்.

காமக்கிழத்தி ஊடிச்சொல்லித் தலைமகன் ஆற்றாமைகண்டு தன் ஆற்றாமையுஞ்சொல்லி ஊடறீர்ந்தது.

இதன் பொருள்

கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா
(க)*மண்டாத சொல்லித் †தொடாஅ ளொடீஇயநின்
பெண்டி ருளர்மன்னோ வீங்கு

எ - து: நின் ‡பரத்தைமை இக்காலத்துக் களவொழுக்கத்தேயாதலைக் கண்டேன்; ஆதலாற் பொய்யாகவே நக்கு, யான் விரும்பாதனவற்றைக் கூறி என்னைத் தீண்டாதேகொள்; நீதீண்டுதற்கு இவ்விடத்து நினக்குப் பெண்டிராயிருப்பார் உளரோ? இல்லையே என்றாள். எ - று.

மன்னும் (உ)ஓவும் அசை.

ச ஒண்டொடிநீ, கண்ட தெவனோ தவறு

எ - து: அதுகேட்ட தலைவன், ஒள்ளிய தொடியினையுடையாய்! நீ என்னுடைய தவறாகக் கண்டது எவனென்றான். எ - று.

ரு (ங)கண்டது, (ச)நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்

ஒழுகாது அவர்புல்லுதலை மறைத்தொழுகுதலாற் காமக்கிழத்தியர்க்குப் பிறக்கும் புலவிக்கண்ணும் அவர்க்குக் கூற்றுநிகழுமெனவும் பொருள் கூறுக" என்று பின்னதாக ஒரு விசேட வுரை யெழுதி, "உதாரணம், 'கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா' என்னும் மருதக் கலியுட் காண்க" என்பர்.

க. "மண்டாத கூறி" கலி. கO அ: உக.

உ. ஓவும் அசையென்பதை நோக்க, உளரென்பதற்கே ஓசை வேற்றுமை செய்து உளரோவென்று பொருள்கொண்டாரென்று தோற்றுகிறது.

ங. "தான் முன் கண்ட தவற்றின ளாதலிற், சென்ற வாயிற் கொன்றலளூடி" பெருங். (௪) ஙஎ: கசுஎ-கசுஅ.

ச. "முதலொடு..............ஐந்நிலம் பெறுமே" என்னும் சூத்திரத்திற்கு, 'ஐந்நிலம்: களவும் உடன்போக்கும் இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் காதற்பரத்தையு மெனப்பட்ட ஐவகைக் கூட்டமென்றும், ஐந்நிலமென்பதனை முல்லை குறிஞ்சி முதலாயின வென்றுரு ளாராலெனின், முதலொடு புணர்ந்தவென்பதனுள் நிலம் பெறு மாதலான், நிலமென்பதற்கு வேறுபொரு ளுரைத்தல்வேண்டுமென்றும், இற்கிழத்தி காமக்கிழத்தி யென்பார் உள்ளப்புணர்ச்சியானுதல் மெய்யுறுபுணர்ச்சியானுதல் வரையப் பட்டா ராக, பொருட்பெண்டி ராகிய காதற்

(பிரதிபேதம்) * வண்டாத. † தொடாஅற்றொடீஇய, ‡ பரத்தமை.

பாடு பெயனின்ற (க)பாணு ளிரவிற்
றொடிபொலி தோளு முலையுங் கதுப்பும்
வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ*டடிதளரா
(உ)வாராக் †கவவி னொருத்திவந் தல்கற்றன்
சீரார் (ங)ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
(ச)‡போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை ||யார்க்கு மொலிகேளா (ரு)வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ

பரத்தையர்கூட்டம், ஒத்தகாம மாகியவாறு என்னையெனின், அவரும் பொருளானுதல் அச்சத்தானுத லன்றி, அன்பினாற்கூடுதலின் அதுவும் கந்திருவத் தின்பாற்படும்; அவ்வாறன்றி அவரைப் பிறிது நெறியாற் கூடுவனாயின், இவன்மாட்டுத்தலைமையின்றாம்' என்று உரைவகுத்து, "நோயும் வடுவுங்.........இறுத்த தமையுமோ" என்பதனை மேற்கோள் காட்டி, 'பரத்தையர் அன்பினாற் * கூடியவாறும், (* கூறியவாறும் என்றும் பிரதிபேதம்) இவர் இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் அன்மையும் அறிந்துகொள்க' என்பர். இளம்பூரணர். தொல். களவி.சூ.கரு.

க. "பாணு, ளிரவினிற் றூது கொண்டோன்" திருவிளை. பாயிரம். உ௦.

உ. "அரிமத ருண்கணு ராராக் கவவின்" கலி. கக: கச.

ங. "அஞ்சிலம் பொடுக்கி யஞ்சினள் வந்து, துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்" (அகம். க௦: கக.) என நாணு மகளிர்க்குக் கூறுதல் காண்க.

ச. "போர்க்கதவின்" பட். சo. சிலப். கo: எ. உரைபார்க்க; இஃது இரட்டைக்கதவு.

ரு. (அ) 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை' (தொல். சிறப்புப்) என்புழி, ஆயிடையென்பதற்கு, அவற்றை எல்லையாகவுடைய நிலத்தென்று இளம்பூரணரும், அதற்கு, அவ்விரண்டெல்லைக்குளென்றும், (ஆ)"யார், மாகமே நோக்கி மட வாளே யவ்விருந்தா, ளாகும்" (சீவக. கoஙஅ) என்புழி, அவ்விருந்தாளென்பதற்கு, அவ்விடத்திருந்தாளென்றும் இவ்வுரைகாரரும் பொருளெழுதியிருத்தலும், இவ்வாறே இகரச் சுட்டையும் (இ) "குகனென்பான் இந்நின்ற குரிசிலென்றான்" (ஈ) "இந்நின்ற, தாணினுமுளன்" (உ) "இம்முதலோர்" (ஊ) "மறக்கண் வெஞ்சின மலையென விந்நின்ற வயவர்" (கம்ப.குகப்.கூகூ.இரணியன் வதை. கஉச. நாகபாச. உகூங. படைக்காட்சி. உக.) எனவும்,

(பிரதிபேதம்) * அடித்தளரா. † கவவினொடொருத்தி. ‡ போராகதவம். || ஆக்குமொலி.

மாறுள் சினைஇ யவளாங்கே நின்மார்பி
னறுந்தார்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த தமையுமோ
கூறினிக் காயேமோ யாம்

எ - து: யான்கண்டது, ஒருத்தி தானுற்ற காமநோயையும் அதனாற் பிறந்த அலரையும் பிறர் அறியாமல் மறைத்து மகிழ்ச்சியின்றியிருக்கவும் மகிழ்ச்சியுண்டாக்கிச் செருக்கிச் சொரிகின்ற மழை மாறாமல் நின்ற ஒரு நாளிற் பாதியாகிய இராப்பொழுதிலே தொடி பொலிவுபெற்ற தோளும் முலையும்கூந்தலும்(௧) * மகரத்தின்வடிவுநிறைந்த† குழையும் எனை அணிகலங் களும் தனக்குச்சுமையாக முறிவதொரு(௨)வஞ்சிக்கொம்புபோலும்இடையைத் தாங்கிக்கொண்டு அமைதி பிறவாத முயக்கத்தாலே அடிதளர்ந்து வந்து தங்கு தலையுடைய தன் தலைமைநிறைந்த சிலம்பொலிப்ப, கோபித்து நின்னுடைய பலகை பொருத நிறைந்த கதவத்தைப் பாய்ந்தது ; அது தவறுதற்கு அமையுமோ? அந்த ஆராய்ந்த இழையினையுடையவள் ஆரவாரிக்கும் ஆரவாரத்தைக் கேட்டு அவ்வாரவாரத்திற்கெதிரே நீ நீட்டியாது எழுந்திருந்து போனது; அது தவறுதற்கு அமையுமோ? அவள் மாறுளாய்ச் சினந்து அவ்விடத்தே நின் மார்பிற் கிடந்த நாறுகின்ற இதழையுடைய செவ்விமாலையை அறுத்தது ; அது தவறுதற்கு அமையுமோ? பின்னை அவளுடைய சிறிய அடியைச் செறித்து யான் தீமையையுடையேனல்லேன்; அதனை நீ தெளியென்று கூறி அவளிடத்தே தங்கினது ; அது தவறுதற்கு அமையுமோ? இனிச்சொல்லு ; யாம் நின்னைக் கோபியேமோ? என்றாள். எ - று.

(௩)பாடுபெயல், பாடெனவிகாரம். நாளிற்பால், பாலுளென மரூஉ. நுசுப் போடென உருபுமயக்கம். கண்டது, மிதித்தது ; அது அமையுமோ? கண் டது, சென்றது; அது அமையுமோ? கண்டது, பரிந்தது; அது அமையுமோ? கண்டது, இறுத்தது; அது அமையுமோ? என முடிக்க.

(எ) "பரிதியில் விருந்த தேவே" (ஏ)"இவ்விருந்த வேந்தல்"(ஐ) "இவ் விருந்த மீளி" (நைடத. சுயம்வர. ௧௨௪, ௧௩௭, ௧௩௯.) எனவும் பெரு நூலாசிரியர்கள் அமைத்திருத்தலும் இங்கே அறிதற்பாலன; (ஒ) அகரச்சுட்டு, தனித்துநின்று பொருளுணர்த்தலாற்றாதென்று சிவ ஞானமுனிவர் தொல். பாயிரவிருத்தியில் கூறியிருக்கிறார்.

௧. "காதிசையு, மான்மகர வார்குழையாய்" ஏலாதி. ௪௪.

௨. வஞ்சியென்பது, ஒரு கொடிக்கேயன்றி ஒருமரத்திற்கும்பெயர்; இதன் கொம்பும் வஞ்சிக்கொடியும் மகளிரிடைக்கு உவமை கூறப்படும்.

௩. பார்த்தபிரதிகளிலெல்லாம் இவ்வாறேகாணப்படுகின்றது; 'படுபெயல், பாடுபெயலென விகாரம்' என்று இருக்கவேண்டியதுபோலும்.

(பிரதிபேதம்) * ஆகத்தின், † மகரக்குழையும்.

௨௦ தேறிற், பிறவுந் தவறிலேன் யான்
அல்கற், (௧)*கனவுக்கொ ணீகண் டது

எ - து: அதுகேட்ட தலைவன் யான் தேற்றத் தெளிவையாயின் இக் கேட்பதோர் தவறு யான் உடையே †னல்லேன்; (௨) இராக்காலத்து நீ கண்டதுதான் கனவுபோல இருந்ததென்றான். எ - று.

௨௨ (௩)கனைபெயற், றண்டுளி வீசும்பொழுதிற் குறிவந்தாட்
கண்ட கனவெனக் காணாது மாறுற்றுப்
பண்டைய வல்லநின் பொய்ச்சூ ‡ணினக்கெல்லா
நின்றாய்நின்(௪)புக்கில் பல

---

௧. முற்றியலுகரம் ஒற்றடுத்து உரியசையானதற்கு, "கனவுக்கொ ணீகண் டது" என்பதை மேற்கோள் காட்டி, இங்ஙனம் வருமொழியொற்று மிகினும் நிரைபாமெனவும் நிலைமொழியொற்று நின்றவழிப் புளிமாவா மெனவும் விளக்குவர், பேராசிரியர்; தொல். செய்யுளி. சூ. ௧௦.

௨. "இரவு கண்டே னொருகன வதனின், புதுமை கேட்கிற் புரைதீர்ந்தது வெனச், செவ்வாய் வெண்ணகைத் திருந்திழை கண்ட, தெவ்வா றேவென வியம்பினன் கேட்பநின், மனத்துழைப் பெயரா வெனைக் கரந் தெழுந்தனை, தனித்துப் போயோர் தடந்தோண் மடந்தையோ, டாடரங் கேறி யணைந்திருந் தவளோ, டேடியு முணர்ந்துங் கூடிவிளை யாடியுந், தேறினி ராகித் தெளிவுட னிருவிரு, மாறுமா றெழுதிய வாசகங் கூறி, மாதரு நீயு மயலுரைத் தெழுந்து, போதரும் போதையின் மோதிர மருளிப், பெயர்ந்தனை நயனமு மலர்ந்தன வாங்கே, புலர்ந்தது கங்குலும் புரவல வாழ்கென, வண்டலர் கோதாய் மனத்தினு மில்லது, கண்டனை யாதலிற் கலங்கினை மற்றுநின், னுள்ளத் துள்ளே யுறைகுவே னாகவுங், கள்வ னென்று கருதினை யன்றியு, நெறியுடை மகளிர் நினைப்பவுங் காண்பவு, மிவையிவைபோலுங் கணவர்தந் திறத் தெனக், கனவிற் கண்டது பிறரொடு பேசக், குறைபோ மென்றலிற் கூறினே னன்றியும், யாவை காணினுங் காலவற் கன்றிப், பேசுவ தெவரொடு பெரியோ யென்று, மாணார் நோக்கி மனத்தொடு நகையா, வாணு நினைவுட னகறா வேந்தன், றேவியை யையந்தெளித்தனமொரு வகை, யாரு மில்லென வினிதிருந் தவப்ப" பெருங். (௪) ௧௩: ௧௮௯ - ௨௧௬.

௩. இந்நூற்பக்கம் ௨௭௩: ௩ - ஆம் குறிப்புப் பார்க்க.

௪. "புக்கில்" குறள். ௩௪௦.

(பிரதிபேதம்) * கனவிற்கொல், கனவுகொல். † அல்லேன் நீகண்டதுதான் இராக்காலத்துக் கனவுபோலே. ‡ ணினக்கேடா.

எ - து: அதுகேட்ட தலைவி, செறிந்த மழையாகிய தண்ணிய துளியைப் பெய்கின்ற இராக்காலத்தே ஒருவன் செய்த குறியிடத்தே வந்தாளொருத்தியைநீ(க)கண்டதனால் உனக்குநிகழ்ந்த கனவு இதுவெனச்சொல்லி, நீ செய்த தனை நினையாதே அச்செய்தியை மாறுதலுற்று நின்றாய்; அங்ஙனம் நின்று பின்னர் நீ கூறுகின்ற நின்னுடைய பொய்யாகிய கூறுபாடு *யாம் நுண்மையாகக் கண்டமையின் நினக்குப் பண்டுபோற் பயன்றருந் தன்மையையுடைய வல்ல ; ஆதலால், எடா ! நினக்குப் புகும் இல்லும்பலவால்; ஆண்டே செல் லென்றாள். எ - று.

கண்ட கனவு, உண்ட எச்சில்போல †நின்றது.

உசு மென்றோளாய், நல்குநின் னல்லெழி லுண்கு

எ - து: அதுகேட்ட தலைவன், மெல்லிய தோளினையுடையாய் ! இனி யான் செய்த குறையைக் கைவிட்டு நின்னுடைய நன்றாகிய அழகை எனக்கு அருள்; அதனை யான் நுகர்வேனென்றான். எ - று.

உஎ ஏடா, குறையுற்று நீயெம் முரையனின் றீமை
(உ)பொறையாற்றே மென்றல் பெறுதுமோ யாழ
நிறையாற்றா நெஞ்சுடை யேம்.

எ-து: எம் வயத்ததாக நிறுத்தமாட்டாத நெஞ்சையுடைய ‡யாம் நினது தீமையைப் பொறுத்தலை நடத்த மாட்டேமென்று கருதுதலைப் பெறுவேமோ? ||பெறேம்; ஆதலால், இக்காரியத்திலே உற்று எமக்குச் சில குறை கூறாதே கொள்ளென்று ஊடறீர்ந்தாள். எ - று.

"பிறவும்" (௩)என்றதனால், சேரிப்பரத்தையாற் புலந்துகூறினாள்.

இதனால், தலைவிக்கும் தலைவற்கும் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது ஒண்டொடி நீயெனவும் தேறினெனவும் ÷அல்கலெனவும் ஒழி யசையும் பிறவுந் தவறிலேன்யானெனவும் கனவுக்கொளீகண்ட தெனவும்

க. "நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற், கனவிற் கண்டு" (கலி. ருக: ௩ - ரு.) என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. "எண்ணியவையெல்லாந், துறைபோதலொல்லுமோ தூவாகாதாங்கோ யறைபோகு நெஞ்சுடையார்க்கு" (கலி. சுஎ: கக - உக) என்பதும் இந்நூற்பக்கம் ருoஅ: ௩-ஆம் குறிப்பும் பார்க்க.

௩. தொல். கற்பி. சூ. கo. இச்சூத்திரப் பகுதியின் இவருரையிலும் "ஆராக் கவவின்........இறுத்த தமையுமோ" என்னும் இப்பாட்டின் பகுதி, காமக்கிழத்தியர் சேரிப்பரத்தையாற் புலந்து தலைவனொடு கூறியதற்கு மேற்கோள்.

(பிரதிபேதம்) * யாமுண்மையாக, நானுண்மையாக. † நின்றன. ‡ யானினது தீமை. || பெறேமேயாதலால், ÷ அல்கலெனவும் வினவும் தவறிலேன்.

வழியசையும் புணர்ந்து, கண்ட *தெவனோதவறென முற்றடியின்றிக் குறைவு சீர்த்தாகிய சொற்சீரடியும்பெற்று, கலிவெண்பாவின் வேறுபட்டு, † "பாநிலை வகையே கொச்சகக் கலியென, நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே" (க)என்னும் விதியாற் கொச்சகக்கலியாயிற்று. (௨௫)

(௯௧.) அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்
புரிநெகிழ் முல்லை நறவோ டமைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
பொருமுரண் சீறச் சிதைந்து நெருநையி
னின்றுநன் றென்னை யணி;

௬ அணைமென்றோளாய், செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னையத்தா லென்னைக் கதியாதி தீதின்மை
தெய்வத்தாற் கண்டீ தெளிக்கு;

௯ மற்றது, அறிவல்யா னின்சூ ளனைத்தாக நல்லார்
செறிதொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்
கூருகிர் சாடிய மார்புங் குழைந்தநின்
றாருந் ததர்பட்ட சாந்தமுஞ் சேரி
யரிமத ருண்கண்ணா ராராக் கவவிற்
பரிசழிந் தியாழநின் மேனிகண் டியானுஞ்
செருவொழிந்தேன் சென்றீ யினி;

௧௬ தெரியிழாய், தேற்றாய் சிவந்தனை காண்பாய்நீ தீதின்மை
யாற்றி னிறப்பல் பணிந்து;

௧௮ அன்னதே லாற்றல்காண்;
வேறுபட் டாங்கே கலுழ்தி யகப்படின்
மாறுபட் டாங்கே மயங்குதி யாதொன்றுங்
கூறி யுணர்த்தலும் வேண்டாது மற்றுநீ
மாணா செயினு மறுத்தாங்கே நின்வயிற்
காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணாய்நீ பெட்பச் செயல்.

இதுவும் அது.

இதன் பொருள்.

க. தொல். செய். சூ. ௧௫௫.

(பிரதிபேதம்) * எவனென்றவறெனமுட்டடி. † பாநிலைவகையே.

அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்
*புரிநெகிழ் முல்லை நறவோ டமைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
•பொருமுரண் சீறச் †சிதைந்து நெருநையி
னின்றாநன் றென்னை யணி

எ - து: ‡நறும்பூவோடே அழகிய நீரில் அவிழ்ந்த அல்லியையுடைய நீலப்பூ, அனிச்சப்பூ •முறுக்கு நெகிழ்ந்த முல்லைப்பூப் || பொருந்தின (௧) மார்பின்மாலையும் ஆராய்ந்த நறியமலராற்செய்த கண்ணியும் விரும்பின பரத்தையர் ஊடுகின்ற மாறுபாட்டாலே கோபித்துப் பற்ற திறங்கெட்டு என்னையுடைய ஒப்பனை நேற்றையில் இன்றாநன்றாயிருந்ததென்றாள். ÷ எ - று.

கண்ணி, வகைமாலை.

"அன்னை யென்னை யென்றலு முளவே, தொன்னெறி முறைமை சொல்லினுமெழுத்தினுந், தோன்றா × மரபின வென்மனார் புலவர்"(௨)என்பதனால், தலைவனை என்னை யென்றாள்.

௩௰ (௩)அணைமென்றோளாய், செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னையத்தா லென்னைக் கதியாதி தீதின்மை
தெய்வத்தாற் கண்டீ தெளிக்கு

எ - து: அதுகேட்ட தலைவன், அணைபோலு மெல்லிதாய தோளினையுடையாய்! •இவன் + நீங்கிற் பரத்தையரிடத்தல்லது நீங்கானென்று உட்கொண்டு அவ்வையத்தாலே யான் செய்யாதகாரியங்களைச்சொல்லி இவ்விடத்தே சினக்கின்ற குறை யாதுதான்? என்னிடத்துத் தீதில்லாமையைத் தெய்வத்தாலே நினக்குத் தெளிவிப்பேன்; அதனைக் காண்பாய்; இனி என்னைக் கோபியாதே கொள்ளென்றான். எ - று.

௩௧ மற்றது, அறிவல்யா னின்சூ ளனைத்தாக நல்லார்
செறி(௪)தொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்

---

௧. "தாருந் தானையும் பற்றி" அகம். ௨௭௬: ௯.

௨. தொல். பொருளி. சூ. ௫௨.

௩. இந்நூற்பக்கம், ௩௪௩: ௪ - ஆம் குறிப்பும் ௪௦௦: ௪ - ஆம் குறிப்பும் பார்க்க.

௪. தொடியால் வடு வுறுத்தலை, கலி. ௭௧. ௧௬-ம் அடியாலும் அதன்குறிப்பாலும் உகிரால் வடு வுறுத்தலை, கலி. ௭௨: ௧௧-ம் அடியாலும் அதன்குறிப்பாலும் அறிக.

(பிரதிபேதம்) * புரிநெகிழ்ந்தமுல்லை, †சிறைந்து. ‡நாம்பூவோடே அழகினையுடைய நீ அலர்ந்த. || பொருந்தினதலைமாலையும் ஆராய்ந்த........................கண் வகைமாலை கண்ணியும் மார்பின் மாலையும் நின்னை விரும்பின ப ÷ எ - று. அன்னையென்னை. × மரபினென்மனார். + நீங்கிப்பரத்

கூருகிர் சாடிய மார்புங் (க)குழைந்தநின்
ருருங் (உ)ததர்பட்ட சாந்தமுஞ் சேரி
பரிமத ருண்கண்ணு (ங)ராராக் கவவிற்
பரிசழிந் தியாழநின் மேனிகண் டியானுஞ்
செருவொழிந்தேன் சென்றீ யினி

எ-து: அதுகேட்ட தலைவி, *யான் நீ நீங்கியபின்னர் நீசெய்த க்காரியமும் அறிவேன்; நின்சூளுறவு பொய்யாதலும் அறிவேன்; புதிய பரத்தையருடைய செறிந்த தொடியழுத்தின வடுவையும் அவர் †முயக்கத்தாற் குழைந்த நின் தாரையும் நீ குறியாற் பொய்க்கப்பட்ட பரத்தையர் கோபித்துக் கூரிய உகிரால் தாம் விரும்பியாங்கு வடுச்செய்த மார்பையும் சேரியிலிருந்த செவ் வரியினையுஞ் செருக்கையுமுடைய மையுண் கண்ணினையுடையாருடைய நிறையாதமுயக்கத்தாலே பூசின பாடழிந்த சிதறுதல்பட்ட சந்தனத்தையு முடைய நின்வடிவைக் கண்டு இதற்குரிய யானும் நின்னோடு ஊடுதலைத் தவிர்ந்தேன்; இனி அப்பரத்தையரிடத்தே செல்வாயென்றாள். எ - று.

கசு தெரியிழாய், தேற்றாய் சிவந்தனை காண்பாய்நீ தீதின்மை
யாற்றி னிறுப்பல் பணிந்து

எ - து: அதுகேட்ட தலைவன் தெரிந்த இழையினையுடையாய்! யான் தெளிவித்ததனைக்கொண்டு நின்னெஞ்சைத் தெளிவியாயாய்க் கோபித்தாய்; யான் தீயேனல்லாமையை நின்னைத்தாழ்ந்து நெறியாலே நின்னெஞ்சிடத்தே நிறுத்துவேன்; அதனைக் காண்பாயாகவென்றான். எ - று.

கஅ ‡அன்னதே லாற்றல்காண்
வேறுபட் டாங்கே கலுழ்தி யகப்படின்
மாறுபட் டாங்கே ||மயங்குதி யாதொன்றுங்
கூறி புணர்த்தலும் வேண்டாது மற்றுநீ
மாணு செயினு மறுத்தாங்கே நின்வயிற்
காணி னெகிழுமென் னெஞ்சாயி ÷னென்னுற்றாய்
(ச) பேணய்நீ பெட்பச் செயல்

க. கலி. கூஅ: கச; ககஉ: உங. புறம். எங: கச.

உ. (அ) "ஊன்றதர்ந் திழிந்த வுதிர வெம்புனல்" (ஆ) "மிதிதோற் கொல்லன் பொதியுலைச் செந்தீத், ததர்வனபோலச் சிதர்வன சிந்தி" (இ) "ததரிதழ் ஞாழல்" பெருங். (க) ருஉ: ககஎ, ருஅ: கூ - கO. (ங) கூ: உஎ.

ங. "ஆராக் கவவி னொருத்தி" கலி. கூO· கO.

ச. (அ) "பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க், காணா தமைவில கண்" (ஆ) "பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக், காணா தமையலகண்" குறள். ககஎஅ; கஉஅங.

(பிரதிபேதம்) * யானீங்கியபின்னர் நீ செய்தகாரியமுமறியேன்நின். †முயக்கத்தாற்றாழ்ந்த நின், ‡ அன்னதேயாற்றல், || மயங்குதியாதொறும். ÷ என்றுற்றாய்பேணாநீ

எ - து: அதுகேட்ட தலைவி, இவன் கருத்து இன்னும் தீதின்மையே யென்பது நெஞ்சிடத்தே நிறுத்துதலையாயின், இவன் வலியைய நெஞ்சே காண்பாயாகவென நெஞ்சொடு கூறி, அவனைநோக்கி, யான் நின்னோடு வேறுபட்ட *அப்பொழுதே நெஞ்சு கலங்குவை; யான்வேறுபடாமல் நின்கையிலே அகப்படுவேனாயின், அக்கலக்கத்தை மாறுபட்டபொழுதே என்னை இகழ்ந்து பரத்தையர்பாற்சேறற்கு மனம் மயங்குவை; ஆதலால், யாதொரு வார்த்தையையுஞ் சொல்லி என்னை ஊடலுணர்த்துதலும் உனக்கு வேண்டாததொரு காரியம்; † இக்குறையையொழிய நீ வேறு மாட்சிமைப்படாத குறைகளைச் ‡செய்யினும்அவற்றைத்தள்ளி, நின்னைக்காணின், அப்பொழுதே என்னெஞ்சு நின்னிடத்தே நெகிழ்ந்துவருமாயின், என்னெஞ்சின்றன்மையை உட்கொள்ளாயாய் நீ யான் விரும்பும்படி என்னெஞ்சைத் தெளிவிக்குஞ் செயல்களை என்ன காரியத்திற்குச் செய்தாயென ஊடறீர்ந்தாள். எ - று.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியாகிய உவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்து போக்கின்றி உற்ற உறழ்கலி. "கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும், ||போக்கின்றாக லுறழ்கலிக் கியல்பே" (௧)என்பது விதி. (௨௬)

(௯௨.) புனவளர் பூங்கொடி யன்னாய் கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீத்தே
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி
மயங்கிமற் றாண்டாண்டுச் சேறலுஞ் செல்லா

---

௧. தொல். செய். சூ. ௧௫௬. இச்சூத்திரத்தினுரையில் உறழ்கலிக்கு இச்செய்யுளைமேற்கோள்காட்டி, "'காணினெகிழும்.........செயல்'என்பது வெள்ளைச்சுரிதகமாகாதோ வெனின், ஆகாதன்றே? 'போக்கியல் வகையே வைப்பெனப் படும்'என்றஇலக்கணத்தான் முற்கூறியவற்றையெல்லாந் தொகுத்து இதன்கண் வைத்தில்லாமையி னென்பது; அல்லதூஉம் அவ்வாறு முடிதலே யன்றி இன்னும் ஓர் கொச்சகம் பெய்து சொல்லி உறழ்ந்த வழியும் அஃதேற் பதாகலான், அஃது ஒருதலையாக அமைந்ததெனப்படாது;என்னை? 'அன்னதேயாயினுமாகமற்றாயிழாய், நின்னகை யுண்க முயங்குவாய் நின்னெஞ்ச, மென்னொடு நின்றதெனின்' என்றாற்போலப் பின்னுமொன்று தலைமகன் உரைத்தற்கு இடம் பட்டு நின்றமையின், இது போக்கியல் வகைத்தாகியவைப் பெனப்படா தென்க" என்பர் பேராசிரியர். நச்சினார்க்கினியரும் இதனையே தழுவிச் சுருக்கி யெழுதுவர்.

(பிரதிபேதம்) * அப்பொழுதே' நின்னெஞ்சு கலங்குவையாயின் வேறு, † இக்குறைகளை'
‡ ஈசெய்யினும். || போக்கின் றாதலு முறழ்.

௫ துயங்கி யிருந்தார்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றோ ருலகு
முரிதி னொருதலை யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
றருத றகையாதான் மற்று;

௧0 நனவிற் போலு நறுநுதா லல்கற்
கனவிற் சென்றேன் கலிகெழு கூடல்
வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரையணி காவி னகத்து;

௧௪ உரையினி, தண்டாத்தீஞ் சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன்மற்று நீ;

௧௬ கண்டது, உடனமர் ஆயமொ டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி யமையத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
லிறைகொண் டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்மணன் மேல்; ஒன்றி நிறைவதை

௨௧ ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா;

௨௫ கேட்டை, விரையணி மற்று வெகுள்வா யுரையாண்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்ததோர்
பூங்கொடி வாங்கி யிணர்கொய்ய வாங்கே
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தன்றக் காவிற்
றுனைவரி வண்டி னினம்;

௩0 மற்றாங்கே, நேரிணர் மூசிய வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந் துண்பபோ லோராங்கு மூச (௧)
அவருள்,
ஒருத்தி, செயலமை கோதை நகை
ஒருத்தி, யியலார் செருவிற் றொடியொடு தட்ப
௩ரு ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த திலகம்
ஒருத்தி, யரிமா ணவிர்குழை யாய்காது வாங்க

---

௧. இஃது ஆறுமெய்பெற்றதென்பதனால் இவ்வாறு பிரிக்கப்பட்டது.

ஒருத்தி, வரியா ரகலல்குற் காழகம்
ஒருத்தி, யரியார் ஞெகிழத் தணிசுறுத் தட்ப
ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப்ப விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்;

௪௨ ஒருத்தி, அடிதாழ் கலிங்கந் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயு மலந்து;

௪௫ ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றாள் பூண்ட
மணங்கமழ் கோதை பரிபுகொண் டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்;

௪௮ ஒருத்தி, இறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் கடியு
மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை;

௫௧ ஆங்க, கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்றார் வண்டிற்கு
வண்டலவர் கண்டே னியான்;

௫௫ நின்னைநின் பெண்டிர் புலந்தனவு நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினைஇயான்
செய்வதி லென்பதோ கூறு;

௫௬ பொய்கூறேன், அன்ன வகையால்யான் கண்ட கனவுதா
னன்வாயாக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினான் மேவர

௬௫ நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ டணியயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு.

இது பரத்தையிற்பிரிந்து வந்த தலைவன் வாயில்பெறுது ஆற்றமை வாயிலாகப் புக்கு, தலைவியை நயப்பித்தல் காரணமாகத் தெய்வமகளிர் *போய்தலயர்வதோர் கனுக்கண்டேன்; அது †நன்வாயாப் பருவம் வந்து இறுத்தது பாராயென ஊடறீர்வது பயனாகத் ‡தலைவிக்குக் கூறியது.

இதன் பொருள்.

‖ புனவளர் பூங்கொடி யன்னாய் கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி
மயங்கிமற் றாண்டாண்டுச் சேறலுஞ் செல்லா
௫ துயங்கி ÷யிருந்தோர்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றோ ருலகு
(க)முரிதி னொருதலை யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
┼றருத றகையாதான் மற்று

எ - து: புனத்திடத்துவளர்ந்த பூவையுடைய கொடியையொப்பாய்! (உ) ×பொருள்வயிற்சென்று முயலாதே வருந்தியிருந்தவர்களுக்கு அவர்கள் இருந்த இடங்களிலே இடங்களிலே மிக்க பொருளும் தானே செல்லுதலும் **அரிதாயிருத்தலாலே உலகம்தமக்குஉரித்தாக அறத்தைச்செய்யாது இப்படி இடக்கவும் அறஞ்செய்தற்கு அமைந்தோர் அறுதியாக அவ்வறத்தைச்செய்தலும் கனவிடத்தின்றுய்ப்போகத் தாம் முயங்கிய மகளிருடைய முலையினிடையிலே அழுந்திய இன்பத்தே மயங்கி விரும்புகின்ற கணவரை மகளிர் (௩) ஊடலாற் பிரிதலும் அப்பொழுதே ஊடறீர்ந்து புணர்தலுமாகிய தம்மின் †† மாறுன இன்பத்தைக் ‡‡கனவிடத்தே தருதலை விலக்காதாம்; இனி மிகுத்த காதலாற் கனவென்றுசொல்லப்பட்டது ஓர்அழகினையுடைத்தாகியநீர்மையையுடைத்தாயிருந்த தென்றான். எ - று.

க. 'உரிது' இந்நூற்பக்கம் சகூ௫: க-ஆம் குறிப்புப்பார்க்க.

உ. "சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது" (கலி. கஅ:௫) என்பதும் (ஆ) "மடியிலான் செல்வம்போன் மரனந்த" (கலி.௩௫: க.) என்பதும் அதன் குறிப்பில் இவ்விடத்துக்குப் பொருந்துவனவும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலன.

௩. "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங், கூடி முயங்கப் பெறின்" குறள். ௧௩௩௦.

(பிரதிபேதம்) *பொய்தலைடுவதோர், †நனவாய்ப்பருவம், ‡தலைவன் றலைவிக்கு, ‖புனம்வளர், ÷ இருந்தார்க்கு, ┼ தருதறகேயாதார் மற்று, × பொருள்வையிற் சென்று, **அரி தாயிருத்தலாலே, †† மாற்றுன, ‡‡கனவிடத்தே யொருதலை.

என்றது "இன்பமும் பொருளும் அறனும்"(க)என்றுஆசிரியர்கூறியஇலக்கணம்பற்றிச் சிறந்த இன்பத்தையே*தந்து ஏனை அறனும்பொருளுந் தாராமற் போயிற்று, † இக்கனவு; ஆதலால், அதனை ஓர் காரிகைநீர்த்தென்றான்.

‡ பொருளுமென்ற உம்மை, சிறப்பு. மற்று, அசை.

கம நனவினுற் போலு நறுநுதா லல்கற்
கனவினுற் சென்றேன் (உ)கலிகெழு கூடல்
(ஙு)வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த (ச)வையைக்
கரையணி காவி னகத்து

எ - து: நறிய நுதலினையுடையாய்! ஆரவாரம்பொருந்தின || மதுரையினுடைய வரையை மாறுபடுகின்ற நீண்ட மதிலிடத்தைச்சூழ்ந்த வையையாற் றங்கரையை அழகுபெறுத்தின பொழிலினிடத்தே நனவிடத்தே சென்றாற் போல இராப்பொழுதிலே கனவிடத்தே சென்றேனென்றான். எ - று.

கச உரையினி, (ரு)தண்டாத்தீஞ் சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன்மற்று நீ

எ - து: அதுகேட்ட தலைவி, அமையாத இனிய மென்மையினையுடைய (சு)நெடுந்தகாய்! பின்னைநீ அவ்விடத்துக்கண்டது எத்தன்மைத்து? ÷அதனை இனிச்சொல்லென்றாள். எ - று.

கரு கண்டது, உடனமர் ஆயமொ டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி யமையத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
லிறைகொண் ×டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்+மணன் மேல், ஒன்றி நிறைவதை

எ - து: அதுகேட்ட தலைவன், யான்கண்டது கேள்; அன்னங்கள் தன்னிடத்தைவிட்டுப்போகாத இமயமலையில்ஒருபக்கத்தே அழகியவிசும்பிலே

க. தொல். கள. ரு. க.

உ. "கலிகெழு கூடல்" சிலப். ௯௦: கசக.

ஙு. (அ) "கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி" பதிற். கரு: க. (ஆ) "இடங்கை நாமவேலை யாமெனு, மேக மொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த குன்றமென், முகநொன்றுநின் றுதாரை யம்மதிற்கண் வீசுமே" கம்ப. நகரப். கு.

ச. இந்நூற்பக்கம் ககசச: க-(௦) குறிப்புப் பார்க்க.

ரு. "தண்டாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப" கலி. கஅ: உ.

சு. இந்நூற்பக்கம் சக: க-ஆம் குறிப்புப்பார்க்க.

(பிரதிபேதம்) * தந்தனை யறனும், † கனவாதலால், ‡ பொருளும்உம்மை, || மதுரையினையுடைய, ÷ அதனைச்சொல், × இருந்தன நல்லாரை, + மணன்மேல். ஏ-து.

இரைகவர்ந்த இளைப்பால் ஓய்ந்து பறக்கும் மடப்பத்தையுடைத்தாகிய நடையினையுடைய அன்னத்திரள் அந்திக்காலத்தே தங்குதல்கொண்டிருந்த நன்மையவாக, துறை தன்னிடத்தேகொண்டு உயர்ந்த மணற்குன்றிலே நல்லார், தம்முடனே அமர்ந்த ஆயத்தாருடனே பொருந்தி நிறைந்திருக்கின்ற தனைக் கண்டேனென்றான். எ - று.

மா + இனம் மாயினமென மரூஉவான் (க) யகரவுடம்படுமெய் பெற்றது. அன்னவாகவெனவிரிக்க.

உக (உ)ஓர்த்த திசைக்கும் பறைபோனின் (ங)னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா

எ - து: அதுகேட்ட தலைவி, கொட்டுகின்றவன் தன்மனத்தில் ஓர்த்த ஓசையைத் தானும் ஒலிக்கும் பறைபோல நின்னுடைய நெஞ்சத்து விரும்பின இன்பத்தையே கனவாகக் கண்டாயென்றாள். எ - று.

உங கேட்டை, விரையனீ மற்று வெகுள்வா யுரையாண்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்ததோர்
பூங்கொடி வாங்கி பிணர்கொய்ய வாங்கே
(ச)சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தன்றக் காவிற்
றுனைவரி வண்டி னினம்

க. 'கோயில்' 'மாயிருஞாலம்' என வருதலையும் நோக்குக.

உ. "ஓர்த்த திசைக்கும் பறை" என்னும் பழமொழியும் "இரட்டுறு முரச மென்ன விசைத்ததே யிசைந்தின் றுயை" என்னும் கம்பர் வாக்கும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலன.

ங. "வானர மகளிரிற் றுனணுறி சுடர, முகைநலக் காந்தண் முகிழ்விர ளேவைத், தகைமலர்ப் பொய்கைத்தண்செங்கழுநீர், சில்லெனப்பிடித்து மெல்லென விழிந்து, நண்ண வருவோள் போலுமென்கஃ ணுற்றே னவட னஞ்சாந் தினமுலை, நோற்றே யாயினு நுகர்வல் யானெனத், தெய்வ நல்யாழ் கையமைத் தியற்றிய, வைதேந் தல்கு லவந்திகை வீவு, முறுதுணைத் தோழ னிறுதியு நினையான், மாண்ட சூழ்ச்சி மந்திர வமைச்சர், வேண்டுங் கொள்கைய னாகி நீண்ட, தடம்பெருங் கண்ணி தகைபா ராட்டி, யுரவகை யண்ண றறுகண் பொருந்தலுங், கைவயிற் கொண்ட கழுநீர் நறும்போது, கொய்மலர்க் கண்ணி கொடுப்போள் போலக், கனிவிற் றேன்ற" பெருங். (ங) எ: சக - சுடு.

ச. "சினையலர் வேம்பன் றேரா னாகி" சிலப். பதிகம். உஅ.

எ - து: அதுகேட்ட தலைவன், நீவிளையாதேகொள்; பின்னைக் கோபிப்பா யென்றான். அதுகேட்ட தலைவி மேல் உரையென்றாள். அதுகேட்ட தலை வன் இனிய நகையினையுடைய நல்லாய்! ஆண்டுப் பிறந்தது இதுவாயிருக் கும்;- அதனைக்கேள்; கொடியையொத்த அழகினையுடையார் தாம் அக்கா விடத்து எழுந்து நின்றதோர் பூங்கொடியை எல்லார்க்கும் பொதுவாகக் கொண்டு வளைத்து அதிற் கொத்துக்களைப் பறிக்க விரைந்த வரியினையுடைய வண்டின்றிரள் கொம்புகள் அலர்ந்த வேப்பந்தாரினையுடைய (க) * பொதி யிலையுடையவன் பொருத பகைப்புலத்து அரண்போல அவ்விடத்தே உடைந்தது. எ - று.

உடைந்தன்றென்பது, நகரம்ஊர்ந்த குன்றியலுகரவீற்று முற்றுச்சொல்; "வந்தன்று" (உ)என்பதுபோல.

ௐ.0 மற்றாங்கே, நேரிணர் மூசிய (ௐ)வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந் தூண்பபோ †லோராங்கு மூச
அவருள்,

க. பொருப்பென்பது பொதியின்மலைக்குப் பெயராய் வருதலை இந்நூற் பக்கம் கககு: க - ஆம் குறிப்பாலும் "பொருப்பு நறுஞ்சந் தனஞ்சேறு" (பிரபு. பிரபுதேவர். ௬0.) என்பதனாலும் அறிக.

உ. கலி. உ௬: உ௫; ௩உ: கஅ; ௩௩: அ; ௩௬: க0; க௬௩: ௬க.

ௐ. (அ) "வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்" (ஆ) "பூப்பிழைத்து வண்டு புடையாடுங் கண்ணினாய்" (இ) "எதிர்நீர் தாவு மிளையோர் திருமுகத், தாழ மிகவா வரிபரந் தகன்ற, மாழை யுண்கண் மலரென மதித்துத், தண்செங் கழுநீர்த் தகைமலர்த் தாது, மொண்செந் தாமரைப் பைம்பொற் றாது, மாராய்ந் துழிதரு மஞ்சிறை வண்டின, மோராங்கு நிலைபெற் றுண்ணெகிழ்ந் தவிழ்ந்த, போரா விவையெனப் போர்தல் செல்லா, மொய்த்தவின் மற்றவை மொய்ப்பினீங்கத், தத்தரிநெடுங் கண்டகைவிரல் புதைஇப், புதுமணமகளிரிற் கதுமெனத் தோன்று, மதுர மழலை மடவோர்க் காண்மின்"(ஈ)"ஆட்டு குங்குமக் கொழுங்களி யளாயசெங் கமலஞ், சேட்டிளங்கதிர் முலையென வொழிந்துவெண் டிங்கள், காட்டு வாணுதற் கன்னிய ரெழுதுசாந் தழிந்த, மோட்டு வெம்முலை முளரியென் றளிகுல மொய்ப்ப" (உ)"விரும்பித் தேனுகர் வீகளை யுந்தொறுங், கரும்பிற்றேமொழிக் காரிகை யார்முலைச், சுரும் புற் றார்ப்பவித் தோடவிழ் செவ்விய, வரும்பிற் றேனுமுண் பாமெனு மாசையால்" (ஊ)"களையக் கைகளை பற்று தொழுந்தொழி, லுளையப் பூவென் றொளிமுகம் பாய்வன, விளைமட் டேட்டலர் வீத னிறுத்துமத், தெளிவைத் தேறிய போற்சிறை வண்டினம்" என்பவை இங்கே அறிதற்பாலன.

(பிரதிபேதம்) * பொதியினையுடையவன். † ஓராங்காங்க மூசவவருள்.

ஒருத்தி, செயலமை கோதை நகை
ஒருத்தி, *யியலார் செருவிற் றொடியொடு தட்ப
ஒருத்தி, கெரிமுத்தஞ் சேர்ந்த (க)†திலகம்
ஒருத்தி, ‡யரிமா ணவிர்குழை யாய்காது வாங்க
ஒருத்தி, வரியா ||ரகலல்குற் காழகம்
ஒருத்தி, யரியார் ஞெகிழத் தணிசுறுத் தட்ப
(உ)ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப ÷விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்

எ - து: பின்னை அப்படியே உடைந்த, தம்மிலொத்த இணர்களிலே மொய்த்த வண்டுகளெல்லாம் அவ்விடத்து நின்ற அழகினையுடைய மகளிர் நலத்தைக் கைக்கொண்டு நுகர்வனபோல, ×ஒருபடிப்பட மொய்க்கையினாலே அவ்வண்டின் போரிலே அவர்களில் ஒருத்தியுடைய பூமாலையும் பண்ணுதலமைந்த முத்தமாலையும் வேறொருத்தியுடைய அசைதலார்ந்த தொடியோடே தடுத்துக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய நெற்றியிற் றிலகத்தைச் சேர்ந்த தலையிற் கிடந்த தெரிந்த முத்துவடத்தை வேறொருத்தியுடைய அழகினையுடைய காதிற்கிடந்த அழகுமாட்சிமைப்பட்ட விளங்குகின்ற மகரக்குழை துடக்கிக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய நிதலைநிறைந்த அகன்ற அல்குலிற் றுகிலை வேறொருத்தியுடைய உள்ளிடுமணியமைந்த சிலம்பிடத்திற் கிடந்த சுறுவடிவாகிய மூட்டுவாயிரும்புகள் (?) தளைத்துக்கொள்ளாநிற்க, ஒருத்திபுலவியாலே கணவனைப் புல்லாதிருந்தவள் வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கையினாலே +வருத்தமுற்று அப்புலவியை நடுவேவிட்டுக் கணவன் வணங்குகையினாலே அவனுடைய குளிர்ந்த மாலையையுடைய மார்பிடத்தே முயங்கும். எ - று.

**செயவெனெச்சங்கள் புகுமென்னும் பிறவினை கொண்டன.

சஉ ஒருத்தி, யடிதாழ்(உ)கலிங்கந் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் ††பாயு மலந்து

க. திலகமென்பது சாந்துமுதலியவற்றைக் குழைத்தணியும்நெற்றிக்குறிக் கன்றியும் ஓரணிகலத்துக்கும் பெயரென்று தோன்றுகிறது; 'ஒண்ணுதல் யாத்த திலக வவிரோடை" கலி. கஎ: கக. என்பதும் அதன் குறிப்பும் பார்க்க.

உ. (அ) "அகிலேந்துகூந்தலொருகையிலேந்தியசைந்தொருகை, துகிலேந்தி" (தஞ்சை. உஎ.) என்பதும் (ஆ) "புதல்வரை யொருகையாற் றழீஇப்,

(பிரதிபேதம்) * இகலார், † திலதம், ‡ வரிமாண், || அகலல்குலிற்காழகம். × ஒருபடிப் படிபொய்கையினாலே, + வருத்தமுற்ற புலவியை. **செய்தெனெச்சங்கள், †† பாயுமலர்ந்து.

எ - து: ஒருத்தி, அடியிலே தாழ்ந்த *துகிலே ஒருகையாலே தழுவிக் கொண்டு மற்றைக்கையாலே முடித்த முடி குலைந்த கரிதாகிய கூந்தலைப் பிடித்துக்கொண்டு அலவுற்று மிகுதியையுடைய பூ வேய்ந்த குளத்திலே பாயாநிற்கும். எ - று.

சரு (க)ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றுள் பூண்ட
மணங்கமழ் (உ)கோதை பரிபுகொண் டோச்சி
வணங்குகாழ் வங்கம் புகும்

எ - து: ஒருத்தி, திரட்சிகொண்டு வண்டுகள் மொய்க்கையினாலே கையாற் கடியமாட்டாளாய் மணம் நாறுகின்ற மாலையை அறுத்துக்கொண்டு ஓட்டி, அதற்கு(ந) அவை போகாமை கண்டு வளைந்த தண்டுகள் தனக்கு உதவியாக உள்ளே பூண்ட ஓடத்தே பாயும். எ - று.

காழ்பூண்டவென்க. பரிபு, † செய்பெனெச்சம்.

சஅ ஒருத்தி, இறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் (ச)கடியு
மிடந்தேற்றுள் சோர்ந்தனள் கை

பவழஞ் சேர்ந்த பல்காழல்குல, ரவிழ்ந்த பூந்துகி லங்கையி னசைஇ, நகைப்பூங் கோதையொடு நான்ற கூந்தற்கு, மிகைக்கை காணுது...... பொய்கை புக்கனர்" (பெருங். (க)சங:கசரு-கருஉ) என்பதும் காண்க.

க. "பொறிவரி வண்டினம் புல்லுவழி யன்றியு, நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்கு" என்புழி, புல்லுதல் என்பதற்கு, இன மென்று புல்லுத லென்று பொருள் கூறி, "ஒருத்தி கணங் கொண்டவை...... ..... கொண்டோச்சி", "ஒருத்தி, இறந்த...........சோர்ந்தனள் கை" என்பவற்றை மேற்கோள்காட்டினர் அடியார்க்குநல்லார்; சிலப். கஙு: கஙச - கசரு. உரை.

உ. (அ) "வண்டே வம்மருங்கு ளேமென்று பூமாலை, கொண்டோச்சுங் காதலார்" (ஆ)"கற்பெனு மாலை வீசி நாணெனுங் களிவண் டோப்பிச், சொற்புக ரின்றித் தோழிக்கறத்திறே டரிவை நின்றாள்" சீவக. கஎOO, உOஎங.

ங. (அ) "நதியினுங் குளத்தும் பூவா ளினங்கள் குவளை யோடு, நுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி, யதிசய மெய்தி வீழ்ந்தன வலைக்கப் போகா, புதியன கண்ட போழ்து வ புதுமை பார்ப்பார்" கம்ப. பூக்கொய். க. (ஆ) "கோல ங கொய்பவ ளங்கையி, லோவி டுஞ்சுரும் போச்சவும் போ லுழந்து மறிந்து விழுவன" நைடத. போதுகொய். கச.

ச. (அ) "நட்பாட றேற்றுதவர்" என்புழி, தேற்றுமை தன் றற்கு,"கடியு, மிடந்தேற்றுள் சோர்ந்தனள் கை" ... க

(பிரதிபேதம்) * துகிலினை, † செய்தெனெச்சம்.

எ - து: ஒருத்தி அறிவுபோதற்குக் காரணமான (க)*கள்ளின்களிப்பால் நிமை கூடுகையினாலே † பார்வை மறைந்த கண்ணையுடையளாய்ப் பறந்த வண்டுகள் மொய்க்க ஓட்டுகின்றவள் தன் களிப்பாலே அவற்றை ஓட்டுமிடம் அறியாளாய்க் கைசோர்ந்தாள். எ - று.

கைசோர்ந்தனள்; வினைவினை, முதலொடு முடிந்தது.

௩க ஆங்க, உரையசை ; அங்ஙனே ‡யெனநின்றது.

(உ)கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்றார் வண்டிற்கு
||வண்டலவர் கண்டே னியான்

எ - து: விளையாட்டையுடைய மகளிர், மிகுதியையுடைய பொழிலிலே காற்றடிக்க ஒதுங்கி வளைந்து கொடியுங் கொடியும் தம்மிற் பிணங்கியவை போலத் தெரிந்த அணிகள் ஆரவாரிப்பத் தம்மிலேமயங்கி அவ்வண்டுகளுக்குக் கெடுதலுற்றார்; யான் கனவைக்கண்டேனென்றான். எ - று.

௩௫ நின்னைநின் பெண்டிர் புலந்தனவு (௩)நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினைஇயான்
செய்வதி லென்பதோ கூறு

குறள். ௧௪௭. பரி. (ஆ) "தேற்றாப் புன்சொ னோற்றிசிற் பெரும" புறம். ௨௦௨: ௧௬.

க. (அ)"அந்தீந் தேறன் மாந்தினர் மயங்கிப், பொறிவரி வண்டினம் புல்லு வழி யன்றிய, நறுமலர் மாலையின் வறிதிடங் கடிந்தாங்கு" சிலப். ௧௪: ௧௩௩ - ௧௩௫. (ஆ) "கூடிய நறைவாயிற் கொண்டன விழிகொள்ளா, மூடிய களிமன்ன முடுகின நெறிகாணா, வாடிய சிறைமாவண் டந்தரி னிசைமுன்னாப், பாடிய பெடைகண்ணா வருவன பலகாணாய்" கம்ப. வனம்புகு. ௧௩.

உ. (அ) கடியென்னும் உரிச்சொல் காப்பு என்னும் பொருளில் வருதற்கு, 'கடிகா' என்பது மேற்கோள்; தொல். உரிச். சூ. ௮௭. சேனா. (ஆ) "உறுகா லொற்ற வொல்கி" நற். ௩௦௦: ௩. (இ) "கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு, வீற்றுவீற் றோடு மயிலினம்போ- லாற்றிசையுங், கேளி ரிழந்தா ரலமருப" களவழி. ௨௧.

(௩) "நீயே னலேனென்று மற்றவள், சீறடி தோயா விறுத்தது" கலி. (பிரதிபேதம்) * ௧௮.

படி. ...பால், † பாவை மறைந்த. ‡ எனவென்றது, || வண்டலவாய

எ - து: அதுகேட்ட தலைவி, நின்னை நின்னுடைய பெண்டிர் புலந்தன வற்றையும் நீ அவருடைய அடிமுன்னே வணங்கிப் புலவிதீர்த்தனவற்றையும் (க)பலபடியாகக் கனவின்மேலிட்டுக் கூறுதல், யான் *சினந்து செய்வதொரு படிநின்றென்பதனை உட்கொண்டோ? சொல்லென்றாள். எ - று.

உரையல், படுத்தலோசையாற் றொழிற்பெயராயிற்று.

ருசு பொய்கூறேன், †அன்ன வகையால்யான் கண்ட ‡கன புதா
னன்வாயாக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
(உ)கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி ||னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினான் மேவர
சுரு நான்மாடக் கூடன் (ஙு)மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடமா
ராணு விருப்போ டணியயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு

எ - து: அதுகேட்ட தலைவன், யான் பொய்சொல்லேன்; நறிய நுதலினை யுடையாய்! பல மாட்சிமையும் உண்டாய்ப் புணர்ந்தீர் பிரியாதேகொள்ளும்;

க. இந்நூற்பக்கம் உஅ: ங - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. (அ) "புணர்ந்தீர் புணர்மி னோவென விணர்மிசைச், செங்க ணிருங் குயி லெதிர்குரல்பயிற்று, மின்ப வேனிலும்வந்தன் று"(ஆ)"பொதும்பு தோ ற்றல்கும் பூங்க ணிருங்குயில், கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க் கையிட், டகற லோம்புமி னறிவுடை யீரெனக், கையறத் துறப்போர்க் கழறுவ போல, மெய்யுற விருந்து மேவர நுவல" நற். உஉச: ச - சு. உசங: ச - அ. (இ)"ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை, கூடுமி னென்று குயில்சாற்ற - நீடிய, வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக், கானற்பா ணிக்கலந்தாய் காண்" சிலப். அ. இறுதி.

ங. (அ) "தேவியருந் திருமாலுஞ் செழுமலர்த்தார்த் தனஞ் சயனுந் தேவி மாரு, மேவியனந்தரம்வேனில் விழவயர்வான்முரசறைந்து வீதிதோறு, மோவியமு முயிர்ப்பெய்தவுபேந்திரனுமிந்திரனுமுவமைசாலப்,பூவின முஞ் சுரும்புமெனப் புரமுழுதும் புறப்படவண் பொங்கர் சேர்ந்தார்" வில்லி. வசந்தகாலச்: ச. (ஆ) "விருந்து வேனிலாற் கெதிரிய விரை மலர்க் காவு, முருந்து வாணகை முகிழ்முலை மடைந்தையோ டாடிப், பொருந்த விண்ணிடைப் போகமுண் டிவந்தனர்போன்றான்" நைடத. அரசாட்சி. கரு. (இ) கலி. உஎ: உச, ஙO: கங - கச, ஙரு: கங-கச.

(பிரதிபேதம்) *சினத்து. †அனவகை,‡கனவுத்தா, னனவாகக்கண்டை.|| நீடிப்புணர்தம்மின்.

புணர்ச்சி நீட்டித்து இடையே பிரிந்தீர்! கூடுதலைத் தருமினென்று கூறுவன போல, கரியவாகிய குயில்கள் அரும்பு அவிழ்ந்த பூக்களையுடைய கொம்புக டோறும் இருந்து அமையாமற் பெடையை அழைக்கும் இளவேனிற்பொழு தின் கண்ணே காமற்கு விருந்திடுதலை மேவுதல்வர எதிர்கொண்டு கூடலின் மகளிரும் அவர் கணவரும் தேனினம் ஒலிக்குங் காவிலே கூடியிருந்து விளை யாட வேண்டி அமையாத விருப்பத்தோடே அணிகளை அணிவார்; ஆதலாற் பிரிதலும் புணர்தலுமாகிய கூற்றாலே யான்கண்ட கனவு நன்றாகிய உண்மை யாம்படி நெஞ்சாலே(க)கருதுவாயென்றான். எ - று.

கனவு(உ)செய்யுண்முடிவு. (ங)நான்கு மாடங்கூடலின், நான்மாடக்கூட லென்றாயிற்று; அவை: திருவாலவாய்,திருநள்ளாறு,திருமுடங்கை,திருநடுவூர்.

க. காணுதல், கருதுதலென்னும் பொருளிலும் வருதல்: கலி. ௬௦: உ௩.

உ. தொல். உயிர்மயங்கியல். சூ. ௩உ.

௩. (அ) "நான்மாடக் கூட லெதிர்கொள்ள" பரி. 'வானாறெழிலி' ௩. (ஆ) "தென்னவ, னான்மாடக் கூட னகர்" பரி: உலகம்: ௩ - ௪. (இ) "உம்பரு நாக ருலகந் தானு மொலிகடல் சூழ்ந்த வுலகத் தோரு, மம்புத நால்களா னீடுங் கூட லாலவா யின்க ணமர்ந்த வாறே" தே. (ஈ) "நன்றறிவார் வீற்றிருக்கு நான்மாடக் கூடல்வள நகரி யாளும், வென்றிபுனைவடிசுடர்வேன்மீனவனை"வில்லி.அருச்சுனன்றீர்த்த.உக. (உ) "வியந்தநான் மேகக் கூடல் விளங்கு நான் மாடக் கூடல்" (ஊ) "வாடுவோர் தம்மைப் போற்ற வயங் கொளி மாநகர்க்கட், கூடருமேக நான்கு மாடமாக் கூடலாலே, நாடவ ரதிசயிப்ப நான் மாடக் கூட லென்று, பீடுடை நகர்க்கு நாம மெங்கணும் பிறங்கிற் றன்றே" திருவால. திருநகர. க. நான்மாடக் கூடலான: கஉ. (எ) "முன்னவன் முன்போ னன்கு முகிலையு நோக்கி யின்ன, தொன்னக ரெல்லை நான்குஞ் சூழ்ந்துநான் மாட மாகி, வின்னெடு மாரியேழும் விலக்குமி னெனவி டுத்தான்", "வந்துநான் மாட மாகி வளைந்துநாற் றிசையுஞ் சூழ்ந்து, சந்துவாய் தெரியா தொன்றித் தாவொரு குடிலாய் மாடப், பந்திகோ புரஞ்செய் குன்றங் கால்கள் போற் பரிப்பப் போர்த்த, விந்துவார் சடையோ னேய வெழிலிமா நகரமெங்கும்", "அன்னநான் மாடத் துள்ளு நகருளா ரமைச்சர் வேந் தன், றன்ன நாற் கருவித் தானை சராசரம் பிறவுந் தாழ்ந்து, முன்னை நா டனினு மின்ப மூழ்கினன் கிருந்தார்" திருவிளை. நான்மாடக் கூட லான. க௪ - க௬. என்பவைகளும் (ஏ) "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்..........மதுரை" (மது. ௪உக - ௬கக) என்பதற்கு, 'நான் மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலையுடைய மதுரை' என்று இவர் எழுதியிருக்கும் உரையும் (ஐ) இந்நூற்பக்கம் க௬௪: உ-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

இனி,(க)கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம். புணர்தம்மின்: "நல்லெயி லுழந்த *செல்வர்த் தம்மின்" (உ)என்றாற்போலத் திரிசொல்.

இஃது, † "உறலருங் குண்மையி னூடன் ‡ மிகுந்தோளைப், பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்" (௩) என்பதனாற் பிறபிற பெண்பால் காட்டி || ஊடறீர்த்தது. புல்லாதிருந்தாளென்றதனான் ஊடன்மிகுதி கூறி, மகளிருமைந்தரும் விருந்தெதிர்கொண்டுஅணியயர்வர்; நாமும் ÷ அதுசெய்ய வேண்டுமென்றவாறு காண்க.

இதனால், தலைவற்குக் கனவு முதற் றோன்றிப் பின்னர் விரைவுதோன்றிற்று. இது "யாறுங் குளனுங் காவு மாடி" என்னுஞ்(௪)சூத்திரத்தாற் காவிற் புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவிக்குக் + கூறியது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா; ஆசிரியத் தளையும் வந்தது. (உஎ)

(௬௩.) வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப

க. (அ) "வடதிரு வால வாய்திரு நவ்வூர்............கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை" கல். ௬க. (ஆ) "காய்சின மயிடற் காய்ந்த கன்னிமுன் காக்கு மூதூர்" (இ) "கனகவெண் சங்கச் செங்கைக் கரியமால் காக்கு மூதூர்" (ஈ) "சீருடைக் காளி நாமச் செல்விமுன் காக்கு மூதூர்" (உ) "ஆலவாய்த் தரும மூர்த்தி, யெங்கிலத் தினுமுயர்ந்த திங்கில மென்று தோன்ற, மன்னுமைக் குரைத்து மற்றை மாதிரங் காக்கு மூதூர்" திருவால. திருநகரச்சிறப்பு. கஉ - கரு.

உ. மது. எ௬க.

௩. (அ) தொல். கற்பி. சூ. ரு. இதனுரையில், தலைவன் பிறபெண்டிரேதுவாக ஊடன்மிக்கவளை ஊடலுணர்த்தியதற்கு, "ஒருத்தி புலவியாற்.........அகலம்புகும்" என்பதை மேற்கோள் காட்டினர் இளம்; (ஆ) நச்சினார்க்கினியர் இதனோடு "அன்னவகையால்...........கொண்டு" என்பதையுஞ்சேர்த்துக்காட்டி, 'புல்லாதிருந்தாளென்றதனான்ஊடன்மிகுதிதோன்றுவித்து, மகளிருமைந்தரும் வேனில் விழாச்செய்கின்றார்; நாமும்அதுசெய்யவேண்டுமென்றுகூறியவாறுகாண்க' என்றனர்.

௪. தொல். கற். சூ. ருo. (அ) இச்சூத்திரத்தின் இவருரையில் இச்சரிதகம் காவிற் புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவன் தலைவிக்குக் கூறியதற்கு மேற்கோள். (ஆ) தொல். புறத். சூ. ௩உ. இவருரையில், "இதனுள் ஆறுகூறினார்; 'புனவளர் பூங்கொடி' என்னு மருதக் கலியுமது" என்று காணப்படும் பகுதி இங்கே ஆராய்தற்பாலது.

(பிரதிபேதம்). * செல்வந்தம்மின். † உறலருங்குடைமையின், உறலருங்குறைமையின், ‡ மிகுத்தோளை, || ஊடறீர்த்தான், ÷ அதுவேண்டுமென்ற விற்றாற்காண்க, + கூறினான் இது மூச்சீரடுக்கியும்.

பண்டின்னை யல்லைமன் னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை;

௫ நன்றும், தடைஇய மென்றோளாய் கேட்டிவா யாயி
னுடனுறை வாழ்க்கைக் குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கி னேன் ;

௮ சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்நீ
கடவுண்மை கொண்டொழுகு வார்;

௧௦ அவருள், எக்கடவுண் மற்றக் கடவுளைச் செப்பிமன்
முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கா
லிப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
வக்கடவுண் மற்றக் கடவு ளதுவொக்கும்
நாவு ளழுந்து தலைசாய்த்து நீகூறு
மாயமோ கைப்படுக்கப் பட்டாய்நீ கண்டாரை
வாயாக யாங்கூற வேட்டிவாய் கேளினி ;

௧௭ பெறனசை வேட்கையி னின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகாராகக் கண்டார்க்
கிறுமுறை செய்யு முருவொடு நும்மிற்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ ;

௨௧ நறுந்தண் டகரமு நானமு நாறு
நெறிந்த குரற்கூந்த னாணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளுங் கண்ணொடு மேனாணி
பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ ;

௨௫ ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளு
மாராக் கனைகாமங் குன்றத்து நின்னொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ ;

௨௯ கண்ட கடவுளர் தம்முளு நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேருகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுதக்காய்
தேறினேன் சென்றீநீ செல்லா விடுவாயே
னற்று ரகலத்துக் கோர்சார மேவிய

நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

இது "காவற் பாங்கி னாங்கோர் பக்கமும்" (க) என்புழி, ஆங்கோர் பக்கமான (உ) கடவுளரைக்கண்டு தங்கினேனென்ற தலைவற்கு நீ கண்ட கடவுளர் இவரெனக் கூறிப் புலந்தது.

இதன் பொருள்.

(௩)வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய
(௪)தண்டாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப
பண்டின்னை யல்லைமன் னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை

எ-து: அமையாத இனிய மென்மையினையும் *பரத்தைமைக் குணத்தையு முடைய, வண்டுகள் ஊதுஞ்சந்தனத்தைக் கை வடுக்கொளப் பூசின அகற்சியை யுடைய மார்பனே! முன்பு இத்தன்மையையுடையையல்லை; (௫)அத்தன்மை போயிற்று; இவ்விடத்து இராக்காலத்தேவர நீ புறத்துப்போய்க் கண்ட விநோதம் எத்தன்மைத்து? பின்னை அதனைக் கூறென்றாள். எ - று.

௫ நன்றும், (௬)தடைஇய மென்றோளாய் கேட்டீவா யாயி
(௭)னுடனுறை †வாழ்க்கைக் குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கி னேன்

க. தொல். அகத். சூ. ௪௧.

உ. கடவுளர்மாட்டுப் பிரிந்து வந்த தலைமகனைத் தலைவி புணர்ச்சி மறுத்தற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டி, இது புணர்ச்சிக்கு உடன்படாது கூறியதென்றும், கலித்தொகையில், கடவுட் பாட்டினுள் உரிப்பொருண்மைபற்றிவரும்பாட்டு மருதநிலத்துத் தலைமகன்பெயர் கூறாது பிறபெயர்படக் கோத்தமையானும் ஊடற்பொருண்மையின் வேறுபாடுண்மை அறிகவென்றும் கூறுவர் இளம்பூரணரும்; தொல். அகத். சூ. ௪௪. 'ஒன்றாத்தமரினும்'

௩. 'வண்டூதுதல்' சீவக. ௧௭௦௦; நள. சுயம்: ௬௬; காஞ்சீ. சித்திரப். க.

௪. "தண்டாத்தீஞ் சாய னெடுந்த காய்" கலி. ௬௨: ௧௪.

௫. "கழிவே.........என்ப மன்னைச் சொல்லே" தொல். இடை. சூ. ௪.

௬. (அ) "அம்பணைத் தடைஇய மென்றோள்" நெடுநல். ௧௪௬. (ஆ) "தடைஇத் திரண்டநின் றோள்" அகம். ௨௧௮: அ: என்பவையும் (இ) "தடையின திரண்டதோள்" (கலி. ௪௫: ௧௫.) என்பதும் அதன் குறிப்பும் ஒப்புநோக்கற்பாலன.

௭. "உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்" மணி. உ: ௪௭.

(பிரதிபேதம்) * பரத்தமை. † வாட்கை.

எ-து: அதுகேட்ட தலைவன், (௧)பெரிதும் பெருத்த மெல்லிய தோளினை யுடையாய்! யான் கூறுகின்றதனைக் (௨)*கேட்பாயாயிற்கேள்; யாம் இருவரும் போய் உடனே†துறவகத்திருக்கும்வாழ்க்கைக்குஉதவியாயிருக்குங்கடவுளரைக் கண்டு அவரிடத்தே தங்கினேனென்றான். எ - று.

இல்லறம் நிகழ்த்தி வானப்பிரத்தம் நிகழ்த்துங்கால் உடனுறைதலின் உடனுறைவாழ்க்கையென்றான். நூல்களான் உணர்த்துதலை உதவியென்றான். அது,"காமஞ்சான்ற" என்னும்(௩)சூத்திரத்தில், "சிறந்ததுபயிற்ற‡லிறந்ததன் பயனே" என்பதனு னுணர்க.

அ சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்நீ
(௪)கடவுண்மை கொண்டொழுகு வார்
௧௦ அவருள், எக்கடவுண் மற்றக் கடவுளைச் செப்பீ மன்

எ - து: அதுகேட்ட தலைவி, கடவுட்டன்மை உண்மையாகக் கொண்டு நடத்துவார், சோலையில் மலரைச் சூடின மான்பிணைபோலும் நோக்கினை யுடைய ||பரத்தையர் பலருளர்; அப்பரத்தையருள் நீ கூறிவந்தகடவுள் எந்தக் கடவுள்? அக்கடவுளைச் சொல்லுவாயென்றாள். எ - று.

மற்று, வினைமாற்று.

(௫)முத்தேர் முறுவலாய் நா(௬)மணம் ÷புக்கக்கா
+லிப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
×வக்கடவுண் மற்றக் =கடவுள்

௧. "நன்று பெரிதாகும்" "தடவும்......பெருமை" தொல். உரி. ௪௫, ௨௨.

௨. இப்பொருளுக்கு மூலமாகிய "கேட்டவாயாயின்" என்பது வினையெச்ச வினைத்திரிசொல்லுக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. ௬௧.நச்.

௩. தொல். கற்பி. சூ. ௫௧.

௪. கலி. ௬அ: ௧௩-ஆம் அடிக்குறிப்பிலுளதாகும். அம்பிகாபதிகோவை. ௫௧௦-ஆம் செய்யுள் இங்கும் அறிதற்பாலது.

௫. (அ)"தொன்முதுகடவுள்" என்புழி, இருடியைக் கடவுளென்று கூறிய தற்கு, "முத்தேர்............மற்றக் கடவுள்" என்னும் பகுதியை மேற் கோள்காட்டினர் நச்; மது. ௪௦ - ௪௨. உரை. (ஆ) "முத்தேர் முறுவலாய்" கலி. ௬௪: ௨௧; ௬எ: ௬. இந்நூற்பக்கம் ௩௬௦: ௨ - ஆம் குறிப்புப் பார்க்க.

௬. (அ)"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ......... வந்தனன்" (கலி.௩௧:௪௬-௫௦) என்பதும் அதன்உரையும்,(ஆ)"பல்லா

(பிரதிபேதம்) *கேட்பையாயின்யாம். † துறக்கத்து, ‡ இறந்தது, || பரத்தையர் அவருள்நீ, ÷ புக்ககால். + இப்பொழுது பொழுதென், × எக்கடவுள், = கடவுளது வொக்கும், நாவு.........கேளினி. எ - து. பின்னை.........உளவாகலின், அதுகேட்ட.........கூறினள், உள்ளேயழுந்து.

எ - து: பின்னை அந்தக் கடவுள், முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நாம் மணத்தைச் செய்ய இப் பொழுது *முகுத்த மென்று (க)அம் முகுத்தம் வாய்ப்பச்சொன்ன அந்தக் கடவுள் காணென்ருன். எ - று.

புக்கக்கால், காலீற்று வினையெச்சம். முற்கூறிய கடவுடன்னையே இவள் அறியுமாற்ருன் மீட்டுங்கூறினன்; அவற்கு எல்லாக் கண்களும் உளவாகலின்.

அதுவொக்கும்

எ - து: அதுகேட்ட தலைவி, நீ கூறியது எனக்கும் ஒக்குமெனத் தன தொவ்வாமை கூறினள். எ - று.

நாவு ளழுந்து தலைசாய்த்து நீகூறு
மாயமோ கைப்படுக்கப் பட்டாய்நீ கண்டாரை
வாயாக யாங்கூற†வேட்டீவாய் கேளினி

எ - து: ‡உள்ளே அழுந்துநாவுடனே தலையைச்சாய்த்து நீகூறுங்கூற்ருே பொய்; ஆகையினுலே நீ எம்மால் அகப்படுக்கப்பட்டாய்; நீ கண்ட கடவுளரை உண்மையாக யாங்கள் சொல்லக் கேட்க விரும்பியவனே! இனி யாங்கள் கூறக்கேளென்ருள். எ - று.

௧௭ பெற(உ)ன்னைச் வேட்கையி னின்குறி வாய்ப்பப்
(ங)பறிமுறை நேர்ந்த (௪)||நகாராகக் கண்டார்க்

ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல்யாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியற், காதன் மனையாளும்" நாலடி. அ௬. (இ) "நாள் கூட்ட மூர்த்த மவற்ருெடு நன்ருய, கோள் கூட்டம் யோகங் குண னுணர்ந்து - தோள் கூட்ட, லுற்ருனு மல்லானு மைந்து முணர் வானுற், பெற்ருனுட் கொள்க பெரிது" சிறுபஞ்ச. ௪௪. (ஈ) "கணி மொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்" நள. சுயம்வர. ௧௬௫.
என்பவைகளும் இங்கே அறிதற்பாலன.

க. (அ) "புள்வாய்ப்புச் சொன்ன கணி" சிலப். ௧௨: 'முருந்தேர்' (ஆ) "புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்" பு - வெ. வெட்சி. ௧௪.

உ. (அ) "நின்னசை வேட்கையின்" புறம். ௩: ௨௪; (ஆ) "நீர்நசை வேட்கையின்" மணி. ௨௩: ௧௧௨.

ங. (அ) "செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின" குறுந். ௩௩௭. (ஆ) "பல்லின், பறிமுறை பாராட்டினையோ" கலி. ௨௨: ௧௦ - ௧௧.

௪. நகாரென்பது எயிற்றின் பெயராதலை, "மடவோர், நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்" (சிறுபாண். ௫௬ - ௫௭) என்பதனுலும் அதன் உரையாலும் அறிக.

(பிரதிபேதம்) * முகூர்த்தமென்று வாய்ப்ப, † கேட்டீவாய் கேளினி, ‡ உள்ளேயழுந்து, உரையழுந்து. || நகராகக்கண்டார்க்கு, நகையராக்கண்டார்க்கு.

இறுமுறை செய்யு முருவொடு நும்மிற்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ

எ - து: நின்னைப் பெறுதலை நச்சின ஆசையாலே நீசெய்த குறியிடத்தே தப்பாமல் வந்த கடவுள்; கண்டவர்களுக்குஇறந்துபடும்நிலைமையைச் செய்யும் வடிவோடே (க)விழுந்தெழுந்த முறைமை சேர்ந்த எயிற்றினையுடையராய் நும்மனையிடத்தே சேரும் முறைமையோடே வந்த கடவுளரை நீ கண்டாயோ வென்றாள். எ - று.

* நகார், ஆகுபெயர்.

(உ)பொருளதனைப் பெறுதல்நச்சின ஆசையாலே நின்மனத்திற் கருதிய கருத்துக்களெல்லாம் வாய்ப்பப் பறிந்துபோம் முறைமையைச் சேர்ந்த † கடவுள்; மனவேட்கையை அடக்கும் ‡முறைமையை இகழாராய்த் தம்மைக் கண்டவர்களுக்குத் தீவினை இறும் முறைமையைக் கொடுக்கும் வடிவுடனே நும் இல்லிடத்தே வந்த கடவுளரைக் கண்டாயோ || வென வேறுமொரு பொருள் தோன்றியவாறு ÷காண்க.

வாய்ப்பப் பறிமுறையென்றார், வேரோடே பறிதலின். செறிதல்-அடக்கம்; + நகை, எள்ளல்.

உக நறுந்தண் டகரமு நானமு நாறு
நெறிந்த குரற்கூந்த னாணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளுங் கண்ணொடு மேனாணீ
(ங)× பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ

க. "கூரெயிற்று முகை வெண்பல்" (கலி. ௬அ: ச) என்பதும் அதன் உரையும் அவ்வுரையின் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

உ. பேரருளதனை யென்றும் படிக்கலாம்.

ங. (அ) "பூப்பலி செய்ம்மின்" (ஆ) "ஒண்டொடித் தடக்கையி னொண் மலர்ப் பலிதூஉய்" (இ) "பூப்பலி செய்து" (ஈ) "வெண் மருப் பிரட்டைய வேழ மீமிசைக், கண்மருட் டுறுப்பன கமலப் பூப்பலி, விண்மருட் டுறப்பன வேந்தி வேதியர், மண்மருட் டுரப்பதோர் வகை யின் மன்னினர்" (உ) "பேரொளிப் பீதக வுடையர் பைம்பொனு, லாரொளிதழுவியவலர்செய்பூப்பலி, போரொளியானைமே னிரைத்துப் போந்தனர்" (ஊ) "நிரந்தன ! பூப்பலி" (எ) "நிரந்து தேனிமிர் பூப் பலி" (ஏ)"சங்கொடு சிலம்பு நூலும் பாதசா லகமுந் தாழப், பொங்கு

(பிரதிபேதம்) *நகராகுபெயர் பொருளதினை, (நகை ஆகுபெயர்நகரென்றும் பாடம்என்பது முன் பதிப்பு,) † கடவுள், வாய்ப்பப்பறியவென்றார் வேரோடே பறிதலின் மனவேட்கை ‡ முறையை, || என்று, ÷. காண்க செறிதல். + நகை எள்ளல். × பூப்பலியிட்ட,

எ - து: பார்வையாலே பிணித்தலைக் கொள்ளும் கண் வருத்துத லாலே நறிய [தென]குளிர்ந்த * மயிர்ச் சாந்தமும் புழுகும் நாறும் அறல்பட்ட (௧) பற்றத்தையுடைத்தாகிய மயிர்க்கு நாட்காலத்து அணியும் அணிக்குப் பொருந்த நீ முதலுட் பூவைப்†பலியாகப்போகவிட்ட கடவுளரைக் கண்டாயோ வென்றாள். எ - று.

ஒடு, ஆலாக்குக. மேல், கடவுளென்றதற்கேற்பப் பலியென்றார். அரு ளோக்கினாற் பிணியை வாங்கிக்கொள்ளும் ‡ கண்ணினராகையாலே கூந்தலை யுடையாள் நாட்காலத்து அணிதற்கேற்பப் பூப்பலியைக் கைவிட்டு அர்ச்சித்த கடவுளரென்பதும் ஒன்று. கூந்தல், ஆகுபெயர். || பராசத்தியைப் பூவால் அர்ச்சித்த கடவுளரென்றுணர்க. நீ கண்டாயோவென்க.

௨௫ (௨)ஈராணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளு
மாராக் கனைகாமங் குன்றத்து நின்றொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ

எ - து: கெடாத விரதத்தாலே முகங் குதிரைமுகமும் உடல் மக்க ளுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மாவைக் கொன்ற சிவந்த வேலையுடைய முருகனைப் புகழ்ந்து நிறையாத செறிந்த காம வேட்கை யாலே திருப்பரங்குன்றினிடத்தே நின்னோடே மாரிக்காலத்தே பலநாளுந் தங்கின கடவுளரைக் கண்டாயோ வென்றாள். எ - று.

இனி, 'பெண்ணும் ஆணும் ஆகிய இரண்டு × அழகினுக்கும் பொருந்திய செவ்விதாகிய (௩)+ எழுச்சியையுடைய இறைவனை அமையாத செறிந்த வீடு பேற்றில் ஆசையாலே பலநாளும் புகழ்ந்து கொடுந்தொழில்களைக் கொன்ற

பன் முரச மார்ப்ப வில்லுறை தெய்வம் பேணிக், கொங்கலர் கூந்தற் செவ்வா யரம்பையர் பாணி.கொட்டி, மங்கள கீதம் பாட மலர்ப்பலி வகுக்கின்றாரை" என்று பூப்பலி பலநூல்களிலும் கூறப்படுதல்காண்க.

௧. பற்றம் - கொத்து; கற்றையென்றும் கூறப்படும்.

௨. (அ) "இருபே ருருவி னொருபே ரியாக்கை........மாமுத றடிந்த மறு வில்கொற்றத், தெய்யா நல்லிசைச்செவ்வேற் சேஎய்" முருகு. ௫௭-௬௧. (ஆ) "ஈருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்" தொல். செய். சூ. ௧௫௨. பேர். நச். மேற்கோள்; 'செஞ்சுடர்'

௩. எல் என்பது எர் என்பதுபோலவே எழுச்சி யென்னும் பொருளில் வருதலை(அ)'எல்பெற்று' (சீவக. ௩௦௨.) என்றதற்கு, இவர் 'எல்-மன வெழுச்சி' என்று சொற்பொருள் குறித்து உணர்ச்சிபெற்று, என்று கருத்துரைஎழுதியிருப்பதும்,(ஆ)"எதிர்மலர்க்குவளையிடுநீர்சொரிந்து,

(பிரதிபேதம்) * மயிர்ச்சந்தனமும், † பலியாகவிட்ட, ‡ கண்ணுடையா ராகையாலே, || பாசத்தியைப், × அழகுக்குப்பொருந்தின. + எழுச்சியுடைய.

கெடாத விரதத்தோடே மலைகளிலே மாரிக்காலத்திலேநின்றேடுஉறவுகொண்டிருந்த தவஞ்செய்த கடவுளரைக்கண்டாயோவென்பதும் ஒன்றுதோன்றிற்று. சத்தியுஞ் சிவனும் ஒன்றாகிய வடிவைப் பாடி என்க. நின்றெடென்ற ஒடு விற்கு உறவு கொண்டிருந்தவென ஒரு வினை வருவிக்க.

௨௯ கண்ட கடவுளர் தம்முளு நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறாகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
(௧)சிறுவரைத் தங்கின் வெகுள்வர் *செறுதக்காய்
தேறினேன் சென்றீநீ†செல்லா விடுவாயே
(௨)னற்றா ரகலத்துக்‡கோர்சார மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

எ - து: நீ கண்ட கடவுளர் தங்களுள்ளும் நின் மணத்தைத் தன்னிடத்தே கொண்ட அகலத்தையுடைய மார்பைப் பழையதன்மை குலைந்து போம்படி பண்ணிப் பிறர்முயங்காதபடி அடையாளமாக வடுப்படுத்துதலைச் செய்தார் யார் சொல்லு; ||பின்னை அப்பரத்தையர் யாவரும் சிறிதாகியகாலத்தளவு இங்கேதங்குவையாயின் ÷கோபிப்பார்; ஆகையினுலேஎம்மாற்செறுக்கத் தக்கவனே! நின் +பொய்மையெல்லாம் உள்ளபடி யான் அறிந்துதெளிந்தேன்; இனி அவர்பாற் செல்லாதொழிவையாயின், நினது நல்ல தாரையுடைய மார்பத்துக்கு ஒரு முட்டுப்பாடு உண்டாமது; நீ சாரும்படி நின்னை முயங்கிய நெடிய ×கரியகூந்தலையுடைய பரத்தையரெல்லார்க்கும் முட்டுப்பாடு உண்டாதலும் உண்டு; ஆதலால் ஆண்டே செல்லெனப் புலந்து கூறினாள். எ - று.

தம்முளுமென்ற உம்மை, சிறப்பும்மை.

இனி, கடவுளர்தம்முளும் வியன்மார்பையுடைய நின்னை மனம் வேறாகப் பண்ணி வானப்பிரத்தத்தைக் குறித்தல் கொள்ளும்படி பண்ணின இருடிகள்

சீதச் சந்தனந் தாதோ டப்ப, வேஎல் பெற்றெழுந் திருந்தன னுரைந் கென" (பெருங். (௨)௯: ௧௫௯-௧௫௪) எனவருவதும் வலியுறுத்தும்.

௧. சிறுவரை - சிறிதுநாழிகை. அகம். ௧௩: அ. பு-வே. பெருந். ௧௭. இது, சிறிதுநாழிகைத்தூரமான இடமென்னும்பொருளிலும்வரும்ஐங்.௩௮அ.

௨. "இல்லது காய்தலென்பது, களவின்கட் போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக் கொண்டு காய்தல்; அது: 'நற்றாரகலத்து... ....முண்டு' எனவரும்; இது கடவுளரையே கண்டு தங்கினுனெயி

(பிரதிபேதம்) * செறுத்தக்காய். †செல்லாய் விடு, ‡ கொர்குசாரமேவிய. ||பின்னையாவரும். ÷அப்பிரத்தையர் கோபிப்பார். +பொய்மெய்யெல்லாம், × கருங்கூந்தலையுடையரெல்லார்க்கும்,

யார்தான் சொல்லு ; யாவரும் வெகுள்வர்; அவர்பாற் செல்லாதொழிவாயேல், நல்ல ஒழுங்கினையுடைத்தாகிய கடாவின்புறத்தே தோன்றும் விடைகளை யுடைய, (க)நீரைப் பலகாலுஞ் சாருதலாலே ஈரம்பொருந்திய நெடிய கரிய சடையினையுடைய இருடிகளெல்லார்க்கும் முட்டுப்பாடு பிறத்தலும் உண் டென்பதும் ஒன்று தோன்றநின்றது. அவர்க்கு முட்டுப்பாடு நினக்குக் கூடும் பொருள்கள்*கூடாமையாலுள்ளமுட்டுப்பாடு. தார்-ஒழுங்கு(உ)அகலமென்றது, பரசமயத்தார் கூறுங் கடாவிற்கு விடையாகக் கூறும் †விகற்பங்களை. "தன் னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினுந், துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம், பன்னிய வகல மென்மனார் புலவர்" "தெள்ளிது" (ங.) என்றதனால், நின்னை மார்பை வேறாகச் செய்தென்[றார்](றலுமாம்).

இதனால், தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தது.

"மரபுநிலைதிரியா‡மாட்சிய"என்னும்(ச)சூத்திரத்தில், தலைவிகடவுளைப் பரத்தையராகக் கூறுமென்பது கூறினும்.

இஃது ஐஞ்சீரடுக்கி வெண்பாவாய்வந்து இடைநிலைப்பாட்டுப் பெற்று வருதலிற் கலிவெண்பாவுறுப்பொத்துப் பாவேறுபட்டு வந்த கொச்சகம். (உஅ)

(கூக.) என்னேற் றனைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென்சாய
லீங்குருச் சுருங்கி
யியலுவாய் நின்னோ டுசாவுவே னின்றீத்தை ;

னும், நெட்டிருங் கூந்தற் கடவுளரையே கண்டா யென்று இல்லது சொல்லிக்காயுமாகலின் அப்பெயர்த்தாயிற்று" என்பர். பேர்; தொல். மெய்ப். சூ. உச இ - வி. நூலாரும் இதன் முன் வாக்கியத்தை எழுதி இம்மெய்ப்பாட்டிற்கு இதனை மேற்கோள்காட்டினர்; இ-வி.சூ. ருஅ௦.

க. "நீர் பலகான் மூழ்கி" (பு - வெ. வாகை. கச) "நெடுவரை யருவி யாடி..........புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே" (புறம். உருக) என்னும் தாபதவாகைத்துறைச் செய்யுட்கள் இங்கே அறிதற்பாலன.

உ. அகலமென்பது சூத்திரத்துப் பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடா விடையுள்ளுறுத்து உரைக்கும் உரையென்பர் இறையனாரகப்பொரு ளுரைகாரரும்.

ங. தொல். வேற்றுமைமயங்கியல். சூ. ரு.

ச. தொல். அகத். சூ. சரு; இச்சூத்திரத்தினுரையில் இவர் இச்செய்யுளை, காவற் பாங்கினாங்கோர் பக்கத்தில் தலைவன் கூறியவற்றைக் கற் பியலுள் தலைவன்பகுதியினீங்கிய தகுதிக்கண் தலைவி பரத்தையராகக் கூறியதற்கு மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்.

(பிரதிபேதம்) * கூறுமலாலுள்ள. † விகற்பங்கள், ‡மாட்சிமையென்னுஞ்.

௫ அன்னையோ, காண்டகையில்லாக் குறணாழிப்போழ்தினு
ளாண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று ;

௯ மாண்ட, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையோரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர் ;

௧௩ குறிப்புக்காண், வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
யில்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர்மன்னோ கூறு ;

௧௭ நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது ;

௨௨ போசீத்தை, மக்கண் முரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ்சேர்ந்தெழுந்த பூங்கொடிபோல
நிரப்பமில் யாக்கை தழீஇயின ரெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றொக்க
வுழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முற்றீயாக்
கூனிகுழை யுங்குழைவு காண் ;

௩௧ யாமை யெடுத்து நிறுத்தற்றாற் றோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க ;

௧௬ ஒலகாண், நம்மு ணருதற் றொடீஇயர் நம்முறு
முசாவுவங் கோனடிதொட் டேன் ;
௧௭ ஆங்காக, சாயலின் மார்ப வடங்கினேன் என
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவ
றண்டாத் தகடுருவ வேறாகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவேந்
துகடபு காட்சி யவையத்தா ரோலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு.

இஃது "அடியோர் பாங்கினும் * வினைவலர் பாங்கினுங், கடிவரை யிலபுறத்தென்மனார் புலவர்"(க)என்பதனால் அடியோராகிய கூனுங்குறளும் உறழ்ந்து †கூறிக்கூடியது.

இதன் பொருள்.

என்னோற் றனைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென் ‡சாய
||லீங்குருச் சுருங்கி
யியலுவாய் நின்னோ டுசாவுவே னின்றித்தை

க. தொல். அகத். சூ. உரு. (அ) இச்சூத்திரத்தின் உரையில் 'அடித்தொழில் செய்வாரும் வினைசெய்வாரும் அகத்திணைக்குரியரல்லர்; அகத்திணையாவது: அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின்வழாமலும் இயலல்வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தலரிதாகலானும் அவர் நாணுக் குறைபாடுடையராதலானும் குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராதலானும் இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதாரென்பதனானும் இவர் புறப்பொருட்குரியர்' என்று கூறி, இச் செய்யுளை மேற்கோள்காட்டி, 'இதனுள் ஒருவரையொருவர் இழித்துக் கூறினமையான் அடியாரென்பதூஉம் மிக்க காமத்தின் * வேறுபட்டு (* வேட்டு என்றும் பிரதிபேதம்) வருதலாற் பெருந்திணைப்பாற் படு மென்பதூஉம் கண்டுகொள்க. இதுதானே கைக்கிளைக்கும் உதாரணமாம்' என்றார் இளம்பூரணர்; (ஆ) இழிகுலத்தார்க்கு அகப்புறக் கைக்கிளை உரித்தென்பதற்கு இதனை மேற்கோள் காட்டினர் நாற்கவிராச நம்பியென்பவர்; நாற்கவி. சூ. உசஉ.

(பிரதிபேதம்) *வினைவல பாங்கினும், வினைவர் பாங்கினும், †கூடிக்கூறியது, ‡ சாயலினுஞ் சுருங்கி, ||ஈங்குச் சுருங்கி.

எ - து: கரையில் நின்றதொன்றின் நிழல் நீருக்குள்ளே *நுடங்கினாற் போல நுடங்கிய மெல்லிய மென்மையோடே இவ்விடத்து உடலிலே கூன் † புறப்பட்டு நடக்கின்றவளே ! நின்னோடு ஒருகாரியத்தை உசாவுவேன்; அங்ஙனம் உசாவுதற்கு நீ என்ன நல்வினையைச் செய்தாய்‡காண்? இங்ஙனே நிற்பாயாகவென்றான் குறளன். எ - று.

இயலுவாய்...............நின்றீத்தை, வினைத்திரிசொல்.

ரு அன்னையோ, காண்டகை யில்லாக் ||குறளாழிப் போழ்தின

(க) ணாண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை

வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்

தீண்டப் பெறுபவோ மற்று

எ - து: அதுகேட்ட கூனி, அம்மையோவென இகழ்ந்து தன் நெஞ்சிற் கூறி, கண்ணாற் பார்க்குந் தன்மையில்லாத குறளாய்ப்பிறத்தற்கு ஏதுவாகிய நாழிகையின் ÷முகூர்த்தத்தே (உ) ஆண்டலைப்புள்ளுக்குத் தன்பெடையீன்ற பறழாய மகனே! நீ எம்மை விரும்புவேனென்று போகாமற் றடுத்தாய்; நின்னைப் போற் குறளாயிருப்பார் பின்னை என்னைத்தீண்டப்பெறுவார்களோவென்றாள். எ - று.

க. தலைமகன் தலைமகளாகிய இருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின்மேல் மனம்நிகழ்த்தலன்றிக் காமத்தின்மேல் மனம்நிகழ்த்தலாகிய இளமைதீர்திறப் பகுதியில், தலைமகன் இளமைதீர்திறத்திற்கு "ஆண்டலைக்கீன்ற..............மற்று" என்பதும், தலைமகள் இளமைதீர்திறத்திற்கு "உக்கத்து மேலு............சிறிது" என்பதும் மேற்கோள்; தொல். அகத். சூ. ருச. இளம்.

உ. (அ) ஆண்டலையென்பது பாழ்பட்டவிடத்தே வதியும் ஒரு பறவை; இதுகோட்டில்வதிவதாகப் பெரும்பாலுங்கூறப்படுகின்றது. (ஆ) இஃது "ஊண்டலை துற்றிய வாண்டலைக் குரலும்" (மணி. சு: எஎ) என்பதனாலும் (இ) "ஆண்டலை யடுப்பும்" (சிலப். கரு: உகக) என்பதற்கு, 'ஆண்டலைப்புள் வடிவாகப்பண்ணிப் பறக்கவிட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி நிரைகளும்' என்று அடியார்க்குநல்லார் எழுதியிருக்கும்உரையாலும் தலைமூளையை உணவாகவுடையதென்றும் (ஈ) "யாமத் தீண்டிவந் தாண்டலை மாண்பிலவழைக்கும்" (நீல. தரும. ங) என்பதனால் நள்ளிரவில் கூட்டமாகவந்து கத்துமியற்கையுடையதென்றும் தெரிகின்றது. (உ) இஃது ஆண்மகன் றலைபோன்ற தலையையும் புள்ளின் உடல்போன்ற உடலையுமுடையது; (ஊ) இஃது, இவ்விடத்தும்திருமுருகாற்றுப்படையுரையிலும் இவரெழுதியகுறிப்பாலும் (எ) "தூண்டருங் கணைபடத் துமிந்து துள்ளிய, தீண்டருநெடுந்தலை

(பிரதிபேதம்) * நுடக்கினாற், † பிறப்பட்டு, ‡ தான், || குறைநாழிப்போதி னாண்டலைக் கீண்ட, ÷ முகுத்தத்தே.

"பறழெனப் படினு முறழாண் டில்லை" (க)என்பதனால், பறழ் பறவைக் காகாதாயினும் இவனை, 'யாமையெடுத்து நிறுத்தற்றால்' என ஊர்வனவாகக் கூறலிற் பறழென்றார். தலை, ஆண்டலையா யிருத்தல் பற்றி ஆண்டலைக்கு ஈன்ற மகனென்றாள்.

கூ * மாண்ட, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன † நிறையேரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் ‡ பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர்

எ - து: அதுகேட்ட குறளன், மாட்சிமைப்பட்ட கலப்பையிற் றைக்கும் (உ)படைவாள்போலே ஓரிடங் கூனாய்ப் புறப்பட்டு ஓரிடம்முன்னே வளைந்து வலிய முறித்து விட்டாற்போன்ற நிறைந்த அழகாலே என்னைப் பொறுக் கல்லாத காம நோயைச் செய்தாய் ; யான் ஆற்றிநிறுக்கமாட்டேன்; நீ அருளு வாயாயின் என்னுயிருண்டு; இனி நின்னினைவைக் ||கூறுவாயென்றான். எ-று.

பொறியும் பாடம்.

க௦ | குறிப்புக்காண், (ங)வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் ÷ குறள கடும்பகல் வந்தெம்மை

தழுவிச் சேர்ந்தன, பூண்டெழு!கரதலம் பொறுக்க லாதன, வாண் டலை நிகர்த்தன வெருவை யாடுவ" என்னும் கம்பர்வாக்காலும் அறிய லாகும். (ஏ) இச்சொல்லுக்குப் பொருள் 'யானைமுகன்' 'துடியிடை' என்பவற்றிற்குப் பொருள் கொள்ளுதல்போலக் கொள்க. (ஐ)"நீண்ட பலிபீடத்தி லிரிந்துவைத்த நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் னினமென் றெண்ணி, யாண்டலைப்புள் ளருகிருந்து பார்க்கு மாலோ வணைதலு மச் சிரமச்ச முறுத்து மாலோ" என்று சயங்கொண்டார் கூறுதலால், இப்புள்ளே ஆண்மகன் றலைபோன்றதென்று கூறுவாரும் உளர்.

க. தொல். மரபியல். சூ. எ.

உ. இதுகொழுவென்றும்காறென்றும்கூறப்படும்; குற்றியென்பாருமுளர்.

ங. (அ)"வல்லென்கிளவி தொழிற்பெய ரியற்றே" "நாயும் பலகையும் வருஉங் காலை, யாவயி னுகரங் கெடுதலு முரித்தே, யுகரங் கெடுவழி யகர நிலையும்", (தொல். புள்ளி. சூ. எஅ - எகூ) என்புழி, கெடுதலு மென்பதில், "உம்மை எதிர்மறை யாகலான் உகரங் கெடாதே நின்று ....'வல்லுப் பலகை' என வருதலுங் கொள்க" என்பர். நச் ; (ஆ) "வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும், பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்" (நன். மெய்யீற். சூ. உஅ) என்பதனுரையில்

(பிரதிபேதம்) * மாண்டை, † நிறையோரா, ‡ போறிநிறுக்கல்லேன், || கூறென்றாள், ÷ குறளே.

யில்லத்து *வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி †ருளர்மன்னோ கூறு

எ - து: அதுகேட்ட கூனி, இவன் மனக்குறிப்பைப் பாராயென நெஞ்சொடுகூறி, (க)நெத்தப்பல கையை எடுத்து நிறுத்தினாற்போன்ற, மகளிரைக் கூடும் முறைமையைக் கல்லாத குறளனே! (உ)மக்கள் இயங்காத உச்சியம்பொழுதிலே வந்து எம்மைக் கையைப்பிடித்து நின்னில்லத்தே வாவென்று சொல்லுதற்கு எடா! மிகவும் நின்னுடைய பெண்டிராயிருப்பார் சிலருளரோ? சொல்லாயென்றாள். எ - று.

கஎ நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
‡கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் ||புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் ÷புல்லச் சிறிது

எ - து: அதுகேட்ட குறளன், ×நல்லாளே! தலைக்குமேலும் நடுவில்லையாய் வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்ற வளைந்த + மடுப்பையுடையாய்! யான் கூறுகின்றதனைக் கேள்; நின்னை யான் மார்

'அவ்வுமென்ற உம்மையான், உகரப்பேறே வலியுடைத்தென்க' என்று மயிலைநாதரும் அவ்வுமென்பது இறந்தது தழுவிய வெச்சவும்மைஎன்றுவிருத்தியுரையாசிரியரும் இராமாநுசகவிராயரும் கூறி, வல்லென்பது பலகை யென்பதனொடு புணர்வுழி வேற்றுமையில் உகரச்சாரியை பெற்று வந்ததற்கு, 'வல்லுப் பலகை' என்பதை மேற்கோள் காட்டினர். இதற்கு வல்லினது அறைவரைந்த பலகை என்று பொருள் கூறுவர்.

க. நெத்தப்பலகையென்பது வல்லினது அறைகீறிய பலகையென்னும் பொருளிலே கன்னடத்தில் இருவகை வழக்கிலும் பண்டும் இன்றும் சிறிது திரிந்துவழங்குகின்றதென்பர்.

உ. கடியென்பது விளக்கமென்னும் பொருளில் வருதற்கு கடும்பகலென்பது, தொல். உரி. ௧௬. அஎ: சே; அடு. நச். மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது; ஆயினும் இவ்விடத்துக்கு அதனினும் வரைவென்னும் பொருள் சிறந்ததென்றுகொண்டு இவ்வாறு கூறினர்போலும். 'இவ்வுரிச்சொல் பெரும்பாலும் திரிந்து நிற்கும்' என நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலது.

(பிரதிபேதம்) * வாவென்றெமக்கொழியவெல்லா, † உளமன்னோ, ‡ கொக்கரித்தன்ன, || புல்லினென்னெஞ்ச, ÷ புல்லல் சிறிது, × நல்லோளே, + மடிப்பையுடையாய்.

பிடத்தே சென்று புல்லுவேனாயின் என்னுடைய நெஞ்சிலே அக்கூன் ஊன்றும்; முதுகிலேபுல்லுவேனாயின்முதுகிற் *கூன்(க)அக்குளுக்காட்டுதலை உடைத்து; ஆதலால், கூடுதலேயன்றி முயங்குதலையுஞ் செய்யமாட்டேன்; இனிப் பக்கத்தே சிறிது முயங்கும்படியாக வருவாயாகவென்றான். எ - று,

. நடுவுயர்ந்தென்றது "நோன் †புயர்ந்தது" என்றாற்போல நின்றது.

உஉ (உ) ‡போ(௩)சீத்தை

எ - து: அதுகேட்ட கூனி, சீ! கெட்டதன்மையையுடையவனே! நீ எம்மிடத்தினின்றும் போவென்றாள். எ - று.

மக்கண் (௪)முரியேநீ மாறினி நீ தொக்க
மாக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை ||தழீஇயின ரெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றொக்க

க. அக்குளுக்காட்டுதல் - கக்கமுதலிய உறுப்பில் தீண்டிக் கூச்சமுண்டாக்குதல்; இஃது, அக்குளுப்பாய்ச்சுதலெனவும் வழங்கும்; இப்பொருளில் இக்காலத்து, கிச்சுக்கிச்சுமூட்டுத லென்னும்சொல், பெருவழக்காக உள்ளது.

உ. உயர்திணை அஃறிணையாய்ச் செறலின்கட் டிணைமயங்கிவந்ததற்கு, 'பொய்ச் சீத்தை வந்தது; போயிற்று' என இ - வி. சூ. உ௬௬ - இல், ஒருமேற்கோள் காணப்படுகின்றது; செய்யுளின்பத்துக்கும் அதுவே சிறந்ததாக வுள்ளது; அவ்வாறு பிரதிபேதமுமுள்ளது; அந்தப் பிரதியிலுள்ளஉரையும் போசீத்தை யென்னுமூலத்திற்கேபொருந்துகின்றது.

௩. (அ) சீத்தையென்பதற்கு, இங்குப்போலவே கலி. அ௬: கஅ-இல் கைவிடப்படுமவனென்றும் கலி. அ௬: ௩௦ - இல் கைவிடப்பட்டவனென்றும் ஆண்பாலாகப் பொருள் கூறப்பட்டிருக்கிறது; (ஆ) "குரவன் மேலவ னாயினுங் குணமிழி சீத்தை, விரவு சேடனை விடினவன் கெடுவது மெய்யே" எனப் பிற்காலத்துநூலிலும் ஆண்பாற் பெயராக வந்துள்ளது; கலி. ௬௬: உக-இல் இச்சொல்லுக்கு, 'சீ கெட்டது' என்று பொருள் கூறப்படுகிறது; இது செறற்சொலென்பது இதற்கு முந்தின குறிப்பால் விளங்கும்.

௪. பிரிதலென்பது பிறிதலென்று வருவதுபோல, முரிதலென்பது முறிதலென்றும் வரும்; இதற்கு முதனிலையாகிய முறியென்பது பாதியென்னும் பொருளில் வருதலை, "இந்து முறி" என்னும் நளவெண்பாவாலும் அறிக.

(பிரதிபேதம்) * கூனனுக்குளுக்காட்டுதலை. † உயர்ந்தென்றாற்போலே, ‡ பொய்ச்சீத்தை, || தழீஇயரெம்மைப்புரப்பமென்பாரும்.

(க)வுழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்பு

எ - து: அது*கேட்டு அவன் அணுகுதலின், மக்களிற் பாதியானவனே! இனி நீ இந்நிலையைக் கைவிடென்று கூறி, பின்னர்த் திரண்ட மரத்தின் வளைவான இடத்தை விட்டு நீங்காமற் பற்றிவளர்ந்த பூங்கொடிபோலே எம்முடைய கூனால் வடிவொத்தலில்லாத யாக்கையை முயங்கி எம்மைப் பாது காப்பேமென்று கூறுவாரும் பலராயிருக்கும்; (உ) இப்பரத்தைமையையுடையவன் † பக்கத்துப் புல்லுதலைத் தாராயென்று கூறாநிற்குமால்; இங்ஙனங் கூற நமக்கு உண்டாகிய குறை யாதுதா னென அவன் கேட்பத் தன்னெஞ்சொடுகூறி, குறிய வட்டின்றன்மையையுடையாய்! பலவுங்கூடின உழுத்தம் பணியாரத்தினுங் காட்டில் (ந) துய்க்கப்பட்டிருக்கின்ற கூன்சாதியினுடைய பிறப்பு ‡ நின்னிற் றாழ்ந்ததோவென்றாள். எ - று.

கழிந்தாங்கே
யாம்வீழ்து மென்று|| தன் பின்செலவு முற்றீயாக்
கூனிகுழை யுங்குழைவு காண்

எ - து: அதுகேட்ட குறளன், யாம் நின்னை விரும்புவேமென்று கூறித் தன்பின்னே செல்லுதல் செய்தேயும் அதற்கு மனம்பொருந்தாத கூனி நம் அருகுநின்றும் அவ்விடத்தே போய் நுடங்கும் நுடக்கத்தை நெஞ்சே பாராயென அவள் கேட்பக் கூறினான். எ - று.

உற்றீயா, பெயரெச்சமறைத்திரிசொல்.

௩௧ யாமை யெடுத்து நிறுத்தற்றாற் றோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்
+காமர் நடக்கு நடைகாண்(௪) கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு × காண்க

---

௧. "உழுந்தினும்..........பிறப்பு" என்பது ஒப்பின் வகை பத்தனுள், பிறப்புவகையின் பாற்படுமென்பர் பேர்; தொல். மெய்ப். சூ. உ௫.

௨. பரத்தை யென்பது பேதை யென்பதுபோல உயர்திணை யொருமை யிரண்டிலும் வரும்போலும். கிடைத்த பிரதிகளிலெல்லாம் 'பரத்தையென்' என்றே உள்ளது.

௩. 'துயக்கப்பட்டிருக்கின்ற' என்றும் படிக்கலாம்; 'இருக்கின்ற' என்பது வருவித்தது போலும்.

௪. (அ) "கடுந்தொடைக் கவர்கணைக்காமன்" சீவக. கஉகஅ. (ஆ) "கவர்கணை நோன்சிலைக் காமனிவனெனு, மையலுள்ளமொடு" பெருங். (உ) க௫:

(பிரதிபேதம்) *கேட்டநிலையணுகுதலின், † பக்கத்தைப் புல்லுதலை, ‡ நின்னும், || தம்பின் செலவு, + காமிநடக்கு நடைகாண்க வார்கணை, × காண் என்பது.

ஏ-து: அதுகேட்ட கூனி, ஊருகின்ற(௧)யாமையை எடுத்து* நேரேநிறுத் திணுற்போல நெடியனுய்த் (௨)தோளிரண்டையும் விலாவுக்குள்ளே வீசி, யாம் நின்னை விரும்பேமென்று விலக்காநிற்கவும் எம்மை விரும்பி வருகின்ற காமனுர் நடக்கும் நடையை நெஞ்சே காணுயென்ருள்; அதுகேட்ட குறளன் ஒருவரை ஒருவர் முயங்குதற்குக் காரணமான கணையினையுடைய(௩)சாமனுர் தமையனுகிய காமனுர் நடையை நீ காணுயென நடந்து†காட்டினுன். எ - று.

௩௫ ஓஒகாண், ‡நம்மு ளாகுதற் ருடீஇயர் நம்முணு
‖முசாவுவங் கோனடிதொட் டேன்

எ - து: அதுகேட்ட கூனி, ஓஒ! ÷இவன் நடையைப்பாராயென நெஞ்சொடு கூறிஞள்; அதுகேட்ட குறளன் நம்முள்ளே நாங் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறி யிடம் + இன்ன இன்ன இடமாமென்று நம்முள்ளே நாம் உசாவக்கடவேம்; இனி நின்னை இகழ்ந்து கூருமைக்கு அரசன் (௪)அடியைத் தொட்டுச் சூளுற்றே×னென்ருன். எ - று.

ஓஒ, இகழ்ச்சிக்குறிப்பு.

கூஎ-கூஅ. (இ) "காமவேள் கவர்கணை" (ஈ) "காமனு, ரைதுலாங் கவர் கணை" (உ)"அனங்க னுய்மலர்க், கவர்கணை" சூளா. நகர. க௮. குமார. ௫; கக. எனப் பலவிடத்தும் வருவன ஒப்புநோக்கற் பாலன. (ஊ) "கவர்வு விருப்பாகும்" என்பது தொல். உரி. சூ. ௬௪.

௧. (அ) "நீலத் தெண் ணீர் நீந்து மாமையிற், கோலக் குறுக் கை வாட் கூட்டுட் கழீஇப், பாலிகை பற்றிய குறள்வழிப் படரவும்" பெருங். (௧) ௪௬: உ௬௧ - உ௬௩. (ஆ) "கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை, விட்டு நடப்பனபோற் சிந்தும்" சீவக. உஎ௯௮.

௨. "வீரம் படக்கையை மெய்வழி வீசித், தேரை நடப்பன போற்குறள் சிந்திஞெ, டோரு நடந்தன" (சீவக. ௬௩௧.) என்பதும் அதில், "கையை மெய்வழி வீசி" என்பதற்கு, 'விலாப்புடைக்குள்ளே கையை வீசி' என்று எழுதியிருக்குமுரையும் இங்கே அறிதற் பாலன.

௩. காமனுக்குச் சாமனென்ற தம்பி யொருவனுண்டென்பதை, இந்நூற் பக்கம், க௪௪: ௩-ஆம் குறிப்பால் அறிக.

௪. (அ) "ஐய சூளி னடிதொடு குன்ருடு, வையைக்குத் தக்க மணற்சீர் சூள் கூறல்" பரி. ௮: எ௦ - எக. (ஆ) "நி னடிதொடு கடணிது" (இ)"குமரிநி னடிதொடு படுகட ணிது" சிலப். ௧௨: 'சுடரொடு' 'துடியொடு'(ஈ)"மதிவாள் முகத்து மணிமே கலைதனை, யொழியப் போகே னுன்னடி தொட்டேன்" மணி. க௮: ௧எ௦ - ௧எ௧.

(பிரதிபேதம்) *நேரநிறுத்திணுற், †காட்டினுன் ஓஒஇகழ்ச்சிக்குறிப்புஅதுகேட்ட, ‡நம்முளு மாதற்ருடீஇய, ‖ உசாஅங் கோன், உசாஅக் கோன். ÷ இன்னடையைப், + இன்னதென்னவிடமாம், × என்ருன் ஆங்காகஅதை சாயுவின்,

௩௭ ஆங்காக, (௧)சாயலின் மார்ப *வடங்கினேன் ஏஎ
பேயும் †பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் ‡கண்டார் நகாமை வேண்டுவ
||றண்டாத் தகடுருவ வேறாகக் ×காவின்கீழ்ப்
+போத ரகடாரப் புல்லி (௨)=முயங்குவேந்
துகடபு காட்சி யவையத்தா ரோலை
முகங்**காப் பியாத்துவிட் டாங்கு

எ - து: அதுகேட்ட கூனி, அப்படியேயாகுக; யானும் மென்மையால் இனிய மார்பனே! இகழ்ந்து கூறுதலைத் தவிர்ந்தேன்; இனி இக்கோயிலுட் கண்டவர்கள் நம்மை ஏஎயென ††இகழ்ந்து பேயும் பேயுந் தம்மிலே துள்ளுதலை இக்கூனுங் குறளும் உறுநிற்குமெனக் கூறி நகாதிருத்தலை விரும்புவேன்; ஆதலால், அமையாத பொற்றகடுபோலும் உருவத்தினையுடையாய்! கோயிலுக்கு நீங்கலாகக் காவின்கீழே போதருவாயாக; ‡‡துகளறுகின்ற அறிவினையுடைய அவையிலுள்ளார் திரட்சிபொருந்தின ஓலையின்றலையைக்கட்டி அதன் தலையிலே (௩) |||அரக்கிலச்சினை யிட்டுவிட்டாற்போல நிரம்பாத உடலின் உள்வாய் முயக்கம் பெற்று நிறையும்படி இறுகப் புல்லிக் கூடக்கடவே ××மென்றாள். எ - று.

---

௧. "இன்சாயன் மார்பன்" கலி. ௬௫: ௫. என்பதும் அதன் குறிப்பும் "சாயலின் மார்பின்" கலி. ௧௧௨: ௨௩ என்பதும் ஒப்புநோக்கற்பாலன.

௨. இங்குள்ள பிரதிபேதத்தை நோக்கின், "கண்டார் நகாமை வேண்டுவ றண்டா" என்பதை ஓரடியாக்கி, பிற்பகுதியைக் ககரவெதுகை நயம் பொருந்தின நான்கடியாகப்பிரிக்கலாம். உரை இடங்கொடுக்கவில்லை.

௩. (அ) "ஓலை, யரக்குப்பொறி யொற்றி யாணையிற் போக்கி" பெருங். (௧) ௩௭. ௨௦௮ - ௨௦௯. (ஆ) "அரக்கிலச் சினையின் வைத்த, வெஞ் சலி லோலை காட்ட" சூளா. தூது. ௮௨. எனவும் (இ) "பொறியுடை யோலை" (ஈ) "ஓலைத்தூதிற், பெரும்பொறி யண்ண லரும்பொறி யொற்றி" (உ) "பொறியொற் றோலையோ டறியப் போக்கி" பெருங். (௧) ௪௫· ௩௦, ௫௮: ௮௧ - ௮௨, (௫) ௭: ௭௧. எனவும் (ஊ) "புன்புல வழியடைத் தரக்கிலச் சினைசெய்து" நாலாயிர. திருச்சந்த. ௭௬, எனவும் வருவன காண்க.

(பிரதிபேதம்) * வணங்கினேன் ஏஎ, பேயும் பேயந்துள்ள, † பேயுமீந்துள்ளல், ‡ கண்டோர் நகாமல், || கண்டாய்தகடு, × ஞாயிற்கீழ்ப், + போதியகடார, = முயங்குவேன்றோடா துகடீர்பு. **யாப்பியாத்து. †† இகழ்ந்துகூறிப்பேயும், ‡‡ துகடீர்கின்றவறிவினை, ||| அரக்கிலச்சினை விட்டுவிட்டாற்போல, ×× என்றாள் போதருபோதாரெனா.

ஆங்கு, அசை. போதரு, போதரென விகாரமாயிற்று. "தோடே மடலே" என்னும்(க)சூத்திரத்தால் ஓலையென்றார்.

இதனால், இருவர்க்கும் முன்னர் நகைபிறந்தது; பின்னர்ப் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இதனுள்,(உ)'கோனடிதொட்டேன்' எனவும் 'கோயிலுட்கண்டார் நகாமை வேண்டுவல்' எனவுங் கூறலின், அடியோரென்பதுபெறுதும்.(ங)'கொக்குரித் தன்ன' எனத் தோல்திரைந்தமைகூறலின்,இளமைதீர்திறமாகியபெருந்திணை யாயிற்று. இது "வேட்கைமறுத்து" என்னும் (ச) பொருளியற்சூத்திரத்தால் வேட்கைமறுத்துக் கூறியபெருந்திணை. இஃது (ரு) ஊடற் பகுதியாகலின் மருதத்துக்கோத்தார்.

இஃது 'என்னேற்றனைகொல்லோ' எனவும் 'ஈங்குருச்சுருங்கி' எனவும் முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்து, இரண்டடியான் இற்றதோர் கொச்சகமும் ஐஞ்சீரடுக்கிவந்த வெண்பா ஐந்தும் ஐஞ்சீரடியான் வந்த, கொச்சகம் ஒன்றும் இரண்டடிக்கொச்சகம் ஒன்றும் ஆசிரியத்தளை விரவின கொச்சகவெண்பாவும் பெற்று வெண்கலிப்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலிப்பா. (உக)

க. தோல். மரபி. சூ. அகூ. இச்சூத்திரத்தின் பேராசிரிய ருரையிலும் ஓலையென்பது அகக்காழல்லாத ஓரறிவுயிராகிய புல்லின் உறுப்பாய் வருதற்கு,"துகடபுகாட்சி யவையத்தா ரோலை" என்பது மேற்கோள்.

உ. அடியோர் பாங்கினும் தலைமக்களுண்டென்பதற்கு, "நம்முணுகுதல் ....தொட்டேன்" "பேயும் பேயுந்.........வேண்டுவல்" என்னும் பகுதிகளை மேற்கோள்காட்டி, இது பெருந்திணைக்கண் அடியோர் தலைவராக வந்தது; என்னை? கோனடி தொட்டேனென்றமையானும் கோயிலென்றமையானும் இவர்கள் குற்றேவன்மாக்களாயிற்று என்ற னர் இவ்வுரைகாரர்; தோல். அகத். சூ. உங.

ங. "உக்கத்து...........சிறிது" என்பது கொக்குரித்தன்னவென்பத னால் தோல் திரைந்தமை கூறலின் இளமை தீர்திறமாகிய பெருந் திணையென்பர், நச்; தோல். அகத். சூ. ருக. இந்நூற்பக்கம் ருசுஅ: க–ஆம் குறிப்பும் பார்க்க.

ச. தோல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் "எறித்த படைபோல்.........னுயிர்" "உழுந்தினுந்.........பிறப்பு" என்பவை அடியோர் தலைவராக வேட்கைமறுத்துணர்த்தியதற்கு மேற்கோள்.

ரு. "உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே" என்னும் தோல். அகத். கங – ஆம் சூத்திரத்தின் இவருரையிலும், கூனுங் குறளும்........... உறழ்ந்து கூறும் பெருந்திணை ஊடற்பகுதியதாதலின் மருதத்துட் கோத்தாரென்னும் குறிப்பு உள்ளது.

(கூரு.) நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லாநீ
நாறிருங் கூந்தலா ரிற்செல்வா யிவ்வழி
யாறு மயங்கினை போறிநீ வந்தாங்கே
மாறினி நின்றாங்கே நின்சே வடிசிவப்பச்
செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாது
மறிந்ததோ வில்லைநீ வேறோர்ப் பது ;

அ குறும்பூழ்ப்போர் கண்டமை கேட்டே னீயென்றும்
புதுவன வீகை வளம்பாடிக் காலிற்
பிரியாக் கவிகைப் புலையன்றன் யாழி
னிகுத்த செவிசாய்த் தினியினிப் பட்டன
வீகைப்போர் கண்டாயும் போறிமெய் யெண்ணிற்
றபுத்த புலர்வில புண் ;

கச ஊரவர் கவ்வை யுளைந்தீயா யல்கனின்
றாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும் போகாது கொண்டோடும்
பார்வைப்போர் கண்டாயும் போறிநின் றோண்மேலா
மீரமாய் விட்டன புண் ;

கஅ கொடிற்றுப்புண் செய்யாது மெய்ம்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும் வெல்லாது கொண்டோடு
மொட்டியபோர் கண்டாயும் போறி முகந்தானே
கொட்டிக் கொடுக்குங் குறிப்பு ;

உங ஆயி ழையிழா யன்னவை யானுங் கறியாமை
போற்றிய நின்மெய் தொடுகு ;

உரு அன்னையோ, மெய்யைப்பொய் யென்று மயங்கிய கையொன்
றறிகல்லாய் போறிகா ணீ ;

உஎ நல்லாய், பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி ;

உகூ அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி யளித்திநி

விடலைநீ நீத்தலி னோய்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்.

இது "கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் *சொல்லொடு தொகைஇப், பகுதியி னீங்கிய தகுதிக்கண்" (௧) தலைவி (௨)பரத்தையரைப் (௩)பூழாக்கிக் கூறியது.

இதன் பொருள்.

நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லாநீ
நாறிருங் கூந்தலா ரிற்செல்வா (௪)†யிவ்வழி
யாறு மயங்கினை போறிநீ வந்தாங்கே
மாறினி நின்றாங்கே நின்(௫)‡சே வடிசிவப்ப

எ - து: எடா! நீ நாறுகின்ற கரிய கூந்தலையுடைய பரத்தையரில் லின்கட் ||செல்கின்றாயாய் இவ்விடத்துப்போகின்றவழி தப்பிவந்தாய்போலே இருக்தாய்; நீ இவ்விடத்துப் பார்த்து பாராதேகொள்; ÷அவ்விடத்தே நில், அவ்விடத்தே நில்; இனி நின்னுடைய பரத்தையர் மனைக்கண்ணே நின் (௬)சிவந்த அடி மிகச் சிவக்கும்படி ×வந்தாற்போலப் போவென்றாள். எ - று.

செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
(௭)+குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாது
மறிந்ததோ வில்லைநீ வேறோர்ப் பது

௧. தொல். கற்பியல். சூ. ௬.

௨. "காவற் பாங்கின் ஆங்கோர் பக்கத்திற் றலைவன் கூறியவற்றைக் கற்பியலுள் தலைவன் பகுதியினீங்கிய தகுதிக்கண், தலைவி பரத்தையராகக் கூறுவனவும் இச்சூத்திரத்தானமைக்க. அவை மருதக்கலியுட் கடவுட்பாட்டு முதலியன. அவற்றை ஆண்டுக்காட்டுதும் கண்டுணர்க" என்பது ஈண்டும் அறியத்தக்கது; தொல். அகத். சூ. ௪௫. நச்,

௩. "கானமர் புள்ளும்..................எங்கையரே" அம்பிகாபதி. ௫௪0.

௪. "எம்மனை, வாரனீ வந்தாங்கே மாறு" கலி. ௮௬: ௨ - ௩.

௫. "கண் சிவந்தில கால்கள் சிவந்தவே" "ஐவர் தூதுசென்று, பாதாம் புயஞ் சிவந்தான்"

௬. "செவ்விரல் சிவப்பூர" (கலி. ௭௬: ௬.) என்பதும் அதன் உரையும் குறிப்பும் பார்க்க.

௭. (அ) குறும்பூழ் மருதத்திற்குமுரித்தென்பது, "நாடொறுங், கையுள தாகி விடினுங் குறும்பூழ்க்குச், செய்யுள தாகு மனம்" என்பதனாலும்

(பிரதிபேதம்) * சொல்லொடுந்தொகைஇ, † அவ்வழி, ‡ சேடி, || செல்கின்ற நீ இவ்விடத்து. ÷ அவ்விடத்தேநில் இனி, × வந்தாப்போலேபோ, + குறும்பூட்போர்.

எ - து: *அதுகேட்ட தலைவன், செறிந்து விளங்குகின்ற வெள்ளிய பல் லினையுடையாய்! யாம் புதிதாக வந்து பொருந்தின † குறும்பூழ்ப்போர் கண்டேம்; அவ்வளவல்லது நீ எனக்குத் தீங்காகக் கருதும் ஒழுக்கஞ் சிறிதும் யான் அறிந்ததோ இல்லையென்றான். எ - று.

ஓகாரம், ஐயம்.

அ குறும்பூழ்ப்போர் கண்டமை ‡கேட்டேனீ யென்றும்
புதுவன வீகை வளம்பாடிக் காலிற்
பிரியாக் கவிகைப் ||புலையன்றன் யாழி
னிருத்த செவிசாய்த் தினியினிப் பட்டன
வீகைப்போர் கண்டாயும் போறிமெய் யெண்ணிற்
றபுத்த புலர்வில புண்

எ - து: அதுகேட்ட தலைவி, நீ எந்நாளுங் குறும்பூழினது போரைக் கண்டபடியை யான் கேட்டேன்; அது கூறக் கேள்; ஒருநாட் + கொடுத்தாற் போலன்றிப் புதிய வாயிருக்கின்ற கொடையினது பெருமையைப் பாடி நின்னிடத்தினின்று நீங்காத, யாழ்வாசித்தலாற் கவிழ்ந்த கையினையுடைய பாணன் தன்னுடைய யாழோசையாலே முன்பு தாழ்க்கப்பட்ட செவிகளை அவன் ÷ கூறுகின்றவற்றைக்கேட்டற்கு அவர்சாய்க்கையினாலே இப்பொழுது அக்கூற்றாலே புதிதாக அகப்பட்டனவாகிய பூழினுடைய புதிய போர்களைக் கண்டாயும்போலே இருந்தாய்; அதனை உண்மையாக எண்ணிற் புலர்ச்சியிலவாகிய புண்கள் உன்னைக்கொன்றன; இதனை ஆற்றியவா றென்னென்றாள். எ - று.

(ஆ) அது கோழியும் சிவற் (செவ்வல்) காடையும் கவுதாரியும் போலப் போர்த்தொழிலிற் சிறந்த பறவை யென்பது, "கறவொடு மொன்றோ டொன்று காரணமின்றிச் சீறிப், பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து மோதை, செறிமயிர்த் தகர்க டம்மிற் றீயெழத் தாக்க ஞெக்கி, யறைகழல் வீரரார்க்கு மமலையை யவிக்கு மன்றே" என்பதனாலும் (இ) அதன் போர் காணல் ஆடவர்க்குரியமர பென்பது இச்செய்யுளாலும் "கலையின் வென்றியுங் கரிபரி யிரதமே காலாண், மலையும் வென்றியுஞ் சூட்டுடை வாரணங் குறும்பூ, ழுலைய மோதுவன் கடாப்பிற போரிடை யுறுத்திக், குலவும் வென்றியுங் கொண்டன வாடவர் குழுக்கள்" என்பதனாலும் அறியலாகும். (ஈ) குறும்பூழ் என்பது ஒரு பறவைச்சாதிப் பெயரென்றும் இனஞ் சுட்டியதன்றென்றும்கூறுவர் ஒருரைகாரர்; தொல். கிளவி. சூ. கஅ. குறும்பூழ், காடையென்று வழங்கப்படும்.

(பிரதிபேதம்) * இதுகேட்ட, † குறும்பூழினதுபோரை, ‡ கேட்டனன். || புலைவன், + கொடுத்தாப்போலன்றி, ÷ கூறுகின்றனவற்றைக்,

இனி நின் மெய்யிற் *புலர்வில்லாப் புண்கள், எண்ணிப்பார்க்கில் அவ்வெண்ணைக் கெடுத்தனவென்றுமாம். இனி என்றும் புதியனவாகிய யாழினது வளப்பத்தை யாழோசைபோலே பாடி அப்பூழ் பொருத்துமிடத்து விட்டு நீங்காத புலையனென்று புலையனுக்கு அடைகூறினாள். யாழோசைகேட்டாரை அகப்படுக்குமாறுபோல இவன் பாட்டும் அகப்படுத்தலின் யாழிற்பாடியென்றாள். †பூழைத் தடவிக் கவிழ்ந்த கையினையுடைய புலையன்-‡ பூழ் பொருத்துமவன்; 'புலையன்றன்னுடைய இப்பொழுதிப்பொழுது அகப்பட்டனவாகிய பூழ், தத்தஞ் செவிகளைச் சாய்த்து இவன் கூறும் (க)மந்திர முதலியன கேட்கையினாலே அவன் தன்வசமாகத் தாழ்க்கப்பட்ட பூழ்; அப்பூழின்போரைக் கண்டாயும்போறியெனப் பூழிற்கும் ஏற்பதோர் பொருளுந்தோன்றநின்றது. இனி, யாழின் இகுத்த செவிக்கு, யாழைப்போலும் (உ)மந்திரத்தாற் றாழ்ந்த செவியென்பாருமுளர்.

கச (ங)ஊரவர் கவ்வை யுளைந்தீயா யல்கனின்
றாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும் போகாது ||கொண்டாடும்
பார்வைப்போர் கண்டாயும் போறிநின் றோண்மேலா
மீரமாய் விட்டன புண்

எ - து: ஊரிலுள்ளார் கூறும் அலருக்கு வருந்தாயாய்த் தங்குதலையுடைய நின் மார்பிற் றாரிடத்தே கையாலே அணைத்துக்கொண்டு தழுவி அகப்படுத்துதலாலே மாட்சிமைப்பட்டு வேறுஞ் சிலரை அகப்படுத்திக் கொண்டு ÷வருதற்குப் பார்வையாகப் போகவிட்ட மகளிராலே உண்டான ஊடற்போரை வாய்ப்பக் ×கண்டாராகிலும் அதற்கூடிப்போகாதேஉன்னைக் கைக்கொண்டு நுகருங் கலவிப்போரைக் கண்டாயும்போலே இருந்தாய்; நின் தோளிற் புண்களெல்லாம் புலராமல் ஈரமாயே கிடந்தனவென்றாள். எ - று.

இனி, ஊரிலுள்ளார்எக்காலமும்பூழ்பொருத்தித் ┼திரிவையென்று கூறும் ஆரவாரத்திற்கு வருந்தாயாய் மார்பிலே அணைத்துக்கொண்டு முயங்கித்

க. "சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்காற், சொல்லும் பலவுள சொன்னபின் - வெல்லும்..................பூழ்" என்பதும் 'சொல்லக்கடவ மந்திரம் பலவாவன: தீற்றும் அரிசி ஓது மந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லு மந்திரமும், செவியுள் ளூறுத்து மந்திரமும்' என்று எழுதியிருக்கும் அதன் விசேடவுரையும் ஈண்டு அறிதற்பாலன; பு - வெ. பெருந்திணை. வென்றிப். கூ.

உ. "மந்திரங் கேட்குஞ் செவிய போல" பெருங். (ச) ங: அஎ.

ங. "ஊரவர் கௌவை" குறள். ககசஎ.

(பிரதிபேதம்) * புலர்விலபுண்கள், † அப்பூழைத்தடவி. ‡ பூழ்ப்பொருத்து. || கொண்டோடும். ÷ வருத்தற்குப்பார்வை, × கண்டார்களாகிலும். ┼ திரிவையென்று

தசை கரையும்படி கையாற் பிடித்தலாலே மாட்சிமைப்பட்டுத் தனக்கு மாறாகிய பூழின் போரை வாய்ப்பக் காணினும் அதற்கு அஞ்சிப் போகாதே போர்செய்தலைத் தன்னிடத்தேகொண்டு * பின்னும் போர்செய்யும் பார்வையாகிய பூழின் போரைக் † கண்டாயும்போறியென வேறுமோர் பொருள் தோன்றி நின்றவாறு காண்க.

௧௯ கொடிற்றுப்புண் செய்யாது மெய்ம்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும் வெல்லாது ‡ கொண்டாடு
மொட்டியபோர் கண்டாயும் போறி (௧)முகந்தானே
கொட்டிக் கொடுக்குங் குறிப்பு

எ-து: இவட்கு வருத்தமாகவுங்கூடுமென்றுகருதிப் புணர்ச்சிக்காலத்துக் கவுளிடத்துச் செய்யும் வடுக்களையுஞ் செய்யாமல் மெய்ம்முழுதையும் கையாலே எப்பொழுதுந் தடவி நீ விரும்பினும் நீ தன்னை வெல்லாமற் கொண்டு புணரும் ஒட்டுதலையுடையாளது கலவிப்போரைக் கண்டாயும் போலே இருந்தாய்; நின் மனக்குறிப்பை நின் முகந்தானே || காட்டிக் கொடாநிற்குமென்றாள். எ - று.

---

௧. (அ) "முன்னங்காட்டி முகத்தினுரையா" (ஆ) "முன்ன முகத்தி னுணர்ந்து" (இ) "ஒருவன், முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை" (ஈ) "முன்ன, முகம்போல முன்னுரைப்ப தில்" (உ) "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டுமுகம்" (ஊ) "முகத் தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங், காயினுந் தான்முந் துறும்" (எ) "முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி, யுற்ற துணர் வார்ப் பெறின்" (ஏ) "ஒளிப்பினு முள்ளம், படர்ந்ததே கூறுமுகம்" (ஐ) "நோக்கி யறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணாடி, நோக்கி யறிப வதுவேபோ-னோக்கி, முகனறிவார் முன்ன மறிப" (ஒ) "முகத்தினாற் பொருண்முடிவு கண்ணினான்" (ஓ) "தூத னின்முகப் பொலிவி னாற் சுடர்க், காது வேலினான் கருமமுற்றற, வோதி ஞானிபோ லுணர்ந்த பின்" (ஔ) "நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக், கோக்கும ரருமடி குறுக" (ஃ) "அற்றந்தான், மனங்கள் போல முகமு மறைக்குமே" (அஅ) "சிந்தை யுண்ணெடுஞ் சீற்றந் திருமுகந், தந்தளிப்ப" (ஆஆ) "அகத்தியன் முகத்திற் காட்ட" (இஇ) "முழையுறு சீய மன் னன் முகத்தினா லகத்தை நோக்கிக், குழையுறமெய்யன் பைய வரன் முறை கூற லுற்றான்" (ஈஈ) "உளத்தனவாண் முகத்தனவா யுதிக்கு மவை குறிப்பினாற், றெளித்துரைத்தல் சீர்மைத்தே" (உஉ) "உள்ள முகத்திற் சுடர்கிற்ப" (ஊஊ) "அகத்தி னழகு முகத்திற்றெரியும்."

(பிரதிபேதம்) * பின்னும்பின்னும்போர். † கண்டாய்போறி. ‡ கொண்டோடும், || கொட்டிக்.

தான் விரும்பிய நீர்விளையாட்டுமுதலியவற்றிலே உன்னை ஒட்டுதலை யுடையாள்.

இனி மருந்திடுதற்குச் செவியின் மயிரைப் பறிக்குங்காற் புண்ணைகப் பறியாதே மெத்தெனப் பறித்து மெய்யைமுழுக்கப் பலகாற்றுடைத்து நீ இவ்வாறு *கொண்டாடினுந் தான் எதிர்ந்த பூழினை வெல்லாமல் அப்பூழினைக்கொண்டு போர்செய்யும் (க) இயக்கனாகிய பூழின் போரைக் கண்டாயும் போறியென் வேறுமொரு பொருள்தோன்றி நின்றவாறு காண்க.

௨௩ ஆயி ழையி ழா யன்னவை யானுங் கறியாமை
†போற்றிய நின்மெய் தொடுகு

எ - து: அதுகேட்ட தலைவன், அப்படியாயின், ஆயிழாய்! நீ கூறுகின்ற அத்தன்மையவான குறிகளை யான் அவ்விடங்களிற் செய்தறியாமையை நின்னெஞ்சிடத்தே போற்றுதற்கு நின் மெய்யைத் தொட்டுச் சூளுறுவேனென்றான். எ - று.

தொடுமென்றும் பாடம்.

௨௫ அன்னையோ

எ - து: அதுகேட்ட தலைவி, ‡அம்மையோவென இகழ்ந்து கூறினாள். எ - று.

மெய்யைப்பொய் யென்று மயங்கிய கையொன்
றறிகல்லாய் போறிகா ணீ

எ - து: அதுகேட்ட ‖தலைமகன், யான் கூறுகின்ற மெய்யைப் பொய் யென்று மயங்கிய நீ உலகவொழுக்க மொன்றும் அறியாய்போலே இருந்தாய் காணென்றான். எ - று.

௨எ நல்லாய், (உ)பொய்யெல்லா மேற்றித் தவறு(௩)தலைப்பெய்து
கைமொடு ÷கண்டாய் பிழைத்தே னருளினி

க. இயக்கன்-இயக்குபவன்; "இயக்கலி னியக்கி யாகுமே" சீவக. ௧௦௧௫.

உ. (அ)"பொய்யெல்லா மேற்றி......அருளினி" என்பதை இவ்வுரைகாரர் (தொல். கற்பி. சூ. ரு.) மேற்கோள் காட்டி, இது தலைவன் நின்றுநனி பிரிவி னஞ்சிய பையுளில் அடங்குமென்றார். (ஆ) "பரத்தையி னகற்சியிற் பிரிந்தோட்குறுகி, யிரத்தலுந் தெளித்தலும்" என்பதன் உரையில், இப்பகுதியை இரத்தற்கு மேற்கோள்காட்டினர் இளம்பூரணர்; தொல். அகத். சூ. ௪௪. 'ஒன்றாத் தமரினும்'

௩. (அ) "பண்டு மொருகாற் கண்டகத் தடக்கிய, வையப் பரத்தையைக் கையொடு கண்டே, மினிப்பொய் யுண்ணு மேழைய மல்லம்" பெருங்.

(பிரதிபேதம்) * கொண்டாடிற்றுத் தானெதிர் பூழினை வெல்லாமல்பூழினைக். † போற்றியர் நின்மெய். ‡ அம்மேயோவென, ‖ தலைவன் ÷ கண்டை.

எ-து:, பின்னும் நல்லாளே! யான் * செய்த தவறுகளை என் தலையிலே †யிட்டு என் பொய்களையெல்லாம் எனக்கு ஏறத் தெளிவித்து என் களவைக் கையோடே பிடித்துக்கொண்டாய்; யானும் நின்னைத் தப்பினேன்; இனி எனக்கு அருளென்றான். எ - று.

உகூ ‡அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி ||யளித்தி
(க)விடலைநீ ÷நீத்தலி னோய்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்

எ - து: அதுகேட்டு அவள், எடா! யாம் நீ கூறியவாறே × அருளுவேம்; அங்ஙனம் அருளுதற்கு யாம் யாராந்தன்மையையுடையேம்? விடலாய்! நின் பூழெல்லாம் நீமுன்னர் அளித்துப் பின்னர்க் கைவிடுதலின் +நின்னடிப்பிலே அகப்பட்டு நோயைப் பெரிதாகப் பொருந்தும்; அவை வருந்தாதபடி நீ உனக்கு ஆம்படி பண்ணின பூழெல்லாவற்றையும் இன்னும் நின் பாணனோலே அழைத்துவிட்டு அவற்றின்மனந்தெளியும்படி அளித்து **ஆடுவாயாக வென்றாள். எ - று.

எனவே, பரத்தையர்க்கும் பூழிற்கும் ஏற்ப நின்றது.

இதனால், இருவர்க்கும் புணர்வாகிய உவகைபிறந்தது.

"கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி, யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக், காத லெங்கையர் காணி னன்றென, மாதர் சான்ற வகையின் கண்ணும்"(உ)என்றதனான் அருளினியென அடிமேல் வீழ்ந்தவாறும், ††அருளுகம் யாம்யாரேமெனக் காதலமைந்தவாறும், அளித்தியெனப் பணிவை நின் பெண்டிர் கொள்வரென்றவாறுங் காண்க.

(க) சுO: சகூரு - சகூஎ. (ஆ) "தான்முன் கண்ட தவற்றின ளாதலிற், சென்ற வாயிற் கொன்றல ளூடி" பெருங். (க) நஎ: ககூஎ - ககூஅ.

க. "பரத்தையி னகற்சியிற் பிரிந்தோட் குறுகி, யிரத்தலுந் தெளித்தலும்" என்பதனுரையில் 'விடலை நீ நீத்தலின்..............நின்பூழ்' என்பதை மேற்கோள்காட்டி, இதில் மருதநிலத்திற்றலைமகன் விடலை யெனப்பட்டா னென்பர் இளம்பூரணர்; தொல். அகத். சூ. சுசு. 'ஒன்றாத்தமரினும்'

உ. தொல். கற்பி. சூ. சு. இச்சூத்திரப்பகுதியி னுரையில் (அ) 'நல்லாய் ....பூழ்' என்பதை மேற்கோள்காட்டி, "இதனுட் 'கையொடு கண்டாய் பிழைத்தேனருள்' என அடிமேல்வீழ்ந்தவாறும் 'அருளுகம்

(பிரதிபேதம்) * செய்யாத, † இட்டெனப்பொய்களை. ‡ அருளுக யாம்யாரே யெல்லா, || அளித்துவிடலை, ÷ நீக்கலின், × அருளுகம் அங்ஙனம் + அந்நடிப்பிலே, ** ஆளுவாயாக, †† அருளுகம் யாரெனக்காதலமைந்தவாறும் காண்க.இது,

இது பல கொச்சகங்களும் வருதலிற் கலிவெண்பா வுறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (௩0)

(௯௬.) ஏந்தெழில் மார்ப வெதிரல்ல நின்வாய்ச்சொற்
பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை
சாந்தழி வேரை சுவற்றாழ்ந்த கண்ணியை
யாங்குச்சென் றீங்குவந் தீத்தந்தாய் கேளினி

ஏந்தி, எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்
குதிரை வழங்கிவரு வல்;

அறிந்தேன் குதிரைதான்
பால்பிரியா வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை
நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்நூ லுத்தரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்
தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியொ டமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணி யார்ப்ப வியற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து
ளாதிக் கொளீஇய வசையினை யாகுவை
வாதுவன் வாழிய நீ;

யாம் யாரேம்' எனக் காதலமைந்த வாறும் நீ நீத்தலின் பூழெல்லாம் நடலைப்பட்டு நோய்பெரிதேய்க்கும், அவற்றைஇன்னும்விளித்து நின் பாணனோடு ஆடியளித்துவிடு என இப்பணிதல் நின் பெண்டிர்க்கு நன்றாமென்றவாறும் கூறியவாறு காண்க. ஈண்டுப் பூழென்றது, குறிப்பினாற் பரத்தையரை" என்பர். இளம்பூரணர்; 'அவனறிவு' (ஆ) நச்சினார்க்கினியர் "மெய்யைப் பொய்யென்று..........பூழ்" என்றபகுதியை மேற்கோளாகக்காட்டி, இங்கே தாமெழுதியிருக்கும் விசேடக் குறிப்பையும் எழுதியிருக்கிறார்.

௨௨ சேகா, கதிர்விரி வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது;

௨௫ கூருகிர் மாண்ட குளம்பி னதுநன்றே
கோரமே வாழிகுதி ரை;

௨௭ வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரை யுடலணி போலநின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது;

௩௦ சீத்தை, பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழிகுதி ரை;

௩௨ மிகநன், றினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோ வன்று பெருமநின்
னேதில் பெரும்பாணன் றாதாட வாங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற் பரத்தை
பரியாக வாதுவனா யென்றுமற் றச்சார்த்
திரிகுதிரை யேறிய செல்.

*இது "கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு †தொகைஇப் பகுதியி னீங்கிய தகுதிக்கண்" (க)‡தலைவி பரத்தையரைக் குதிரையாக்கிக் கூறியது.

இதன் பொருள்.

க. (அ)தொல். கற்பி. சூ. ௯. இச்சூத்திரப் பகுதியினுரையிலும் நச்சினார்க்கினியர் இச்செய்யுளை மேற்கோள் காட்டி, "இதனுள் பாணன் தாதாட வாதத்தால் வந்த குதிரை யென்பதனால், அவன் கூட்டிய புதிய பரத்தையர் என்பதூஉம் அவன் பகுதியினின்று நீங்கியவாறும் குதிரையோ வீறியதென்பது முதலியவற்றாற் கொடுமை நெஞ்சைச் சுடுகின்றவாறும் அதனை நீக்கிய பரத்தையரைக் குதிரையாகக்கூறித் தானதற்குத் தக்குநின்றவாறுங் காண்க" என இதனிறுதியிலுள்ள குறிப்புக்குச் சிறிதுவேறுபட ஒரு குறிப்பும் எழுதியுள்ளார். (ஆ) இந்நூற்பக்கம் ௫௭௭: ௨ - ஆம் குறிப்பு இங்கும் அறியத்தக்கது.

(பிரதிபேதம்) *இது பகுதியினீங்கிய, †தொகைஇயபகுதி, ‡தலைவிகூறியது.

(௧)ஏந்தெழின் மார்ப வெதிரல்ல நின்வாய்ச்சொற்
(௨)பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா *மைந்தினை
சாந்தழி வேரை சுவற்றாழ்ந்த கண்ணியை
யாங்குச்சென் (௩)றீங்கு†வந் தீத்தந்தாய்

எ - து: உயர்ந்த அழகினையுடைய மார்பனே! நின் வாயிற்சொல் நினக்கு மாறல்ல; நின் தன்மைகண்டு வினவுகின்றேன்; நீ மடிவிரிந்து கரையற்று முசிந்த (௪) ‡புடைவையையுடைய அமையாத வலியினையுடையை; சந்தனம் அழிதற்குக் காரணமான || வேர்வையையுடையை; தோட்கட்டிலே கிடந்து நிறங்குறைந்த கண்ணியையுடையை; ஆகையினாலே எவ்விடத்தே சென்று இவ்விடத்தே வந்தா+யென்றாள். எ - று.

௪ கேளினி

ஏந்தி, (௫)எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்
குதிரை வழங்கிவரு வல்

×எ - து: அதுகேட்ட தலைவன், யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள்; உயர்ந்து தன்னில் இணையொத்த நீலப்பூவைத் தொடுத்தாலொத்த கண்ணினையுடையாய்! குதிரையேறி வருவேனென்றான். எ - று.

---

௧. "ஏந்தெழின் மிக்கான்"

௨. (அ)ஆய்தலென்பது உள்ளத னுணுக்கமாகிய குறிப்புணர்த்து மென்பதற்கு, இவ்வடி மேற்கோள்; தொல். உரி. சூ. ௩௪. சேனா; சூ. ௨௯. 'ஒய்தல்' தெய்வச். சூ. ௩௨. நச்; நன். உரி. சூ. ௧௮. இரா; இ-வி. சூ. ௨௮௧. (ஆ) "பாய்ந்தாய்ந்த மா" பதிற். ௬௧: எ.

௩. "ஈங்குவந் தீத்தந்தாய்" என்பது முன்னிலை முற்று வினைத்திரிசொல்லுக்கு மேற்கோள்; தொல். எச்ச. சூ. ௬௧. நச்.

௪. புடைவையென்பது ஆண்பாலாருடைக்கும்பெயராய்ப் பண்டுவழங்கிற்றென்பது; முல்லைப். ௫௧. ௩து. ௫௬௮. பு - வே. வாகை. ௧௪; பெருந். பெண்பாற். ௧௮ உரையாலும், "மெய்தருவா னெறியடைவார் வெண்புடைவைமெய்சூழ்ந்து" என்னும்சேக்கிழார்செய்யுளாலும் அறியலாகும்.

௫. (அ)"நீலத், தெதிர்மலர்ப் பிணைய லன்னவிவ, ளரிமதர் மழைக்கண்" (ஆ)"நெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை, யெதிர்மல ரிணைப்போ தன்னதன், னரிமதர் மழைக்கண்" எனவும், (இ) "மலர்பிணைத் தன்ன மாயிதழ் மழைக்கண்" (ஈ) "மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன,

(பிரதிபேதம்) * மைந்தினைச் சாந்தழி. † வந்தீத்தாய் கேளினி: எ - து. ‡ புடவை யோடே அமையாத, || வேர்ப்பையுடையை, + என்றாள் பின்னர்த்தலைவன்யான் கூறுகின்றதனை இப்பொழுதுகேள் ஏந்தி, × எ - து: உயர்ந்து தன்னில்,

அசேகம்தன் குதிரை * தான்
பாற்பிரியா (க)வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவன்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை
நீல மணிக்(உ)கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
†மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்நூ ‡லுத்தரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்
தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியொ டமைத்தியாத்த
வார்||பொலங் கிண்கிணி யார்ப்ப ÷வியற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து
ளாதிக் ┼கொளீஇ யசையினை யாகுவை
வாதுவன் வாழிய நீ

மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு"(உ)"தாமலர்த் தாமரைப் பூவி னங்கண், மாயிதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன, திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்"(ஊ)"குவளையின் பிணையல் செற்று......செவ் வரிபொதிந்த வாட்கண்" (எ) "கொங்கிவரும் கருங்குழலி பெருந் தடங்க ணிருங்குவளைப் பிணையல் போல............திளைத்த வன்றே" எனவும் (ஏ) "முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி, னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும்" (ஐ)"கண்ணே, புகழ்சா ன்மரை யலரிணைப் பிணையல்" எனவும் வருவனகாண்க.

க. (அ) "ஐங்கூந்த லுளர" கலி. கOரு: ருங. (ஆ) "நாறைங் கூந்தற்... ....மகளிர்க்கு" (இ) "இருளைங் கூந்த லின்றுயில்" (ஈ) "சில் லைங் கூந்தல்" அகம். சுரு: கஅ - உO; உஙங: கரு; உசுக: ங. (உ) "நாறைங் கூந்த லணித்தென" (ஊ) "புயலைங் கூந்தல்" (எ) "நா றைங் கூந்த னடுங்குதுய ரெய்த" சிலப். கO: சங; கக: கOசு, கரு: கள.

களிகையென்பது, கடிகையெனத் திரிந்துநின்றது; களிறு கெளி றென்பன கடிறு கெடிறெனத் திரிந்து வருதலுங் காண்க; வட மொழியில் திரிந்துவந்ததென்றலுமாம். "கண்ணார் களிகை" "திருக்

(பிரதிபேதம்) * தான் எ - து: அதுகேட்டதலைவி நீ ஏறின குதிரைதான் யானறிந்தேன் அத னைக்கேள் பால்பிரியா, † மத்திகைகண்ணுறை. ‡ உத்திரியத், || பொலக் கிண்கிணி, ÷ பயிற்றிநீ. ┼ கொளீஇய வசைவினை யாகுவா யாதுவன்.

*எ - து: இது...தே னின்றநீ யூ...றின குதிரைதான் யானறிந்தேன்; அதனைக்கேள்; ஐம்பாற் ப... யறத்தினிற் ...துவகையினையுடைய கூந்தலாகிய பலமயிர்களைப் பலகாலுங் க... (க)†கேசாரியின்மயிரினையும், மயிர்முடியின்மேலே விரித்து நிலைபெறுத்தும் ...துஞ்சாகிய சிவந்த தலையாட்டத்தினையும்,|| நீலமணியைத் தோலிலேவைத்துத் தைத்துச்செய்த,கட்டுவடமாகிய கழுத்திற் கட்டுதலையுடைய ÷ வல்லிகையினையும், ...மெல்லிய காதிற் கிடக்கும் (உ)புல்லிகையென்னும்பூணாகிய கீழேநாலும் இ...பையுடைய (ங) கன்ன சாமரையினையும், (ச) தெய்வவுத்தியென்னும்பூணின...கேதுவக்கிஒருவடமாய் நாலுஞ் சுட்டியாகிய, குதிரை கண்ணுறக்கண்டு அஞ்சு...டியாக விட்டுவைத்த அழகுபெற்ற (ரு) சம்மட்டியினையும், நூலாற்செய்யப்பட்ட உத்தரியமாகிய

கேழ்க் களிகை" என்பவை பெருங்கதை. இதனைக் கண்டிகையின் சிதைவென்பாருமுளர்.

க. கேசாரியென்பது, இங்கே குதிரையின் பிடரிக்குப் பெயராய் வந்துள்ளது; கேசரம் - பிடரிமயிர்; அம்மயிரையுடைமையால் இதற்குக் கேசரியென்று பெயராகி அது இடையே நீண்டுவந்ததுபோலும்; வடமொழியில் குதிரைக்குக் கேசரியென்ற பெயர் சிறுபான்மை வழங்குமென்ப. கேசாரியென்னுஞ் சொல் "சுவல்" (மது. ௩௧௧.) என்பதற்கும் 'உளை' (நெடுநல். ௯௩.) என்பதற்கும் பொருளாக இவ்வுரைகாரரால் ஆளப்பட்டிருக்கிறது.

உ. புல்லிகை - கன்னப்பூவென்னும் அணிகலம்; குடைக்கடுக்கனெனினும் வாளியெனினும் பொருந்தும்.

ங. கன்ன சாமரை - குதிரையின் காதிலணியும் சாமரை.

ச. (அ) "தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்து" முருகு. ௨௩; (ஆ) "தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி..............மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து" சிலப். ௬: ௧௦௬ - ௧௦௮.

ரு. சம்மட்டி - சவட்டை; இது சாட்டையென வழங்கும்; சவுக்கென்பதும்இது. நன்றாக அடிப்பது (அடித்து ஓட்டுவது) என்னும் பொருட்டாகிய ஸம்மர்த்தியென்னும் வழக்காறற்ற வடசொற்சிதைவுபோலும்; மத்திகையென வருதலும்நோக்குக. இச்சொல் மலையாளத்திலும் சம்மட்டியென்றேவழங்கும்; கன்னடத்தில் 'சம்மட்டிகெ' என ஒருசொல் உண்டென்றும் அதுசர்மபட்டிகையென்பதன் திரிபென்றும் கூறுவர்.

(பிரதிபேதம்) * எ - து: பால்பிரிசுவல் - ஐம்பாற்பகுதி, † கேதாரியின்மயிரினையும் சுவலாகுபெயர்; சிகழிகை மேல்விரித்தியாத்த செவ்வுளை-மயிர்முடியின், ‡ ('குஞ்சியாகிய' என்பது முன்பதிப்பு) || நீலமணிக் கடிகை யாப்பின் வல்லிகை - நீலமணியாற் செய்த ÷ வல்லிகையினையும்; அது நீலமணியைத் தோலிலே வைத்துத் தைத்தது. மென்காதிற் புல்லிகைக்கீழ் ஞாலியல் சாமரை - தண்டுமெல்லிய காதிற் ....கன்னசாமரையும், உத்தியொருகாழ் கண்ணுறையாகக்கவின்பெற்ற மத்திகை - தெய்வவுத்தியென்னும்........சம்மட்டியினையும், நூலுத்திரியத்திண்பிடி - நூலாற் செய்யப்பட்ட

அீசகம்தன் குதிரை * தான் செய்த தன்னிலொத்த
பா பிரியா (க)வைங்கூந்தற் பன்மயிர்க் —ய † கண்டிகையினையும்,
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செ . . . சதங்கைத் ‡ தண்டையினை
கூகினபொன்னாற்செய்த (உ) சதங்கை
நீல மணிக்(உ)கடிகை வக்கட்டின (ரு) சிலம்பாகிய (சு) கெச்சையும்
ஞாலியன் மென்காலித்துஎறினவிருப்பத்தையுமுடையகுதிரையைச்
† மத்திகைக் கண்ணு அழகினையுடைய சாந்து வாரின மாடத்தில் அழ
முற்றத்தே (எ) ஆதியென்னும் நெடுஞ்செலவை
வுத்தி யொருகா இளைத்தாய்; ஆகையினாலே நீமேல்(அ)நல்ல அரசவாரிய
நேர்மணி நே யாகவென்றாள். எ - று.

கரு தார்மணி ———
கடிவாளம்.; குதிரைக்கயி றென்றலுமாம்.
நூபுரப்
நம் புட்டிலு மாற்றுவ" சீவக. களஎஉ.
வார்|| புரமும் சிலம்பும் வெவ்வேறணிகலமாகவும் கூறப்படும்; "நூபுரம்
கா லம்பிடச் சிலம்பு நொந்தழ" என வருதலும் காண்க.

௪. கெச்சை, வாயில்லாச் சதங்கை யென்பர்.

ரு. செண்டுவெளி-வையாளிவீதி; இது யானை குதிரைகளைப்பயிற்றுதற்கும் கடுகச்செலுத்துதற்கும் உரிய இடம்.

சு. நிலா முற்றம் - நிலவின்பயன்கொள்ளுதற் குரித்தாய் மேலே வேயாத மேற்றளம்; இது வடமொழியில் சந்திர சாலை யென வழங்கும்; வழக்கில் மொட்டை மாடியெனப்படும்.

எ. "அடிபடு மண்டிலத் தாதி போகிய, கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்" மது. ருகூ0 - ருகூக.

அ. 'நல்ல வாசவாரியன்' என்றே ஏடுகளிலிருப்பதை நோக்க, நல்ல வாசி வாரியனென்றிருக்க வேண்டுமோ வென்று உண்டான ஐயத்தை இச்செய்யுளின் ஈற்றயல் வரி உரையாகிய 'நீ யாசவாரியனாய்' என்ற தொடர் நீக்கி அரசவாரியனென்று துணியச்செய்தது.

(பிரதிபேதம்)* குசையினையும்,நேர்மணி......கண்டிகை - இனமொத்த.†கண்டிகையினையும்; அது தோலிலே மூன்றுநிரையாகப் பலநிறத்து மணியைவைத்துத்தைத்துக் கழுத்திற்கட்டுவது; தமனிய‡மேகலை பூண்டமணித்தார்-பொன்னாற்‡தண்டையினையும்,அடியொடமைத் தியாத்த நூபுரப்புட்டில் - அடியிடத்தே சமைத்துக்கட்டின சிலம் பாகிய கெச்சையும்; ஒடு, உருபுமயக்கம். அடியொடமைத்தி யாத்த வார்பொலக்கிண்கிணி-அடியிடத்தே.............,சதங்கை யும்; சதங்கை பரத்தைக்கும் குதிரைக்குமொக்கும். ஆர்ப்பவியற்றி - புட்டிலுஞ் சதங்கையும் ஆரவாரிப்பச் செலுத்தி யென்க. நீ காதலித்தூர்ந்த காமக்குதிரை - நீகாதலித்துப் புணர்ந்த நின்னுடைய காமத்தையுடைய பரத்தையை யெனவும் நீகாதலித் தேறின.............குதிரையெனவும் நின்றது. செண்டு வெளியிலன்றி......கொளுத்தவிளைத்தாயாகையினாலே.

ஆதி(க)மாதியென்பஃதே னின்றநீ யூர்ந்த குதிரை முதலியவற்றையுடைய, க ⁹ யறத்தினிற் கொண்ட அசையினை யென்க.

சுவல், ஆகுபெயர். ஒடு, உருபுவன் றுமயக்கம்.* பெருமநின்

· சிகழிகைமேல் விரித்தியாத்த செவ்வுளையெனக்கேயோர் யாப்பின்வல்லிகையென்க. மென்காதிற் புல்லிகைக யெனவும், . உத் யொருகாழ் 'கண்ணுறையாகக் கவை யெனவுங் கூட்டுக. தமனிய மேகலைபூண்ட மணித்தாரென

கண்டிகை, தோலிலே மூன்று நிரையாகப் பலநிறத்து ய தைத்துக் கழுத்திற் கட்டுவது.

அடியொடமைத்தியாத்த என்பதனை வார்பொலங்கிண்கி புட்டில் இரண்டற்குங்கொள்க.

சதங்கை, பரத்தைக்குங் குதிரைக்கும் ஒக்கும்.

நீ காதலித்தூர்ந்த நின்காமக்குதிரை என்பதற்கு, நீகாதலித்துப் புணர்ந்த நின்னுடைய காமத்தையுடைய பரத்தை[யெனினுமாம்.] (எனவுங்கொள்க.)

உஉ சேகா, கதிர்விரி வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது

எ - து: ஞாயிற்றின் கதிர் விரிகின்ற விடியற்காலத்தே கையிற் பிடித்த அலகாலே (உ) தூராலை வாருதல்கொண்ட மதுரையிற் பெரிய முற்றம்போல. நின்மெய்க்கட் கீறியது †குதிரையோ ? எ - று.

சேவகா, சேகா எனத் திரிந்து நின்றது; விகாரமெனினுமாம்.

‡வாருதலென அலகும் பெற்றது; வீறுதல் - கீறுதல்.

உரு கூருகிர் மாண்ட ||குளம்பி னதுநன்றே
கோரமே வாழிகுதி ரை

எ - து: அக்குதிரை கூரிய உகிராலே மாட்சிமைப்பட்ட குரத்தினை ÷யுடையது; ஆதலின், மிகவுங் கொடிதே; ┼அதனை ஏறுகின்ற நீ தப்பின்றி வாழ்வாயாக. எ - று.

க. மாதி - வட்டமாயோடல்.

உ. தூரால் - செற்றை குப்பை.

(பிரதிபேதம்) * கொளீஇயவசைவினையென்க. சேகா, சேவகாவென்பது......விகாரமுமாம். கதிர்விரியாவைகவிற், †குதிரையோ வாருதலென அலகும்பெற்றது வீறுதல். ‡ (வாரு வாரூஉவென அலகுபெற்றது என்பது முன்பதிப்பு) || குளம்பினது வன்றே. ÷ உடையதுவாதலின், ┼இதனை.

ீசகம்தன் குதிரை * தான் ,திக்
பாற ்பிரியா (க)வைங்கூந்தற் பன்மயிர்க் ககட்
மேல்விரித் தியாத்த சிகழிகைச்
நீல மணிக்(உ)கடிகை வ
காலும் நாழியாலும்(ச)சேதிகையென்னும்பெயரை
ஞாலியன் மென்கா வண்ணங்களைத் தோய்த்துக்குத்தின குதிரையுடலிற்
†மத்திகைக் கண் மெய்க்கட்கவ்வியதுகுதிரையோகூறுயென்றாள். எ - று.
வுத்தி யொருச மின்றி நீங்குக் கடித்தது நன்றே
நேர்மணி நே வாழிகுதிரை
தார்மணி—
ச ! கெட்டது; தனக்கொரு பயனின்றியிருக்க வடுப்படுத்தற்கு
நூபுரட் இடத்தே வடுப்படுத்திற்று; ஆதலால், இக்குதிரை பெரிதும்
வார் ண; அக்குதிரையை எறின நீ தீங்கின்றி வாழ்வாயாக. எ - று.

கா யவென்னும் உரிச்சொல்‡முதனிலையாகப்பிறந்து வியமமெனப் பெயர் படுகின்றது; அம் அசை. உரிச்சொன் முதனிலையாக எல்லா நிலைகளும் பிறக்குமாறுணர்க. இனி விஷமமென்னும் வடமொழியென்பாரும் உளர். அது ஷ டகரம் பெற்றே வருமென உணர்க.

"வேட்கை மறுத்துக் ||கிளந்தாங் குரைத்தன், மரீஇய மருங்கி னுரித் தென மொழிப"(௬)என்பதனுள்,ஒன்றெனமுடித்தலால், மரீஇயவாறு ஏனைய வற்றிற்குங்கொள்கவென்று அதனுன் இழிந்தோர்கூற்றைஉயர்ந்தோர்கூறுவன அமைத்தாம். அவை: வீறுதலுங் கவ்வுதலும்.

க. 'குத்திக்குதிரை' என்றே பிரதிகளிலுள்ளது; 'குத்தின குதிரை' என்னு முரையைநோக்க, 'குத்தீ குதிரை' என்றிருக்கலா மென்று தோற்றுகிறது.

உ. "புடைப் போர்ப் புளகத் துடப்புமறை பருமத்து" பெருங். (க)சஅ:எ

௩. உழக்கு நாழி யென்பவை முகத்தலளவைக் கருவிகள்.

ச. சேதிகையென்பது, யானைக்கு உரித்தாகக் காளிதாஸ மஹாகவியாற் கூறப்பட்ட பத்திச்சேதம்போலக் குதிரைக்கு உரித்தானதொரு சித்திர விசேடமாயிருக்குமென்று அறிஞர் கூறுகின்றனர்.

ரு. பக்கரையென்பது குதிரைச்சேணமென்னும் பொருளினதாய், (சீவக. கஎஎஉ. சூளா. கல்யாண. கச. அரசியற் உ௩௦.) செய்யுணடையிலும் (பெரும்பாண். சகூஉ; முல்லை. எஉ; நெடுநல். கஎகூ, சீவக. ருகூஎ) உரை நடையிலும் பயின்று வருதல்காண்க.

௬. தொல். பொருளி. சூ. கஎ. இச்சூத்திரத்தின் இவருரையிலும் இக் குறிப்போடு "குதிரையோ வீறியது" என்பது மேற்கோள்.

(பிரதிபேதம்) * வண்ணங்களை. † வியமமே இக்குதிரையை, ‡ முதனிலையாக எல்லா நிலைகளும் பிறக்குமாறுணர்க. அதுவியமமெனப் பெயர்படுகின்றது அம்மசை வியமென்னும் வடமொழி, || கிளர்ந்தாங்கு.

ஙஉ மிகநன், றினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
(க)பருமக் குதிரையோ வன்று * பெருமநின்
னேதில் பெரும்பாணன் றாதாட வாங்கேயோர்
† வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற் பரத்தை
பரியாக ‡வாதுவனு யென்றுமற் றச்சார்த்
திரிகுதிரை யேறிய செல்

எ - து: இன்று நீ எறிய குதிரை மிகவும் ||நன்றாயிருந்தது; அதனை இப்பொழுதறிந்தேன்; அது ×தான் அறநூல் கூறிய வழியாற் பெரியமணஞ் செய்துகொண்ட (உ) மேகலையையுடைய காமக்கிழத்தியாகிய குதிரையோ அன்று; பெருமா! பாண்டொழிற்கு ஏதிலனாகிய பெரிய பாணன் தூதாய்ச் (ங)செல்ல, அவ்விடத்துப்பரத்தையருடனே உண்டான மாறுபாட்டாலேவந்த (ச)காற்றுப்போற்கடிய குதிரை; அதுதான் நினது பழையஉருவை முற்கூறிய வாறே கெடுக்கும்; ஆதலால், அக்குதிரையை இனி எறாதேகொள்; அன்றி அப் பரத்தை குதிரையாக நீ அரசவாரியனாய் எந்நாளும் +ஏறில்மேல் ஈண்டுவாராக் கூற்றிலே திரி; இனி ஈண்டுத் ÷தாழ்க்ககில்லாதே அக்குதிரையை ஏறுதற்குப் போவெனத் தலைவி புலந்துகூறினாள். எ - று.

க. பருமமென்பது, குதிரைச்சேணத்துக்குப்பெயராய்வருதல்: (நெடுநல். களகூ, நாலடி. கசகூ, கள. கசு. பெருங். (க) சஅ: எ, (உ) கஅ: கரு) இவற்றாலும் அறியலாகும்.

உ. மேகலையுள், பருமமென்பது ஒன்று; அது பதினெட்டுக் கோவை யுடையது; "பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்" (முருகு. கசகூ.) என்பதும் அதனுரையும்பார்க்க. பதினான்கு கோவையுடையதென்று கூறுவாரும் உளர்.

ங. ஆடுதலென்பது செல்லுதலென்னும் பொருட்டாய் வருமென்பதை, "நின்றாதாடித் துறைச்செல்லாள்" கலி. எஉ: கங. என்பதனாலும் இந்நூற்பக்கம் சஙரு: ச-ஆம் குறிப்பாலும் அறிக.

ச. (அ) "கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவி" (ஆ) "கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல விவுளி" (இ) "காற்கடுப் பன்ன கடுஞ்செல விவுளி" (ஈ) "காலியக்கன்ன கதழ்பரி"(உ)"காலியற்புரவி" (ஊ) "வளிநடந் தன்ன வாச்செல விவுளியொடு" (எ) "காலியற் கலிமா" (ஏ) "வளிதொழி லொழிக்கும் வண்பரிப்புரவி"(ஐ) "காலிய விவுளி"

(பிரதிபேதம்) * பெருமானின், † வாதத்தால், ‡வாதுவனுய்மற்றச்சார், || நன்றாயிருந்ததனை, × தானறால், + ஏறிஈண்டு, மேல்ஈண்டு, ÷ தாழ்க்கவில்லாதே.

இதனுட் (௧)'பாணன்றாதாடவந்த' என்றதனான் அவன் கூட்டிய புதிய பரத்தையரென்பதூஉம்'அறத்தினிற்கொண்டகுதிரையோவன்று'என்பதனால், காமக்கிழத்தி யன்றென்பதூஉம் அவன் பகுதியி னீங்கியதூஉம் மேனியில் வடுக்கள் நெஞ்சினைச் சுடுகின்றதூஉம் பரத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தக்குநின்றதூஉங் கூறியவாறுணர்க. "மரபுநிலை திரியா *மாட்சிய"(௨.)என்பதனால், தலைவி அங்ஙனங்கூறும்வழு அமைத்தாம். இதனுள் மடன் அழிந்த †வழுவமைதி, "தன்வயிற் கரத்தலு மவன்வயின் வேட்டலு, மன்ன விடங்க ளல்வழி யெல்லா, மடனொடு நிற்றல் கடனென மொழிப" (௩.)என்பதனுள் அமைத்தாம்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது ‡சொற்சீரடி பெற்று ஐஞ்சீரடுக்கிவந்தகலிவெண்பா. (௩௧)

(௬௭.) அன்னை கடுஞ்சொ லறியாதாய் போலநீ
யென்னைப் புலப்ப தொறுக்குவேன் மன்யான்
சிறுகாலை யிற்கடை வந்து குறிசெய்த
வவ்வழி யென்றும்யான் காணேன் றிரிதர
வெவ்வழிப் பட்டாய் சமனாக விவ்வெள்ளல்;
௬ முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான்யான் றங்கினேன்;
௮ ஒக்கும்;
அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்
அவ்வியானைதான், சுண்ணநீ றாடி நறுநறு நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவிரோடைத்
தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி

---

௧. இந்நூற்பக்கம் ௫௮௪: ௧ - ஆம் குறிப்புப் பார்க்க.

௨. தொல். அகத். சூ.௪௫; இந்நூற்பக்கம் ௫௭௭: ௨-ஆம் குறிப்புப்பார்க்க.

௩. தொல். பொருளி.சூ. ௧௧.இச்சூத்திரத்தின்இவருரையில், "இவ்வீரிடத்தும் மடனழிதலுடையனென வழுவமைத்தார்; அது 'குதிரைவழங்கி வருவல்' என்று அவன் கரந்தவழி அதனை மெய்யெனக் கோடலன்றே மடமை; அங்ஙனங் கொள்ளாது 'அறிந்தேன் குதிரைதான்' எனப் பரத்தையர்கட் டங்கினாயெனக் கூறுதலின், இது மடனழிந்த வழுவமைதியாயிற்று" என்னுங் குறிப்புக் காணப்படுகின்றது.

(பிரதிபேதம்) * மாட்சிமைய, † வழுவமைத்துத்தன். ‡ சொற்சீரடியும்பெற்று.

யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
முத்தேய்க்கும் வெண்ப னகைதிறந்து
நன்னகர் வாயிற் கதவ வெளில்சார்ந்து
தன்னலங் காட்டித் தகையினாற் காறட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வாங்கித்தற் கண்டார்
நலங்கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பொய்ப்பதுநீ;

எல்லா, கெழீஇத் தொடிசெறித்த தோளிணை தத்தித்
தழீஇக்கொண் டோர்ந்தாயு நீ;

குழீஇ, அவாவினாற் றேம்புவா ரிற்கடை யாறு
வுவாவணி யூர்ந்தாயு நீ;

மிகாஅது, சீர்ப்பட வுண்ட சிறுகளி யேருண்க
ணீர்க்குவிட் டோர்ந்தாயு நீ;

சார்ச்சார், நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ்
சிறுபாக ராகச் சிரற்றுது மெல்ல
விடாஅது நீயெம்மில் வந்தாயவ் வியானை
கடாஅம் படுமிடத் தோம்பு.

இது "கொடியோர் கொடுமை சுடுமென...............பததீயி னீங்கிய தகுதிக்கண்" (௧) தலைவி (௨)பரத்தையரை யானையாகக் கூறிப்*புலந்தது.

இதன் பொருள்.

(௩)அன்னை கடுஞ்சொ லறியாதாய் போலநீ
†யென்னைப் புலப்ப தொறுக்குவேன் மன்யான்
(௪)சிறுகாலை யிற்கடை வந்து குறி ‡செய்த

௧. தொல். கற்பியல். சூ. ௬.

௨. இந்நூற்பக்கம் ௫௭௭: ௨-ஆம் குறிப்புப்பார்க்க.

௩. "அன்னை கடுஞ்சொல்...........எள்ளல்" என்பது பரத்தையர் அன்பினுற் * கூடியதற்கு (* கூறியதற்குஎன்றும் பிரதிபேதம்) மேற்கோள்; தொல். களவி. சூ. ௧௬. இளம்.

௪. (அ) "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கணும்" என்னுஞ் சூத்திரத்திற்கு, 'ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த•பக்கத்துக் கண்ணும்

(பிரதிபேதம்) * புலாந்தது, † என்னைபுலப்பது, ‡ செய்தவழி யென்றுயான் காண.

வவ்வழி யென்றும்யான் காணேன் றிரிதர
வெவ்வழிப் பட்டாய் சமனாக விவ்வெள்ளல்

எ - து: நீ தலைநின்று ஒழுகுகின்ற பாத்தை, யான் புணர்தற்கு நீ குறித்தல்செய்த *அவ்விடத்து எந்நாளும் உன்னைக் காணேனாய்ப் பலகாலுந் திரிதலைச் செய்ய, நீ எவ்விடத்தே போனாயென்று நாட்காலத்தே எம்முடைய மனையின் வாசலிலே வந்து கடுஞ்சொற் சொல்லி உன்னைப் புலக்கின்ற தொழிலை நீ அறியாதாய்போல இப்பொழுது நடுவாக நின்று இங்ஙனம் எம்மை இகழ்கின்ற இகழ்ச்சியிடத்து யான் என்னை மிகவும் ஒறுத்துக்கொள்வேன்; நீ எந்நாளும் அத்தன்மையையென்றாள் தலைவி. எ - று.

கூ (க)முத்தேர் முறுவலாய் நம்(உ)வலைப் பட்டதோர்
(ங)புத்தியானை வந்தது † காண்பான்யான் றங்கினேன்

எ - து: அதுகேட்ட தலைவன், முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நம்வலையிலே அகப்பட்டுவந்த தொரு புத்தியானை ஈண்டு வந்தது; அதனை எறிக் ‡காண்பதாக யான் றங்கினே னென்றான். எ - று.

வருவகைதாம் வழக்கு நெறி யென்று கூறுப' என்று பொருளும் 'மனையோண்மாட்டும் காமக்கிழத்திமாட்டும்நிகழும்புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையர் மாட்டும் நிகழும்' என்று விளக்கமும் எழுதி, "சிறுகாலை..........காணேன்" என்ற பகுதியைப் புணர்வுகுறித்து வந்ததற்கு மேற்கோள் காட்டினர் இளம்; தொல். பொருளி. சூ. உகூ. (ஆ) "சிறுகாலைப் பட்ட பொறியும்" (இ) "சிறுகாலை, யட்டில் புகாதாள்" நாலடி. ககO, ஙகூங.

க. (அ)தலைமகன்,தனதொழுக்கத்தைத்தலைமகண்மாட்டுக்கரந்துணர்த்தும் வழி அவள் மடனழிய நின்றதற்கு, "முத்தேர் முறுவலாய் நம்வலை .. ..கேட்டேன்" என்னும் பகுதிகளை மேற்கோள் காட்டி, "முத்தேர்..............தங்கினேன்" என்றவழி, அதற் குடம்படாது "அவ்வியானை வனப்பு..............கேட்டேன்" எனப் பொய்கூறினானென்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழித லாயிற் றென்பர் இளம்; தொல். பொருளி. சூ. கO. 'தன்வயிற்' (ஆ) "முத்தேர் முறுவலாய்" இந்நூற்பக்கம் ஙகூO: உ - ஆம் குறிப்புப்பார்க்க.

உ. "மும்மதத்துவாரை, வலையை வீசியே பிடித்திட மதித்துளாரென்ன"

ங. "காவற் பாங்கி னாங்கோர் பக்கமும்" என்புழி, "புத்தியானை வந்தது காண்பான் யான் றங்கினேன்" என்பதனால், யானையைக் காத்தற்குப் பிரிந்தேனெனத் தலைவன் கூறினானென்பர் நச்; தொல். அகத். சூ. சுக.

(பிரதிபேதம்) * இடத்து † காணயான் றங்கினேன், ‡ காண்பதாயான்,

ஒக்கும்
(௧)அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்
அவ்வியானைதான், சுண்ண(௨)நீறாடி (௩)நறுநறு நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவி*ரோடைத்
(௪)தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி
யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
முத்தேய்க்கும் †வெண்ப னகை திறந்து
(௫)நன்னகர் வாயிற் கதவ வெளில் ‡சார்ந்து
தன்னலங் காட்டித் தகையினூற் காறட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக ||வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வாங்கித்தற் கண்டார்
நலங் ×கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பொய்ப்பதுநீ

எ - து: அதுகேட்ட தலைவி, நீ கூறியது ஒக்குமென நெஞ்சொடு கூறி, பின்னர் அவன் கேட்ப + அந்தப் புத்தியானை, ஒள்ளிய நெற்றியிலே நிலை பெறுத்தின (௬)திலகமாகிய விளங்கிய = பட்டத்தினையும், தொய்யில் எழுதின

---

௧. கலி. ௬௮: ௧௩-ஆம் அடிக்குறிப்பின்க ணுள்ள அம்பிகாபதிகோவை. (௫௧௦.) செய்யுள், ஈண்டும் அறியத்தக்கது.

௨. "நீறாடிய களிறுபோல" பட். ௬௮.

௩. "தெண்கட் டேறன் மாந்தி" அகம். ௩௩௬: ௬.

௪. "தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை" மது. ௪௧௬.

௫. நன்னகரென்பதனை இவ்வடியின் முன்னடிக்கும் தன்னலமென்பதனை இவ்வடிக்குமீற்றுச்சீராக்கி இம்மூன்றடியையும் அளவடியாக்கலுமாம்.

௬. திலகமென்பது நெற்றியிலணியும் ஓராணிகலமுமாம்; இதனை (அ) "ஒருத்தி தெரிமுத்தஞ் சேர்ந்த திலகம், ஒருத்தி யரிமா ணவிர்குழை யாய்காதுவாங்க" (கலி. ௬௨; ௩௫-௩௬) என்பதனாலும் (ஆ)உதயணன் வாசவதத்தையின் அணிகளைக் கண்டு புலம்புமிடத்து, "அந்தியுண் மூளைத்த வெண்பிறை போலச், செந்தீச் சிறுநுதன் மூழ்கத் தீந்து, நிலமிசை மருங்கின் வீழ்ந்தனை யோவெனத், திலக நோக்கிப் பலபா ராட்டியும்", (பெருங். (௨) ௧௬:௮௮-௬௧.) என்று கூறுதலாலும் அறிய

(பிரதிபேதம்) *ஓடை தொய்யில. †வெண்பன்னகை. ‡சாய்ந்து, சாய்த்து. || வலர்ந்துபடர், ×கவழங்கொள்ளும், + வந்தபுத்தியானை, = பட்டத்தினையும்.

அழகினையுடையமுலையாகிய வெண்மையையுடைய கோட்டினையும்,(க)தொய்யகமென்னுந் தலைக்கோலமாகிய தோட்டியினையும், தாழ்ந்த மகரக்குழையாகிய வடித்த மணிகளையும், திருவைப் பொறித்துவைத்த புனைந்த தலைப்பணியாகிய கழுத்துமெத்தையினையும் உடைத்து; ஆகையினாலே அழகுடைத்தாகலும் பிறர் கூறக் கேட்டேன்; அந்த யானைதான் சுண்ணமாகிய நீற்றை அணிந்து *நறிய கள்ளாகிய நீரை உண்டு நல்ல மனைவாசலிற் கதவமாகிய கம்பத்தைச் சேர்ந்து அதனோடே துவக்குண்டதே தனக்குச் சங்கிலியாகக் கட்டுண்டு தன்னழகைக் காட்டி அவ்வழகாலே ஒருவரும் போகாதபடி காலைத் தடுத்து வீழ்க்கும்; அதுவேயுமன்றிப் பிறர்க்கு வருத்தத்தைச் செய்யும் மெல்லிய தோளாகிய தடக்கையாலே வாங்கிக்கொண்டு தன்னைக் கண்டாருடைய நலமாகிய கவளத்தை முத்தையொக்கும் நகையினையுடைய வெண்பல்லைத் திறந்து கொள்ளும்; அந்தச் சிரிப்பை † முகத்தேயுடையவேழத்தை இன்று கண்டாய்போலே நீ எம்மைப் பொய்யாக்குவது என்ன ‡பயனையுடைத்தென்றாள். எ - று.

"பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்து" (உ)என்றார் பிறரும். ஆடியென்பது முதலிய செய்தெனெச்சங்கள் வீழ்க்குமென்னும் முற்றுச் சொல்லோடு || முடிந்தன. அதுவேயுமன்றிக் கவளமுங் கொள்ளுமெனப் பின்னும் முற்றாக முடிக்க. ÷நகைமுகவேழமென்றது சுட்டாய் நின்றது.

உஉ எல்லா, கெழீஇத் தொடிசெறித்த + தோளிணை தத்தித்
தழீஇக்கொண் டூர்ந்தாயு நீ

எ - து: எடா! ×தொடியைச்செறித்த தோளாகிய மருமத்தே கெழுமித் தழுவிக்கொண்டு பின்னர்த் தத்தி ஏறினாயும் நீ எ - று.

இது முயக்கமும் புணர்ச்சியுங் கூறிற்று. யானையாதலின், தத்தியூர்ந்தாயென்றாள்.

உச குழீஇ, அவாவினாற் றேம்புவா ரிற்கடை யாறு
வுவாவணி யூர்ந்தாயு நீ

லாகும். (இ)"சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்"(ஈ)"தாரா ரோடைத் திலகநுதற் சயிலம்" வில்லி. கிருட்டினன். கக. நான்காம்போர். ௩௨. என்புழி யானைநெற்றியிலும் திலகம் கூறப்படுகின்றது.

க. "தொய்யகம்" கலி. உஅ: ௬. இதற்கு, பூரப்பாளை யென்று பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார்; சிலப். ௬: க0எ.

உ. களவழி. ௩அ.

(பேதம்) * நறிதாகிய, † முகத்தையுடைய, ‡ பயனுடைத்து, || முடியும் அதுவேயுமன்றிக் கவழமும், ÷ நகைவேழமென்றது. + தோளிணைத் தத்தித்தழீஇக், × தொடிசெறிந்ததோள்.

எ - து: நின்மேல் வேட்கையால் எதிர் கொண்டுவந்து கூடிப் பின்னர் வருந்துகின்ற பரத்தையருடைய மனையின் வாயிலே வழியாகக் கொண்டு போய் அவ்வியானையை அழகுண்டாக எறிஞ்யும் நீ. எ - று.

உவாவென்றதனை இளையமகளிராகவும் யானையாகவுங் கூறுக. அது யுகம் உகமாயினாற்போல் நின்றது.

௨௬ மிகாஅது, சீர்ப்பட வுண்ட சிறுகளி பேருண்க
ணீர்க்குவிட் டேர்ந்தாயு நீ

எ - து: நின்னை மிகாமற்*சீர்மைப்பட நுகர்ந்த சிறிய களிப்பினையுடைய அழகினையுடையவாகிய மையுண் †கண் அழும்படி சிலநாள் விட்டுப் பின்னர்க் கூடினாயும் நீ. எ - று.

நின்னைக் கைகடவாமல் ஓர் அளவிற்பட மதம் பிறத்தற்கு வேண்டுவன வற்றை உண்ட, சிறிய களிப்பையுடைய, மக்க ளழகை உண்டற்குக் காரண மான கண்ணையுடைய (௧)யானையை நீர்க்கு விட்டு எறிஞய் நீ என்றும் ஒரு பொருள் தோன்றநின்றது. அழகையுண்டல்-அவரைக் கொல்லுதல். கண், ஆகுபெயர்.

௨௮ ‡சார்ச்சார், (௨) நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ்
சிறுபாக ராகச் (௩)சிரற்றாது ||மெல்ல

௧. "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" கலி. ௫௬: ௩௨ - ௩, என்பதும் இந்நூற்பக்கம் ௩௭௬: ௬-ஆம் குறிப்பும் இங்கே கருதத்தக்கன.

௨. (அ)எல்லாமென்னுஞ்சொல் உயர்திணைக்கண்உளப்பாட்டுத்தன்மைக்கே வருமென்றும் அது "நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்" எனப் படர்க்கையின் வருதல் இலக்கணவழக்கன்று; நின் பெண்டி ரெல்லாரு மென்னுஞ்சொல் எல்லாமென மரூஉவழக்காகி வந்த தென்றும் அதனைச் செய்யுண்மருங்கினுமென்னும் அதிகாரப்புறனடை யாற் பிறநூன் முடிபெனத் தழீஇக் கோடலுமா மென்றும் கூறுவர் தெய்வச்சிலையார்; தொல். பெயரி. சூ. ௩௨. 'எல்லாமென்னும்' (ஆ) எல்லா மென்பது "தன்னுளுறுத்த பன்மைக்கல்லது உயர்திணை மருங்கினாக்கமில்லை" என்பதனால், சிறுபான்மை முன்னிலைக்கண்ணும் படர்க்கைக்கண்ணும் வருமென்றுகொண்டு, "நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ், சிறுபாகராக" என்பதனைப்படர்க்கைக்கண் வந்ததற்கு (தொல். பெயரி. சூ. ௩௩.) நச்சினார்க்கினியரும், (இ) இ-வி. சூ. ௧௬௧. இ-வி. நூலாரும் மேற்கோள் காட்டுவர்; (ஈ) இதனை, சேனாவரையர் இடவழு வமைதியென்பர்; தொல். பெயரி. சூ. ௩௩.

௩. சிரற்றுதலென்பது சிரறுதலென்றும்வரும்; உடற்றுதல் உடறுதலென அருகிவருதலும் காண்க.

(பிரதிபேதம்) * சீர்மைபட. †கண்ணை அழும்படி. ‡ சாஅர்ச் சாஅர், || மெல்லாவிடா.

விடாஅது நீயெம்மில் வந்தாயவ் வியானை
கடாஅம் படுமிடத் தோம்பு.

எ - து: சார்ந்த சார்ந்த இடங்களிலுள்ள அறல்தங்கின கரிய கூந்தலையுடைய நின் பெண்டிரெல்லாரும் நின்னைக் கோபியாதபடி எம்முடைய இல்லிலே வந்தாய்; *அதற்கு அப்புத்தியானை நீ ஏறமாட்டாத(௧)பாகனும்படியாக நின்னைக் கைகடந்து மதம்படும்; அவ்விடத்து விடாதே அதனை மெல்லெனப் பரிகரித்துக்கொள்ளெனப் புலந்துகூறினாள். எ - று.

புதிய பரத்தையரைப் †புணர்தற்கு ஏனைப் பரத்தையர் கோபியாதபடி அதற்குப் பரிகாரமாக‡ஈண்டுவந்து என்பால்அடைந்தாய்; தலைவி மனைக்கண் தங்கினனென்று அவர் கருதுவாராக நினைத்தாயென்றாள்.

இதனால், இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவுகொச்சகங்களும் சொற்சீரடிகளும் வெண்பாக்களும் விரவி வந்த கொச்சகக்கலி. (௯௭)

(௯௮.) யாரைநீ யெம்மில் புகுதர்வா யோரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ
வதுவை விழவணி வைகலுங் காட்டினையாய்
மாட்டுமாட் டோடி மகளிர்த் தரத்தரப்
௫ பூட்டுமான் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் பரத்தைமை
காட்டிய வந்தமை கைப்படுத்தேன் பண்டெலாங்
கேட்டு மறிவேன்மன் யான்;
௰ தெரிகோதை யந்நல்லாய் தேறியல் வேண்டும்
பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;
௧௫ ஓஒ, புனலாடி னாயெனவுங் கேட்டேன் புனலாங்கே
நீணீர் நெறிகதுப்பு வாரு மறலாக
மாணெழி லுண்கண், பிறழுங் கயலாகத்

௧. பாகனென்னும், உரையைநோக்க, பாகரென்பதை ஈற்றில் அர்பெற்று வந்த பாகென்னுஞ் சொல்லாகக் கொண்டனரென்று தோற்றுகிறது.

(பிரதிபேதம்) * அதற்குப்புத்தியானை. † புணர்த்தற்கு ‡ ஈண்டுவந் தாயென்பால்வந்தாயென் றென்றாள்தலைவி.

கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிறையழித்து நன்பகல் வந்தவவ்
வியாணர்ப் புதுப்புன லாடினாய் முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு;

௨௦ ஆனாது; அளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
குளித்தொழுகி னாயெனவுங் கேட்டேன் குளித்தாங்கே
போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா
வார்க்கு நெகிழ்த்தா னன்னீர் நடைதட்பச்
சேர்த்தக வந்த புதுப்புன னின்னைக்கொண்
டீர்த்துய்ப்பக் கண்டா ருளர்;

௨௭ ஈர்த்தது; உரைசால் சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மிலை;

௩௦ நிரைதொடீஇ, பொய்யாவாட் டானைப்புனைகழற்காற்றென்னவன்
வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்ததைத்
தெய்வத்திற் றேற்றித் தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

௩௪ மெய்யதை, மல்கு மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்
பல்காலு மாடிய செல்வழி யொல்கிக்
கவினொரு மில்வழிக் காலாழ்ந்து தேரோ
டிளமண லுட்பட லோம்பு முனைநேர்
முறுவலார்க் கோர்நகை செய்து.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவன் ஆற்றாமையே வாயிலாகச் சென்றுழி அவனைக் கண்டு நீ தாழ்த்த காரணமென்னெனை, புதுப்புனலாடித் *தாழ்த்ததென்ன, தலைவி இன்ன புதுப்புனலே ஆடியதேன நெருங்கிக் கூறியது.

இதன் பொருள்.

(௧)†யாரைநீ யெம்மில் புகுதர்வா யோரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ

௧. (அ) "யாரைநீ யெம்மில் புகுதர்வாய்" என்பது தலைவி அகமலி யூடலகற்சிக்கண் வேற்றுக்கிளவி கூறியதற்கு மேற்கோள்; தொல். கற்பி.

(பிரதிபேதம்) * தாழ்த்தேனெனத்தலைவி நீ யின்னபுதுப்புனலோவாடியது, † யாரையோ வெம்மில்.

(௧)வதுவை விழவணி வைகலுங் காட்டினையாய்
மாட்டுமாட் டோடி(௨)மகளிர்த் தரத்தரப்
பூட்டுமான் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் *பரத்தைமை
(௩)காட்டிய வந்தமை கைப்படுத்தேன் பண்டெலாங்
கேட்டு மறிவேன்மன் யான்

†எ - து: (௪)புதியனவாகியமலர்களைஆராய்ந்து நுகரும்வண்டுபோலே நீ புதிய பரத்தையரை நுகர்தற்கு விரும்புதலின் அவரைக் கொண்டுவருதற்கு அவரிருக்கின்ற இடந்தோறும் இடந்தோறும் ஓடிச் சென்று அப்பரத்தையரைக் கொண்டுவருகையினாலே எப்பொழுதும் பூட்டப்படுங் குதிரையை

---

௫. ௧௬. 'அவன் குறிப்பு' இளம். (ஆ) "யாரைநீ சொல்லுகென்றலும்" (இ) "யாரைநீ தேற்றேன்"। கந்த. மார்க்கண்ட. ௨௧௮. அசுரர் யாக. ௨௭. (ஈ) ।"நீயாரை நின்னிலை, சொல்லுதி" (உ) "யாரைநீ, யென்னைநீ யியம்பியது" கம்ப. விபீடண. ௫௩. மீட்சி. ௯௦. (ஊ) "யாரைநீ செப்புகென" (எ) "ஆரைநீயென" கூர்ம. இராமன்வனம். ௩௬, ௧௦௭. (ஏ) "யாரைநீ..............போந்ததென்னை" நைடதம். பிரிவுறு ௨௬. என்பவற்றிலும் (ஐ) "நீயாரை" கலி. ௮௮: ௩: என்பதிலும் அதன் குறிப்பிலுள்ளவற்றிலும் யாரை என்பதில் ஐகாரம் முன்னிலை விளக்கிவருதல் காண்க; ஐ, அசையென்பாரு முளர்.

௧. "அறிவுடை யந்தண னவளைக்காட் டென்றனே" கலி. ௪௨: ௧௮.

௨. (அ) "இவ்வூர் மங்கையர்த் தொகுத்தினி, யெவ்வூர் நின்றன்று மகிழ்ந நின்றேரே" ஐங். ௬௨. (ஆ) "நல்லாரை நெடுநகர்த் தந்துநின், றேர்பூண்ட நெடுநென்மான் றெண்மணிவந் தெடுப்புமே" (இ) "தேர் மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்" கலி. ௭௦: ௧௭-௧௮, ௮௮: ௧௮. (ஈ) "தேர்தர வந்த நேரிழை மகளிர்" அகம். ௩௩௬: ௧௧.

௩. "செவியிற் கேட்பினுஞ் சொல்லிறந்து வெகுள்வோள், கண்ணிற் காணி னென்னு குவள்கொல்................பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே" ஐங்குறு. ௮௪.

௪. (அ) "வண்டு புதிதுண்ண" கலி. ௧௭: ௧௫. என்பதும் (ஆ) அதன் குறிப்பும் இந்நூற்பக்கம் ௨௩௪: ௪-ஆம் குறிப்பில் (இ)இச்செய்திக்குப் பொருந்துவனவும், (ஈ) "தேனீப் புதுநறு வருந்தி யார்த்து" கந்த. சுரம்புகு. ௨௮. (உ) "பூந்துகள் விரவித் தோற்றுப் புதுமதுக் கவர்ந்து தேனீ, மாந்துதன் மாந்தி" திருவானைக். ஆருஞ். ௧௬. என்பனவும் இங்கே ஒப்புநோக்கற் பாலன.

(பிரதிபேதம்) * பரத்தமை, † எ - து: ஒருமசை, புதியன.

யுடைய திண்ணியதேர் ஆரவாரித்த தெருவுகளெல்லாம் நின் (க)பரத்தைமை கூறிய பாட்டு உண்டாதற்குப் பொருந்தின நின் பொய்யாகிய பரத்தைமைக் குணத்தை யான் முற்காலமெல்லாம் மிகவுங் கேட்டும் அறிந்திருப்பேன்; அதுவேயன்றி நாடோறும் வரைந்து கொள்ளுங் *கல்யாணமாகிய விழாவா லுண்டாகிய ஒப்பனையை என்னை ஒழிந்தவர்களுக்குக் †காட்டுதற்கு நீ வந்து இப்படி வருவையென நெஞ்சிலே தெளிந்துவிட்டேன்; (உ) எம்முடைய இல்லிலே புகுதலைச் செய்வாயாகிய நீ எமக்கு ஆராந்தன்மையையுடையை ‡ யென்றாள். எ - று.

ஒரும், அசை. கேட்டுமென்னும் உம்மை, எச்சம். யாழ, அசை. (௩)கைப் படுத்துதல், ஈண்டுத் தெளிதலை உணர்த்திநின்றது. புகுதருவாயென்பது, (௪) புகுதர்வாயெனத் திரிந்துநின்றது; உகரம் விகாரத்தாற்||றொக்கதெனினுமாம்.

௬ (௫)தெரிகோதை யந்நல்லாய் ×தேறீயல் வேண்டும்
பொருகரை வாய்சூழ்ந்த (௬)பூமலி (௭)வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் (௮)பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்

எ - து: அதுகேட்ட தலைவன், தெரிந்த மாலையினையும் அழகினையு முடைய நல்லாய்! யான் செய்யாதனவற்றைப் பெரிதாக என்னைச் சொல்வது என்னபயனையுடைத்து? தன்னிடத்தேசூழ்ந்த பூக்கள் மிக்க நீர்பொருகின்ற கரையையுடைய வையையாற்றில் வருகின்ற நீரையாடுதற்குத் தங்கினேன்; அதனை நின் னெஞ்சால் ✢ (௯)தெளிதல்வேண்டுமென்றான். எ - று.

க. "மகிழ்நன் பரத்தைமை பாடி யவிழிணர்க், காஞ்சி நீழற் குரவை யயரும்" அகம். ௩௩௬: அ - ௯.

உ. "எம்மனை, வாரனீ வந்தாங்கே மாறு" கலி. அ௧: உ - ௩.

௩. "கைப்படுதி" (சீவக:௧௬௦௦.) என்பதற்கு, 'காண்பை' என்று பொருள் செய்திருத்தலும் இங்கே கருதற்பாலது.

௪. "திரிதர் வாய்" பரி. ௧௦: ௧உ௧.

௫. "தெரிகோதை யந்நல்லார்" கலி. அஅ: ௧அ.

௬. "வையை யென்ற பொய்யாக் குலக்கொடி,..............புண்ணிய நறு மல ராடை போர்த்து,..................புனல்யா றன்றிது பூம்புனல் யாறெனா" சிலப். ௧௩: ௧௭௦ - ௧௭௪.

எ. "வையை வருபுன லாட லினிது கொல்" தொல். மெய்ப்பாட், ௬. ௧௧. இளம். மேற்கோள்.

அ. கலி. ௬அ: ௩உ - ௩௩.

௯. 'ஓஒதல் வேண்டும்' (குறள். ௬௫௩) என்பதற்கு, தவிர்க வென்று பொருளெழுதி யிருப்பதும் 'காத்தல் வேண்டும்' (சீவக. உ௦௧.)

(பிரதிபேதம்) *கல்லியாணமாகிய, †காட்டுதற்குச்சிவந்திப்படியையென, ‡என்றாள்கேட்டும், || தொக்கது. தெரி, × தெரீஇயல்வேண்டும். ✢ தெளிதலைவேண்டும்.

௧௩. ஓஒ ! என, கூறிய பொய்யை வியந்து நெஞ்சோடு கூறினாள்.

புனலாடி னாயெனவுங் கேட்டேன் (௧)புனலாங்கே
நீணீர் நெறி(௨)கதுப்பு வாரு மறலாக
மாணெழி லுண்கண் பிறழுங் கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிறை*யழித்து (௩)நன்பகல் †வந்தவவ்
வியாணர்ப் புதுப்புன லாடினாய்(௪)முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு

எ - து: அவ்விடத்தே புனலாடினை ‡யென்றுங் கேட்டேன்; நீ ஆடிய புனல்தான் ஒழுகும் அறல் நீண்ட தன்மையையுடைய நெறித்த மயிராக, ஆண்டுப் பிறழுங் கயல்கள் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய உண்கண்ணாக, || கருமை மலர்தல் பொருந்தின கமழ்கின்ற பூக்களையுடைய சோலையிடத்தே நாணாகிய அணையை முறித்துப் பலருங் காணும்படி பகற்பொழுதிலே ×வந்த அந்தப் புதுவருவாயையுடைய புதுப்புனலைப் பாணன்வாயிலாக வூட =தீர்த்து மாலைக்காலத்திற்கு முன்னே சென்று ஆடினாயென்றாள். எ-று.

மலர்தல், பரத்தற்பொருட்டு. ┼

என்பதற்கு, காப்பாயாகவென்று பொருள் கூறி வேண்டுமென்பது உம்மீற்றான்வந்ததோர் ஏவல்கண்ணிய வியங்கோள்; "வாழ்தல்வேண்டு மிவண் வரைந்த வைகல்" (புறம். ௩௬௭) என்றார் பிறரும் என்று மேற்கோள்காட்டியிருப்பதும் "நடக்கல் வேண்டும்" (சீவக. ௨௬௭.) என்பதற்கு, போவாயாகவென்று பொருள் கூறி வேண்டுமென்பது ஒரு வியங்கோளென்று எழுதியிருப்பதும் ஈண்டு அறிதற்பாலன.

௧. "தேனுகர் வண்டு ஞிமிறுஞ் சுரும்புஞ் செறிகுவளைப், பூநகு தண்புனற் பொய்கைநல் லூர புதுப் புனலுங், கானமர் புள்ளுங் கடவுளும் வாசியும் காய்சினமால், யானையு மாவர்கொல் லோநாளு நாளும்வந் தெங்கையரே" அம்பிகாபதி. ௫௧௦.

௨. "விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கய னெடுங்கண், விரைமலர் நீங்கா வவிரறற் கூந்த, லுலகுபுரந் தூட்டு முயர்பே ரொழுக்கத்துப், புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி, வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" சிலப். ௧௩: ௧௬௬ - ௧௭௦.

௩. இந்நூற்பக்கம் ௪௪௫: ௨-ஆம் குறிப்புப் பார்க்க.

௪. முன்மாலையென்பது இரவின் முன்னதாகிய அந்திக்கும் பின்மாலையென்பது இரவின் பின்னதாகிய அந்திக்கும் பெயராகுமென்றும் கூறுவர்.

(பிரதிபேதம்) * அழிந்து. † வந்தவிவ்வியாணர்ப். ‡ என்று கேட்டேன், || கருமையலர்தல் × வந்த புதுவருவாயை. = தீர்ந்து. ┼ ('புதுவருவாயையுடையது புதுப்புனல்' என்பது முன் பதிப்பு.)

௨0 ஆனுது, அளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
(௧)குளித்தொழுகி னுயெனவுங் கேட்டேன் குளித்தாங்கே
போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா
வார்க்கு ஞெகிழ்த்தா னன்னீர் நடைதட்பச்
சேர்த்தக வந்த புதுப்புன லின்னைக்கொண்
டீர்த்துய்ப்பக் கண்டா ருளர்

எ - து: மேன்மேலே தலையளிசெய்து அமர்ந்த காதலோடே அப்புனலை ஆடுதலால் வெளிப்படுகின்ற அலரை யான் அறிதலை அஞ்சி மறைந்து நடந்தாயென்று பிறர் சொல்லவுங் கேட்டேன்; அதுபொருமல் மெய்யை மறைத்த சினத்தோடே புருவமாகிய *திரையையிட்டு நல்லநீர்மையையுடைய நின் ஒழுக்கத்தைத் தடுக்கும்படி கனம்பட வந்த சிலம்பொலியாலே ஆரவாரிக்கும் புதியபுனல் நீ குளித்த அவ்விடத்தே நின்னைக் கைக்கொண்டு இழுத்துச் செலுத்தக் கண்டாரும் உளரென்றாள். எ - று.

குளித்த கடைக்குறைந்தது. குளித்தொழுகவென்று நீரிற் பிறக்குந் தொழிலுந் தோன்றநின்றது. கோபத்தாற் பல்காலும் புருவம் ஏறி முரிவதனைத்†திரையிடாவென்றாள். ஒழுகினுயெனவுமென்ற உம்மை,எச்சவும்மை. பாணன் புணையாக ஆடியதே ‡யன்றி யென நிற்றலின்.

௨எ ஈர்த்தது, (௨)உரைசால் சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மிலை

எ - து: அங்ஙனம் இழுத்த நீர் புகழமைந்த தலைமையினையுடைய நினது நீர்மையையுடைய நெஞ்சை வாங்கிக்கொள்கையினுலே குற்றமற்ற அப்புதுப்புனலினுடைய பெருக்கினின்றுங் கரையேறுதற்கு இன்னும் கரை கண்டதுதானும் ||இல்லையென்றாள். எ - று.

இன்னுமென்ற உம்மை, சிறப்பு. கண்டதுமென்ற உம்மை, காணுமையேயன்றிக் கண்டதுமில்லையென எதிர்மறை.

௩0 நிரைதொடீஇ,(௩)பொய்யாவாட்டானைப் புணைகழற்காற்றென்ன
வையைப் புதுப்புன லாடத் தவிர்ந்ததைத் [வன்

௧. குளித்தல் - மறைதல். "மயின்மயிற் குளிக்குஞ்சாயல்" சிறுபாண். ௧௬.

௨. "உரைசால் சிறப்பின், மன்னன் மாறன்" சிலப். அ: ரு-௬.

௩. இப்பொருளில், "வாய்வாள்" என்ற சொல்லாட்சியே பெரும்பாலன.

(பிரதிபேதம்) *திரையைவிட்டு. † திரையிடவென்றாள். ஒழுகினுயென்றவும்மை ‡ அன்றி நிற்றலின், || இலையென்றாள்.

(க)தெய்வத்திற் றேற்றித் தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்

எ-து: அதுகேட்ட தலைவன், *நிரைதொடியினையுடையாய்! (உ) தப்பாத வாட்டானையினையும் புனைந்த கழற்காலினையுமுடைய பாண்டியனது வையையாற்றின் வந்த புதிய புனலை ஆடுதற்குத் தங்கினபடியை வார்த்தையாற் றெளிவித்து, பின்னர்த் தெய்வத்தாற் றெளிவிப்பேன்; நினக்கு யான் செய்யாதனவற்றை என்னைப் பெரிதாகச் சொல்லுகின்றது என்னபயன்தருமென்றான். எ - று.

இந்நிலத்திற்கு உரியதெய்வம் (ந.)இந்திரன்.

ந௪ (ச)மெய்யதை, †மல்கு மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்
பல்காலு மாடிய செல்வுழி யொல்கிக்
களைஞரு மில்வழிக் காலாழ்ந்து தேரோ
டிளமண லுட்பட லோம்பு முளைநேர்
முறுவலார்க் கோர்நகை செய்து

எ - து: ‡பெருகிய மலரைச் சூடின பொய்யையுடைய புதிய புனலைப் பலகாலும் ஆடல்வேண்டித் தேரோடேசெல்லுமிடத்து (ரு)முளையொத்த முறுவலையுடையார்க்கு ஒரு சிரிப்பை உண்டாக்கி நின்னைப் பிடித்துக் கரையேற விடுவாரில்லாதகாலத்தே இளமணலினுள்ளே || கால்நிலை தளர்ந்து கழுமி அகப்படுதலைப் பாதுகாப்பாயாகெனத் தலைவி நெருங்கிக்கூறினாள். எ - று.

க. "செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ, னையத்தா லென்னைக் கதியாதி தீதின்மை, தெய்வத்தாற் கண்டீ தெளிக்கு" கலி. கூக: கூ-அ.

உ. தப்பாத வாள் தானை - தவறுமல் வெட்டுகின்ற வாட்படை.

ந. "ஊடலுங் கூடலுமாகிய காமச்சிறப்பு நிகழ்தற்கு, மருத நிலத்திற்குத் தெய்வமாக 'ஆடலும் பாடலு மூடலு முணர்தலும்' உள்ளிட்ட இன்ப விளையாட்டு இனிதினுகரும் இமையோர்க்கும் இன்குரலெழிலிக்கும் இறைவனுகிய இந்திரனை ஆண்டையோர் விழவுசெய்து அழைத்தலின் அவன் வெளிப்படுமென்றார். அது 'வையைப் புதுப்புன.......... தேற்றித் தெளிக்கு' என இந்திரனைத் தெய்வமென்றதனுலும்........ உணர்க" தொல். அகத். ரு. ருி. நச்.

௪. மெய்யதையென்பதற்கு, உரை காணப்படவில்லை.

ரு. நாணன் முளையை மகளிர்பல்லுக்கு உவமைகூறுதல் தமிழ்நூன் மரபு; "கிளையரி நாணற் கிழங்கு மணற் கீன்ற, முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்" (அகம். உகஉ: ௬-ரு.) என வருதல்காண்க.

(பிரதிபேதம்) * நிரைத்ததொடியினை. † மல்கிமலர்வேய்ந்த. ‡ பெருகுமலரை. || தான்நிலை தளர்ந்து கழுமி அகப்படுத்துதலைப் பாதுகாப்பார்யாரென.

இதனால், இருவருக்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிய பாட்டும் இடைமிடைந்த கலிவெண்பா. (௧) (௩௩)

(௯௯.) நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடுத்
தறவினை யின்புறூஉ மந்தண ரிருவருந்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது
குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
விழையணி கொடித்திண்டே ரினமணி யானையாய்;

௮ அறனிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளே;

௧௧ பொய்யாமை நுவலுநின் செங்கோலச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
காமநோய் கடைக்கூட்ட வாழுநாண் முனிந்தாளே;

௧௪ ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
னேமத் திகந்தாளோ விவளிவட் காண்டிகா
வேய்நல மிழந்ததோள் கவின்வாட விழப்பாளே;

ஆங்கு;

௧௮ நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
வடுக்காட்டக் கண்காணா தற்றாக வென்றோழி
தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே.

*இஃது அரசன் தலைவனாயவன்தலைவியைநீங்கி இருந்ததற்குத் தலைவி புலவிநீட்டித்து ஆற்றளாயவழி அவட்கு நிகழ்ந்த (௨) காமத்துமிகுதிறத்தை அவ்வாசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

---

௧. காவற் பாங்கி னாங்கோர் பக்கத்திற் றலைவன் கூறியவற்றைத் தலைவி பரத்தையராக்கிக் கூறுவதற்கு இதுவும் மேற். தொல். அகத். சூ. ௬௫.

௨. இச்செய்யுள் காமத்து மிகுதிறத்தான் அரசனை நோக்கிச் சான்றோர் கூறியதாதலின் மருதத்துக் கோத்தாரென்பது. (தொல். அகத். சூ. ௧௩. நச்.) காணப்படுகின்றது.

(பிரதிபேதம்) * இது அரசன்.

இதன் பொருள்.

நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடுத்
தறவினை யின்புறூஉ மந்தண ரிருவருந்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது
குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு (க)நல்லூழி யாவர்க்கும்
பிழையாது *வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
(உ)விழையணி கொடித்திண்டே ரினமணி யானையாய்

எ - து: கள்ளை உண்ணல் ஆகாதென்று நீக்கின †தேவர்க்கும் அதனை உண்டலை நீக்காத அசுரர்க்கும் (ங) வரைதலும் வரையாமையுமாகிய அவ்விரண்டினையுங் கைக்கொண்டு அறத்தொழிலாக இன்பமுறுத்தும் வியாழமும் வெள்ளியுமாகிய‡குரு இருவருஞ் செய்த வழி வேறாகிய தொழில்களையுடைய

க. (அ) மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்க..........நல்லூழி யடிப் படரப், பல்வெள்ள மீக்கூற, வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக" மது. ௧௦–௨௩. (ஆ)"உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழி யின்பம், வரவிப்படிதன்னை வாழ்வித்தவாணன்" தஞ்சை.௨அ௬. என்பவை "நல்லூழி......யானையாய்" என்பதனோடு ஒப்புநோக்கற்பாலன.

உ. (அ) "இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்தேர்", குறுந். ௩௪௫. (ஆ) "இழையணி நெடுந்தேர்" (இ) "இழைகிளர் நெடுந்தேர்" புறம். ௧௨௩: ௪; ௩௫௧: ௧௫.

ங. வியாழமும் வெள்ளியுஞ் செய்த அரசியனூல்கள் முறையே பாருகற்பத்திய சூத்திரமென்றும் சுக்கிரநீதியென்றும் பெயர்பெறும்; கள்ளுண்டல் பல நூல்களிலும் விலக்கப்பட்டுள்ள தென்பது உலகமறிந்த தொன்று; பிறவற்றாற் றீராப் பிணிதீர வேண்டி, நறவைத்தா னுண்டாற்கு நற்றீர்-வுறவைத்தான், பண்டுபொன்னோன் றந்த பராகசாந் தாயணப் பேர், கொண்ட கிருச்சிரங்கள் கொண்டு இதனுல் வியாழத்துக்கும் கொள்கை அதுவாதல் புலனாகும். சுக்கிரநீதியில் அளவு கடவாத மத்தியபானம் பிரதிபையையும் புத்தித்தெளிவையும் தைரியத்தையும் சித்தநிச்சயத்தையும் உண்டாக்குமென்று கூறப்பெற்றிருக்கிறது; வேறு விளக்கமாக அந்நூலிற் கண்டாலும் உசனஸ்மிருதியிற் கண்டாலும் பின்பு அச்செய்தி குறிக்கப்பெறும்; யாக்கிய வற்கியர் மத்தியபான சுராபான நிஷேதம் அந்தணர்க்கே யென்றும் அரசர் முதலியோர்க்கன்றென்றும் மக்கட்பிரிவுக்கு வகுத்துக் கூறியுள்ளார்; அஷ்டாங்க ஹ்ருதயம் சிகித்ஸாஸ்தானம் எழாவது அத்தியாயத்தில் நறவின் சிறப்பும் அதன் வகையின் பெயர்களும் பயனும் மற்றும் பலவும் விரித்துரைக்கப்பட்டிருத்தல் இங்கே அறியத்தக்கது.

(பிரதிபேதம்) * வருந்தனின், † தேவர்களுக்கும். ‡ அந்தணரிருவரும்.

அரசியலைக் கூறும் நூல்வழியைத் தப்பாமல், குழவியைப் பார்த்துஇன்புறுஉந் தாய் (௧) அதற்கு முலைசுரந்து கொடுக்குமாறுபோல, (௨) மழையானது தன்னை(௩)வேண்டின காலத்தே பெய்து(௪)உலகை அளித்துப் பாதுகாக்கும் நல்ல முறைமையை எல்லார்க்குந் தப்பாது வருதலை நினது நடுவுநிலைமை

"வெள்ளியும் பொன்னு மென்போர் விதிமுறை மெய்யிற் கொண்ட, வொள்ளிய நாளி னல்ல வோரையி னுலகமூன் றுந்,துள்ளினர் குனிப்ப மௌலி சூடினுன் கடலில் வந்த, தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் சேருந் தோளான்" கம்ப. திருவபிடேக. ௩௮. என்பதும் இவ்விருவ ரும் அரசியனால் செய்தன ரென்பதனை வலியுறுத்தும்.

௧. (அ) "புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச், சுரந்த காவிரி மரங் கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்" புறம். ௬௮: ௮ - ௧௦. (ஆ) "சரயு வென்பது தாய் முலை யன்னதிவ், வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்" கம்ப. ஆற்று. ௧௨. (இ) "ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித், தீம்பால் சுரப்போ டன்முலை போன்றே, ...அவர், முகங்கண்டுசுரத்தல் காண்டல் வேட்கையேன்" மணி. ௧௧: ௧௧௪ - ௧௧௮. என, பிறவற்றுக்கும் உவமையாய் கூறப்பட் டுள்ளது.

௨. (அ)"வேந்தன் முறைநெறியிற் சேர்தலும்.................திங்கண்மும் மாரிக்கு வித்து" திரிகடுகம். ௬௮. (ஆ) "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" குறள். ௫௪௫. (இ)"மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் விளையு மாறும்,............ ......பிறழ்தாரக் கோலி னுகும்" விநாயக. அரசியற்கைப். ௮௬. என்பனவும் (ஈ) "முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி, யொல்லாது வானம் பெயல்" குறள். ௫௫௯. (உ) "கோனிலை திரிந் திடிற் கோணிலை திரியுங், கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்" மணி. ௭: ௮-௯. (ஊ) "செங்கோல் கோடியோ............நலத்தகை நல்லாய் நன்னா டெல்லா, மலத்தற்காலை யாகியதறியேன்" மணி.௨௮: ௧௮௮ - ௧௯௧. (எ) "நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப்,... ....வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்" சீவக. ௨௫௫. (ஏ) "வேந்தன் முறைதிறம்பின்..............மாந்தர் பசியா லுணங்க மழைவறந்து; பாந்தண் முடிகிடந்த பாரின்விளை வஃகு மால்" பிரமோத்தர. பத்திராயுவுக்கு. ௧௮. என்பனவும் இங்கே ஒப்பு நோக்கற்பாலன.

௩. "முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண், டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே" புறம். ௩௫: ௧௫ - ௧௬.

௪. "மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட, தண்ணிய லெழிலி" பதிற்: ௧௮: ௯ - ௧௦.

யாலே உலகத்திற்குத் தரும்படியாக வாய்த்த இழையணிந்த கொடியினை யுடைத்தாகிய திண்ணியதேரினையும்(க)மணிகட்டினஇனமாகியயானையினையு முடையாய்! எ - று.

ஊழ் ஊழியெனத் திரிந்தது.

அ (உ)அறனிழ லெனக்கொண்டா *யாய்குடை யக்குடைப்
புற†நிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் ‡காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளை

எ - து : || நின் அழகிய குடையினது நிழல் அறத்தைச் செய்யுமென்று எடுத்தாய் ; அந்தக்குடையினது நிழலின்புறத்தே இவளகப்பட்டாளோ ? அதிற் பட்டவளல்லள் ; இங்ஙனம் பிறைபோலும் நுதல் பசப்புப் பரப்பப் பெரிய (ங)நடுக்கமுற்ற இவளை இவ்விடத்தே அருளிப்பாராய். எ - று.

× காண்டியென்னும் முன்னிலைவினையோடு (ச)காவென்னும் அசைநிலை யிடைச்சொல் நின்றது.

க. "மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்று" இன்னா. ௧௪.

உ. (அ) "வெண்குடை, நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற, வேம முரச மிழுமென முழங்க, நேமி யுய்த்த.........கவுரியர் மருக" புறம். ௩: ௧ - ௫. என்பதும் (ஆ) "மன்னுயிர் காக்குமிம் மன்னனு மென் கொலோ, வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று, மென்னுயிர் காவா தது" கலி. ௧௪௩: ௫௩ - ௫. (இ) "மண் காவல் கொண்ட வடிநெடு வேன்முடி மன்னவர்க்குப்,பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே" அம்பிகாபதி. ௫௨௦. என்பவையும் (ஈ) "முன்னமே மொழிந்தா யன்றே யிவன்குறை முடிப்ப தைய, பின்னிவன் வினையின் செய்கை யதனையும் பிழைக்க வாமோ" கம்ப. வாலிவதை. ௧௨௭. (உ) "வானும் வையமுங் காத்து வரம்பிலா, வூனு மாவியு மோம்பிய மாயற்கு, மீனும் வேலும் வெருவருங் கண்ணியும், யானுமோபிற ரென்றுளங்கன் றுமால்" திருக் கழுக்குன்ற. நாராயணச். ௧௪. என இதனிழலாய் வருவனவும் இங்கே அறிதற்பாலன.

ங. விதுப்பென்பதற்கு, புறநானூற் றுரையாசிரியரும் நடுக்க மென்றே பொருள் கூறினர். இவர்கள்கொள்கை, இச்சொல் விதிர்ப்பின் மரூஉ வென்பதுபோலும்; விதும்பலென்பதற்கு விரை வென்று பொருள் கூறுவர் பரிமேலழகர்.

ச. காவென்னுமிடைச்சொல் அசைநிலையாய்வருதற்கு "அறனிழ......... ......காண்டிகா" என்பது நன். இடை. ௬, ௨௨. மயிலை. விருத்தி.

(பிரதிபேதம்) * நின்குடையக. † நிழற்பட்டாளோ. ‡ கண்டிகா. || நின்குடையினது. × கண்டி.

௧௧ பொய்யாமை நுவலுநின் *செங்கோலச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் †காண்டிகா
காம‡ நோய் கடைக்கூட்ட வாழுநாண் முனிந்தாளை

எ - து: (௧) நினது || செங்கோலினுடைய உயர்ந்த நடுவுநிலைமை தப்பாமையை உலகம் புகழ்ந்து கூறாநிற்கும்; அந்தச் செங்கோலினுடைய இனிய செய்தொழிலுக்குக் கீழாகிய கொடுந்தொழிலின்கண்ணே இவள் அகப்பட்டாளோ? அதிற்பட்டவளல்லள்; இங்ஙனம் காமநோய் இறந்துபாட்டைச் சேர்த்துகையினாலே தான்உயிர்வாழும் ÷நாளை வெறுத்தஇவளைஇவ்விடத்தே அருளிப்பாராய். எ - று.

௧௪ ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
+னேமத் திகந்தாளோ விவளிவட் × காண்டிகா
வேய்நல மிழந்ததோள் கவின்வாட விழப்பாளை

எ - து: நின்னுடைய எறிகின்ற முரசம் இவ்வுலகத்திற்குக் காவலென்று கூறும்படியாக ஒலியாநிற்கும்; அந்த முரசினது காவலினின்றும் இவள் நீங்கினாளோ? நீங்கினவளல்லள்; இங்ஙனம் மூங்கில் தன்னலனிழத்தற்குக் காரணமான தோள் பழைய அழகுகெடும்படி வருந்துகின்ற **இவளை இவ்விடத்தே அருளிப்பாராய். எ - று.

ஓகாரங்கள், எதிர்மறை.

ஆங்கு, அசை.

௧௮ நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
(௨)††வடுக்காட்டக் கண்காணா தற்றாக வென்றோழி

இ - வி. சூ. ௨௱௭. இவற்றிலும் "புறநிழற்..........காண்டிகா" என்பது தொல். இடை. சூ. ௩௧. சேனா; ௩௪. சூ. ௩௦. 'யாகா' தெய்வச். நன். இடை. சூ. ௨௨. இரா; இவற்றிலும் மேற்கோள்.

௧. "நடைதனக்குக், கோடாமொழிவனப்புக் கோற்கதுவே" சிறுபஞ்ச. ௭. என்பதும் "தெரிவுகொள்செங்கோல்அரசரென்பதனான் அரசரெல்லாம் தங்நாட்டு நன்றுந்தீதும் ஆராய்ந்து அதற்குத்தக்க தண்டஞ்செய்தற்கு உரிமையும் அதுவெனக்கொள்க" (தொல். மரபு. சூ. ௭௧. பேர்) என்பதும் இங்கே அறிதற்பாலன.

௨. (அ) "தன்வழிக் குற்றங் காணாக் கண்ணெனத் தான்செய் குற்ற, முன்னிடா தவனைக் கோபித்து" மேருமந்தா. ௨௫௩. என்பதும்,

(பிரதிபேதம்) *செங்கோலைச் செங்கோலின், †கண்டிகா. ‡ நோய்க்கடைக் கூட்ட, ||செங்கோலினையுடைய, ÷ நாள்வெறுத்த, + ஏமத்தினிகந்தாளோ. × கண்டிகா, ** இவளையருளிப்பாராய். †† வடுக்காட்டிற்கண்.

தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே

எ - து: கண் * சேணிடைதாக நீங்கின பொருள்களைக் காணினும் தான் தன்னிடத்தே உற்ற வடுவைப் பிறர்காட்டவுங் காணாத தன்மைத்தாக † என்னுடையதோழியினது தொடிகள்சுழன்று கழலும்படியாக நீ கைவிட்ட கொடுமையை நீகடிதென்று உணராதிருத்தல் நினக்குச் (க) சான்றோரால் கடியப்பட்டவற்றில் ‡ ஒன்றோ! அஃதின்றேயென்றான். எ - று.

இதனைக் (உ)கைக்கிளையென்பார்க்குச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாது நிற்றலிற் கைக்கிளை || யாகாதெனவும், இதனைக் (௩) குறுங்கலியென்பார்க்கு அகத்தியனாருந் தொல்காப்பியனாருங் கூறாமையின் அப்பெயர் ÷ பொருந்தா தெனவுங் கூறி மறுக்க.

(ஆ) "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா, வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" (இ) "கற்ற கல்வியுங் கண்ணகத் தஞ்சனம் புறத்தே, யுற்ற வொண்பொருள் விளக்கியுண் கண்ணினுக் குதவாப், பெற்றி யொப்புற" என வடிவினிலையில் அஞ்சனத்தையும் சேணிகந்த வற்றினிலையில் பிறபொருளையும்நிறுவி ஒருவாறாக அமைத்திருத்தலும் இங்கே அறிதற்பாலன.

க. "கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா, முடிந்தாலும் பீழைதரும்" என்பது இங்கே அறிதற்பாலது; குறள். ௬௫௮.

உ. 'கலிவெண் பாட்டே' என்னுஞ் சூத்திர வுரையில், "அறனிழல்... .. ..விதுப்புற்றாளை" என்பதை மேற்கோள் காட்டி, இது சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாக் கைக்கிளை வந்ததாமெனின், அற்றன்று; தலைமகன் அன்பின்மை மெய்யாகினன்றே அன்னதாவது; இஃது அன்னதின்றி ஊடல் காரணமாக அன்பிலனென்று இல்லது சொல் லினமையின் இஃதொருதலை யன்பாகாதென்பர் பேராசிரியர்; தொல். செய். சூ. க௪௦; நச்சினார்க்கினியரும் இதனையே தழுவி யெழுதுவர்.

௩. குறுங்கலியென்பது அகப்புறத்திணையுளொன்றாகிய பெருந்திணையின் துறை பத்தனுள் ஒருதுறையென்று வீரசோழிய உரையாலும் அத் திணையில் அத்துறையில் "நாறிருங் கூந்தன் மகளிரை நயப்ப, வேறு படு வேட்கை வீயக் கூறின்று" என்று புறப்பொருள்வெண்பாமாலை யாலும் தலைவனால் துறக்கப்பட்ட தலைவியை அவனொடு கூட்டல் வேண்டிச் சான்றோர் அவன்பாற் கூறுவதென்று புறநானூற்றுரை யாலும் அறியப்படுகிறது.

(பிரதிபேதம்) * கண்கள், † என்னுடைய தொடிகள், ‡ ஒன்றே வன்றே என்றான், || ஆகாது இதனைக்குறுங்கலி யென்றல் அகத்தியனாரும். ÷ பொருந்தாது. இது எழுடி.

இஃது ஏழடித்தரவும் மூன்றடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (௩௬)

(௧௦௦.) ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சீக்குஞ் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையு
நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையு
மாண்டநின் னொழுக்கத்தான் மறுவின்றி வியன்ஞாலத்
தியாண்டோருந் தொழுதேத்து மிரங்கிசை முரசினாய்;
௭ ஐயந்தீர்ந் தியார்கண்ணு மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறா யெனநின்னைப் புகழ்வது கெடாதோதா
னல்கிநீ தெளித்தசொ னசையெனத் தேறியாள்
பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்;
௧௧ சுரந்தவான் பொழிந்தற்றாச் சூழநின் றியாவர்க்கு
மிரந்தது நசைவாட்டா யென்பது கெடாதோதான்
கலங்கஞ ருற்றுநின் கமழ்மார்பு நசைஇயா
ளிலங்குகோ லவிர்தொடி யிறையூரக் காணுங்கால்;
௧௫ உறைவரை நிறுத்தகோ லுயிர்திறம் பெயர்ப்பான்போன்
முறைசெய்தி யெனநின்னை மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின் னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு வாண்முகம் பசப்பூரக் காணுங்கால்;
ஆங்கு;
௨௰ தொன்னல மிழந்தோணீ துணையெனப் புணர்ந்தவ
ளின்னுறல் வியன்மார்ப வினையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
வென்றோர்க ளிடும்பையுங் களைந்நீவாய் நினக்கே.

இதுவுமது. (௧)

இதன் பொருள்.

ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள் *சீக்குஞ் சுடரேபோல்
†வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்தகொடுமையு

௧. காமத்து மிகுதிறத்தான் அரசனை நோக்கிச் [செ]ச(ா)ன்றோர். கூறிய தாகலின் மருதத்துக் கோத்தாரென்பர். நச். தொல். அகத். சூ. ௧௩.

(பிரதிபேதம்) * சீய்க்கும். † ஓண்டாதார்.

நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையு
மாண்டநின் னொழுக்கத்தான் மறுவின்றி வியன்ஞாலத்
தியாண்டோருந் தொழுதேத்து மிரங்கிசை முரசினாய்

எ - து: குற்றமற்று மாட்சிமைப்பட்ட நின் ஒழுக்கத்தாலே கடலின்மீதே தோன்றி இருளைக்கெடுக்கும் (௧)ஞாயிறுபோல இவ்வுலகத்திலுள்ள பகைவர் * நெஞ்சம் அஞ்சும்படி வெருவுதல்வந்த கொடுந்தொழிலையும் நெடிதாய்த் தோன்றுகின்ற (௨) ஏனையவற்றின் உயர்ந்தகுடையைத் †தமக்கு நிழலென்று கருதிச் சேர்ந்தவர்கட்குக் காட்சிதகும் கதிரைச் சொரியும் (௩)மதியையொத்த குளிர்ச்சியினையும், அகற்சியையுடைய உலகில் எவ்விடத்துள்ளோரும் வணங்கிப் புகழும் இரங்குகின்ற ஓசையினையுடைய முரசினையுமுடையாய்! எ - று.

ஈண்டு - இவ்வுலகம். ஏத்துமென்னும் பெயரெச்சம், முரசின்மேலன்றி ‡அதனையுடைய மன்னவனென்னும் பெயரோடு முடிந்தது.

௭ ஐயந்தீர்ந் தியார்கண்ணு (௪) மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறா யெனநின்னைப் புகழ்வதுகெடாதோதா

௧. (அ) "ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுந், திங்க ளன்ன தண் பெருஞ் சாயலும்..............உடையை யாகி" (ஆ) "ஞாயி றனையை நின் பகைவர்க்குத், திங்க ளனையை யெம்ம னோர்க்கே" புறம். ௫௫: ௧௩-௬; ௫௯: ௬-௭. (இ) "நின், வெம்மையும் விளக்கமு 'ஞாயிற்றுள, நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுள" பரி. ௪: ௨௫-௨௬. (ஈ) "நண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினுந், தண்ணியன் வெய்யனாந் தானை மன்னனே" சூளா. நகர. ௧௭. என்பன இங்கே ஒப்புநோக்கற் பாலன.

௨. இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை, யுருகெழுமதியி னிவந்து சேண் விளங்க" புறம். ௩௧: ௩-௪.

௩. "திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும், கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ், வங்க ணுலகளித்த லான்" என்பதும் அதன் உரையில் இது பண்பும் பயனுங் கூடின உவமமென் றெழுதியிருத்தலும் இங்கே அறிதற்பாலன. சிலப். ௧: ௧-௩.

௪. இங்கே அருந்தவ முதல்வனென்றது சிவபெருமானைப் போலும்; (அ) "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" புறம். ௧: ௧௩. (ஆ) "நற்றவனைப் புற்றரவ நாணினானை" (இ) "நற்றவனை நான்மறைகளாயி னானை" (ஈ) "நற்ற வாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" (உ) "நற்ற வன்காண்" (ஊ) "மாதொர்கூறுடை நற்றவனை"

(பிரதிபேதம்) * நெஞ்சஞ்சும்படி, நெஞ்சஞ்சுடும்படி. † தாழ்க்குநிழலென்று. ‡ அதனுடையமன்னவன்,

னல்கிநீ தெளித்தசொ னசையெனத் தேறியாள்
பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்

எ - து: அன்புற்று நீ நின்னிற் பிரியேனென்று தெளிவித்த சொல்லை இது தான் நச்சப்படும் வார்த்தையென்று கருதித் தெளிந்தவளுடைய பல இதழையுடைய *மலர்போலும் உண்கண் நீர்நிறைய நீ காணுமிடத்து அரிய தவத்தையுடைய(க)அறம்வளர்த்த நாயனாரைப்போலயாவரிடத்தும்(உ)பொய் கூறாயென ஐயமற்று உலகம் நின்னைப் புகழ்கின்றதன்மைநினக்குக்கெடாதோ தான்? எ.- று.

கக சாரந்தவான் †பொழிந்தற்றாச் சூழநின் றியாவர்க்கு
(௩)மிரந்தது நசைவாட்டா யென்பது கெடாதோதான்

தே. (எ) "அருந்தவ னதிசயித்து" .திருவால. ௬0: ௬. எனவும் (ஏ) "பனிவெண் பிறைநறுங்கொன்றைச்சடைபலிதேரியற்கை,முனிவன்" பதினோராந். மூத்தநாயனார். ௬. (ஐ) "முனிவன்" திருவால. காப்பு. உ. எனவும் வருவன பார்க்க.

க. சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாயிருந்து அறமுரைத்தா ரென்று தேவார முதலியவற்றிற் கூறப்படுதலும் அறமெல்லாம் வளர்க்கும்படி உமாதேவியாருக்கு அருளினாரென்று காஞ்சிப்புராண முதலியவற்றிற் கூறப்படுதலும் இங்கே அறிதற்பாலன.

உ. "நெற்றி, யிமையா நாட்டத் தொருவரங் கொண்டு, விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்,விரிகதிர்மணிப்பூ ணவற்குத்தா னீத்த, தரிதென மாற்றான் வாய்மைய னாதலி, னெரிகனன் றானக் குடாரி கொண் டவனுருவு, திரித்திட்டோன்" பரி. ௫: உக - ௩௫. என்பதும் "நெற்றிக்கண் இமையா நாட்டத்தையுடைய அவன் பக்கலிலே இந்திரன் ஒரு வரத்தைக் கொண்டு 'இந்தப் புணர்ச்சியாற் றோன்றிய கருவை யழிப்பாயாக' என, மழுப்படையைத் தரித்தவன் வாய்மைய னாதலின் அவ்விந்திரனுக்குத் தான் கொடுத்த வரத்தைச் செய்தற் கரிதென மாற்றாதே இவ்வுல கேழும் தன் மெய்ம்மையை வியக்க அதனுருவைப் பலகண்டமாகச் சேதித்தான்" என்னுமதனுரையும். "மண்ணினார் தம்மைப் போல்வார் மாட்டதே யன்று வாய்மை, நண்ணினார் திறத்துங் குற்றங் குற்றமே நல்ல வாகா, விண்ணினார் புகழ்தற் கொத்த விழுமியோ னெற்றி போழ்ந்த, கண்ணினான் கண்டந் தன்மேற் கறையையார் கறையன் றென்பார்"சூண்டல. "சாதத்தி னரனை யொப்பார்" திருக்கழுக்குன்ற. நகரச். உ0. என்பவைகளும் இங்கே நோக்கற்பாலன.

௩. (அ)"மாரி பொய்க்குவ தாயினுஞ், சேர லாதன் பொய்யல னசையே" பதிற். க௮: கக-கஉ. (ஆ) "இரவலர்க் குள்ளிய, நசைபிழைப் பறியாக்

(பிரதிபேதம்) * மலர்போலுண்கண். † பொழிந்தற்றாற்சூழ,

கலங்கஞ ருற்றநின் கமழ்மார்பு நசைஇயா
ளிலங்குகோ லவிர்தொடி யிறையூரக் காணுங்கால்

எ - து: மனங்கலங்குகின்ற வருத்தத்தையுற்று நின்னுடைய கமழ்கின்ற மார்பை நச்சினவளுடைய விளங்குகின்ற கோற்றொழில் விளங்குந் தொடி இறையினின்றுங் கழல நீ காணுமிடத்து நீரைச் சுரந்த (௧)மேகம் அந்நீரைப் பொழிந்ததன்மைத்தாக நின்னைச் சூழநின்று இரந்த பொருளை நச்சுதலை யாவர் சிலர்க்குங் கெடாவென்று உலகங் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான்? எ - று.

௧௫ உறைவரை நிறுத்தகோ (௨)லுயிர்*திறம் பெயர்ப்பான்போன்
முறைசெய்தி யெனநின்னை மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின் னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு (௩)வாண்முகம் பசப்பூரக் காணுங்கால்

கழறொடி யதிகன்" (இ) "ஆர்வுற், றிரந்தோர்க் கீயா தீட்டியோன் பொருள்போற், பரந்து வெளிப்படா தாகி, வருந்துக" அகம். ௧௬௨: ௧௭ - ௮, ௨௭௬: ௧௨-௫. (ஈ) "நின்னசை வேட்கையி னிரவலர் வருவ ரது, முன்னமுகத்தி னுணர்ந்தவ, ரின்மை தீர்த்தல் வன்மையானே" (உ) "ஒல்லுவ தில்லென மறுத்தலும்..........இரப்போர் வாட்டல்" புறம். ௩: ௨௪-௬; ௧௯௬: ௪ - ௬. (ஊ) "நசையழுங்க, நின்றோடிப் பொய்த்தனிரைதொடீஇ செய்ந்நன்றி, கொன்றாரிற்குற்றமுடைத்து" நாலடி. ௧௧௧. (எ) "பசைகொண் டவனிற்பப் பாத்துண்ணா னாயி, னசை கொன்றான் செல்லுலக மில்" பழ. ௨௪. (ஏ) "தருவமென்று முன் சாற்றி மறுத்தவர், நரகஞ்சேர்ந்து நலிகுவ ரென்றுமுந், துரை செய்தாய்" பாகவத. (அ) வாமனாவதார. ௫௬. என்பவைகளும் (ஐ) இந்நூற்பக்கம் ௧௪௭. ௧-ஆம் குறிப்பும் இங்கே அறிதற்பாலன.

௧. (அ) "நின், சுரத்தலும் வண்மையு மாரியுள" பரி. ௪: ௨௭; (ஆ) "வானத் தன்ன வண்மையும்" (இ) "மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயை" (ஈ) "உள்ளி வந்த பரிசில னிவனென, நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு, மணிக்கல னிறைந்த மணநாறு தேறல், பாம் புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு, மாரி யன்ன வண்மையிற் சொரிந்து" புறம். ௫௫: ௧௫; ௧௩௩ ௬ - ௭; ௩௯௭: ௧௨-௬.

௨. (அ) தெரிகோன் "ஞமன்ன் போல வொருதிறம், பற்ற லிலியரோ" புறம். ௬: ௯ - ௧௦. (ஆ) "கூற்றமும் விழையக் கோலினி தோச்சிக், கோட்ட மின்றிக் குடிபுறங் காத்து" பெருங். (௫) அ: ௧௯ - ௨௦.

௩. "மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே" கலி. ௭: ௮.

(பிரதிபேதம்) * திறம்பொய்ப்பான்போல்.

எ - து: நெஞ்சழிகின்ற நினைவு வருத்துகையினாலே நினதருளை விரும்பிக் கலங்கினவளுடைய பழித்தலறும் ஒளியினையுடைய முகம் பசப்புப் பரப்ப நீ காணுமிடத்து உயிரை உடம்பிடத்தே நின்றும் பேர்க்குங் (௧) கூற்றுவனைப்போல, யாவரையும் உலகத்துறையும் எல்லைதனிலே நிறுத்தின கோலாலே முறைமைசெய்வையென்று உலகம் நின்னைக் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான் ? எ - று.

ஆங்கு, அசை.

தொன்னலமிழந்தோணீ துணையெனப் புணர்ந்தவ
(௨)ளின்னுறல் வியன்மார்ப வினையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
(௩)*வென்னோர்க ளிடும்பையுங் களைந்தீவாய் நினக்கே

எ - து: † எத்தன்மையுடையோர்களுடைய ‡ வருத்தமுங் களைகின்ற அதனால் இனிய முயக்கத்தையுடைய வியன்மார்பனே ! நீ புணருந் துணையென்று கருதிப் புணர்ந்தவள் தனது இயற்கைநலத்தையும் இழந்தாள் ; நீ இத்தன்மையையாய் இராநின்றாய் ; இது நினக்குக் கொடிதென்று நின்னை யான் கோபித்தல்வேண்டுமோ ? நீயே அளிப்பாயாகவென்றான். எ - று.

||இழந்தோள்: ஆ, ஓவாய்நின்றது.

இதனால், தலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடியாசிரியச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (௩௫)

× மருதக்கலி முற்றும்.

---

௧. நிறுத்துதலைக் கூற்றின் றொழிலாகப் பொருத்திக் கொள்ளின், "செயிரிற் குறைநாளாற் பின் சென்று சாடி, யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்" கலி. ௧௦௫: ௩௭ - ௩௮. என்பதும் அதன் குறிப்பும் ஒப்பு நோக்கற்பாலன.

௨. "இன்னுறல் வியன் மார்ப" கலி. ௮: ௨௪.

௩. "என்னோர் மருங்கினு மேத்தி" என்புழி என்னோருமென்பதற்கு எல்லோருமெனப் பொருளெழுதி யிருத்தல் ஈண்டறிதற் பாலன. சீவக. ௨௧௨௮. உரை.

பிரதிபேதம்) * ஒன்னோர்கள், † எத்தன்மையையுடையோர்களுடைய. ‡ வருத்தங்களைகின்ற, || இழந்த தோள், × மருதப்பாட்டு முற்றும், மருதத்துக்கு நச்சினார்க்கினியார் செய்தவுரை முடிந்தது இது ஆசிரியன்பாரத்துவாசிகக, தனிபெறு.